தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1979 அக்டோபர் 31

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மதுரை பொதுப்பணித்துறை பயணியர் இல்லம்

* வினா 41—திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை சர்க்யூட் அவுஸ் (Circuit House) விரிவு படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை அறைகள் கூடுதலாகக் கட்டப்பட இருக்கின்றன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) நான்கு அறைகள் கூடுதலாகக் கட்டப்பட இருக்கின்றன.

திரு. என். லட்சுமிநாராயணன்: மதுரை நகரில் வேறு தங்கும் விடுதிகளை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அந்த அறைகளில் ஏ.சி. வசதி, ஃபோன் வசதிகள் எல்லாம் செய்து தரப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): ஏ. சி. வசதி கிடையாது. ஃபோன் வசதிகள் செய்து தருவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும். மதுரை சுற்றுலா மாளிகையை விரிவாக்கும் பொருட்டு அரசாணை எண். 668, பொதுப்பணித் துறை, நாள் 30–5–78-ல் ரூ. 2.50 இலட்சம் ஒப்புதல் அளிக்கப் பட்டது. மொத்தம் நான்கு அறைகள் கட்டப்படுவதாக இருக்கிறது. இரண்டு அறைகள் தரை மட்டத்திலும், மற்ற இரண்டு அறைகள் முதல் மாடியிலும் கட்டப்படும். முதல் மாடியில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வைகாசி இல்லத்தில் இரண்டு படுக்கைகள் அடங்கிய ஒரு சூட் அதிகமாகக் கட்டப்படும்.

[1979 அக்டோபர் 31

தமிழ்நாடு பரிசுச் சீட்டு குலுக்கல்

* வினா 42.—திரு. க. மருதாசலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசால் நடத்தப்பட்டு வரும் பரிசுச் சீட்டுக் குலுக்கலை கோவையில் நடத்தத் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) தற்சமயம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. க. மருதாசலம் : குழந்தைகளுக்கான விசேஷ குலுக்கல்கள் எப்போது குலுக்கப்படுகிறது? இதில் முறைகள் மாறுபட்டுள்ளதா? குழந்தைகள் பரிசுகளைப் பெறுவார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): குழந்தைகளுக்கான விசேஷ குலுக்கல் டிசம்பர் மாதம் குலுக்கப்படுகிறது. இது மாண்புமிகு முதல்வரின் விருப்பத்திற்கிணங்க உருவான திட்டம் ஆகும். சாதாரண குலுக்கலில் முதல் பரிசு ரூ. 50,000—இரண்டு பரிசுகள் ஆகும். ஆனால் குழந்தைகளுக்கான விசேஷ குலுக்கலில் முதல் பரிசு 2,000 ரூபாய். 500 முதல் பரிசுகள் உண்டு. 500 ரூபாய் வீதம் ஆயிரம் இரண்டாம் பரிசுகள் உண்டு. அதிர்ஷ்டசாலி குழந்தைகள் முதல் பரிசைப் பெற்றவர்களாக இருந்தாலும் இரண்டாம் பரிசைப் பெற்றவர்களாக இருந்தாலும் ஊனமுற்றவர்களாக இருந்தால் அவர்கள் பெறும் பரிசுத் தொகையோடு 1,000 ரூபாய் அதிகம் கொடுக்கப்படும். ஒரு குழந்தை ஒரு பரிசைத்தான் பெற முடியும். ஒவ்வொரு சீட்டின் விலை 50 காசுகள் ஆகும். குழந்தைகளின் விசேஷ குலுக்கல் சீட்டு கடைகளில் வியாபாரம் ஆகாது. மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படும். பரிசு பெற்ற அதிர்ஷ்டசாலி குழந்தைகளுக்கு பரிசுத்தொகையை மாவட்ட ஆட்சித் தலைவரே வழங்குவார். மற்ற பரிசுச் சீட்டுகள் ஏஜென்ட் மூலம் விற்கப்படுகிறது. அதற்கு கமிஷன் 11½% உண்டு. 10% பரிசு விழுந்த சீட்டுக்கு போனஸ் உண்டு. அவைகள் எல்லாம் குழந்தைகளின் விசேஷ குலுக்கலில் கிடையாது. இதன் பரிசுச் சீட்டினையும் பரிசுத் தொகையையும் 14 வயதும் அதற்குக் கீழ் வயதும் உள்ள குழந்தைகளே பெறத் தகுதி படைத்தவர்கள்.

திரு. கு. ரமணி : தமிழக அரசினுடைய இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தில் அதிகப்படியான பேர்களுக்குப் பரிசு கிடைக்கும்படியான முறையில் ஒரு லட்சத்திற்குக் கீழான

1979 அக்டோபர் 31]

தொகைகளைப் பரிசாக வழங்கும் முறையில் அந்தத் திட்டத்தைத் திருத்தியமைத்து அதிகப்படியான பேர்களுக்குப் பரிசு கிடைக்க ஏற்பாடு செய்யும் திட்டம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) ; இப்போது சாதாரண குலுக்கலில் முதல் பரிசு 50,000 ரூபாய் தான் வழங்கப்படுகிறது.

திரு. க. மருதாசலம் : இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு என்பதை மாண்புமிகு பேரவைச் செயலர் அவர்கள் அறிவார்கள். அதையொட்டி இந்த ஆண்டு சிறப்புக் குலுக்கலை கோவையில் குலுக்க முயற்சிப்பார்களா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்): இந்த ஆண்டு குலுக்கல் சென்னையில் குலுக்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு குலுக்கப்படும் இந்த விசேஷ பரிசுச் சீட்டு எத்தனை வரிசைகள் வெளியிடப்படும்? அந்த வருவாய் எதற்காகச் செலவழிக்கப்படும்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர்) : ஐந்து வரிசைச் சீட்டுகள் வெளியிடப்படும். அந்த வருவாய் முழுவதும் குழந்தைகள் நலன் பேணும் திட்டங்களுக்காகப் பயன் படுத்தப்படும்.

மாநில நிலவள வங்கி உதவி தொழில் நுட்ப மேலாளர்கள்.

* வினா 43—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியில் கடந்த மூன்றாண்டு காலமாக பணிபுரிந்து வந்த உதவி தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் பதவி மூப்பு (Seniority) பார்க்கப்படாமல் கூட வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(இ) அவ்வாறு வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் செயல்படும் சிறுபாசன மற்றும் சிறு பாசனமல்லாத திட்டங்களில், திட்டங்களை அமுல் படுத்த தொழில் நுட்ப மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு

திட்டத்திற்கும் தனித்தனியாக அத்திட்டப் பணிக்காகவே தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றனர். குறிப்பிட்ட திட்டம் முடிவடைந்ததும், இத்திட்டத்தில் பணியாற்றும் மேற்பார்வையாளரை பணி நீக்கம் செய்ய நேரிடுகிறது. ஆகையால் இதில் பணிமூப்பு பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

(இ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் புதிய திட்டங்கள் துவக்கப்படும்போது அதில் உண்டாகும் வேலை வாய்ப்புகளில், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள தொழில் நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு தமிழ்நாடு மாநில நிலவள வங்கி முன்னுரிமை அளிக்கிறது.

உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி.

*வினா 44.—திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நஷ்டம் எவ்வளவு?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) (31-12-78 அரையாண்டு முடிந்த அறிக்கையின்படி ரூ. 8,07,357.37.

(இ) நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு தனி அலுவலர் நியமிக்கப்பட்டும் பழைய, மற்றும் கெட்டுப்போன சரக்குகளை விற்று முடங்கிக் கிடக்கும் மூலதனத்தை திரும்பிப் பெறவும், சரக்கு இருப்புக் குறைவுத் தொகையை வசூலிக்க சம்பந்தப் பட்டவர்கள் மீது தாவா தொடரப்பட்டும், பெற்ற தீர்ப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டும் நட்டத்தில் இயங்கும் கிளைகளை மூடிவிடவும், புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் மாநில, மத்திய அரசுகளிடமிருந்து கடன் உதவி பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, அங்கே வியாபாரத்தில் ஏற்படும் நட்டத்திற்கு அங்கே உள்ள நிர்வாகிகளும் ஊழியர்களும் பொறுப்பு என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அவைகளை எல்லாம் ஆராய்வதற்காகத்தான் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு 8 முனைகளிலே அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1979 அக்டோபர் 31]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, எந்த எந்த கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் லாபத்தில் இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உதகமண்டலத்தினையொட்டிய கேள்வி. நீங்கள் ஒட்டுமொத்தமாகக் கேட்டால் அமைச்சரிடம் பதில் எப்படி இருக்கும்?

திரு. என். பழனிவேல் : பொதுவாக கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் பொருட்களின் விலை மற்ற வெளி மார்க்கட்டிலே விற்பனைதப்போல் தான் இருக்கிறது. இப்படியிருந்தும் அங்கே 8 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு கம்மியாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படி இருந்தும் ஏன் நட்டம் வந்தது என்பதைப்பற்றி ஆராயத்தான் தனி அதிகாரி நியமிக்கப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலவினாவிற்கு நான் பதில் சொல்கிறபோதே 8 விதமான முனைகளிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்திருக்கிறேன். அந்த விவரங்களை இந்த மா மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறேன் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய வங்கி போன்ற வங்கிகளிடமிருந்து எந்த அளவிற்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டபடி இது உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பு அங்காடியைப் பற்றியது. மேற்கொண்டு விவரங்கள் தேவைப்பட்டால் தனிக் கேள்வியைப் போட்டால் அதற்கான விவரங்களை அளிக்கலாம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தனி அலுவலர் போட்டு 10 மாதங்கள் ஆகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் யாவை என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும். அந்த முயற்சிகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் விலை.

*வினா 45—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சை மாவட்டத்தில், நெல் கொள்முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : 1979 சம்பா அறுவடையின் போது தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலைகள் பொதுவாக, மத்திய அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலைகளுக்கு மேலாகவே நிலவிவந்தன. அங்குமிங்கும் சில பகுதிகளில் விலைகள் குறைந்தபோது, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்திய உணவுக் கழகத்தினாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும் தேவையான நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகள் முன்வந்து அளித்த நெல் வாங்கப்பட்டது.

[முற்பகல் 9-10]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் சென்ற ஆண்டு நெல் வாங்குவதை நிறுத்திய பிறகு ஓரளவுக்கு விலை ஏறியது. ஆனால், இந்த ஆண்டு, இப்பொழுது அரசிலே விலையைக் கூட்டிக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், தஞ்சையில் 1975-76 இல் ஒரு குவிண்டாலுக்கு 105 ரூபாய் சன்ன ரகத்திற்கு வாங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு விலை அதிகம் ஆகிய பிறகு 109 ரூபாய் என்று அரசு அறிவித்து இருக்கிறது. 1975-76-இல் 105 ரூபாய் விற்றது, பிறகு ஜனதா ஆட்சியில் 8 ரூபாயும், சரண்சிங் ஆட்சியில் 10 ரூபாயும் ஏற்றி ஆகமொத்தம் 18 ரூபாய் ஏற்றியிருக்கிறது. 1975-76-க்குப் பிறகு 20 ரூபாய் என்று சொல்வதால் வேறுபாடு 5 ரூபாய் என்று இருக்கும்பொழுது 23 ரூபாய் குவிண்டாலுக்கு அதிகமாக ஏற்றியிருக்க வேண்டும். 23 ரூபாயும் 105 ரூபாயும் சேர்ந்து 128 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும், ஆக்கவலாக. ஆனால்....

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியா?

திரு. மா. மணிமாறன் : இது முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இப்படி அனுமதிக்க இயலாது. சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : ஆகையால், இப்பொழுது கொள்முதல் நிர்ணய விலை 18 ரூபாய்க்கு மேலாகக் கூடுகிறது, எனவே வாங்க மறுக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்ட வியாபாரிகள் நெல்லைக் குறைத்து வாங்குகிறார்கள், இதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உஹரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொள்முதல் நிர்ணய விலைக்கும், வெளியிலே விற்பனை செய்யப் படும் விலைக்கும் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். 1974–75 ஆம் ஆண்டு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலை 74 ரூபாயாக இருந்தது என்ற நினைவு எனக்கு இருக்கிறது. ஆனால் அந்த நேரத்தில் விளைச்சல் குறைவு என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வெளிச்சந்தையில் அரிசி ஒரு படி 7 ரூபாய்க்கு விற்ற நேரம் அது. கொள்முதலில் அரசு நிர்ணயித்த விலை எதுவாக இருந்தாலும் வெளிச்சந்தையில் கூடுதலாக வாங்கப்படுவதற்கு நியாயமான காரண காரியங்கள் அன்றைக்கு இருந்தன. வெளிச்சந்தையில் நெல்லின் விலை குறைவாக இருக்கிறது. 95 ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்து இருக்கிறது, மாநில அரசு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் முன்பிருந்த கொள்முதல் விலைகளுக்குக் கூடுதலாக 20 ரூபாய் கொடுத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல் வாங்கப்பட்டு வருகிறது.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 20 ரூபாய் கூடுதலாகத் தரப்படுகிறது என்று சொல்லி இருக்கிறார்கள், அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 18% மாய்ச்சர் கன்டென்ட் குறைவாக இருந்தும், குவிண்டாலுக்கு இரண்டரை ரூபாய் பிடிப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. உஹரா. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு, மாய்ச்சர் கன்டென்ட்க்கு ஒரு வரம்பு நிர்ணயித்து, அதற்குக் கூடுதலாக இருந்தால் விலை கொடுக்கின்ற நேரத்தில் அதற்கான கழிவு கொடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசாலும், மாநில அரசாலும் மாய்ச்சர்

கன்டென்ட் குறைவாக இருந்தால் கொடுக்க வேண்டிய விலையைக் கொடுத்து வாங்கவேண்டும். எங்கேனும் தவறுகள் நடந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளுக்கு இடுபொருள் விலை உயர்ந்திருக்கிறது, எனவே இந்த நெல்லின் விலை 115 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக் கொடுப்பது விவசாயிகளுக்குப் போதாது என்பதை இந்த அரசு உணர்ந்து, 140 ரூபாய் குவிண்டாலுக்குக் கொடுக்க வேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டங்கள், இயக்கங்கள் நடத்துகிறார்களே, எனவே 140 ரூபாய் கிடைக்கத் தமிழக அரசு வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகள் ஒரு குவிண்டாலுக்கு 140 ரூபாய் கொள்முதல் விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பது பல தடவைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அரசும் இதைக் கணக்கிட்டு மத்திய அரசிடம் குறைந்தபட்சம் 139 ரூபாயாவது இந்த நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி த்தான் வந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். நெல்லின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. இன்ன விலை கொடுக்க வேண்டுமென்று மாநில அரசுகள் பரிந்துரை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மாநில அரசு அதை வற்புறுத்தி இருக்கிறது.

மத்திய அரசு ரூ. 95 என்று நிர்ணயித்த காரணத்தாலே ரூ. 95 என்று மத்திய அரசு நிர்ணயிப்பதற்கு முன்னாலேயே மத்திய அரசு என்ன விலை நிர்ணயம் செய்தாலும் அப்போ திருந்த ரூ. 85-க்குக் கூடுதலாக ரூ. 20 கொடுப்போம் என்று இந்த மாநில அரசு அறிவித்தது. மத்திய அரசு ரூ. 85—ஐ ரூ. 95 என்று மாற்றியமைத்த பிறகும் இன்றைக்கு முன்பிருந்த விலைக்கு ரூ. 20—ஐக் கூடுதலாகக் கொடுக்கும் வகையில் விலை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு அமைச்சருக்கு உடல் நலம் சரியாக இல்லை. ஆகவே, சுருக்கமாக பதில் சொன்னால் போதும்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, நெல் கொள்முதல் விலையை அரசு தீர்மானிப்பது என்பது வெளிச் சந்தை விலையிலே அதிக வீழ்ச்சி ஏற்படாமல் தடுப்பதற்கான ஒரு முறை என்பதை அமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று

1979 அக்டோபர் 31]

நம்புகிறேன். அந்த வெளிச் சந்தை விலை, அரசு நிர்ணயித்த விலைக்குக் குறைவாக இருக்கிறது என்றுதான் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அந்த வெளி விலை இறங்குவதைத் தடுக்க மாநில அரசு நிர்ணயித்த விலைக்கு கொள்முதல் செய்வதை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி விவசாயிகளுக்கு நல்லவிலை கிடைக்க வேண்டுமென்பதற்காகத் தான் கொள்முதல் நிலையங்களை அரசு இன்றைக்கு பல்வேறு இடங்களில் திறந்து அவற்றை வாங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு கூடுதலாக வாங்க முடியுமா என்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே ஒரு வினாவை எழுப்பினார்கள். கூடுதலாக வாங்க வேண்டுமென்றுதான் இன்றையதினம் கூடுதலான கொள்முதல் நிலையங்களைத் தஞ்சை மாவட்டத்திலே அரசு திறந்திருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபொழுது மத்திய அரசு ரூ. 95 என்று விலையை நிர்ணயித்திருந்த போதிலும் அதற்கும் மேலாக ரூ. 20 அதிகமாகத் கொடுத்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது என்றார்கள். அதே விலையில் நெல்லின் விலையை நிர்ணயிக்கும்பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் இருந்து வருகிறது. மத்திய அரசிடம் ரூ. 125 என்றாவது நெல்லின் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு வற்புறுத்தி வருகிறது என்றும் கூறினார்கள். இதுவரையில் ரூ. 20 அதிகமாகக் கொடுத்ததனால், மத்திய அரசு நிச்சயமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று நான் எண்ணுகிறேன். அதுபோல், இன்னும் சற்று அதிகமாகக் கூடுதலாகக் கொடுத்து, மாநில அரசு கொள்முதல் செய்தாலும், மத்திய அரசு அதை ஏற்றுக்கொள்ளும் என்ற காரணத்தால் மேலும் நெல்லின் விலையை மாநில அரசு அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் நிலைமைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ரூ. 20 மாநில அரசு கொடுக்கிறது என்றால், மாநில அரசு நிதியிலேயிருந்து கொடுக்கிறதே தவிர, மத்திய அரசு நிச்சயமாகக் கொடுக்கவில்லை. மத்திய அரசு கூடுதலாகக் கொடுக்க முன்வருமானால் நிச்சயமாக மாநில அரசு இன்னும் அதிகமான தொகையைக் கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

[1979 அக்டோபர் 31

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இதுவரைக்கும் 2 இலட்சம் ஏக்கருக்கு மேல் குறுவை அறுவடை ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். இது வரையில் 3 இலட்சம் டன் அறுவடை ஆகியிருக்கிறது. அதில் 2, 2½ இலட்சம் டன் மார்க்கெட்டிற்கு வந்திருக்கும். அதில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எவ்வளவு தானியத்தைக் கொள்முதல் செய்திருக்கிறது? வெளி மார்க்கெட்டில் விலை, சர்க்கார் நிர்ணயித்த விலையைவிடக் கீழே இருந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் அதிக விலை வைத்திருக்கும்போது, கொள்முதல் செய்திருந்தால், பூராவையும் கொள்முதல் செய்திருக்க வேண்டும். எவ்வளவு இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது இருப்பது ப்ரக்யூர்மென்ட் அல்ல, பர்ச்சேஸ். கொள்முதல் அமுலில் இருக்கிறது, கட்டாயக் கொள்முதல் அமுலில் இல்லை. ஆகவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையானது போக, வெளி மார்க்கெட்டிலே விற்பனை செய்தது போக, மீதியிருக்கிற நெல்லை, அவர்கள் விரும்பினால் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்திடம் விற்கலாம். அவர்களே கொடுத்தால், அதை வாங்குவதற்கான ஏற்பாடுகளை—எவ்வளவு கொடுத்தாலும் வாங்குவதற்கான ஏற்பாடுகளை, இந்தத் துறை இன்றையதினம் செய்திருக்கிறது. அந்த அடிப்படையிலே 26–10–1979 ஆம் தேதி வரையில் ஏறத்தாழ 4?,283 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது கொள்முதலுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுத்து, மாநில சர்க்கார் வாங்குவதாகச் சொன்னார்கள். எனக்கு கிடைத்த தகவல் தஞ்சை மாவட்டத்திலே இப்பொழுது 300 கொள்முதல் செய்யக்கூடிய சென்டர்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதிலே குறிப்பிட்ட அளவு நெல்தான் வாங்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்லாமல், லாரிகளிலே கொண்டு வருபவர்களிடமும், வியாபாரிகளிடத்திலும்தான் அவர்கள் கொள்முதல் செய்கிறார்களே தவிர, விவசாயிகளிடத்திலே அவர்கள் நேரிடையாகக் கொள்முதல் செய்யவில்லையென்றும், ஒரு மூட்டைக்குக் குவிண்டாலுக்கு ரூ. 90 தான் விலை கிடைக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. நாம் கொள்முதல் நிலையங்கள் வைத்திருப்பதன் நோக்கமே விவசாயிகளுக்கு ரூ. 20 அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்பதுதான். எனவே, அதற்காகத் துவக்கப்பட்ட சென்டர்கள் சரியாக இயங்கவில்லையா? அவை சரியாக இயங்க அமைச்சரவர்கள் சரியான நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, மகொள்முதல் நிலையங்கள் சரியாக இயங்கவில்லை என்று ாண்புமிகு உறுப்பினர் எந்த அடிப்படையிலே சொல்கிறார்

என்று எனக்குத் தெரியவில்லை. வியாபாரிகளிடத்திலே கிடைக்கிற நெல்லைத்தான் வாங்குகிறார்கள். விவசாயிகளிடத்திலே கிடைக்கிற நெல்லை வாங்குவது இல்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆதாரமே இல்லை. எந்த நிலையங்களிலே அவர்கள் விவசாயிகளிடம் இருந்து வரும் நெல்லை வாங்க மறுக்கிறார்கள் என்று தெரிவித்தால் அந்த நிலையத்தில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(திருவாளர்கள் க. சுப்பு, ரெ. வீ. சவுந்திரராஜன், இரெ. இராசமாணிக்கம், கோ. இளங்கோவன் முதலியவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கேள்வியாக இருந்தாலும் முன் வரிசையிலே இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் கேட்டுவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டாமா? வில்லிவாக்கம் உறுப்பினர் அமரலாம்.

திரு. க. சுப்பு: நெல் தஞ்சாவூரிலே விளைந்தாலும் எல்லோரும் தான் சாப்பிடுகிறோம்.

சென்னை பிற்பட்ட மாணவர்களுக்கான தனிப்பயிற்சி நிலையக் கட்டிடம்.

*வினா 46—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஸ்பெஷல்–டிரெயினிங் சென்டர்க்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டவும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு விடுதி கட்டவும், திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: (அ) சென்னையிலுள்ள பிற்பட்டோருக்கான தனிப் பயிற்சி நிலையத்திற்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

(ஆ) எங்கு, எப்பொழுது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, சென்னையில் பிற்பட்ட மாணவர்கள் நல விடுதியில் தங்கிப் படிப்பதற்கு மாணவர்களுக்குக் கட்டிட வசதி இல்லாமல் மிகவும் சிரமப்

படுகிறார்கள். அதே நேரத்திலே இரண்டு கண்களும் தெரியாத மாணவர்கள் பிரசிடென்சி கல்லூரியில் தங்கிப் படித்துவிட்டு தங்குவதற்கு இடம் இல்லாமல் மழையில் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு இடம் அளிக்கும் வகையில், எஸ்டேட் ஆபீஸ் உட்புறத்தில், எம்.எல்.ஏ. ஹாஸ்டல் உட்புறத்திலே பிற்பட்ட மாணவர்கள் தங்கியிருக்க விடுதி கட்டிக் கொடுப்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கட்டிடம் கட்டவும், விடுதிகள் கட்டவும் அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. எங்கே, எப்பொழுது கட்டுவது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது அரசு. விரைவிலே முடிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு பக்கத்திலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அங்கே கட்டலாம் என்று சொல்லி இருக்கிறார். அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. தி. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்டிடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளதாக சொல்கிறார். 2, 3 ஆண்டுகளாக இப்படித்தான் சொல்லி வருகிறார். பரிசீலனை எப்பொழுது முடிவாகும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, 2, 3 ஆண்டுகளாக இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. இதுவே இப்பொழுதுதான் அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது.

ஒன்றிய அளவில் தொழிற்பயிற்சி நிலையங்கள்.

*வினா 47—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி சுய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதிதாக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

1979 அக்டோபர் 31]

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செல்லுகிற இடங்களில் எல்லாம் மாணவர்களிடையே பேசும்போது, மாணவர்கள் செல்ப்–எம்ப்லாய்மென்ட்டைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் ஜாப் கிரியேட்டர்களாக இருக்க வேண்டும். ஜாப் சீக்கர்களாக இருக்கக்கூடாது என்று இத்தகைய ஒரு நல்ல கருத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்திலே வெறும் பி. ஏ., பி. எஸ்ஸி. பட்டதாரிகளை, வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகளை தொடர்ந்து உருவாக்காமல், ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திட வாய்ப்பாக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு தொழிற்கல்வி நிலையத்தை அமைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பது என்றால் 30, 32 இலட்சம் செலவாகும். இப்பொழுது பயிற்சி பெற்றவர்களே, ஏற்கனவே 32,000 பேர் வேலை இல்லாத நிலையிலே, வேலை வாய்ப்பு நிலையங்களிலே பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் அதிகமான அளவிலே தொழிற்பயிற்சி நிலையங்களை அமைப்பது சரியாக இருக்காது. நாங்கள் ஜாப் கிரியேட்டர்ஸ் என்று சொன்னது, படித்தவர்கள் அனைவரும் வேலைக்குத்தான் போகவேண்டுமென்கிற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அந்த அளவுக்கு கல்வியிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று. அந்தக் கருத்தைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே பாலிடெக்னிக், என்ஜினீயரிங் போன்ற கல்வி பெறும் மாணவர்களுக்கு மானேஜ்மென்ட் டிரெயினிங் தரலாமா என்று இருக்கிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றியத்திற்கு ஒன்று ஆரம்பிப்பது அதிகச் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஏராளமான மாணவர்கள் தொழிற் பயிற்சியில் சேருவதற்கு நாட்டம் காட்டும் நிலை இருக்கிறது. ஆகவே, ஒன்றியத்திற்கு ஒன்று என்று இல்லாவிட்டாலும், மாவட்டத்திற்கு இரண்டு என்று இருப்பதை மூன்று அல்லது நான்கு என உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா? இருக்கின்ற பயிற்சி பள்ளிகளிலேயே அதிக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் வகையில் எண்ணிக்கையை உயர்த்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள தேவைகளை ஒட்டி நாம் இந்த யோசனைகளைப் பரிசீலிக்கலாம்.

[1979 அக்டோபர் 31

சென்னை அரும்பொருள் காட்சியகம்.

*வினா 48—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, எழும்பூரில் உள்ள அரும்பொருள் காட்சியக (மியூசியம்)-த்தை மத்திய அரசு தன்னிடம் ஒப்படைத்துவிடுமாறு அண்மையில் மாநில அரசுக்கு ஏதேனும் எழுதியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சென்னை எழும்பூரில், உள்ள அரும்பொருள் காட்சியகத்தை (மியூசியம்) மத்திய அரசு தன்னிடம் ஒப்படைத்து விடுமாறு மாநில அரசுக்கு அண்மையில் ஏதும் எழுதவில்லை.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூரிலுள்ள அந்த மியூசியத்தை இன்னும் அதிக மக்கள் வந்து பார்க்கின்ற அளவிற்கு ஏதேனும் ஏற்பாட்டினை அரசு செய்யுமா? அதற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நாம் மக்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அப்படிப்பட்ட யோசனைகளை பரிசீலிக்கலாம்.

சந்திரசேகரபுரம்-உடையாளூர் இணைப்புப் பாலம்.

*வினா 49—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம், வலங்கைமான் இரு ஒன்றியங்களைச் சேர்ந்த, சந்திரசேகரபுரம், உடையாளூர் கிராமங்களை இணைக்க குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவிட இரு ஒன்றியத்திலிருந்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் மட்டுமே தீர்மானம் நிறைவேற்றியது.

(ஆ) செலவைப் பகிர்ந்துகொள்ள வலங்கைமான் ஒன்றியம் முன்வராததால், நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், வலங்கைமான் இரு ஒன்றியங்களையும் சேர்ந்த சந்திரசேகரபுரம், உடையாளூர் கிராமங்களை இணைக்க குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க இரு ஒன்றியங்களில் இருந்தும் தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் கும்பகோணம் ஒன்றியம் மட்டும்தான் தீர்மானம் போட்டு அனுப்பியுள்ளதாகச் சொன்னார்கள். ஆகவே, கும்பகோணம் ஒன்றியத்தின் தீர்மானத்தை வைத்தே, இரு ஒன்றியங்களையும் இணைப்பு செய்ய குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தால், அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த ஆற்றைக் கடக்க முடியும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ. 8 லட்சம் ஆகும். வலங்கைமான் ஒன்றியத்தில் இருந்தும் தீர்மானம் வந்தால்தான் செய்ய முடியும்.

இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் வழங்கப்பெற்ற தொழில் உரிமம்.

வினா 50—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில், செட்டியார் குடியிருப்பில் முறைகேடாக தொழில் உரிமம் வழங்கப்பட்டது குறித்து அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1979 அக்டோபர் 31

ஆத்தூர் நகர குடிநீர் வழங்கு திட்டம்.

*வினா 51—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விவரங்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையிலிருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது இப்பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) சுமார் 23 கோடி ரூபாய்.

(இ) களப்பணிகள் முடிந்தவுடன் உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் நிர்வாக ஒப்புதல் பெற்று பணி தொடங்கப்படும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் இருந்து சேலம் வழியாக ஆத்தூர் நகராட்சிக்குக் குடிநீர் கொடுக்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உடனடியாகத் தொடங்கப்படுமா? அந்தத் திட்டத்தை செயல்படுத்தும்போது, வழியில் இருக்கின்ற எல்லா சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் குடிநீர் கொடுக்கப்படுவது என்பது சேர்க்கப்பட்டுள்ளதா? ஆத்தூர் நகரில் ஏற்கனவே குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்பட்ட குடிநீர் திட்டம் சரியாக இல்லை, தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது, அதற்கு மாற்றுத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தி, நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, . மேய்ச்சேரி, ஓமலூர், சூரமங்கலம், ஜாதிகொண்டலம்பட்டி, ஆகிய சேலம்-ஆத்தூர் வழியில் உள்ள கிராமங்களுக்கும் சேர்த்து குடிநீர் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய மதிப்பீடு சுமார் ரூ. 23 கோடியாகும்.

திரு. சி. பழனிமுத்து : தலைவர் அவர்களே, அந்த வழியில் அதாவது, அயோத்தியபட்டினம், வாழப்பாடி, பெத்தநாய்க்கன் பாளையம் ஆகிய பேரூராட்சிகள் சேர்க்கப்படாமல் இருக்கின்றன. அதையும் சேர்த்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா? மேலும். ஆத்தூரில் ஒரு ஆண்டில் 6 மாதத்திற்கு குடிநீர்

1979 அக்டோபர் 31]

கிடைப்பது இல்லை. கிட்டத்தட்ட 2 லட்ச ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தும், தண்ணீர் கிடைக்கவில்லை. அது வீணான செலவு என்கிற வகையில் உள்ளது. ஆகவே, அந்த நிலைமையை உடனடியாகப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

(பதில் இல்லை)

வேடப்பட்டி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கல்.

* வினா 52—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணி திட்டத்தில் வேடப்பட்டி பேரூராட்சியை சேர்க்கும்படி பேரூராட்சி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் மீது என்ன முடிவு செய்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ரூ. 3.84 லட்சத்திற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 9.30)

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, அந்தத் திட்டத்தில் எவ்வளவு மக்கள் பலன் பெறுவார்கள் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 5226-ல் 180-ஐ கழித்தால் எத்தனை வருமோ அத்தனை மக்கள் பயன்பெறுவார்கள்.

மதம் மாறிய கிறித்துவ அரிசனங்களுக்குச் சலுகைகள்.

* வினா 53—திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மதத்தில் சேர்ந்த அரிசனங்களுக்கும் இந்து அரிசனங்களுக்கு கொடுக்கப்படும் எல்லா சலுகைகளையும் விஸ்தரித்துத்தர இந்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

[1979 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) மற்றும் (ஆ) அரிசனங்கள் பெறும் எல்லா சலுகைகளையும் மதம் மாறிய கிறித்துவ அரிசனங்களுக்கு அளித்திட வேண்டுமானால் அவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தால்தான் இயலும். தாழ்த்தப்பட்டோர் பட்டியலை மாற்றியமைக்கும் அதிகாரம் இம்மாநில அரசுக்கு இல்லை.

எனினும் கல்வி வசதி மற்றும் பொதுத் துறையில் வேலை வாய்ப்பு போன்ற சில சலுகைகள் நீங்கலாக மற்ற எல்லா சலுகைகளையும் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்த அரிசனங்களுக்கும் இந்து அரிசனங்களுக்கு கொடுப்பது போல் அளிக்கப்பட வேண்டுமென்று இம்மாநில அரசு ஏற்கனவே ஆணையிட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது துறையில் வேலைவாய்ப்பு போன்ற சலுகைகளைப் பொறுத்தமட்டில் கிருஸ்துவ அரிசனங்கள் பிற்பட்டவராகக் கருதப்படுகின்றனர்.

திரு. கூ. ச. முருகேசன் : தலைவரவர்களே, மத்திய அரசு தான் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசு செய்யாவிட்டாலும் மாநில அரசு செய்ய உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாநில அரசால் செய்ய முடியவில்லை என்பதால்தான் இதை மத்திய அரசு செய்ய வேண்டுமென்று சொன்னோம். இருந்தாலும் இப்போது மத்திய அரசே முன்வந்து, தகுந்த புள்ளிவிவரங்களைக் கேட்டிருக்கிறது. மாநில அரசு அந்த விவரங்களை அனுப்பியிருக்கிறது. அது தற்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அரிசனங்கள் மதம் மாறியதற்காக ஒடுக்கப்பட்டவர்களுடைய பட்டியலில் சேர்க்காமல் இருப்பது சரியல்ல என்பதை இந்த அரசு அறியுமா? மத்திய அரசுக்கு உடனடியாக சிபாரிசு செய்து, மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களை அந்தப் பட்டியலில் சேர்க்க முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இரண்டு சலுகைகள் மட்டும் தற்போது அவர்களுக்கு அளிக்கமுடியவில்லை. அவர்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் வந்து, மத்திய அரசு மாநில அரசிடம் விவரம் கேட்டு, அந்த விவரம் அனுப்பப்பட்டு இருக்கிறது. அதை பரிசீலனை செய்த பிறகு நல்ல முடிவை எடுக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பு.

1979 அக்டோபர் 31]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மதம் மாறிய தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால் மத்திய அரசுதான் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கின்ற அத்தனை சலுகைகளையும் மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுப்பதற்கு எந்த விதிமுறையும் குறுக்கே நிற்கவில்லை. கேரளம் போன்ற மாநிலங்களில் அத்தனை சலுகைகளையும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு கொடுத்து வருகிறார்கள். There should not be any discrimination for which there will be no justification. ஆகவே, மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அத்தனை சலுகைகளையும் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கல்வி, வேலை வாய்ப்பு இந்த இரண்டையும் தரக் கூடாது என்று விதிமுறை இருக்கிறது. இதர சலுகைகளை இந்த அரசு தந்துகொண்டிருக்கிறது.

திரு. இ. தமிழரசன்: தலைவரவர்களே, மத சார்பற்ற இந்திய நாட்டில் மதம் மாறியவர்கள் என்ற காரணத்தால் தடுக்கப்பட்ட இந்த சலுகைகளை அளிப்பதற்கு இந்த மாமன்றத்திலே முடிவுசெய்து, தீர்மான வடிவிலே அதை அனுப்பி வைக்க அரசு முன்வருமா? அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் மறைந்த மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. நடராஜன் அவர்களை சுற்றுப்பயணம் செய்ய வைத்து, அவர் மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அவர்களுக்கு எந்த அடிப்படையில் சலுகை கொடுக்கலாம் என்று அறிக்கை தயார் செய்தார். அந்த அறிக்கை எந்த அடிப்படையில் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அவர்கள் தயாரித்த அறிக்கை பிற்பட்டோர் நலம் பற்றியது. ஆகவே. அந்த அறிக்கை பிற்பட்டோர் நலத் துறையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நம்முடைய நாடு மதச் சார்பற்றது என்றாலும் மதம் இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். இதை அகற்றுவது இந்த மாமன்றத்தின் கடமையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள், அவர்களின் குடும்ப வருமானம் 6,000-க்கு மேல் இருந்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படுவது இல்லை, அதை வழங்குவதற்கு இந்த அரசு

முற்படுமா என்பதையும் குறைந்தபட்சம் மத்திய அரசிடமாவது இதற்கான பரிந்துரைகளை செய்ய மாநில அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருமான குறயீட்டைப்பற்றி குறிப்பிட்டு ஏதோ சொன்னார். உண்மை என்னவென்றால மாநில அரசு தருகிற ஸ்காலர்ஷிப் குடும்ப வருமானம் 3,000-க்குக் குறைவாக இருந்தால், மத்திய அரசு தருகிற ஸ்காலர்ஷிப் வருமான வரம்பு 9,000-க்கு கீழ் இருந்தால்.

திரு. ஏ. ராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவ மதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், கிறித்துவ மதத்திலிருந்து. இந்து மதத்திற்கு மாறியதாக, சில இந்து மடாதிபதிகளிடமிருந்து சான்றிதழ் வாங்கிக் கொடுத்து அரசாங்க சலுகைகளை அனுபவிக்கிறார்கள். இதை அரசு அங்கீகரித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அவர்களே விரும்பி முன் வரும் நேரத்தில் அரசாங்கம் அங்கீகரிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. ஒட்டு மொத்தமாக அவர்களையெல்லாம் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே சேர்க்க மத்திய அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அரிசன மக்களை விட, கிறிஸ்துவ அரிசன மக்கள்தான் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஜாதி சமய சார்பற்ற அரசு என்று சொல்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டும். இந்திய அரசாங்கமே மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து தாமரைக்கனி அவர்கள் இந்திய அரசாங்கமே ஏமாற்றுகிறது என்று சொல்லக் கூடாது.

திரு. க. சுப்பு : ஏன் சொல்லக்கூடாது? உண்மையைச் சொல்லக்கூடாதா என்று கேட்கிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் தயவுசெய்து அமரவேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் அப்படிச் சொல்கிறார்கள். ஆகையினால் தமிழக அரசு, இந்திய அரசைக் கேட்டு அவர்களுக்கான சலுகைகளைக் கிடைக்கச் செய்யுமா? அதற்காகப் போராடுமா என்று அறிய விரும்புகிறேன்?

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே தற்போதிருக்கிற சூழ்நிலையில் அரசாங்கம் போராட வேண்டிய அவசியம் இல்லை. தாமரைக்கனி போன்ற தீவிர வாதிகள் போராட்டத்தில் இறங்க விரும்பினால் இறங்கலாம். அரசைப் பொருத்தவரையில் அவர்களுக்கும் சேர்த்து எல்லாவித சலுகைகளும் வழங்கவேண்டும் என்றுதான் மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எல்லா விவரங்களையும் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசும் அவைகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அரிசன மதத்திலிருந்து, கிறிஸ்துவ மதத்திற்கு மதம் மாறியிருக்கக்கூடிய மக்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு சட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். ஏதேதோ அவசரச் சட்டங்கள் எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதேப் போல இந்த அரிசன மக்களுக்கும், அவர்களின் குறைகளை தவிர்ப்பதற்கான, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கான அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும், கொண்டு வருவீர்களா என்று கேட்கிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எந்த சட்டவிதிமுறைகளும் மாநில அரசைப் பொறுத்த வரையில் இல்லை, மத்திய அரசாங்கம் தான் இதற்கான விதிமுறைகளைப் போட வேண்டும். அவர்களுக்கு தேவையான எல்லா விவரங்களையும் மாநில அரசு அனுப்பியாகிவிட்டது, மத்திய அரசாங்கம்தான் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அரிசன மக்கள், கிறித்துவ அரிசன மக்களாக மதம் மாறி விட்டால், அவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டால், அவர்களுக்கும் அரிசனங்களுக்கு அளிக்கப்படுகிற எல்லா சலுகைகளும் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அளிக்கப்படும்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, நம்முடைய அரசாங்கத்திடம் எதுவும் இல்லை, மத்திய அரசாங்கம் தான் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசும்போது கூட நாம் ஏன் அரிசனங்களுக்காகப் போராடக்கூடாது என்று கேட்டார்கள். நெல்கொள் முதல் சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்கள், டெல்லியில்

[1979 அக்டோபர் 3

ஊர்வலம் நடத்துவோம் என்று அறிவித்தார்கள், ஏனோ அது ஒத்திபோடப்பட்டு விட்டது. நான் என்ன கேட்கிறேன் என்றால், நாம் ஏன் இதற்காகவும் டெல்லியில் முதல் அமைச்சர் தலைமையிலேயே ஊர்வலம் நடத்தக்கூடாது, போராடக் கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, போராட வேண்டிய அவசியமான நிலைமை இல்லை, அவர்களே சலுகைகளை தரவேண்டும் என்று முன் வந்திருக்கிறார்கள் என்பது தான் நான் ஏற்கெனவே சொன்ன பதில்.

[முற்பகல் 9-40]

திரு. ஜே. ஜேம்ஸ் : இத்தனை பிரச்னைகளுக்கும் காரணம், அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஷெட்யூல்ட் காஸ்ட் என்று சொன்னால் இந்துவாகத்தான் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆகவேதான் இந்துக்கள் அல்லாத ஷெட்யூல்ட் காஸ்ட்டைச் சார்ந்த மக்களுக்கு இந்தச் சலுகைகள் பெற வாய்ப்பில்லை. ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு நமது சட்டசபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : புத்த மதத்திற்கு மாறியவர்களுக்கும் இந்தச் சலுகை தற்போது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் பிடிவாதம் இருப்பதாக இந்த அரசு கருதவில்லை. ஆகவே சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டிய அவசியமே ஏற்படாது.

கள்ளக்குறிச்சியில் கிளை அச்சகம்

*வினா 54—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கள்ளக்குறிச்சியில் அரசு கிளை அச்சகம் ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இல்லை.

கொடுமுடியாறு அணைத் திட்டம்

*வினா 55—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொடுமுடியாறு அணைத் திட்டம் எப்போது செயல்படும், இத்திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கொடுமுடியாறு அணைத் திட்டம் தற்சமயம் மறுபரிசீலனையில் உள்ளது. இத்திட்ட அமைப்பின் நீரியல் சம்பந்தமாக நுட்பமான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் முடிவுகளைப் பொறுத்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்செண்ட்: இந்த கொடுமுடியாறு அணைத் திட்டம் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது? அதனால் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பயனடையும்? அவசரக் காலச் சட்டம் இருந்தபோது ரூ. 25 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் பாசனத் துறை அமைச்சர் அவர்களும், முதன்மைப் பொறியாளர் அவர்களும் மூன்றாண்டு நீர் பிடிப்பை எடுத்து திட்டம் செயல்படுத்தப்படும் என்று கூறினார்கள். இப்போது மூன்றாண்டு நீர்பிடிப்பு இருக்கிறது, நல்ல நீர்பிடிப்பு இருக்கிறது, மழை ஏராளமாக இருக்கிறது. ஆகவே அடுத்தாண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கொடுமுடியாறு அணைத் திட்டம் மூலமாக ஏறத்தாழ ஆறாயிரம் ஏக்கர் பயன் படுகிற அளவில் இருக்கிறது. இத்திட்டத்திற்காக 1975ல் –166 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது. இப்போது இருக்கக் கூடிய விலைவாசி அடிப்படையில், எஸ்கலேஷன் காரணமாக, ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாயைத் தாண்டுகிற அளவிற்கு இந்தத் திட்டம் இருக்கும் என்று நம்பப்படுகிறது. நீரியல் சம்பந்தப்பட்ட நுட்ப ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு வரு கிறது, அது முடிந்தவுடன் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்பது முடிவு செய்யப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: கொடுமுடியாறு அணைத் திட்டம் நிறைவேற்றப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மூன்றாண்டு புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு இதுவரையில் வந்துள்ள தகவல்களின்படி இத்திட்டம் சரிவரச் செயல்பட அத்தனை வாய்ப்புகளும் இருப்பதால் நேரம் கடத்தாமல் அங்குள்ள வரட்சி நிலையை கவனத்தில் கொண்டு உடனடியாக இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா? அதோடு, இந்தத் திட்டத்திற்கு அதிகாரிகள் குறுக்கீடாக இருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அது வரட்சிப் பகுதியாக இருப்பதால்தான் இந்தத் திட்டம் மீண்டும் மறுபரிசீலனைக்குக் கொண்டுவரப்

பட்டிருக்கிறது. ஏற்கனவே அவசர கால நிலை அமலில் இருந்த போது ரூ. 25 லட்சம் அளவிற்கு அங்கே செலவுகள் செய்யப் பட்டிருக்கிறது. அவைகளை எல்லாம் கணக்கில் கொண்டுதான் இத்திட்டத்தை மீண்டும் மறு பரிசீலனைக்குக் கொண்டு வந்திருக் கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி: இந்தக் கொடுமுடியாறு அணைத் திட்டம் என்று சொல்லப்படுகிற திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே துவங்கப்பட்டு பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்ட திட்டமாகும். ஆளும்கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கியமான பிரமுகர் தலையிட்டு அதைச் செய்யக்கூடாது என்று தடுத்ததன் காரணமாக நிறுத்தப்பட்டிருப்பதாக அந்த வட்டார மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அத்திட்டம் நிறைவேற்றப் பட்டால் ஆறாயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுவதோடு மட்டுமல்லாமல் அந்த வட்டாரம் செழிக்கவும் நல்ல வாய்ப்பிருக் கிறது. பரிசீலனை முடிந்த பிறகுதான் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஆகவே மீண்டும் பரிசீலனை செய்வது என்பதை விட்டு விட்டு அந்தத் திட்டத்திற்கான வேலைகளை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆளுங்கட்சிக்காரர் களாக இருந்தாலும் சரி அல்லது எதிர்கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி ஒரு நல்ல திட்டத்தை யார் குறுக்கீடு செய்தாலும் அதை இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்காது. நாட்டு மக்களின் நன்மையை முதன்மையாகக் கொண்டு இந்த அரசு செயல்படும் என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: நாங்குனேரி பகுதியில் உள்ள விவசாயிகள் மத்தியில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த தனியாருடைய தென்னங்கன்றுகள் 2500-க்கு மேல் பாதிக்கப்படுவதன் காரணமாக திட்டம் தடை செய்யப்படுமோ என்று அங்குள்ள மக்கள் பயப்படுகிறார்கள். இந்த நேரத்தில், எங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பாராட்டு தெரிவிக்கிறபோது ''கொடுமுடி கண்ட கொற்றவன்,, என்றும் ''கொடுமுடி கண்ட கோமகன்,, என்று பட்டம் சூட்டி இருக்கிறார்கள். அரசு கொடுத்த பட்டமா அல்லது பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத்தலைவர் அவர்களே, 2,500 ஏக்கர்களில் தனியார்களுக்கு தென்னங்கன்றுகள் பயிரிடப்பட்டிருப்பதாகவும், தென்னந்தோப்புகள் இருப்பதாகவும் அது பாதிக்கப்படுவதாகவும் சொன்னார்கள். அப்படிப்பட்ட தகவல் அரசுக்கு வரவில்லை. அப்படி இருந்தாலும், அவர்களுக்

1979 அக்டோபர் 31]

காக முடக்கி வைக்கப்போவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அங்கு இருக்கக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தனக்கு பட்டத்தைப் போட்டுக் கொண்டிருப்பதாகவும், 'கொடுமுடிகண்ட கோமகன்' என்றும் 'கொற்றவன்' என்றும் போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார்கள். இப்போதெல்லாம் அரசியலில் அவர்களுக்குள்ளேயே தங்களுக்கு வேண்டிய தகுந்த பட்டங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இங்கு இருக்கக் கூடிய உறுப்பினர்கள் உதவி செய்ய மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இது மத்திய அரசோ அல்லது மாநில அரசோ கொடுக்கவில்லை. அவரால் போட்டுக்கொண்ட பட்டமாக இருக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்னங்கன்றுகள் உற்பத்தி.

* வினா 56.—திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வீரிய ஒட்டு தென்னை சாகுபடி திட்டத்தின் கீழ் அரசு தென்னை ஆராய்ச்சி பண்ணைகளில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) எந்த அடிப்படையில் விற்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

விவர அறிக்கை* அவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

சின்னசேலம் மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்

* வினா 57 —திரு. துரை முத்துசாமி, திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் சின்னசேலம் அரசினர் மருத்துவ மனைக்கு சொந்தமாக புதுக்கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) & (ஆ) ஐம்பத்தாறு படுக்கைகள் கொண்ட வட்டத் தலைமையிட மருத்துவமனை 15 கி. மீ. தொலைவில் உள்ள கள்ளக்குறிச்சியில் இருப்பதாலும், தற்போது சின்னசேலம் அரசு மருந்தகம் இயங்கி வரும் இடத்தில் புதிய கட்டிடங்கள் கட்ட போதுமான இடம் இல்லையென்பதாலும், புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

[715-716ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.[

[1979 அக்டோபர் 3]

அரசு மருத்துவமனைகளில் 'பென்சிலின்' உபயோகம்

வினா 58— திரு. ஆர். மணிமாறன், டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் 'பென்சிலின் மருந்து தடை செய்யப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கு இணையான மாற்று மருந்துகள் ஏதேனும் பயன்படுத்தப்படுகிறதா?

(இ) 1975-முதல் இன்றுவரை பென்சிலின் இன்சக்ஷன் போட்டதால் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

(ஈ) குழந்தைகள், நோய்-தடுப்பு, சளி பிடித்தல், ப்ராங்கடீஸ் ஆறாத புண்கள், பால்வினை நோய் போன்ற நோய் தடுப்புக்கு பென்சிலின்தான் பயனுடையதாக உள்ளதால், அதனை மீண்டும் உபயோகப்படுத்த அரசு மறு பரிசீலனை செய்யுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) உயர் மட்ட மருத்துவ வல்லுநர் குழுவின் பரிந்துரைக்கு இணங்க அரசு மருத்துவமனைகளில்/நிலையங்களில் புற நோய் பிரிவுகளில் மட்டும் பென்சிலின் ஊசி போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளுறை நோயாளிகளுக்கு சோதனைக்குப்பின் பென்சிலின் போடப்பட்டு வருகிறது.

(ஆ) அதற்கு இணையான மாற்று மருந்துகள் சல்பனாமைடு ஆண்டிபையாடிக்கான டெட்ராசைக்கிளின் ஆகிய மருந்துகள் உசிதம்போல் கொடுக்கப்படுகின்றன.

(இ) அரசு மருத்துவமனைகளில் பென்சிலின் ஊசி போட்டதால் இறந்தவர்கள் எண்ணிக்கை மொத்தம் பதினைந்து பேர்கள் என்று மாநில மருத்துவக் கட்டுப்பாட்டு அலுவலர் தற்போது தெரிவித்துள்ளார்.

(ஈ) ஆம்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, பென்சிலின் ஊசி இப்போது தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் நோயாளிகள் இன்று அவதிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே முழுமையாக இதை நிவர்த்தி செய்வதற்கு அரசு ஏதாவது பரிசீலனை வைத்திருக்கிறதா? இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் : (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே' பென்சிலின் ஊசி போட்டதின் காரணமாக மருத்துவமனைகளில் பலர் அகால

[1979 அக்டோபர் 31]

மரணமடைந்திருக்கிறார்கள் என்ற புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. செய்தித்தாள்களிலும் இதுபற்றிய செய்திகள் வந்து இருக்கின்றன. இதைப்பற்றி மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து விவாதித்தனர். அக்குழு அரசுக்கு சில பரிந்துரைகளை செய்தன. அதன்படி மருத்துவமனைகளில் புறநோயாளிகளுக்கு பென்சிலின் ஊசி போடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்ளுறை நோயாளிகளுக்கு சோதனைக்குப் பின், ஆன்டிபயாடிக் மருந்துகள் தயார் செய்து வைத்துக்கொண்டு பென்சிலின் ஊசி போடவேண்டும். புற நோயாளிகளுக்கு இதற்கு இணையான ஆன்டிபயாடிக்கான டெட்ராசைக்கிளின் ஆகிய மருந்துகள் உசிதம் போல் கொடுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன் அடிப்படையில்தான் இப்போது பென்சிலின் ஊசி போடுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது மேலும் நிபுணர் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஐயா, இதர மாநிலங்களில் இப்படி பென்சிலின் ஊசி போட்டுக்கொண்டதால் யாரும் இறக்கவில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. இதர மாநிலங்களில் பென்சிலின் ஊசி போடுவது தடுக்கப்படவும் இல்லை. அப்படியிருக்கும்போது, தமிழ்நாட்டில் மட்டும் பென்சிலின் ஊசி போடுவதை தடுத்து நிறுத்துவதற்கு என்ன காரணம்?

[முற்பகல் 9-50]

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஒரு தனிப்பட்ட வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது எந்த முறையில் நோயாளிகள் இறப்பதற்குக் காரணம் என்பதை ஆராய்ந்து, அந்தக் குழுவின் அறிக்கை தீவிர பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவினுடைய ரிப்போர்டு சப்மிட் பண்ணியாகிவிட்டது. அதனுடைய சிபார்சுகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று அமைச்சு செயலர் அவர்கள் சொன்னார்கள். கவர்ன்மென்ட் சோர்சிலே 15 பேர்கள் மரணம் அடைந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த அளவிலே 15 மரணங்கள் சம்பவித்தது, அலர்ஜியிலே செத்தார்களா அல்லது அந்த மருந்திலே வேறு ஏதாவது மிக்ஸ் ஆகி கெட்டுப்போயிற்றா, என்ன காரணங்கள் என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்களா? அதைச் சொல்லுங்கள்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்) ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய காரணங்களைத் தான் அந்தக் குழு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் கேட்க வேண்டிய கேள்வியை திரு. உமாநாத் அவர்கள் கேட்டு விட்டார்கள். அடுத்த கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இறந்த அந்த 15 குடும்பங்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்கப் பட்டதா? இல்லையென்றால், இனிமேல் நிதி உதவி அளிக்கப் படுமா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

கால்நடைகள் மருத்துவத்திற்கான கட்டணம்.

வினா 59—திரு. நா. பழனிவேல் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) கால்நடை மருத்துவ மனைகளில் (Key Village Centres) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் மாடுகளுக்கு அங்கே ஊசி போடக்கூடிய டாக்டர்கள் ரசீது கொடுத்து இரண்டு ரூபாய் வசூல் செய்கிறார்கள். சில இடங்களில் ரசீது கொடுக்காமல் வசூல் செய்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் அப்படி இல்லை என்று சொல்வது வியப்பாக இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு விசாரணை செய்யக்கூடிய முறையில் தனி அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட புகார்கள் என் கவனத்திற்கு வருமேயானால், நிச்சயமாக அதிகாரிகளை நியமித்து விசாரணை செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

1979 அக்டோபர் 31]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பிற்கு அரசு ஏதேனும் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறதா? வறட்சிப் பாங்கானதை வளமாக்க அரசிடம் ஏதாவது செயல் திட்டம் இருக்கின்றதா? அதை விளக்க முடியுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டமும், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை அளித்தல், சுற்றுப்புற பகுதிகளில் தரம்வாய்ந்த கால்நடைச் செல்வத்தைப் பெருக்குதல் ஆகிய இவ்விரண்டும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த முறையில் 1978–79ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் 400 ஆட்டினப் பிரிவுகளைத் தனிப்பட்டவர்க்கும், 200 ஆட்டினப் பிரிவுகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்க இருக்கிறார்கள். மேலும், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.24,13,000 ஆகும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தாங்கள் எல்லோரையும் விதிமுறைகள்படி நடத்துகிறீர்கள். இது எப்படி துணைக் கேள்வியாகும் என்பது தெரிய வேண்டும். இது துணைக் கேள்வியாக இல்லை. எனவே, இதைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால், மற்ற உறுப்பினர்களும் இதுபோன்ற கேள்வியைத் துணைக் கேள்வியாகக் கேட்பார்கள். அதையும் தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையாக கால்நடை மருத்துவ மனைகள் தமிழ்நாட்டிலே எந்த அளவில் இருக்கின்றது என்பதைப் பற்றியது. இதில், குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டு, அதற்கான பதில் தயாராக இருப்பதுபோல் நிலைமையை உருவாக்குகிறது. ஆகவே, தயவு செய்து கேள்வியின் மொத்த விவரத்தைப் பற்றிச் சொல்லலாமே தவிர, குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றி விவரம் அளிப்பது போன்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது. அது இனிமேல் ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பு: தலைவர் அவர்களே,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம், உட்காருங்கள். மணி என்ன ஆகிறது பாருங்கள். கேள்வி எண் 60.

[1979 அக்டோபர் 3

மொண்டிபாளையத்தில் கால்நடை மருத்துவ மனை

* வினா 60—திரு. சொ.ந. பழனிசாமி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மொண்டிபாளையத்தில் பொது மக்களால் கட்டப்பட்டுள்ள மருத்துவமனையினை அரசு ஏற்று, அங்கு ஒரு கால்நடை மருத்துவரை நியமிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ;— மொண்டிபாளையத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கும் கால்நடை உதவி மருத்துவர் நியமனம் செய்யவும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சொ. ந. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மொண்டிபாளையத்தில் மருத்துவ மனை துவக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் இல்லையென்று சொல்லுகிறார்கள். அந்த யூனியன் ஜனத்தொகைக்கேற்ப பரிசீலனை செய்து மேற்படி மருத்துவ மனை துவக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கோவை மாவட்டம் அவினாசி ஊராட்சி ஒன்றியத்தில், அவினாசியில் கால்நடை மருந்தகம் ஒன்று செயல்படுகிறது. மேற்படி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது கால்நடை மருந்தகமாக சேயூரில் மருந்தகம் துவக்குவது குறித்த செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. கீழ்க்குறிப்பிட்டுள்ள காரணங்களால் சேயூருக்குப் பதிலாக மொண்டிபாளையத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு தற்போது அவசியம் இல்லை என்று கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் கூறியுள்ளார்.

சேயூரில் உள்ள கால்நடை கிளை நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும் சேயூர் மற்றும் அவ்வூரைச் சுற்றியுள்ள 17 கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 24,938. மொண்டிபாளையம் மற்றும் அவ்வூரைச் சுற்றியுள்ள 10 கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 12,722.

மொண்டிபாளையத்தில் பொது மக்களால் கட்டப்பட்டுள்ள கட்டிடம் கால்நடை கிளை நிலையம் மட்டும் செயல்பட தேவையான அளவில்உள்ளது. கால்நடை மருந்தகம் செயல்படுவதற்குப் போதுமானதாக இல்லை மேலும் அது கோயில் புறம்போக்கில் இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஒப்புதலின்றி கட்டப்பட்டுள்ளது.

1979 அக்டோபர் 31]

சேயூரிலிருந்து மொண்டிபாளையம் 7 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சேயூரில் கால்நடை மருந்தகம் துவக்கப் பட்டால், அது மொண்டிபாளையத்தில் உள்ள கால்நடைகளின் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும்.

எனவே, மொண்டிபாளைத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்கு காவல் துறையின் தனிப் பிரிவு

*வினா எண். 60-அ— திரு. சென்னை மு. அரங்கநாதன்: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகப் பணிகளுக்கு துணையாக தனி துணைக் காவல் நிலையம் வேண்டுமென்று மாநகராட்சி நிர்வாகம் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு அந்த கோரிக்கை அரசுக்கு வந்தது?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : (அ) & (ஆ) சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சட்டதிட்டங்களை திறம்பட அமல் படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணையாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், எட்டு காவலர்களையும் கொண்ட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி அரசுக்கு 27-12-1975 நாளிட்ட கடிதத்திலே ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். சென்னை மாநகரத்தில் நடக்கும் நகர் நலக் குற்றங்களை (Civic offences) தடுக்கும் பொருட்டு 1976 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர், எட்டு காவலர்-தரம் 1 ஆகியோரை அரசு நியமித்து விட்டதால் மாநகராட்சி தனி அதிகாரி அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் ; செயலர் சொன்ன விவரங்கள் எனக்குப் புரியவில்லை. மீண்டும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சட்டதிட்டங்களைத் திறம்பட அமல்படுத்துவதற்கும், மாநகராட்சிக்கு உதவியாக ஒரு காவல் துறை உதவி ஆணையாளர், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள்,

எட்டு காவலர்களையும் கொண்ட ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துமாறு சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி அரசுக்கு 27-12-1975 நாளிட்ட கடிதத்தில் ஒரு கோரிக்கை அனுப்பியிருந்தார். சென்னை மாநரத்தில் நடக்கும் நகர் நல குற்றங்களைத் தடுக்கும் பொருட்டு 1976-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர், எட்டு காவலர்—தரம் 1 ஆகியோரை அரசு நியமித்துவிட்டதால்' மாநகராட்சித் தனி அதிகாரி அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : 1975 ஆம் ஆண்டு அரசுக்கு மாநகராட்சி மூலமாக இந்தக் கோரிக்கை வந்தது என்று தெரிவித்தார்கள். நான் மாநகராட்சியின் சுகாதார குழுத் தலைவராக இருந்தபோது இந்தக் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டது. இப்போது சிறப்பு அலுவலர் அதை வலியுறுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். இதை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா? இதை அமைக்காத காரணத்தால் என்க்ரோச்மென்ட் போன்றவை ஏறபடும்போது நடவடிக்கை எடுக்க காவலர்கள் வரமுடியாத நிலைமை ஏற்படுகிறது. நேற்றைய தினம் கூட நகராட்சி நடைபாதையில் கட்டடம் கட்டி அமைச்சர் வந்து திறந்து வைத்திருக்கிறார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். வேறு எங்கோ போகிறீர்களே. கேள்வி கேட்கிற திறமை வேண்டாமா? இதிலே போய் ஒரு குற்றச்சாட்டா?

[முற்பகல் 10-00]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : ஏன், குற்றச்சாட்டு சொன்னால் அலறுகிறீர்கள் நீங்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளைப் படியுங்கள்:

திரு. சென்னை மு. அரங்கநாதன் : இது குற்றச்சாட்டு அல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்க உடனடியாக காவல் நிலையம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்) : சென்னை மாநகரத்தில் நடக்கும் நகர் நல குற்றங்களை தடுப்பதற்காக இரண்டு நடமாடும் நீதி மன்றங்களை ஏற்படுத்த அரசு ஆணை நிலை எண். 2228, உள் துறை, நாள் 7-9-1976ல் உத்தரவிட்டது. இந்த இரு நடமாடும் நீதி மன்றங்களுக்கு உதவியாக இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக்

1979 அக்டோபர் 31]

காவலர், எட்டு காவலர்-தரம் 1 ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஆதலால், சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை,

அரசு ஆணை நிலை எண் 2228, உள் துறை, நாள் 7-9-1976ல் ஏற்படுத்தப்பட்ட இரண்டு நடமாடும் நீதி மன்றங்கள் தற்போது நடமாடும் நீதிமன்றங்களாக செயல்படாமல் XIX, XX மெட்ரோ பாலிடன் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றன. 19-11-1977 முதல் இவை காலை நேரங்களில் அந்தந்த டிவிஷனில் உள்ள வட்ட அலுவலகம் ஏதாவது ஒன்றில் செயல்படுகின்றன. மாலை நேரங்களில் இவை கண்ணப்பர் திடல், மற்றும் நுங்கம்பாக்கத்தில் உள்ள வட்ட அலுவலகங்களில் செயல்படுகின்றன. இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கு உதவியாக நியமிக்கப் பட்டகாவல் துறை அலுவலர்களின் பதவிகள் 29-2-1980 முடிய நீட்டிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் என்னவென்றால், நகர் நலக்குற்றங்களைத் தடுப்பதற்கு நியமிக்கப்படும் காவல் துறை அலுவலர்களுக்கான முழுச்செலவையும் சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொள்ள சம்மதிக்கிறதா, என காவல்துறையினரால் கேட்கப்பட்டது. இதற்கிடையில், நகர்நலக் குற்றங்களைத் தடுக்க இரண்டு நீதிமன்றங்களை ஏற்படுத்திவிட்டதால் சென்னை மாநகராட்சி தனி அலுவலர் அனுப்பிய கோரிக்கையின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

காவல் துறையில் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறை

* வினா எண். 60-ஆ—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) போக்குவரத்துப் போலீசாருக்கு என ஒரு கட்டுப் பாட்டு அறை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

திரு. சு. ம. துரைராஜ் (அமைச்சரின் பேரவை செயலர்);

(அ) & (ஆ) தற்போது ஒரு போக்குவரத்து கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது. இதற்குத் தனியாக ஒரு வானொலி வழி அமைக்கப்பட்டுள்ளது. இத்தனி வழியாக போக்குவரத்து சம்பந்தப்பட்ட அறிவுரைகளைப் பொது மக்களுக்கு எடுத்துக் கூறவும், நெரிசல்களைப் தவிர்க்கவும், குறிப்பாக முக்கிய பிரமுகர்கள் வருகை தரும்போதும் மற்றும் ஊர்வலங்கள் வரும் போதும் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய மிகவும் பயன்படுகிறது. பொதுமக்கள் சாலை விபத்து, மற்றும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட பல விஷயங்களில் நேரடித் தொடர்பு கொள்ள தனித் தொலைபேசிகள் இந்த கட்டுப்பாட்டு அறையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தனித் தொலைபேசிகள் பற்றிய விவரங்கள் திரை அரங்கு விளம்பர கண்ணாடி மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

[1979 அக்டோபர் 3.

உடுக்குறியிடாத வினாக்கள்.

மது பெர்மிட் பெற்றுள்ள நீதிபதிகள்.

வினா 1— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதிபதிகளாக இருப்பவர்கள் எத்தனை பேர்களுக்கு மது பர்மிட் கொடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) எந்த ஆண்டு முதல் ? மாவட்ட வாரியாக.

விடை —

(அ) தற்போது நீதிபதிகளாக உள்ளவர்களில் இருவருக்கு உடல்நல அடிப்படையில் மது உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை நகரத்தில் 1975-ம் ஆண்டு முதல் நீதிபதி ராமசாமி அவர்களுக்கும், 1974-ம் ஆண்டு முதல் நீதிபதி நடராசன் அவர்களுக்கும் மது உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

Number of patients attended to at Palani Hospital.

Q. 2—Thiru S. M. VASAN: Will the Hon. the Health Minister be pleased to state—

(*a*) the total number of patients treated as in-patients and out-patients at the Government Hospitals in Palani Town for the calendar years 1976 and 1977 —monthwise; and

(*b*) the number of doctors attending on them?

விடை —

(அ) மற்றும் (ஆ) விபர அறிக்கை* பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 716–717-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 அக்டோபர் 31]

புதுக்கோட்டை—ஆலங்குடி சாலை.

வினா 3—திரு. த. புஷ்பராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை—ஆலங்குடி (வழி) தவளைப்பள்ளம் கும்மங்குளம் பெருவழித்துறை சாலைக்கு தார் போடும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தனியார் பேருந்துகள் அனுமதிக்கப் பெற்ற வழித் தடங்கள்.

வினா 4— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் 1977 டிசம்பர் திங்கள் முடிய தனியார்கள் எத்தனை பேர்களுக்கு எந்தெந்த வழித் தடங்களில் பேருந்து விட அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

விவர அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

மது பர்மிட் கோரி வந்த விண்ணப்பங்கள்.

வினா 5—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977—78-ம் ஆண்டில் மது அருந்துவதற்கான பர்மிட் கோரி விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) மாவட்ட வாரியாக.

* 717–718ஆம் பக்கங்களில் இணைப்பு IIIஆக அச்சிடப்பெற்று உள்ளது.

(இ) அவைகளில் அனுமதிக்கப்பட்டவை எத்தனை ?

(ஈ) மாவட்ட வாரியாக.

விடை —

(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ): மாவட்ட வாரியாக 1977-78 அம் ஆண்டில் மது அருந்த அனுமதி கோரி விண்ணப்பித்தோரின் எண்ணிக்கையும் அவைகளில் அனுமதிக்கப்பட்டவையும் காட்டும் விவர * அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அவினாசித் தொகுதியில் கட்டப்பெற்ற அரிசனக் குடியிருப்புகள்.

வினா 6—திரு. சொ. நா. பழனிச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அவினாசி தொகுதியில் அரசு சார்பில் கட்டப்பட்ட அரிசனக் குடியிருப்புகள் எத்தனை உள்ளன? இன்னும் ஏதாவது புதிய குடியிருப்புகள் அமைக்க உத்தேசம் உண்டா ?

(ஆ) கட்டிக் கொடுக்கப்பட்ட எத்தனை குடியிருப்பு மனைக்கு பட்டா வழங்கப்பட்டு உள்ளது ?

(இ) கோவை மாவட்டத்தில் அரிசன நலத்துறையினால் நடத்தப்படும் பள்ளிகள் எத்தனை ?

விடை —

(அ) அவினாசி தொகுதியில் அரசு சார்பில் அரிசனங்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் 201. நடப்பாண்டில் அவர்களுக்காக கட்ட வேண்டிய வீடுகள் பற்றிய நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கட்டிக் கொடுக்கப்பட்ட எல்லா வீடுகளுக்கும் மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசன நலத்துறையால் நடத்தப்படும் அரிசன மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் 43.

*726-727 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பெற்று உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

பெரியகுமட்டி—வயலாமூர் கிராமச் சாலை.

வினா 7—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் பரங்கிப் பேட்டை ஒன்றியத்தில் பெரியகுமட்டி-வயலாமூர் கிராமச் சாலையை கோட்ட வளர்ச்சி அலுவலர் மூலம் மதிப்பீடு தயார் செய்து கிராமச் சாலை திட்டத்தில் சேர்த்துக் கொள்ள சிபாரிசு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் என்ன நடவடிக்கை. எடுக்கப்பட்டது ?

விடை —

(அ) பெரிய குமட்டி-வயலாமூர் சாலையை ''இணைப்புச் சாலைகள்'' திட்டத்தின் கீழ் செயல்படுத்த கோட்ட வளர்ச்சி அலுவலர் பரிந்துரை செய்துள்ளார்.

(ஆ) 4.20 கிலோ மீட்டர் நீளமுள்ள பெரியகுமட்டி—வயலாமூர் சாலையை மேம்பாடு செய்யவும் தேவையான இடங் களில் பாலங்கள் அமைக்கவும் சுமார் 4 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ் செயல்படுத்துவது பற்றி இனிவரும் திட்ட காலங்களில் பரிசீலனை செய்யப்படும்.

திருத்தங்கூர் மருந்தகக் கட்டிடம்.

வினா 8—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) திருத்துறைப்பூண்டி ஒன்றியத்திலுள்ள திருத்தங் கூரில் ரெகுலர் டிஸ்பென்சரிக்கு கட்டிடம் கட்டப்பட்டும் துவக்கப்படாமல் உள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை —

(அ) உண்மையில்லை.

(ஆ) அவ்வினாவுக்கு இடமில்லை.

ஈரோடு அரசு மருத்துவமனையில் தந்தை பெரியார் படம்.

வினா 9—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஈரோடு அரசு மருத்துவமனையில் வைக்க தந்தை பெரியார் படம் கொடுக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது ஏன் வைக்கப்படவில்லை?

(இ) இம்மருத்துவமனைக்கு "அய்யா" அவர்கள் கொடுத்த நன்கொடை எவ்வளவு?

விடை —

(அ) & (ஆ); ஈரோடு அரசு மருத்துவமனையில் தந்தை பெரியார் படம் வைக்கப்பட்டுள்ளது.

(இ) குழந்தைகள் பகுதி வார்டு கட்டுவதற்காக இம்மருத்துவமனைக்கு தந்தை பெரியார் அவர்கள் 1972 ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் நன்கொடையாக கொடுத்தார்கள். இம்மருத்துவமனையில் அதன்படி குழந்தைகள் பகுதி வார்டு கட்டப்பட்டுள்ளது.

காவேரிப் பாக்கம் ஏரியில் மீன பிடித்தல் மூலம் கிடைக்கும் வருமானம்.

வினா 10—திரு. துரை முருகன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம், காவேரிப்பாக்கம் ஏரியில் மீன் பிடித்தல் மூலம் வரும் வருமானத்தில், சுமைதாங்கி, வள்ளுவம்பாக்கம் ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு நட்ட ஈடு தரப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், சென்ற ஆண்டு எவ்வளவு தொகை இந்த பஞ்சாயத்துக்களுக்குத் தரப்பட்டது?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) 1977ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16ஆம் தேதி முதல் 1978ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் தேதியோடு முடிந்த ஓராண்டு காலத்திற்கு சுமைதாங்கி ஊராட்சிக்கு ரூ. 126.56 ஆம் வள்ளுவம்பாக்கம் ஊராட்சிக்கு ரூ. 414.62-ம் வழங்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

மருத்துவர்களுக்கு தமிழ்நாடு முதலீட்டுக்கழகக் கடன்கள்.

வினா 11—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் நர்சிங்ஹோம், சோதனைச் சாலை, ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதற்கு கடன் தரும்படி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தை அரசு கேட்டுள்ளதா?

விடை —

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டி. ஐ. ஐ. ஸி.) நிறுவனம் கிராமப்புறங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. தனி மருத்துவ மனைக்குத் தேவையான சாதனங்கள், மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள் முதலியவை வாங்கவும், மருத்துவ இல்லம் அமைக்கவும், கால்நடை மருத்துவப் பகுதி அமைக்கவும் டி. ஐ. ஐ. ஸி. சலுகை வட்டி வீதத்தில் அதாவது 9.5 சதவீத வட்டிக்கு 1 இலட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்குகிறது. மருத்துவர்கள், அறுவை சிகிச்சையாளர்கள், பல் வைத்தியர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் ஆகியவர்கள் இத்திட்டத்தின் கீழ் உதவி பெறுபவர்கள் ஆவார்கள். ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் அல்லது மூன்றாந்தரமான நகராட்சி ஆகிய பகுதிகளில் தொழில்களைத் தொடங்குபவர்களுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிக்கப்படும். நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ளவர்கள் இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற இயலாது.

2. வர்த்தக முறையில் மருத்துவ இல்லங்கள் அமைப்போருக்கும் நிதி வழங்கும் பொருட்டு, அண்மையில் டி. ஐ. ஐ. ஸி. அதன் சங்க விதிகளில் உட்கூறுகளை மாற்றி அமைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்க தகுந்த வழிவகைகளையும் வகுத்து வருகின்றது.

சீரப்பாளையம் அரிசனமக்கள் வாழும் பகுதி.

வினா 12—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி சீரபாளையம் கிராமத்திலுள்ள அரிசன மக்கள் வாழும் இடத்திற்கு மிக அருகிலுள்ள சுடுகாட்டை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டத்தினை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை —

(அ) சீரபாளையம் கிராமத்திலுள்ள அரிசன மக்கள் வாழும் இடத்திற்கு மிக அருகிலுள்ள சுடுகாட்டை வேறு இடத்திற்கு மாற்ற அரிசனங்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

(ஆ) இந்துக்களின் சுடுகாட்டால் தற்போது அரிசனங்களுக்கு எந்தவித இடையூறோ, தொந்திரவோ இல்லாது இருப்பதால் அதை மாற்றவேண்டிய அவசியம் ஏதும் தற்போது இல்லை என்று அரிசன மக்கள் சொன்னதாக மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி அணைக்கட்டில் மீன் பண்ணை.

வினா 13—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி அணை நீர்தேக்கப் பகுதியிலுள்ள அரசு மீன்வள பண்ணையினை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

விடை —தருமபுரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி அணைக்கட்டில் மீன்பண்ணை கட்டுவதற்கு ரூ. 1,32,000 (ஒரு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும்) மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 4 மீன் நாற்றங்கால்களைக் கொண்ட இந்த மீன் பண்ணையை தற்போதுள்ள மீன் நாற்றங்கால்களை ஒட்டியே உள்ள இடத்தில் வரைபடம் மற்றும் மதிப்பீடு இவைகள் பொதுப் பணித்துறையினரால் தயாரிக்கப்பட்டு, தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் கழக ஆணையாளருக்கு அவைகளை செயல்படுத்த அனுப்பப் பட்டுள்ளது.

மேலும் கிருஷ்ணகிரி அணையில், 50 ஹெக்டர் நிலப் பரப்பில் நிரந்தரமான தண்ணீர் வசதியுடன் கூடிய மாவட்ட அளவில் மீன்பண்ணை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிதம்பரம் வட்ட அரிசனங்களுக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடன்.

வினா 14—திரு. துரை. கலியமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டத்தில் அரிசனங்களுக்கு மான்யத் தொகையுடன் கூடிய கறவை மாடுகள் வாங்கக் கடன் கேட்டு வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) இதுவரை கடன் பெற்றவர்கள் எத்தனை?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) 1977–78-ம் ஆண்டில் சிதம்பரம் வட்டத்தில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களின் அரிசன உறுப்பினர்களிடமிருந்து கறவை மாடுகள் வாங்க பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 399 ஆகும்.

(ஆ) 204 அரிசன உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க ஒவ்வொருவருக்கும் ரூ. 500 வீதம் மான்யமும் நாட்டுடமையாக்கப்பட்ட வங்கி மூலம் கடனும் வழங்கப்பட்டது.

புயல் வெள்ளத்தால் வீடிழந்தவர்களின் எண்ணிக்கை.

வினா 15—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடிழந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) எத்தனை பேர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது ?

(இ) பட்டுவாடா செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

விடை —

(அ) & (ஆ) 39,499.

(இ) 78,48,820 ரூபாய்.

நெடுஞ்சாலை கிராம வேலைத் திட்டத்தின்கீழ் மயானங்களுக்கு பாதை அமைத்தல்.

வினா 16—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி, திருமலையம் பாளையம் கிராமத்தில் நெடுஞ்சாலை கிராம வேலைத் திட்டத்தில் காளியாபுரம் அரிசன மயானத்திற்கும் திருமலையம் பாளையம் அரிசன மயானத்திற்கும் பாதை அமைக்கப்பட்டதா ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) ஒப்பந்தக்காரர்களுக்குத் தொகை தரப்பட்டு விட்டதா ?

விடை —

(அ) ஆம்

(ஆ) 1 காளியாபுரம் ரூ 1,500
2 திருமலையாம்பாளையம் .. ரூ 1,500

(இ) ஆம்.

[1979 அக்டோபர் 31

வட சென்னை புறநகர் பகுதி.

வினா 17—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வடசென்னை வீட்டு வசதி புற நகர் பகுதியில் காவல் நிலையம், தெரு மின் விளக்கு, பள்ளிக்கூடம், சுகாதார நிலையம், படிப்பகம், மன மகிழ் மன்றம், சிறுவர் பூங்கா, அங்காடி முதலிய வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன் விபரம் என்ன ?

விடை —

(அ) ஆம்

(ஆ) காவல் நிலையம்.—காவல் நிலையத்திற்கென திட்டப் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் காவல் நிலையம் அமைக்கும்படி வீட்டு வசதி வாரியம் காவல்துறை ஆணையாளரை கேட்டுக் கொண்டு, அதன் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

தெரு மின் விளக்கு.—தெரு மின் விளக்குகளை அமைக்க தேவையான முழுத்தொகை மாநகராட்சிக்கு செலுத்தப் பட்டுள்ளது. தேவையான கேபிள் இல்லை என்ற காரணத்தால் பணி தொடரப்படாமல் இருந்தது. ஆனால், தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு வீட்டு வசதி வாரியமே தேவையான கேபிளை சேமித்து தெருமின் விளக்குகளை அமைக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

பள்ளிக்கூடம்.—இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஏற்கனவே அரசினரால் நடத்தப்படும் உயர்நிலைப்பள்ளி ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சுகாதார நிலையம்.—திட்டப் பகுதியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் மாநகராட்சியால் நடத்தப்படும் இலவச மருந்தகம் ஒன்று ஏற்கனவே இருப்பதால், தனியாக ஒரு சுகாதார நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் வீட்டு வசதி வாரியத்திடம் இல்லை.

படிப்பகம்.—பொது உபயோகத்திற்கென திட்ட வரை படத்தில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. படிப்பகம் அமைக்க உள்ளூர் நூலக அதிகாரக் குழுவை (Local Library Authority) அணுகுமென வீட்டு வசதி வாரியம் அறிவித்துள்ளது.

மனமகிழ் மன்றம்.—தனியே ஒரு மனமகிழ் மன்றம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் வீட்டு வசதி வாரியத்திடம் இல்லை. இருந்த போதிலும், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த ஒரு சமூகக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

1979 அக்டோபர் 31]

சிறுவர் பூங்கா.—மூன்று இடங்கள் முன்னமேயே மேம் படுத்தப்பட்டு அங்கு விளையாட்டுப் பொருட்கள் அளிக்கப் பட்டுள்ளன.

அங்காடி.—வரைபடத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அங்காடிகள் கட்டுவதற்கான திட்டமொன்றை வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சிக் கழகத்திடம் (HUDCO) வீட்டு வசதி வாரியம் சமர்ப்பித்துள்ளது. மேற் கூறிய கழகத் திடமிருந்து தேவையான நிதியுதவி கிடைத்தவுடன் இப்பணி தொடங்கப்படும் என வீட்டு வசதி வாரியத் தலைவர் அறிவித் துள்ளார்.

குடிசைமாற்றுவாரிய, வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளுக்கான வாடகை விகிதங்கள்.

வினா 18—திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளுக்கு 1975 ஆம் ஆண்டில் இருந்த வாடகை விகிதம் என்ன ?

(ஆ) எந்த ஆண்டில் வாடகை உயர்த்தப்பட்டது ?

(இ) எத்தனை சதவிகிதம் ?

விடை

(அ), (ஆ) அண்டு (இ) : விவர அறிக்கை *அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தேசீய நெடுஞ்சாலையின் பொறுப்பில் உள்ள நெடுஞ்சாலைகள்.

வினா 19— திரு. சென்னை மு. அரங்கநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை நகரில் எத்தனை நெடுஞ்சாலைகள், மாநக ராட்சியின் பொறுப்பிலிருந்து தேசீய நெடுஞ்சாலையின் பொறுப்புக்கு எந்த ஆண்டில் மாற்றப்பட்டன ?

விடை

வினாவில் குறிப்பிட்டது போல், இதுகாறும் எந்த சாலை யுமே மாநகராட்சியின் பொறுப்பிலிருந்து, தேசீய நெடுஞ்சாலை யின் பொறுப்புக்கு மாற்றப்படவில்லை

* 727—739-ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1979 அக்டோபர் 3

அன்னியூர் துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டிடம்.

வினா 20—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதி, அன்னியூர் துணை சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது கட்டிடம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும் ?

விடை

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது வாடகைக் கட்டிடங்களில் இருக்கும் அனைத்துத் துணைப் பதிவாளர் அலுவலகங்களையும், மாவட்ட பதிவாளர் அலுவலகங்களையும் படிப்படியாக அரசு கட்டிடங்களில் அமர்த்துவதற்காக விரிவானதொரு திட்டம் வகுத்து அரசு கட்டிடம் கட்ட உத்தேசித்துள்ளது. அவ்வாறு உத்தேசித்துள்ள இடங்களில் அன்னியூரும் ஒன்றாகும், ஆனால் நிதி நிலைமையை அடிப்படையாகக் கொண்டு எந்தெந்த இடங்களில் கட்டலாம் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மானாமதுரை துணை வட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு நிலம்.

வினா 21—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை துணை வட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு 1969—1973 ஆண்டுகளில் அரசு புறம்போக்கு நிலம் ஒதுக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை

(அ) அண்டு(ஆ): தாழ்த்தப்பட்டோருக்கு நிலம் ஒப்படைப்பு செய்வதற்கென்று தனியே இந்தத் துணை வட்டத்தில் நிலம் ஒதுக்கப்படவில்லை. ஆனால் சாதாரணமாக நிலம் ஒப்படை செய்யப்படும்போது அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும் முன்னுரிமை தரப்படுகின்றது. அவ்விதமே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மானாமதுரை துணை வட்டத்தில் 1969–ம் ஆண்டு முதல் 1973–ம் ஆண்டு வரை 941 தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்களுக்கு மொத்தம் 693.34 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

1979 அக்டோபர் 31]

நம்பியாற்றின் குறுக்கே அணை.

வினா 22—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள திசையன்விளை வருவாய் பிரிவில் (பிர்க்கா) உள்ள அணைக் கரை பக்கத்தில் நம்பியாற்றிற்குக் குறுக்கே அணை ஒன்று கட்ட ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்த ஆய்வின் விபரம் என்ன?

விடை

(அ) ஆம். இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 72 இலட்சங்கள். இத் திட்டத்தின்கீழ் 4177 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப் படுத்தப்படும். 167 ஏக்கர் (GAP) நிலங்களுக்கு ஆயக்கட்டு பயன் இணைக்கப்படும். 109.7 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 350 ஏக்கர் புஞ்சை நிலங்களும் புதிய பாசனத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டத்தினால் கிடைக்கும் கூடுதல் உணவு உற்பத்தி 1,011 டன்கள் ஆகும்.

செம்பரம்பாக்கம்—அரக்கோணம் சாலையினைச் சீரமைத்தல்.

வினா 23—திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை-அரக்கோணம் நெடுஞ்சாலையில் செம்பரம் பாக்கத்திலிருந்து அரக்கோணம் வரை செல்லும் சாலை மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுவரை அதனைச் சீரமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை

(அ) & (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் அடங்கியுள்ள அனைத்து சாலைப்பிரிவுகளும், பழுது பார்க்கப் பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவை யாவும் தற்போது பேருந்துகள் செல்வதற்கு உகந்த நிலையில் உள்ளன.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப் பெற்ற பஞ்ச நிவாரண வேலைகள்.

வினா 24—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

1975-76-77 ஆண்டுகளில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்ட பஞ்ச நிவாரண வேலைகள் முடிவடைந்து அளவுகள் பெறப்பட்டு இறுதிப் பட்டியல் பெற்றானபிறகும் இன்னும் டேவணித் தொகை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது உண்மையா?

விடை

1975-76 மற்றும் 1976-77 ஆண்டுகளில் தணிக்கை நடைபெற வேண்டியுள்ளதால் இந்த ஆண்டுகளில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மேற்கொள்ளப்பட்ட பஞ்ச நிவாரண வேலைகள் முடிவடைந்து அளவுகள் பெறப்பட்டு இறுதிப்பட்டியல் பெற்றான பிறகு இன்னும் டேவணித் தொகை (Deposit money) திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சென்னை, திருவள்ளுவர் சாலை பாலம்.

வினா 25—திரு. டி. கே. கபாலி, திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை மயிலாப்பூரில் 91–92-வது வட்டங்களை இணைக்கும் பாலத்தை (திருவள்ளுவர் சாலையிலிருந்து முண்டகன்னியம்மன் கோவில் போகும் பாதையில் உள்ள பாலம்) புதுப்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை

இல்லை.

1979 அக்டோபர் 31]

ஆத்தூரில் அரிசனங்களுக்கு குடியிருப்பு மனைகள்.

வினா 26— திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீடு கட்டித்தரும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில் எத்தனை கிராமங்களில் இத்திட்டம் ஆய்வில் உள்ளது?

விடை

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசன குடும்பங்களின் எண்ணிக்கை 2,632.

(ஆ) பொதுவாக அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளது.

(இ) நடப்பாண்டில் எந்தெந்த கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என இன்னும் முடிவெடுக்கவில்லை.

திருவாவடுதுறை-புதூர் சாலையில் நண்டலாற்றின் குறுக்கே பாலம்.

வினா 27— திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம் கருப்பூர் ஊராட்சி எல்லையில் திருவாவடுதுறை—புதூர் சாலையில் நண்டலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

விடை

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்திற்கு பிற்பட்டோர் நலனுக்கென ஒதுக்கப்பெற்ற தொகை.

வினா 28—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78, 1978–79-ம் ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை பிற்பட்டோர் நலனுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) என்னென்ன வகைகளில் அவை செலவழிக்கப்படுகிறது?

விடை

(ஆ) தருமபுரி மாவட்டத்திற்கு பிற்பட்டோர் நலனுக்கென கீழ்க்கண்ட முறையில் தொகை ஒதுக்கப்பட்டது:—

ஆண்டு.	திட்ட ஒதுக்கீடு.	திட்டமில்லாத ஒதுக்கீடு.
(குற்றப் பரம்பரையினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்)		
1977–78	18,300	1,14,400
1978–79	17,700	1,22,500
பிற்பட்டோர்.		
1977-78	4,29,900	3,73,900
1978–79	4,62,100	3,90,500

(ஆ) என்னென்ன வகைகளில் அவை செலவழிக்கப்பட்டுள்ளன என்பது பற்றிய விவரம் * இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்கு மாநிலக்குழு.

வினா 29—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீண்டாமை ஒழிப்பில் அரசுக்கு ஆலோசனை கூற மாநில அளவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதில் அங்கம் வகிப்பவர்கள் யாவர்?

விடை

(அ) ஆளுநர் ஆட்சிக் காலத்தில் குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை செயலாற்றுவதில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக மாநில அளவில் அலுவலர்களையும், அலுவலர்கள் அல்லாதவர்களையும் கொண்ட குழு அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அவ்வாறு ஒரு குழு அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

*740–743-ம் பக்கங்களில் இணைப்பு VIஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 அக்டோபர் 31]

அறநிலையங்களில் தமிழ்ப் புலவர்களுக்கு வேலை அளிக்கும் திட்டம்.

வினா 30—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலை இல்லாத தமிழ்ப் புலவர்களுக்கு அறநிலையங்களில் வேலை கொடுக்கும் திட்டம் செயல்படத் தொடங்கி விட்டதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தின்கீழ் இதுவரை எத்தனை தமிழ்ப் புலவர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் ?

விடை

(அ) & (ஆ) தமிழ் இலக்கியங்களைப் பரப்ப ஆலயங்களில் முதற் கட்டமாக நூறு தமிழ்ப் புலவர்களைப் பணியில் அமர்த்தலாமென அரசு முடிவு செய்துள்ளது. அவ்வாறு பணியில் அமர்த்தப்படக்கூடிய தமிழ்ப் புலவர்களைத் தேர்ந்தெடுக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு நிறுவனங்கள் அனுப்பியுள்ள புலவர்களை நேரடித் தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்க இக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

லஞ்சம், ஊழல், குற்றங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பெற்ற அரசு அலுவலர்கள்.

வினா 31—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78 ஆம் ஆண்டில் லஞ்சக் குற்றச் சாட்டுக்கள் மற்றும் ஊழல் புரிந்தமைக்காக அரசு அலுவலர்கள் எத்தனை பேர் மீது இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

விடை

1036

அரிசன மக்களுக்கு நிரந்தரமான வீடுகள் கட்டுதல்.

வினா 32—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மக்களுக்கு நடப்பாண்டில் நிரந்தரமான வீடுகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டப்படும்?

(இ) வட ஆற்காடு மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள் வீடுகள் எத்தனை ?

விடை

(அ) வழக்கம்போல் நடப்பாண்டிலும் அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும்.

(ஆ) அரிசன மக்களுக்கு 1978-79 ஆம் ஆண்டு 1,660 நிரந்தரமான வீடுகள் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.

(இ) 1978-79 ஆம் ஆண்டு திட்டத்தின்படி வட ஆற்காடு மாவட்டத்திற்கு 89 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அரசுப் போக்குவரத்து பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டோர்.

வினா 33—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குத் தொடர்புடைய போக்குவரத்துத் துறைகளைச் சார்ந்த பேருந்துகளில் இலவசப் பயணம் செய்ய தற்போது எந்தெந்த வகையினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ?

(ஆ) இதனை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

(அ) போக்குவரத்துத் தொழிலாளர்களைத் தவிர இலவசப் பயணம் பின்வரும் வகையினருக்கு அனுமதிக்கப்படுகிறது:—

(1) சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

(2) சான்றிதழ் பெற்ற பத்திரிகை நிருபர்கள்.

(3) கல்வி பயிலும் இடங்களுக்குச் செல்ல போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பிள்ளைகள் இருவருக்கு மட்டும்.

(4) பல்லவன் போக்குவரத்து (பெருநகர்) பேருந்துகளில் உடல் ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றவர்கள்.

(ஆ) இல்லை.

1979 அக்டோபர் 31]

திருநெல்வேலி மாவட்ட புதிய கண்மாய்களின் ஆயக்கட்டு நிலங்கள்.

வினா 34— திரு ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் ஒட்டப்பிடாரம் கயத்தாறு, கோவில்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை புதிய கண்மாய்களின் ஆயக்கட்டு நிலங்கள் சீர்திருத்தப் படாமலும் விவசாயம் செய்யப்படாமலும் உள்ளன ?

(ஆ) அவைகளின் விவரங்கள் யாவை ?

விடை

(அ) & (ஆ) ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி, கயத்தாறு ஊராட்சி ஒன்றியங்களில் சீர்படுத்தப்படாமல் உள்ள கண்மாய்களின் விவரம் பின்வருமாறு:—

வரிசை எண்ணும், ஊராட்சி ஒன்றியத்தின் பெயரும். (1)	கண்மாய்களின் பெயர். (2)	சீர்திருத்தப்பட வேண்டியது. (3)
		ஏக்கர்.
1 ஒட்டப்பிடாரம் ..	கொல்லம்பரம்பு புதிய கண்மாய்.	296.00
2 ஒட்டப்பிடாரம் ..	வேலாயுதபுரம் புதிய குளம்	195.92
3 ஒட்டப்பிடாரம் ..	தளவாய்புரம் புதிய கண்மாய்.	81.40
4 ஒட்டப்பிடராம் ..	கந்தசாமிபுரம் புதிய கண்மாய்.	74.16
5 ஒட்டப்பிடாரம் ..	எப்போதும் வென்றான் நீர்த்தேக்கம்.	594.47
6 கோவில்பட்டி ..	சிந்தலக்கரை குளம். ..	153.00
7 கோவில்பட்டி ..	அழகப்புரம் குளம் ..	108.00
8 கோவில்பட்டி ..	கரிசல்குளம் புதிய குளம்.	143.20
9 கோவில்பட்டி ..	வாலாம்பட்டி புதிய குளம்.	194.00
10 பயத்தாறு ..	மும்மலைப்பட்டி புதிய குளம்.	46.40

தனியார் துறை பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றியதற்காக தொடரப்பெற்ற வழக்குகள்.

வினா 35 — திரு எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களில் ஓவர்லோடு ஏற்றியதற்காக 1976–77, 1977–78ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு ?

விடை —(அ) தனியார் துறை பேருந்துகளில் அதிகப் பயணிகளை ஏற்றியதற்காக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1976–77	..	1,345
1977–78	..	1,035

(ஆ) வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை—

		ரூபாய்.
1976–77	..	3,41,520
1977–78	..	3,04,025

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம்

வினா 36— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், ஓம்மாம்பலியூர், மாயூரம் வட்டம் மணல்மேடு ஆகிய இரண்டையும் இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது வேலைகள் மேற்கொள்ளப்படும் ?

விடை — (அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

1979 அக்டோபர் 31]

நகரியங்கள்.

வினா 37 —திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எத்தனை டவுன்ஷிப்புகள் உள்ளன?

(ஆ) 1975, 1976, 1977-வது ஆண்டுகளில் அவைகளின் வருவாய் என்ன ?

(இ) வசூலாகாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு?

விடை —(அ) 8 நகராட்சி நகரியங்கள், 11 ஊராட்சிகள் நகரியங்கள்.

(ஆ) (இ) விவர அறிக்கை *இணைக்கப்பட்டுள்ளன.

அரிசனங்களுக்கு கறவை மாடுகள் வாங்கக் கடன்வசதி.

வினா 38 —திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதியிலுள்ள அரிசன மக்களுக்கு நடப்பு ஆண்டில் எத்தனை கறவை மாடுகள் வாங்கிக்கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதற்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் நிதிவசதியளிக்க வகை செய்யப்பட்டு உள்ளதா?

விடை —

(அ) அவினாசி பகுதியிலுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கறவை மாடு வாங்க கடன் மற்றும் மானியம் கோரி (1978–79) நிதியாண்டில் அரிசன மக்களிடமிருந்து விண் ணப்பம் ஏதும் வரவில்லை. ஆதலின் 1978–79 நிதியாண்டில் அவினாசி பகுதியிலுள்ள அரிசன மக்களுக்கு கறவை மாடுகள் வாங்கித் தரும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அரிசன உறுப்பினருக்குக் கறவை மாடு வாங்க கடன் மற்றும் மான்ய உதவி கோரி மனுக்கள் வந்தால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி களிலிருந்து நிதி வசதி பெற ஈரோடு பால் பதம் துணைப்பதிவா ளர் நடவடிக்கை மேற்கொள்வார்.

(* 804-806-ம் பக்கங்கள் இணைப்பு XV ஆக அச்சிடப் பெற்றுள்ளது

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் உள்ள பல்பிரிவு மருத்துவர்.

வினா 39—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பல் பிரிவு தலைமை மருத்துவராக இளநிலை பல் மருத்துவ பட்டதாரி இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தலைமை மருத்துவராக முதுநிலை பட்டதாரியை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில் எப்போது?

விடை —

(அ), (ஆ) & (இ) : திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் இதனைச் சார்ந்த மருத்துவ மனைக்கு பல் நோய் பிரிவில் பேராசிரியர் மற்றும் பல் அறுவை மருத்துவர் (Reader in Dental Surgery) பதவி உருவாக்கப்பட்டு இப் பதவிக்கு எம்.டி.எஸ். (M.D.S.) பட்டம் பெற்ற மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரும் 28—11—1978ல் பணியில் சேர்ந்துள்ளார்.

கேளம்பாக்கம்—கோவளம் இணைப்புப் பாலம்.

வினா 40—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் திருப்போரூர் ஒன்றியம் கேளம் பாக்கம் கோவளம் இணைப்புப் பாலம் பழுதடைந்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா?

விடை —

(அ) 1977-ஆம் ஆண்டு அக்டோபர் நவம்பர் திங்களில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால், இந்தப் பாலத்தின் தடுப்புச் சுவர்கள் (Rivetment) மட்டும் சரிந்துவிட்டன. இதைத் தவிர பாலத்திற்கு வேறு சேதம் ஏதும் இல்லை.

(ஆ) வெள்ள நிவாரணப் பணியாக மேற்கொண்டு, சரிந்த பாதுகாப்புச் சுவர்களைச் சரிசெய்ய, தலைமைப் பொறியாளரால் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) இப்பணிக்கு ரூ.33,000 ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி முடிவடைந்துவிட்டது.

1979 அக்டோபர் 31]

மான்யம் பெறும் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்.

வினா 41 —திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மான்யம் பெற்று நடத்திவரும் பாடசாலைகளுக்கு நியமிக்கும் ஆசிரியர்களை மற்ற பாடசாலைகளைப் போலவே வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து லிஸ்ட் கேட்டு போடப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை —

(அ) ஆம்.

(இ) அரசு மான்யம் கடன் அல்லது உதவி பெறும் பள்ளிகள் எதுவாயினும் அவைகள் அனைத்தும் வேலை வாய்ப்பு தேடித்தரும் அலுவலகம் வழியாகத்தான் ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணை சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளுக்குப் பொருந்தாது. இந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத கல்வி நிறுவனங்களில், அரசு உதவித் தொகையை உடனடியாக நிறுத்தவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

கோயில் நில சாகுபடியாளர்களிடமிருந்து வரவேண்டிய நெல்.

வினா 42— திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் கோவில் நில சாகுபடியாளர்களிடமிருந்து 1385, 1386, 1387 பசலிகளில் கோயிலுக்கு வரவேண்டிய நெல் எவ்வளவு?

(ஆ) இதன் மொத்த மதிப்பு எவ்வளவு ரூபாய்?

விடை —

(அ) & (ஆ) : தமிழ்நாட்டில் கோவில் நில சாகுபடியாளர்களிடமிருந்து கோயிலுக்கு வரவேண்டிய நெல்லின் அளவும் அதன் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

பசலி.	குத்தகை பாக்கி (நெல்) (குவிண்டால்—கி.கி.).	மதிப்பு (குவிண்டால் ரூ. 95 வீதம்).
(1)	(2)	(3)
		ரூ. பை.
1385(1975–76)	4,99,116.03	4,74,16,022.85
1386(1976–77)	5,55,489.30	5,27,71,483.50
1387(1977–78)	3,34,469.14	3,17,74,568.30
மொத்தம் ..	13,89,074.47	13,19,62,074.65

Resort to use of teargas at Polur.

Q. 43— THIRU N. KITTAPPA : Will the Hon'ble the Chief Minister be pleased to state—

(a) whether the police opened teargas shells at Polur in North Arcot District about the 7th April 1978; and

(b) if so, the details thereof?

Ans.—

(அ) மற்றும் (ஆ): விவசாயிகள் போராட்டத்தின்போது 7—4—1978 அன்று, வட ஆற்காடு மாவட்டம் போளூருக்கு அருகில் உள்ள கேளூரில் ஒரு கும்பல் சட்ட விரோதமான முறையில் பலாத்காரமாக சாலையை மறித்துக் கொண்டும் போலீசாரை எங்கும் நகரமுடியாமல் சட்ட விரோதமாக தடுத்துவைத்தும் இரண்டு போலீஸ் வாகனங்களுக்கு தீ வைத்துள்ளனர். அந்த சட்ட விரோதமான கும்பலைச் கலைந்து செல்ல வைப்பதற்காக போலீசார் 28 முறை கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Cases under Prohibition Act.

Q. 44— THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Khadi & Handlooms be pleased to state —

(*a*) The total number of cases detected, prosecuted and punished by Courts under the Prohibition Act in Madras City during 1978 calender year; and

(*b*) the details monthwise; police station-wise?

Ans. —

பதிலுக்கான விபர அறிக்கை *சட்ட மன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

Case of drowning at Thirukkoilur.

Q. 45— THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any person drowned himself at Tirukoilur while in Police custody about the 6th March, 1978; and

(*b*) if so, the details therof?

Ans. —

(அ) & (ஆ) : கடந்த 2—3—78 அன்று, திருக்கோயிலூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்கள், மது விலக்குக் குற்றத்திற்காகக் கைது செய்த வேலாயுதம் என்பவர் பஸ்ஸிலிருந்து கள்ளத்தனமாக இறங்கி ஓடியதில், சுவரில்லாத ஒரு கிணற்றில் விழுந்து இறந்ததாக, திருக்கோயிலூர் ஆர்.டி.ஓ. அறிக்கை அனுப்பியிருந்தார். அதனை அரசு பரிசீலனை செய்து, இறந்தவரின சாவுக்கு யார் காரணமென்பதைக் கண்டறியும் பொருட்டு, மாவட்ட வருவாய் அதிகாரி மூலம் மறு விசாரணை செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

* 744-766ஆம பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

Chicory Plantations in Tamil Nadu.

Q. 46— THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether Chicory Plantations are grown in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

Ans. —

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் நீலகிரி, கோவை, மதுரை மாவட்டங்களில் குறைந்த அளவு பரப்பில் சிக்கிரி சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் தட்ப வெட்ப நிலை சிக்கிரி பெரும் அளவில் பயிரிடுவதற்கு ஏற்றதாக இல்லை என்ற போதிலும் தனியார் துறையினர் வெளிநாடுகளிலிருந்து சிக்கிரி விதைகளை இறக்குமதி செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்குச் சாகுபடி செய்ய வழங்குகிறார்கள். அம்முறையில் உற்பத்தியாகும் சிக்கிரி மகசூல் முழுவதும் மேற்படி தனியார் துறையினரே கொள்முதல் செய்து கொள்கிறார்கள்.

Incentives for Chicory Plantations.

Q. 47— THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the details of the incentives offered by the Government to grow Chicory Plantations in this State ; and

(*b*) the details thereof for intensive and extensive cultivation ?

Ans. —

(அ) தமிழ்நாட்டில் சிக்கிரி வளர்ச்சிக்காக விவசாயிகளுக்குச் சலுகைகள் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டில் மலைப்பகுதிகளில் மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சிக்கிரி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் எல்லாப் பயிர் சாகுபடிக்கும், எல்லா இடுபொருள்களும் 50 சதவிகித மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இச்சலுகைகள் சிக்கிரி பயிருக்கும் வழங்கப்பட்டுள்ளது. சிக்கிரி தீவிரமாகவோ, பரவலாகவோ தமிழகத்தில் பயிர் செய்யப்படவில்லை என்ற போதிலும் கோயம்புத்தூர், மதுரை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் சிறுபரப்பில் மட்டுமே பயிர் செய்யப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

Cases of thefts in Madras City.

Q. 48— THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the incidence of burglary are on the increase in Madras City in recent times ;

(*b*) if so, the details of the cases being investigated by the Police for the calendar years 1977 and 1978 ; and

(*c*) the number of cases reported to the Police for the same years ?

Ans. —

(அ) இல்லை. சென்னை நகரில் 1977 ஆம் ஆண்டைவிட 1978 ஆம் ஆண்டில் கன்னக் கொள்ளைகள் குறைந்துள்ளன.

(ஆ) மற்றும் (இ) சென்னை நகரில் 1977 ஆம் ஆண்டு காவல் துறைக்கு புகார் செய்யப்பட்ட கன்னக் கொள்ளைகள் 850. இக்கொள்ளைகளில் சுமார் ரூபாய் 8,23,899 மதிப்புள்ள சொத்துக்கள் களவாடப்பட்டது. இவைகளில் 545 வழக்குகள் காவல் துறையினரால் துப்பறியப்பட்டு சுமார் ரூபாய் 4,24,159 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. 1978 ஆம் ஆண்டு காவல் துறைக்கு புகார் செய்யப்பட்ட கன்னக் கொள்ளைகள் 776. இக்கொள்ளைகளில் சுமார் ரூபாய் 3,43,889 மதிப்புள்ள சொத்துக்கள் களவு போயின. இவைகளில் 411 வழக்குகள் காவல் துறையினரால் துப்பறியப்பட்டு சுமார் ரூபாய் 1,43,784 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன.

Cases detected under Suppression of Immoral Traffic Act.

Q. 49— THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of cases detected by the Vigilance cell of the Commissioner of Police, Madras under the Suppression of Immoral Traffic Act during the calendar years 1976, 1977 and 1978 ; and

(*b*) the number of married and unmarried ladies involved in these cases ?

Ans. —

1. Anti-vice Squad (Vigilance Cell)—

	Year.		
	1976	1977	1978
(*a*) The number of cases detected are..	913	619	666

(*b*) Ladies—

Year.	*Married.*	*Unmarried.*	*Other Pimps.*	*Total.*
1976	513	240	160	913
1977	215	233	171	619
1978	275	235	156	666

II. Law and Order Ranges—

	1976.	1977.	1978.
(*a*) The number of cases detected by the Law and Order Ranges of Commissioner of Police are ..	1,024	715	363

	Year.	*Married.*	*Unmarried.*
(*b*) The number of married and unmarried ladies involved in these cases ..	1976	318	706
	1977	235	480
	1978	142	221

Jurisdiction of Wards City Police.

Q. 50— THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether the jurisdiction of the Madras City Police is being enlarged ; and

(*b*) if so, the details thereof ?

Ans. —

(அ) ஆம்.

(ஆ) செங்கல்பட்டு (கிழக்கு) காவல் மாவட்டத்திலுள்ள சில பகுதிகளை சென்னை மாநகருடன் இணைத்து சென்னை மெட்ரோபாலிடன் காவல் சரகத்தை (Madras Metropolitan Police Range) அமைக்கும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

1979 அக்டோபர் 31]

Disturbances in Thalavadi area.

Q. 51—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether there were clashes at Thalavadi on the border of Tamil Nadu and Karnataka States about the 22nd April 1978 ; and

(*b*) the details thereof ?

Ans.—

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்காவிலுள்ள தாளவாடி கிராமத்தில் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் அன்று காலையில் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் கல்யாண ஊர்வலம் தாரை, தப்பட்டையுடன், மசூதிக்குப் பக்கத்திலுள்ள மாரியம்மன் கோவிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, மசூதிக்கு முன் தாரை, தப்பட்டை வாசிப்பதை ஆட்சேபித்ததாக தெரிகிறது. இதனால் ஜாதி இந்துக்களைச் சேர்ந்த சிலருக்கும், முஸ்லீம்களுக்கும் கோபம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. மீண்டும் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் மாலையிலும் கல்யாண ஊர்வலம், தாரை தப்பட்டையுடன் மாரியம்மன் கோவிலுக்குச் சென்று திரும்பியபோது, முஸ்லீம்கள் தாரை, தப்பட்டை வாசிப்பதை ஆட்சேபித்ததாகத் தெரிகிறது. அரிசன கல்யாண ஊர்வலம் ஏதும் அசம்பாவிதம் இல்லாமல் திரும்பிச் சென்றது. ஆனால், இந்துக்கள் இதை ஆட்சேபித்ததாகத் தெரிகிறது. இச்செயலைக் கண்ட முஸ்லீம்கள் பயங்கர ஆயுதங்களுடனும், வெடி குண்டுகளுடனும், துப்பாக்கிகளுடனும், ஜாதி இந்துக்களைத் தாக்கியதாகத் தெரிகிறது. அதனால் ஜாதி இந்துக்கள் பலமுனைகளில் ஓடியதாகவும் அவர்களை துரத்தியடித்ததாகவும் பலமுறை சுட்டதாகவும் கூறப்படுகிறது. இக்கலவரத்தால், மாரியம்மன் கோவில் பக்கத்தில் தொட்ட சென்னஜ்ஜா கௌடா என்பவர் துப்பாக்கிக் குண்டினால் சுடப்பட்டு மரணமடைந்தார். இந்துக்கள் தரப்பில் 9 பேர் காயமடைந்தனர். இக்கலவரத்தில் அரிவாள், கம்பு, மண்வெட்டி, கற்கள் முதலியன உபயோகிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

தாளவாடி சப்-இன்ஸ்பெக்டர் தக்க போலீசாருடன் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து மேலும் கலவரம் நிகழாமல் தடுக்க முயன்றபோது, நிலைமை கட்டுக்கடங்காமல், அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஜாதி இந்துக்கள் ஒன்றுகூடி பயங்கர ஆயுதங்களுடன் முஸ்லீம்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இக்கலவரத்தில் முஸ்லீம்களுக்குச் சொந்தமான கடைகள் சூறையாடப்பட்டதாகத் தெரிகிறது. மாட்டுத் தொழுவத்திற்கும் வைக்கோல் போருக்கும் தீ வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இச்செய்தியைக் கேட்டவுடன், மாவட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளரும் மாவட்ட கோட்டாட்சித் தலைவரும் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளும் சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாக தக்க போலீசாருடன் விரைந்து நிலைமையை மாலை 7—30 மணியளவில் கட்டுக்குள் கொண்டு வந்தனர். காவல்துறை க காணிப்பாளரும், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளும் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று அமைதியை நிலைநாட்டினர். இரு வழக்குகள் பதிவாகி, தாளவாடி காவல் நிலையத்தில் புலன் விசாரணையில் உள்ளது. 27 முஸ்லீம்கள் கைது செய்யப் பட்டு பிறகு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டனர். வெடி குண்டு, துப்பாக்கி, மற்றும் ஆயுதங்களையும் போலீசார் கைப் பற்றியுள்ளனர். மூன்று வெடிகுண்டுகள் ஜாதி இந்துக்களிட மிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. 11 ஜாதி இந்துக் கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வழக்கை ஆராய ஒரு மாவட்ட காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது.

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி, சத்தியமங்கலம் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அடங்கிய அமைதிக்குழு ஒன்று கூட்டினார்.

1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் அன்று ஐ.ஜி. தாளவாடிக்குச் சென்று, கலவரம் நடந்த இடங்களைப் பார்வையிட்டும், மக்களிடமுள்ள குறைகளையும் கேட்டறிந்து நடந்தவைகளை மறந்து, அமைதி காக்குமாறு மக்களுக்கு வேண்டு கோள்விடுத்தார். காவல்துறை அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், இரு இனத்தவர்களின் முக்கிய பிரதிநிதிகள் அடங்கிய அமைதிக்குழு கூடி, ஒரு உடன்பாடு ஏற்பட்டது. தற்பொழுது நிலைமை அமைதியாகவே உள்ளது.

Central assistance for the development of Palmyrah Cultivation.

Q. 52—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) Whether any assistance is received from the Central Government or any other foreign agency for the development of Palmyrah cultivation in this State ; and

(*b*) if so, the details thereof ?

Ans.—

(*a*) Under Drought Prone Areas Programme, assistanec has been received from the Central Government for the cultivation of Palmyrah trees. No assistance from any other foreign agency for the development of Palmyrah cultivation within the State has been received.

1979 அக்டோபர் 31]

(*b*) The expenditure on Drought Prone Areas Programme is shared by the Central and State Government on 50 : 50 basis. The central assistance was received by the State Government. An amount of Rs.2.25 lakhs as grant was sanctioned under this programme during 1977-78 by the State Government to the Tamil Nadu Khadi and Village Industries Board for the plantation of 5 lakhs nuts in Ramanathapuram districts. In the year 1978-79, the State Government have sanctioned, under this programme a sum of Rs. 0·94 lakh as grant to the Tamil Nadu Khadi Village Industries Board for the plantation of 2 lakhs Palmyrah seeds in Ramanathapuram district.

Nadadeswararswamy temple in Kariambadu.

Q. **53**— THIRU C. MANICKAM: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(*a*) Whether the construction of Dwajasthambam in Nadadeswararswamy temple in Kariambadu in Pallipet Sub-taluk is being delayed; and

(*b*) if so, the details thereof ?

Ans.—

(அ) மற்றும் (இ) துவஜஸ்தம்பம் (கொடிக்கம்பம்) செய்யும் வேலை முடிந்து விட்டது. துவஜஸ்தம்பம் (கொடிக்கம்பம்) நிற்கும் பீடம் சம்பந்தப்பட்ட வேலைகள் மட்டும் பாக்கியாக இருக்கிறது. இதுவும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிவடைந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

Construction of houses for Harijans in Vanamadevi.

Q. **54**—THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

Whether steps have been taken by the Government to construct houses for Harijans of the Vanamadevi in Cuddalore taluk ?

Ans.—

The construction of houses for Harijans in Vanamadevi village will be considered at the appropriate time.

Cremation and burial ground faclities to the Harijan Colony in Kaspa Meenakshi Naickenpatti.

Q. 55—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

The steps taken to provide cremation and burial ground facilities to the Harijan colony in the Kaspa Meenakshi Naickenpatti in Dindigul taluk in Madurai district ?

Ans.—

மதுரை மாவட்டம், திண்டுக்கல் வட்டம், கஸ்பா மீனாட்சி நாயக்கன்பட்டி கிராமத்தில் வசிக்கின்ற அரிசன மக்களுக்கு இடுகாடு, மற்றும் சுடுகாடு வசதிகளுக்காக நிலம் ஆர்சிதம் செய்வதற்கான பிரிவு 4 (1) அறிவிக்கை 9–4–1979 அன்று ஆணையிடப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

Road to Elanjavur Sri Mariamman Temple in Thirumayam

Q. 56— Thiru N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) Whether the Government are aware of the need to provide roads to the pilgrims visiting the Elanjavur Sri Mariamman temple in Thirumayam taluk in Pudukottai district ; and

(b) if so, the steps taken to provide these roads?

Ans,—

(அ) மற்றும் (ஆ) இச்சாலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு ரூபாய் 1·10 இலட்சம் மதிப்பீட்டில் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் நான்காம் பாக கட்டத்தில் செயல்படுத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

Construction of houses for Harijans in Elathur and Devanapattu.

Q. 57—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

Whether there are proposals under the examination of the Government to construct houses for Harijan in Elathur and Devanapattu areas in Kalasapakkam constituency ?

Asr.—

There is no proposal at present under the consideration of the Government to construct houses for Harijans in Elathur and Devanapattu areas in Kalasapakkam Constituency.

Number of female and male doctors in Madras City.

Q. 58—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the number of female and male doctors who are serving in Madras City for more than five years now ; and

(b) The number of them who are (i) married and (ii) unmarried ?

Ans. —

(a) The number of doctors, who are working in Madras City for more than five years, are : Male: 206 ; Female 115.

(b) The number of them — married and unmarried :

Male :

Married	..	205
Unmarried	..	1

Female :

Married	..	96
Unmarried	..	19

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Society for prevention of Noise Pollution.

Q. 59—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the Inspector-General of Police, Tamil Nadu and other Senior Police Officers in Madras City have agreed to serve on a non-official society for Noise Pollution ; and

(b) if so, the details therof ?

Ans. —

(அ) மற்றும் (ஆ) நகரில் இரைச்சல் தொல்லையை அகற்றுவதற்கான ஒரு சங்கத்தினை உருவாக்க முயற்சிகள் நடந்து வருகின்றன. இச்சங்கம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

Assistance to Ex-servicemen.

Q. 60—THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons to whom financial assistance has been given by the Ex-servicemen Welfare Directorate during the calendar years 1977 and 1978 ; and

(b) the purposes for which they were given ?

Ans. —

(அ) மற்றும் (ஆ) முன்னாள் படை வீரர்நல இயக்ககம் 1977, 1978 ஆகிய ஆண்டுகளில் அளித்த நிதி உதவி வகைகளும், அதனால் பயனடைந்தவர்களின் எண்ணிக்கையும், கொடுக்கப்பட்ட நிதி உதவித் தொகையும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள* இணைப்பில் தரப்பட்டுள்ளன.

Extensive cultivation of betel-nuts.

Q. 61—THIRU N. KITTAPPA :Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state

The details of the steps taken to have intensive and extensive cultivation of betel-nuts in this State during the calendar years 1976 and 1977 ?

Ans :—

பாக்கு உற்பத்தியைப் பெருக்கத் திட்டம் ஏதும் தற்போது இல்லை. தேவையான அளவிற்கு பாக்கு உற்பத்தி பெருகியதால் 1963 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பாக்கு அபிவிருத்தித் திட்டம் இந்திய பாக்கு அபிவிருத்திக் கழகத்தின் முடிவின்படி 1976 முதல் கைவிடப்பட்டது.

[* 808—815-ம் பக்கங்களில் இணைப்பு XVII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

Export of betal-nuts and leaves.

Q. 62—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) the total acreage belonging to the State and Private parties in which betel-nuts are cultivated in this State at present, districtwise;

(*b*) The details of the quantity exported by them to other countries; and

(*c*) the foreign exchange earned by them ?

Ans.—

(அ) தமிழ்நாட்டில் அரசுக்குச் சொந்தமான பாக்கு நிலங்கள் இல்லை. 1976-77 ஆம் வருடத்திய கணக்குப் படி தனியாருக்குச் சொந்தமான பாக்கு சாகுபடி நிலங்கள் பின்வருமாறு :—

மாவட்டம்.	பரப்பு (ஹெக்டரில்.)
செங்கல்பட்டு	..
தென் ஆற்காடு	1
வட ஆற்காடு	1
சேலம்	869
தர்மபுரி	173
கோயம்புத்தூர்	903
திருச்சிராப்பள்ளி	10
புதுக்கோட்டை	..
தஞ்சாவூர்	13
மதுரை	25
இராமநாதபுரம்	..
திருநெல்வேலி	33
நீலகிரி	24
கன்னியாகுமரி	706
மொத்தம்	2,758

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1976.	அளவு (கிலோகிராம்)	மதிப்பு (ரூபாயில்)
சிங்கப்பூர்	2,558	31,528
மலேசியா	..	..
	2,558	31,528

1977.	அளவு (கிலோகிராம்)	மதிப்பு (ரூபாயில்).
சிங்கப்பூர்	130	2,570
மலேசியா	1,288	2,764
	1,418	5,334

(இ) அன்னியச் செலாவணி பற்றிய விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

Attack on passengers travelling by train.

Q. **63**—THIRU S. M. VASAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether few sub-Inspectors of Police, Kerala State, were stabbed in running train within the jurisdiction of Tamil Nadu Poliee at the Coimbatore-Podanur lines about the 13th May 1978 ; and

(*b*) if so, the details thereof ?

Ans. —

(அ) ஆம்.

(இ) 1978 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் தேதி அன்று சதாசிவம், ஜார்ஜ் என்ற இரு கேரள காவல் துறை துணை ஆய்வாளர்களும், லூயி மிங்காங் எனற சீனரும் ஒரே பெட்டியில் பயணம் செய்தனர். சுமார் இரவு 10 மணிக்கு புகைவண்டி கோயம்புத்துருக்கும் போத்தனூருக்கும் இடையே சென்றுகொண்டிருந்த பொழுது லூயிமிங்காங் தூக்க மாத்திரைகள் விழுங்க முயற்சித்தார். இதனை சதாசிவம் தடுத்துவிட்டார். இதனால் கோபமுற்ற லூயி மிங்காங் சதாசிவத்தின் கழுத்தை கத்தியால் வெட்ட முற்பட்டதாகவும், அது குறி தவறி அவருக்கு லேசான காயத்தை ஏற்படுத்திய

தாகவும், லூயி மிங்காங்கிடமிருந்த கத்தியைப் பிடுங்க முயற்சித்த திரு. ஜார்ஜ் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இதன் காரணமாக போத்தனூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. லூயி மிங்காங்கிற்கு ரூபாய் 300 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

Accidents on Highways.

Q. **64**—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) the number of accidents that occurred on the Highways in this State during the calendar years 1975-76-77 districtwise; and

(*b*) the details of the lorries, cars, transport buses involved in these accidents districtwise.

Ans.—

தேவையான விபரங்கள் கீழ்க்கண்ட விபரப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன.

*தனியே வைக்கப்பெற்றுள்ளது.

Employment for Women in Thirumangalam.

Q. **65**—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether a match factory is to be opened to provide employment to women at Thirumangalam in Madurai District; and

(*b*) if so, the details thereof?

Ans. —

(*a*) Yes.

(*b*) Orders were issued in October 1978 for the starting of a Match Industrial Co-operative Society in Thirumangalam in Madurai District. Sanction has been accorded to for incurring an expenditure of Rs. 80,500 for the purpose. About 500 women folk in Thirumangalam and its surroundings will be utilised for the manufacture of match boxes after a month's training.

[*ம 767-768 பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

Road facilities to Cholanpettai fishermen.

Q. 66 —THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state the details of the road facilities provided to the fishermen community in the Thandavarayan and Cholanpettai areas in Chidambaram?

Ans.—

பிச்சாவரம்—தாண்டவராயன்—சோழகன்பேட்டை மீனவர் காலனி வரை சாலை மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 50,000 மதிப்பீட்டில் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் செயல் படுத்தப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Provision of copies of complaints to complainants.

Q. 67 —THIRU N. KITTAPPA: Will the Hon. Minister for Law be pleased to state—

(*a*) Whether the State Government has received instructions from the Centre on the need to provide copies of complaints to the complainants in this State by the Police administration; and

(*b*) If so, the details thereof?

Ans.—

(*a*) & (*b*) —Under the existing provision in section 154 (2) of the Criminal Procedure Code, 1973, a copy of the First information Report, of a cognizable offence should be provided to the informant, free of cost by the Police. The Government of India in May 1978 requested that wide publicity might be given to the above provision through mass media to create an awareness in the public about their legal right. Accordingly a Press Note was realised by the Inspector-General of Police in August 1978 advising the people to avail of this opportunity and it was published on 8th August 1978 in the Hindu and in the Indian Express dailies.

1979 அக்டோபர் 31]

(அ) & (இ) —1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக்கோவையில் தற்போதுள்ள 154 (2) பிரிவில் உள்ள விதித் துறையின்படி, பிடிஆணை வேண்டப்படாத குற்றம் ஒன்றின் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றை காவல் துறையினரால் அத்தகவலை அறிவித்தவருக்கு கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும். பொதுமக்களிடையே இது குறித்து தங்களுக்கு உள்ள சட்டப்பூர்வமான உரிமையைப் பற்றி விழிப்புணர்ச்சியை உண்டாக்கும் பொருட்டு தகவல், மற்றும் பிரச்சார சாதனங்கள் மூலமாக, மேற்சொன்ன சட்ட விதித் துறையைக் குறித்து பரந்த அளவில் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும் என்று இந்திய அரசு 1978 மே திங்களில் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க, காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் 1978 ஆகஸ்டு திங்களில் பத்திரிகை செய்திக் குறிப்பு ஒன்றை அதாவது, இத்தகைய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தார். இச்செய்தி 8—8—1978 ஆம் நாளில் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் வெளியிடப்பட்டது.

Memorandum given by the small Pattadars.

Q. 68—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) Whether any memorandum had been presented to the law Minister about the 22nd May 1978 by the Small Pattadars ;

(*b*) the details thereof ; and

(*c*) the action taken thereon ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) அவையின் முன் அறிக்கை *வைக்கப்பெற்றுள்ளது.

(இ) மனுவில் கூறப்பட்ட கோரிக்கைகளில், விவசாய வருமான வரி, கடன் நிவாரணம் ஆகியவை தவிர இதர கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. மனுவில் சொல்லப்

[*769 772 ம் பக்கங்களில் இணைப்பு IX ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

பட்ட 1978 ஆம் ஆண்டு விவசாய வருமான வரி (திருத்த) மசோதா தமிழ்நாடு சட்டப் பேரவையின் பொறுக்குக் குழுவினால் மாறுதல் செய்யப்பட்டு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 29—5—79 தேதிய தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமான வரி (திருத்த) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1979) பிரசுரமாகியிருக்கிறது. கடன் நிவாரண ஏற்பாடுகள் பற்றி, கடன்களைக் குறைத்து படிப்படியாக வசூலிக்கும் வகையில் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

Goods Transport Corporation.

Q. 69—THIRU C. MANICKAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) Whether the Tamil Nadu Goods Transport Corporation has started functioning now ;

(*b*) if so, the details thereof; and

(*c*) the details of the Financial assistance received by the Corporation from the state and Central Financial Corporation so far ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகம் 3—6—75 முதல் செயற்பட்டு வருகிறது. அதனிடத்தில் 69 லாரிகள் உள்ளன. இக்கழகம் மாநிலத்தின் பல்வேறு முக்கிய பகுதிகளையும் ஒருங்கிணைத்த "பார்சல் சர்வீஸ்" ஒன்றையும், அதிக பளுவுள்ள (Bulk Load) பொருள்களைக் கொண்டு செல்லும் பணியினையும் மேற்கொண்டுள்ளது. இக் கழகம் அரசு துறை மற்றும் அரசு நிறுவனங்களின் தேவையை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

(இ) இதுவரை தமிழக அரசு, அவசர தேவைக்கான (Ways and Means) முன்பணமாக ரூபாய் 1.06 லட்சமும் நடுத்தர காலக் கடனாக ரூ. 12.5 இலட்சமும் இக் கழகத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளது.

இது தவிர மாநில நிதி உதவிக் கழகங்களான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 28,85,000-ம் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்திடமிருந்து ரூ. 15,50,000-ம் நீண்ட காலக் கடன்களாக இந்தக் கழகம் பெற்றுள்ளது. மத்திய நிதி உதவிக் கழகங்களிடமிருந்து எந்தவித உதவியும் பெறவில்லை.

Banks of Wellington Reservoir.

Q. 70—THIRU C. MANICKAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether the Government are aware of cracks on the banks of the Wellington Reservoir in Vridhachalam in South Arcot District; and

(*b*) if so, the steps taken thereon?

விடை.—

(அ) ஆம், நீர்த்தேக்கத்தின் கரைகளில் சிற்சில இடங்களில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

(ஆ) அந்தக் கரை பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அந்தச் சமயத்தில் கரைகளை அமைக்க ''களிமண்'' பயன்படுத்தப்பட்டது. இவ்வகை மண்ணில் நாளாவட்டத்தில் வெடிப்புகள் ஏற்படும். எனவே அக்கரைகளுக்கான தகுதி வாய்ந்த மண் பல இடங்களில் சேகரிக்கப்பட்டு ஆய்வுக் கூடத்தில் பரிசோதனையில் உள்ளது. பரிசோதனைக்குப்பின் கரைகளைத் தேவையான அளவுக்கு வலுப்படுத்த மேல்நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Over-bridges in South Arcot district.

Q. 71—THIRU C. MANICKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) The details of the over-bridges to be built in Cuddalore in South Arcot district during 1978-79; and

(*b*) Whether the Minor Ports Authority have objected to the construction of the over-bridges?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் 1978–79-ல் இரு இரயில்வே மேம்பாலங்கள் கட்டும் பணி பரிசீலனையில் உள்ளது. அதன் விவரங்கள் வருமாறு:—

பெயர்.	மதிப்பீட்டுத் தொகை. (ரூ. இலட்சத்தில்.)
(1) சென்னை–கும்பகோணம், தஞ்சாவூர் சாலையில் கி. மீ. 176.10-ல் பண்ருட்டிக்கு அருகில் ஒரு இரயில்வே மேம்பாலம்.	25.00
(2) கடலூர்–சித்தூர் சாலையில் கி. மீ. 21.6-ல் திருவாடிக்கருகில் ஒரு இரயில்வே மேம்பாலம்.	25.00

(மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றன.)

கீழ்க்கண்ட மேம்பாலமும் கட்ட அனுமதிக்கப்பட்டது—

(3) சிங்காரத் தோப்புக்கு அருகில் குறுக்கிடும் உப்பனாற்றில் ஒரு மேம்பாலம்.	14.52

(ஆ) இனம் (1), (2)-ல் குறிப்பிட்டுள்ள மேம்பாலங்களைக் கட்டுவதற்கு சிறு துறைமுக அதிகாரிகள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. இனம் (3)-ல் குறிப்பிட்டுள்ள பாலம் இயந்திர உதவியால் இயங்கக்கூடிய சுழல்பாலம். ஆதலால், இதில் இயந்திரக் கோளாறுகள் ஏற்படின், துறைமுகப் பணிகளுக்கு சிரமம் ஏற்படுமென சிறு துறைமுக அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்தனர். இவ்விடத்தில் சுழல் கண்மாய்களுக்குப் பதில் உயர்த்தும் கண்மாய் அமைக்கலாம் என்று ஆலோசனை வழங்கியுள்ளனர், இது பரிசீலனையில் உள்ளது.

Surplus Waters of Vettuwari and Kattuwari lakes.

Q. 72—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—the steps taken to drain the overflowing waters of Vettuwari and Kattuwari lakes in Kattumannar koil in South Arcot District?

1979 அக்டோபர் 31]

விடை —

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள காட்டுவாரி, வெட்டுவாரி ஓடைகளிலிருந்து வரும் வடிகால் நீர் வந்து விழும் நாட்டார்மங்கலம் வடிகாலின் கரைகள் ஓரளவுக்குச் செப்பனிடப்பட்டுள்ளன.

Ex-servicemen's Welfare Board.

Q. 73—THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for shifting the Directorate of Ex-Servicemen from the Collector's Office Buildings at George Town, Madras to a rented building in Thiagaraya Nagar?

விடை.—

முன்னாள் படை வீரர்கள் நல இயக்கம் ஏற்படுவதற்கு முன், முன்னாள் படை வீரர் தொகுப்பு நிதி அலுவலகம் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகக் கட்டிடத்திலும், மாநில முப்படை வாரியம் தியாகராய நகரில், நெ. 24, பிரகாச முதலித் தெருவில் வாடகைக் கட்டிடத்திலும் இயங்கி வந்தன. இவ்விரு அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து ''முன்னாள் படை வீரர் நல இயக்ககம்'' ஜூலைத் திங்கள் 1974ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த இரண்டு அலுவலகங்களையும் ஒருங்கிணைத்ததன் பயனாக, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் இயங்கி வந்த தொகுப்பு நிதி அலுவலகம் (Amalgamated Funds Office) தியாகராய நகரில் இயங்கி வந்த முப்படை வாரிய அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இரண்டும் சேர்ந்து ''முன்னாள் படை வீரர் நல இயக்ககம்'' என்ற பெயரில் அங்கு இயங்கி வருகிறது.

கெங்கப்பெராம்பட்டி அரிசனக் குடியிருப்பு.

வினா 74—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊத்தங்கரை வட்டம் கெங்கப்பெராம்பட்டி அரிசனத் தெரு உள்ள இடம் குடியிருப்புக்கு ஏற்றதா?

(ஆ) ஊர் மாற்றத்தின் காரணம் என்ன?

விடை—(அ) கெங்கப்பெராம்பட்டி கிராமத்தில் தற்சமயம் உள்ள அரிசனத் தெரு குடியிருப்புக்கு ஏற்றதுதான்.

(ஆ) மாற்று நிலங்களில் குடியேற வேண்டிய அவசியம் இல்லை.

முதுமலை தெப்பக்காடு வனச் சரக மாவுத்தன், கவாடிகளுக்குச் சீருடை வழங்கல்.

வினா 75— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முதுமலை தெப்பக்காடு வனச் சரகத்தில் உள்ள (யானைப்பாகன்) மாவுத்தன், கவாடிகள் எத்தனை பேர்கள் ?

(ஆ) இவர்களுக்கு அரசு இலவச சீருடை வழங்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை —

(அ) 34 மாவுத்தர்களும், 27 கவாடிகளும் உள்ளனர்.

(ஆ) இவர்களுக்கு இலவச சீருடை வழங்கப்பட்டு வருகின்றது.

திருவெரும்பூரில் உள்ள சிறு தொழிற்சாலை ஊழியர்கள்.

வினா 76.—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் திருவெரும்பூரில் பாரத் கனரக பாய்லர் தொழிற்சாலைக்கு உதிரி உறுப்புகளைச் செய்து கொடுக்கும் சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் 4,000 தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறுக்குக் காரணம் என்ன ?

(ஆ) அரசு தலையிட்டு தகராறை தீர்த்ததில் ஏற்பட்ட சமரச ஒப்பந்தம் என்ன ?

(இ) ஒப்பந்தத்தை நிர்வாகிகள் மீறாமல் சரிவர அமுல் நடத்துவதை அரசு தொடர்ந்து கண்காணிக்குமா ?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களின் விளைவாக உற்பத்தியில் ஏற்படும் தடைகளும் தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கையை நிர்வாகத்தினர் எதிர்க்கும் மனப்பான்மையும் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

(ஆ) பாரத் கனரக கொதிகலன் தொழிற்சாலையைச் சுற்றியுள்ள தொழில் தொகுதி வட்டத்திலுள்ள 130 தொழிற்சாலைகள் 3–7–1978 முதல் மூடப்படுவதாக அரசுக்குத் தகவல் கிடைத்ததும் சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் (தனி), இத்தொழிற் தகராறைக் கவனிப்பதற்கென அனுப்பப்பட்டார். அவர் சங்கங்களுடனும் நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடனும் 5–7–1978 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் விளைவாக அன்றைய தினமே 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டத்தின் 12 (3)—வது பிரிவின்கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அவ்வொப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாவன:—

1. எல்லா தொழிற்சாலைகளும் 7–7–1978 முதல் வேலை துவங்கும்;

2. சங்கங்களும் தொழிலாளர்களும் தொழிற் தொகுதியில்அமைதி காக்க ஒத்துழைப்பதாக ஒப்புக்கொண்டனர்;

3. தொழிலாளர்களின் நன்மைக்காக உள்ள பல்வேறு தொழிலாளர் சட்டங்களைச் செயல்படுத்துவதாகவும் ஒப்பந்த தொழிலாளர்கள் (ஒழுங்குமுறை, ஒழிப்பு) சட்டத்தை அமுல் செய்வதாகவும் நிர்வாகத்தினர் உறுதியளித்தனர்;

4. ஒப்பந்தச் சட்டத்தின்கீழ் வகை செய்துள்ளபடி ஒப்பந்தத் தொழிலாளர்களை ஒழுங்குமுறைப்படுத்தவென ஒரு உப குழுவை நியமித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ) ஒப்பந்தத்தின்படி 7–7–1978 அன்று தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டு உற்பத்தியைத் துவக்கின. திருச்சி தொழிற்சாலை மேற்பார்வை ஆய்வாளர், மற்றும் திருச்சி தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த உதவி ஆணையர் ஆகிய இருவரும் ஒப்பந்தத்தை அமுலாக்கவும் முன்னேற்றத்தைக் கவனிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்

[1979 அக்டோபர் 31

வெள்ளாளப்பட்டி ஆற்றுப் பாலத்தைப் புதுப்பித்தல்.

வினா 77—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி–திருப்பத்தூர் நெடுஞ்சாலையில் நாயக்கன் கொட்டாயில் இருந்து துரிஞ்சிப்பட்டிக்கு செல்லும் ஊராட்சி சாலையில் உள்ள வெள்ளாளப்பட்டி ஆற்றில் பாலம் உடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதை புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா?

விடை —நாயக்கன் கொட்டாயிலிருந்து துரிஞ்சிப் பட்டிக்குச் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலையில் உள்ள வெள்ளாளப்பட்டி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள பழுதடைந்த தரைமட்ட பாலத்தைப்புதுப்பிக்க இனிவரும் திட்டக் காலங்களில் பணியின் முக்கியத்துவம், நிதிவளம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

அரசு பேருந்துகளில் பயணிகள் பாட்டுகள் கேட்கும் வசதிகள்.

வினா 78—திரு. என். கிட்டப்பா.—மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசு தொடர்புடைய பேருந்துகளில் பயணிகள் பாட்டுகள் கேட்கும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்தெந்தப் பகுதிகளில் ?

(இ) அந்த முறையை விரிவாக்கிடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

(அ) ஆம், சில போக்குவரத்துக் கழகங்களில்,

1979 அக்டோபர் 31]

(ஆ)—

வரிசை எண்ணும் கழகத்தின் பெயரும். (1)	வழித்தடத்தின் பெயர். (2)	பேருந்துகளில் எண்ணிக்கை. (3)
1. பல்லவன் போக்கு வரத்துக் கழகம் (விரைவு).	சென்னை—திருப்பதி.	1
	சென்னை—திருவனந்த புரம்.	1
	அகில இந்திய உரிமம் பெற்ற சுற்றுலாப் பேருந்துகள் ..	4
2. பாண்டியன் போக்கு வரத்துக் கழகம்.	சுற்றுலாப் பேருந்து	1
	மதுரை—சேலம்	1
	மதுரை—கோவை ..	1
3. அண்ணா போக்கு வரத்துக் கழகம்.	சேலம்—மைசூர்	2
	சேலம்—பாண்டி ..	1
	சேலம்—கள்ளக்குறிச்சி	4
	சேலம்—மதுரை ..	1
	ஆத்தூர்—மேட்டூர் ..	1
	பாண்டி—பெங்களூர்	2
4. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.	நாகர்கோயில்—மதுரை ..	2
	கன்னியாகுமரி—கோவளம் ..	1
	தூத்துக்குடி—மதுரை	2

(இ) பல்லவன் (விரைவு), அண்ணா, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் இம்முறையை விரிவாக்கும் செயற் குறிப்பு உள்ளது.

மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்கு கிராம ஏற்புத் திட்டம்.

வினா 79—திரு. என். கிட்டப்பா.— மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் மிகவும் பின்தங்கிய கிராமங்களை கிராம ஏற்புத்திட்டத்தின்கீழ் கொண்டுவரும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை —(அ) மற்றும் (ஆ) இல்லை.

நெல்லிக்குப்பம் கரும்பாலைக்குப் போடப் பெற்ற சாலை.

வினா 80—திரு. க. சுப்பு.—மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லிக்குப்பம் கரும்பாலைக்குக் கரும்பு செஸ் நிதியிலிருந்து சாத்திப்பட்டு வழியாகப் போட்ட ரோடுக்குச் செலவழித்த தொகை என்ன ?

(ஆ) வேலை முடிவுற்று அதன் வழியாகக் கரும்பு எடுத்துச் செல்லப்படுகின்றதா ?

(இ) சாத்திப்பட்டுக்கு மேலும் ஏதாகிலும் ஒரு சாலை கரும்பு செஸ் நிதியிலிருந்து போடப்படுகின்றதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

விடை —

(அ) செலவழித்த தொகை ரூ. 9,40,144.

(ஆ) இச்சாலைப்பணியின்கீழ் கீழ்மாம்பட்டு, மேல்மாம பட்டு ரோடு முதலிய கிராமங்கள் பயன் அடையும். உளுந்தூர் பேட்டையில் புதிய ஆலை அறவை தொடங்கியவுடன் ஈ.ஐ.டி. பாரி ஆலைக்குத் தேவையான கரும்பு உற்பத்தி அதிகரிக்கும். தற்சமயம் இச்சாலை அபிவிருத்தியில் பெரும் பகுதி முடிந்து விட்டது. நில ஆர்ஜித தகராறு காரணமாய் மேற்கொண்டு வேலை செய்ய இயலவில்லை. பணி இன்னும் முடிவுறாத காரணத்தால் இச்சாலை வழியே தற்போது கரும்பு ஏதும் எடுத்துச் செல்லப்படவில்லை.

(இ) ஆம்.

(ஈ) ரூ. 6.23 இலட்சம் மதிப்பீட்டில் சாத்திப்பட்டுக்கு மேலும் ஒரு சாலை அதாவது கி.மீ. 179/2 சென்னை—கும்பகோணம்—தஞ்சாவூர் சாலையில் இருந்து சாத்திப்பட்டு வரை கி.மீ. 0/0-4/55 என்ற சாலைப் பணி தற்போது துவங்கப்படும் தறுவாயில் உள்ளது. இச்சாலையைப் பயன்படுத்துவதால் பயன்பெறும் கிராமங்கள் சி.என். பாளையம், பலாப்பட்டு சாத்தியப்பட்டு, துண்டுகாடு, நெல்லித்தோப்பு, கீராங்குப்பம் ஆகியவை.

1979 அக்டோபர் 31]

கூட்டுறவுச் சங்கங்களுக்கான 42 அம்ச செயல் திட்டம்.

வினா 81—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத்தை முடுக்கிவிட 42 அம்ச செயல் திட்டம் ஒன்றை அரசு தயாரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) 1977 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் நடைபெற்ற அகில இந்திய கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் தேசிய கூட்டுறவு கொள்கைப் பற்றிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. அந்த தீர்மானத்தைச் செயல்படுத்த 42 அம்ச செயல்திட்டம் ஒன்றை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

(ஆ) அதன் விபரம்* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி அமைத்தல்

வினா 82—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(ஆ) சென்னையில் நிரந்தரமாக ஒரு பொருட்காட்சி ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சென்னையில் போர் நினைவுச் சின்னத்தின் எதிரில் உள்ள திடலில் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியினை நடத்தி வருகிறது. இந்த மைதானத்தில் நிரந்தரமாக ஒரு பொருட்காட்சியை அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[* 773-782-ம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

TRUTH ALONE TRIUMPHS LEGISLATIVE ASSEMBLY

[1979 அக்டோபர் 31

நன்னிலம் ஒன்றியத்தில் மின் விளக்குகள் பொருத்தப் பெறாதப் பஞ்சாயத்துகள்.

வினா 83— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம் ஒன்றியத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் மின் விளக்குகள் விஸ்தரிப்பதற்கு பணம் கட்டி இன்னும் விளக்குகள் பொருத்தப்படாத பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

விடை—

தற்போது ஒன்றுமில்லை.

உள்ளாட்சி மன்ற பயணியர் விடுதிகளுக்கான கட்டணங்கள்

வினா 84— திரு. வி.கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சொந்தமான பிரயாணிகள் விடுதிகளில் தங்கினால் கட்டணம் யார் யாருக்கு எம்மாதிரி எவ்வளவு வசூலிக்கப்படுகிறது?

(ஆ) விவரம்.

விடை—

விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

கோரம்பள்ளம் குளத்தில் கரைகளுக்கு லைனிங் அமைத்தல்.

வினா 85— திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி யூனியனில் கோரம்பள்ளம் பஞ்சாயத்தைச் சேர்ந்த கோரம்பள்ளம் குளத்தில் தூர் எடுத்து நான்கு கரைகளிலும் லைனிங் (கல் பதித்து) செய்து ரிசர்வ் குளமாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

[*783-787-ம் பக்கங்களில் இணைப்பு XI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1979 அக்டோபர் 31]

தூத்துக்குடியில் புதிய விளையாட்டு அரங்கு

வினா 86—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி வ.உ.சி. தருவை மைதானத்தில் விளையாட்டு அரங்கு, பார்வையாளர் காலரி (ஸ்டேடியம்) அமைக்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

தூத்துக்குடியிலுள்ள அரிசன நல மாணவர் விடுதிகள்

வினா 87—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் கல்வி ஆண்டில், தூத்துக்குடி தொகுதியில் உள்ள அரிசன நல மாணவர் விடுதிகளில் சேர்ந்திருந்த மாணவர்கள் எண்ணிக்கை என்ன? விடுதி வாரியாக?

(ஆ) விடுதி நிர்வாகத்திற்கு ஏற்பட்ட செலவு என்ன?

(இ) மாணவர்களுக்கு வழங்கிய உதவித்தொகை எவ்வளவு? என்ன இனங்களுக்காக?

விடை

	அரசு கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி.	அரசு பள்ளி மாணவர் விடுதி, தூத்துக்குடி.
(அ)	33	144
(ஆ)	ரூ. 30,757.14	ரூ. 46,266.66
(இ)	ரூ. 28,376.00	..

(இந்திய அரசு உதவித் தொகை உணவு கட்டணமாக வழங்கியது).

[1979 அக்டோபர் 31

சாலைப் பணிகளுக்கென மத்திய அரசிடமிருந்து பெறப்பெற்ற மானியம்.

வினா 88—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டு முதல் இதுவரை மத்திய அரசிடமிருந்து சாலை பணிகளுக்கென பெறப்பட்ட மானியத் தொகை யாது? வருட வாரியாக?

விடை—

1969—70-லிருந்து இதுவரை மத்திய அரசிடமிருந்து தமிழக அரசிற்கு வெவ்வேறு பணிகளுக்காக பெறப்பட்ட மானியத் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

வருடம்	திட்டத்தின் பெயர்/மத்திய அரசு அளித்த தொகை.		
	பாம்பன் பாலத் திட்டம்.	மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முதன்மைப் பணித் திட்டம்.	மத்திய சாலை நிதித் திட்டம்.
(1)	(2)	(3)	(4)
		(ரூபாய் இலட்சத்தில்.)	
1969-70 ..	..	16.20	..
1970-71 ..	..	4.76	42.00
1971-72 ..	..	29.13	44.85
1972-73 ..	114.12	55.82	75.22
1973-74 ..	(—) 24.73	50.00	33.62
1974-75 ..	32.10	21.81	24.95
1975-76 ..	54.12	53.78	56.90
1976-77 ..	75.00	20.41	74.68
1977-78 ..	100.00	42.44	70.65
மொத்தம். ..	340.61	294.35	422.87

Schools in Kuzhithurai area.

Q. 89— Thiru J. JAMES: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is a proposal for the construction of additional buildings for L. M. P. S. Arumanai in Kuzhithurai Education District;

(*b*) how many thatched sheds are there in this school;

(*c*) why the sheds were not thatched this year; and

(*d*) what is the strength of this school?

Ans.—

(*a*) No.

(*b*) 3 sheds.

(*c*) This year (1978-79) The sheds were thatched.

(*d*) 910.

Extension of Thirupparappu Bank channel in Kanyakumari district.

Q.90— Thiru J. JAMES: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :—

(*a*) whether there is a proposal for the construction of the expansion of Thirupparappu Bank Channel to feed the areas of Chitharal, Vellan code, Pacode villages in Kanyakumari district;

(*b*) whether investigation is over; and

(*c*) when the scheme will be implemented ?

Ans.—

(*a*) Yes.

(*b*) The preliminary investigation is in progress.

(*c*) The question of taking up the scheme for implementation will arise only after the scheme is fully investigated.

சென்னையில் மூடப்பெற்ற லாட்ஜ்கள் உள்ள உணவு விடுதிகள்.

வினா 91— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டில் சென்னையில் இதுவரை எத்தனை லாட்ஜ்கள் உள்ள உணவு விடுதிகளை மூட அரசு ஆணையிட்டுள்ளது ?

(ஆ) அதற்கான காரணம் யாவை ?

விடை—

(அ) 1978ஆம் ஆண்டில் லாட்ஜ்கள் உள்ள உணவு விடுதிகள் உணவுத்துறை சம்பந்தப்பட்ட விதிகளை மீறியதற்காக சென்னையில் மூடப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

கிளியனூரில் அரிசன மாணவர் விடுதி

வினா 92— திரு எம். பரமசிவம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், வானூர் தொகுதி, கிளியனூரில் அரிசன மாணவர் விடுதி ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

விடை —

(அ)& (ஆ) திண்டிவனம் வட்டம், வானூர் தொகுதி, கிளியனூரில் மாணவர் விடுதி தொடங்கும் கருத்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை

வினா- 93— திரு த. இராமசாமி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'' இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டத்தில் தேவிப்பட்டினம், வேதாளை, மண்டபம், பாம்பன், இராமேஸ்வரம், கீழக்கரை, பெரிய பட்டினம், சீனியம்மாதர்க்கா மற்றும் உள்ள ஊர்களிலிருந்து ஏராளமான கடல்பாசி வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதை தடுத்து பயன் படுத்தும் வகையில் இப்பகுதியில் ஒரு தொழிற்சாலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?''

விடை—

கடல் பாசியை பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலை துவங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

இராமநாதபுரம் வட்டத்தில் பனைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

வினா 94—திரு. த. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் வட்டத்தில் பனைப் பொருட்களைப் பயன்படுத்தும் வகையில் தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

ஏற்கெனவே இராமநாதபுரம் வட்டத்தில் 37 பனைப் பொருள் தொழில் கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1977–78-ல் 12 பயிற்சி நிலையங்களும், 1978–79-ல் 4 பயிற்சி நிலையங்களும் துவங்கப்பட்டன. தேவைக்கேற்ப மேலும் பல நிறுவனங்கள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இராமநாதபுரம் வழிவிடு முருகன் கோயில்

வினா 95—திரு. த. இராமசாமி: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் நகரத்தில் உள்ள வழிவிடு முருகன் கோயில் இந்து அறநிலையத்துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தக் கோயில் சொத்து மதிப்பு என்ன?

(இ) அதன் ஆண்டு வருமானம் என்ன?

விடை—

(அ) இராமநாதபுரம் நகரத்தில் உள்ள அருள்மிகு வழிவிடு முருகன் கோயில் இந்து சமய அறநிலையத்துறை ஆளுகையின்கீழ் உள்ள ஆலயமாகும்.

(ஆ) இவ்வாலயத்திற்குக் கீழ்க்கண்ட மதிப்புள்ளசொத்துக்கள் உள்ளன:—

சொத்துக்கள்.	மதிப்பு ரூபாய்.
அசையா சொத்துக்கள்—	
பட்டா எண் : 221-ல் சர்வே எண். 314/3-ல் 0.47 சென்ட் மனை.	1,500
அசையும் சொத்துக்கள்—	
மரத்திலான மயில் வாகனம் ..	200

(இ) இவ்வாலயத்திற்கு 1387-ம் பசலிக்கு வந்துள்ள வருமான விவரம் —

	ரூபாய்.
உண்டியல் வரவு	15,030.58
யூனியன் வங்கி	975.15
நில வாடகை (குவிட்ரெண்ட்) ..	420.00
முடி ஏலம்	62.00
உத்திரம் தேங்காய் டிக்கட் விற்பனை	334.60
உத்திரம் முடி டிக்கட் விற்பனை ..	588.50
உத்திரம் பால்குடக்காவடி மூலம் ..	412.00
மொத்த வருமானம் ..	17,822·83

Madurai Medical College Students.

Q. 96—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether any Final Medical student of the Madurai Medical College has been apprehended for seditious activities during 26th August, 1978 ; and

(*b*) If so, the details thereof ?

Ans.—

(*a*) & (*b*) No. But one Thiru K. Krishnaswamy, student of Final M.B.B.S. (Additional) Course, Madurai Medical College, Madurai was arrested by the police on 25th August 1978 on charges of seditious activities. He was let off on bail on 7th November 1978 by the Police. The Dean, Madurai Medical College, Madurai has not taken any action in this regard since no complaint has been received in the college.

Prisoners attempt to escape from the Tirunelveli Medical College Hospital.

Q. 97—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) Whether a number of prisoners attempted to escape from the Medical College Hospital, Tirunelveli about the 20th August, 1978; and

(*b*) If so, the details thereof ?

Ans—

(*a*) No, Sir.
(*b*) Does not arise.

1979 அக்டோபர் 31]

தென்னாற்காடு மாவட்டத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 98 :—திரு. மொ. பெரியசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர் பேட்டை தொகுதி, விருத்தாசலம் தொகுதி, மங்களூர் தொகுதி இந்த மூன்று தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) ஒவ்வொரு தொகுதிக்கும் எத்தனை வீடுகள் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது ?

விடை

(அ) & (ஆ): தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள உளுந்தூர் பேட்டை தொகுதியில், அனவரை கிராமத்தில் 138 வீடுகளும் கருவேப்பிலைப்பாளையம் கிராமத்தில் 6 வீடுகளும் 1978–79-ம் ஆண்டில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்ட அரசு ஒப்பளித்துள்ளது. விருத்தாசலம் மற்றும் மங்களூர் தொகுதிகளில் வீடுகள் கட்ட உத்திரவிடப்படவில்லை.

கொரக்கவாடியில் வெள்ளாற்றின் குறுக்கே அணை.

வினா 99—திரு. மொ. பெரியசாமி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியிலுள்ள கொரக்கவாடியில் வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டுவது குறித்த திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

விடை

குறிப்பிட்டுள்ள திட்டம் ஆரம்ப ஆய்வில் உள்ளது.

Police Station at Seekanankuppam

Q.—100 —THIRU N. KITTAPPA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether a large number of women belonging to Seekanankuppam gheroed the Police Station at Cheyyur about the 10th August 1978 ; and

(*b*) If so, the details thereof ?

விடை—

(அ) & (ஆ): 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி அன்று இரவு 10-45 மணி அளவில் சீக்கனாங்குப்பத்தைச் சேர்ந்த 50 அரிசனங்கள் திரு. சீனிவாச ரெட்டி தலைமையின் கீழ் ரெட்டியார்களுக்கு எதிராக அரிசனங்கள் கொடுத்த புகாரின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்காதிருக்கும் காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும், ரெட்டியார்களை கைது செய்யக்கோரியும், செய்யூர் காவல் நிலையத்தின் முன்பு கூடினர். அன்றிரவு செங்கல்பட்டு தாசில்தார், செங்கல்பட்டு துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று அரிசனங்களின் குறைகளை விவாதிப்பதற்காக மதுராந்தகம் வட்ட அலுவலகத்தில் துணை மாவட்ட ஆட்சித் தலைவரை மறுநாள் காலை 9 மணிக்கு சந்திக்கும்படி கேட்டுக் கொண்டனர். இதற்கு இணங்கி அவர்கள் அதிகாலை 3 மணிக்கு கலைந்து சென்றனர். அரிசனங்கள் தாங்கள் சொன்னபடி 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9ஆம் தேதி அன்று மதுராந்தகம் வட்ட அலுவலகத்திற்கு வராமல் மறுபடியும் செய்யூர் காவல் நிலையத்திற்குள் நுழைந்தனர். உதவி ஆட்சித் தலைவரும் துணைக் காவல் துறை கண்காணிப்பாளரும், தாசில்தாரும் செய்யூருக்கு விரைந்து அரிசனங்களின் கோரிக்கையை பற்றி கூறுமாறு அழைத்துப் பேசினர். அப்போது அரிசனங்கள் தங்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குமாறு கோரியும், காவல் துறையினர் ரெட்டியார்களுக்கு சாதகமாக நடவடிக்கை எடுப்பதாக குற்றம் சாட்டியதாகவும் தெரிகிறது. மீண்டும் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி அன்று சுமார் 70 பெண்கள் செய்யூர் காவல் நிலையம் முன்பு இதை வலியுறுத்த கூடினர். 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் தேதி அன்று துணைக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அரிசன பிரதிநிதிகளைச் சந்தித்து, தவறு செய்த காவல் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதாகவும், அரிசனங்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை சீக்கிரம் முடித்து விடுவதாகவும் கூறினார். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இதன் பேரில் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் தேதி அன்று முதல் காவல் துறைக் கண்காணிப்பாளர் கொடுத்த வாக்குறுதியின் பேரில் எந்த வித போராட்டமும் இல்லை.

1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் தேதி அன்று காவல் துறைத் துணைக்கண்காணிப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருமதி மரகதம் சந்திரசேகர், மற்றும் கணேசன்' உமாசந்த் போன்றவர்களுடனும், சீக்கனான்குப்பத்தைச் சேர்ந்த அரிசனங்களுடனும் செய்யூர் காவல் நிலையத்தில் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்கு முடிவு கண்டனர்.

1979 அக்டோபர் 31]

Rules to the award of Chief Minister's Police Medal.

Q. 101— Thiru N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether the rules relating to the award of ChiefMinister's police Medal has been revised now; and

(*b*) If so, the details thereof?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1977-ல் மக்கள் தேர்ந்தெடுத்து முறைப்படி அரசு அமையப்பெற்றவுடன், தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்க விதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டன:—

(1) காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலின் கருத்துரையின் பேரில், பதவியைக் குறிக்கும் வண்ண இழைப்பட்டைகளின் நிறம் மஞ்சளாகவும், நீலமாகவும் மாற்றப்பட்டன. இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பதக்கங்களின் சிறப்பைக் குறிக்கும் இழைப்பட்டைகளுக்குப் பதிலாக மஞ்சள், நீல நிறமுடைய இழைப்பட்டைகள் வழங்குவதற்கும் ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு முதல்அமைச்சரின் காவல் பதக்க விதிகளைச் சேர்ந்த 6ஆவது விதியில் திருத்தம் செய்யப்பட்டது, அத்திருத்தங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

(2) காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் வழங்கப்படவுள்ள பதக்கங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் கருத்துத் தெரிவித்துள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் கருத்துரையைப் பரிசீலனை செய்த பின்னர் ஒவ்வொரு முறையும் வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கை பின் வருமாறு உயர்த்தப்பட்டது:—

(அ) காவலர்கள், தலைமைக் காவலர்கள் அதற்கு நிகரான பதவித் தரங்கள்.	20
(இ) சப்-இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், அதற்கு நிகரான பதவித் தரங்கள்.	10
(உ) காவல்துறை டெபுடி சூப்பிரண்டுகள் (வகை I, II, III).	5
(எ) வகைப்பாகுபாடின்றி துணிவுடைய வீரச் செயல்களுக்காக (அல்லது பிற தனிச் சிறப்புவாய்ந்த பணிகள்) வழங்கப்படும் பதக்கங்கள்.	5
மொத்தம் ..	40

ஓராண்டில் வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடும் 8ஆவது விதியும், ஓராண்டிற்கென்று ஒதுக்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கையை குறிப்பிடும் 19ஆவது விதியும் திருத்தப்பட்டன. அத்திருத்தங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

(3) தனிச்சிறப்பு வாய்ந்த பணிக்காகக் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் பெற்றவர்களும், பாராட்டத்தக்கப் பணிக்காகக் காவலர் பதக்கம் பெற்றவர்களும், தன்னிகரில்லா கடமைப் பற்றுமிகக் கொண்டதற்காக, ஓராண்டிற்குப் பதிலாக அடுத்த மூன்றாண்டுகளுக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் பெறுதற்கு உரியவரல்லாத வகையில் செய்யும் பொருட்டுக் காவல் துறை இன்ஸ்பெக்டர்— ஜெனரலின் செயற்குறிப்பின் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்க விதியைச் சேர்ந்த 11ஆவது விதி திருத்தப்பட்டது. ஓராண்டில், துணிவுடைய வீரச் செயல்களுக்காக வழங்கப்படும் பதக்கங்களின் எண்ணிக்கை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஐந்துக்கு மேல் மிகா வண்ணம், மேற் சொன்ன விதிகளைச் சேர்ந்த 19ஆவது விதியும் திருத்தப் பட்டது. மேற்கூறிய திருத்தங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. (இவ்விதிகளின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

மல்லிப்பட்டினத்தில் புறக்காவல் நிலையம்.

வினா 102— : திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பேராவூரணித் தொகுதி—மல்லிப்பட்டினத்தில் புறக்காவல் நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

விடை : இல்லை.

பழனி வட்டத்தில் முதியோர் ஓய்வூதிய தொகை பெற்றவர்கள் எண்ணிக்கை.

வினா 103— : திரு. என்.. பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், பழனி வட்டத்தில் 1978ஆம் ஆண்டில், முதியோர் ஓய்வூதியத் தொகை அளிக்கப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

(இ) முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கக் கோரி விண்ணப்பம் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

1979 அக்டோபர் 31]

விடை—

(1)	செயல் முறையில் உள்ள திகர எண்ணிக்கை 31-12-78-ல் உள்ள நிலைமைப்படி. (2)	1978-ல் விண்ணப்பம் செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை. (3)	ஓய்வூதியம் ஒப்பளிக்கப் பெற்று செயல் முறையில் எண்ணிக்கையில் சேர்க்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை (31-12-78-ல் உள்ள நிலைமைப்படி). (4)	1978-ல் நிராகரிக்கப் பட்ட விண்ணப்ப தாரர்களின் மொத்த எண்ணிக்கை. (5)	காத்திருப்போர் பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை (31-12-78-ல் உள்ள நிலைமைப்படி). (6)
(அ) முதியோர் ஓய்வூதியத் தொகை (இயல்பானது.)	496	358	60	148	50
உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம்.	77	80	3	57	20*
கைவிடப்பட்ட கைம் பெண்கள் ஓய்வூதியம்.	85	122	43	58	21*
மொத்தம் ..	658	560	106	263	191

(இ) மூன்று திட்டங்களின் கீழ் 1978 ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கக் கோரிச் செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை மேலே (3)ஆவது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது.

*ஒப்பளிப்பு பெறுவதற்கான பல்வேறு கட்டங்களில் உள்ளன.

[1979 அக்டோபர் 31

திருப்பூவனம் அரசு மாணவர் இல்லம்.

வினா 104— திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மானாமதுரைத் தொகுதி, திருப்பூவனம் அரசு உயர் நிலைப் பள்ளியை, அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தியதின் விளைவாக, திருப்பூவனம் அரசினர் மாணவர் இல்லத்தில் ஏற்பட்ட இட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு, மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எண்ணிக்கை எவ்வளவாக உயர்த்தபடும் ?

விடை :

(அ) மற்றும் (ஆ) : திருப்பூவனம் அரசினர் அரிசன மாணவர் விடுதியில் தற்போதுள்ள மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து 1980–81 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதி திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

மிருகண்ட நதி கால்வாய் தூர் எடுத்தல்.

வினா 105— திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள சோழவரம் ஏரிக்கு மிருகண்ட நதியில் இருந்து வரும் கால்வாய் தூர் எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) 1979–80-ல் ஒன்றியத்தால் தூர் எடுக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.

1979 அக்டோபர் 31]

கோவிந்தநல்லூர் காலனியில் உள்ள குடிதண்ணீர் குழாய்க் கிணறு.

வினா 106— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், சோழத்தரம் ஊராட்சி, கோவிந்த நல்லூர் காலனியில் குடி தண்ணீர் குழாய்க் கிணறு எவ்வளவு காலமாக இயங்காமல் உள்ளது ?

(ஆ) காரணம் யாது ?

(இ) குடிதண்ணீருக்கு மாற்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதா ?

விடை — (அ) இக்குடியிருப்பில் இருப்பது குழாய்க் கிணறு அல்ல.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(இ) தண்ணீர் எடுக்கின்றனர்.

Cost of Maintenance of P. W. D. Rest House Building.

Q. 107 : Thiru N. Kittappa: Will the Hon. the Minister for Finance be pleased to state : the cost of maintenance of the Rest House in this State by the Public Works Department Buildings in this State during the calendar years 1975–76, 1976–77 Rest House-wise?

Ans. :

A statement* is placed on the table of the house.

Pallavan Transport bus involved in waylaid incident.

Q. 108 : Thiru N. Kittappa: Will the Hon. Minister for Transport be pleased to state—

(a) Whether any bus belonging to the Pallavan Transport Corporation was waylaid at Ashok Nagar about the 1st August 1978, and looted;

(b) If so, the details thereof?

[*788-800 ம் பக்கங்களில் இணைப்பு XII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

Ans.—

(a) Yes.

(b) The bus of route No. 49 belonging to P. T. C. (Metro) was waylaid in Saidapet Road near Samayapuri Kalyana Mandapam by a group of 30 persons on 1-8-1978 at about 7.45 p. m. while the bus was proceeding on trip from T. Nagar to Poonamallee. The Driver and the Conductor were assaulted with sticks and stones. The cash bag of the Conductor was also seized. In that process, the money which the Conductor had in that bag fell down. He had at that time Rs. 436/–. The miscreants collected some currency notes and other changes amounting to Rs. 185.31. The rest of the money was later collected by the passengers and the conductor and had been remitted in the depot. They had also snatched the belongings and cash from the passengers also. The Driver, the Conductor and two passengers had sustained injuries in the assault. A case had been registered in Ashok Nagar Police Station under Crime No. 1462/78 under sections 147, 148, 323, 341 and 370 Indian Penal Code. Six persons have been arrested in this connection and the case is pending judgement at Saidapet Court.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப் பெற்ற உயர்நிலைப் பள்ளிகள்.

வினா 109— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" 1978-79 ஆம் ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டன, மாவட்ட வாரியாக "?

979 அக்டோபர் 31]

விடை —1978-79 ஆம் ஆண்டில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக பின்வருமாறு :—

சென்னை	4
செங்கற்பட்டு	2
தென்னாற்காடு	2
வட ஆற்காடு	1
மதுரை	5
இராமநாதபுரம்	2
சேலம்	3
கோயம்புத்தூர்	4
திருநெல்வேலி	2
மொத்தம்	25

தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள் அமைத்தல்.

வினா 110 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) எந்தெந்த ஒன்றியங்களில் எத்தனைக் கிணறுகள் அமைக்கப்படும் ?

விடை :

(அ) & (ஆ) அறிக்கை* ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

* 807 ஆம் பக்கத்தில் இணைப்பு XVI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1979 அக்டோபர் 31

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு அருகே ராஜராஜ சோழன் சிலை அமைந்துள்ள பகுதி.

வினா 111 :—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலுக்கு அருகேயுள்ள ராஜராஜ சோழனின் சிலையைச் சுற்றி அசுத்தமாக இருப்பதாக ஏதேனும் பொதுமக்கள் புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

விடை —இல்லை.

டவுன் பஸ்களில் அதிக அளவு பிரயாணிகள் ஏற்றுதல்.

வினா 112—திரு. என். கிட்டப்பா :— மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) டவுன் பஸ்களில் ஓவர்லோடு ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர் வரை ?

விடை —(அ) டவுன் பஸ்ஸில் உரிமத்தில் நிர்ணயிக்கப்பட்ட பயணிகள் தவிர ஓவர்லோடு ஏற்ற அனுமதி அளிக்கப்படவில்லை. மூன்றும் இரண்டுமான இருக்கைகள் கொண்ட டவுன் பஸ்களுக்கு 25 பயணிகள் வரையில் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதி இல்லை.

இரண்டும் இரண்டுமான இருக்கைகள் கொண்ட நகரப் பேருந்துகளுக்கு 40 பயணிகள் வரையில் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒன்றும் இரண்டுமான இருக்கைகள் கொண்ட நகரப் பேருந்துகளுக்கு 55 பயணிகள் வரையில் நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இருபுறமும் ஒரே இருக்கை அமைக்கப்பட்டுள்ள பேருந்துகளில் 70 பயணிகள் வரை நின்று கொண்டு பயணம் செய்யவும் இவ்வாறு இருக்கைகள் அமைக்கப்பட்டு அவைகளின் இடைவெளியில் தடுப்புக் கம்பி பொருத்தப்பட்டிருப்பின் அவ்வாறுள்ள பேருந்துகளில் 60 பயணிகள் வரை நின்று கொண்டு பயணம் செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1979 அக்டோபர் 31]

Additional Building for the Government High School, Mangalam.

கு. 113—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is a proposal for the construction of additional building for the Government High School, Mangalam in Kanniyakumari district ; and

(*b*) if so, the details thereof ?

Ans.

(*a*) மற்றும் (*b*) இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2 லட்சத்திற்கு பொதுப் பணித்துறையினரிடமிருந்து பெறப்பட்டது. இக்கட்டிடம் கட்டுவதற்கு இவ்வாண்டு போதிய நிதி இல்லாததால் இவ்வாண்டில் இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு ஏற்கப்படவில்லை.

Building for Primary School of Manchalamoodi.

Q. 114 —Thiru J. JAMES : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is a proposal for construction of building for L.P.S. Manchalamoodi ; and

(*b*) if so, the details thereof ?

Ans.

(*a*) No.

(*b*) Does not arise.

Building for Primary School at Thiruparappu.

Q. 115—Thiru J. JAMES ; Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is a proposal for the construction of building for Thiruparappu L.P.S. in Kanniyakumari district ; and

(*b*) if so, the details thereof ?

Ans. —

(*a*) No.

(*b*)Does not arise.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 31

Thiruvattar bridge in Kanyakumari district.

Q. 116 –THIRU J. JAMES: Will the Hon. the Chief Minister be pleased to state –

(*a*) whether the Thiruvattar bridge in Kanyakumari district is in a weak condition ?

(*b*) whether there is any proposal for the reconstruction of this bridge ; and

(*c*) if so, the details thereof ?

Ans.—

(*a*) The bridge in question is at K. M. 5/6 of Marthandam-Pechiparai road. The Chief Engineer (Highways), Floods, has inspected the bridge and as per his instruction Tell-Tables have been fixed in the abutment for watching the performance of the cracks. So far nothing serious has been observed.

(*b*) No.

(*c*) Does not arise.

தஞ்சை மாவட்டத்தில் அரிசன வீட்டு வளர்ச்சிக் கழக வீடுகள்.

வினா 117—திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

(ஆ) எந்தெந்த கிராமங்களில் கட்டப்படும் ?

விடை —

(அ) 1978-79-ம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 214 வீடுகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

(ஆ) அவ்வாறு உத்தரவிடப்பட்ட வீடுகள் கீழ்க்காணும் 8 கிராமங்களில் கட்டப்படும்.

		வீடுகள்.
1	பாதிரகுடி	40
2	கரம்பயம்	7
3	வழுமங்கலம்	20
4	பெரும்பண்ணையூர்	52
5	தைக்கால்	24
6	சிக்கல்	25
7	திருவிசைநல்லூர்	26
8	பரட்டை	20

1979 அக்டோபர் 31]

பழனி தாலூக்காவில் கட்டப்பெற்றுள்ள பாலாறு, பொருந்தலாறு அணை வாய்க்கால் வேலைகள்.

வினா 118—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி தாலூகாவில் கட்டப்பட்டுள்ள பாலாறு, பொருந்தலாறு அணை மற்றும் வாய்க்கால் வேலைகள் முடி வடைந்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் பாசன வசதி பெறும் நிலங்கள் எத்தனை ?

விடை —

(அ) பழனி வட்டத்தில் கட்டப்பட்டுள்ள பாலாறு—பொருந்தலாறு அணை மற்றும் வாய்க்கால் வேலைகள் கீழே குறிப்பிட்டுள்ளவைகளைத் தவிர மற்றவை முடிவுறுந் தருவாயில் உள்ளன.

(1) முக்கிய கால்வாய் : 29.70 கி.மீ.-லிருந்து 30.00 கி.மீ. வரை கட்டி முடிக்கப்படவேண்டும்.

(2) கிளைக் கால்வாய்கள் : 12.96 கி.மீ. 15.06 கி.மீ. 16.38 கி.மீ. 17.14 கி.மீ. 18.32 கி.மீ. 21.44 கி.மீ. மற்றும் 24.88 கி.மீ.ல் உள்ள கிளைக் கால்வாய்களின் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(3) கால்வாயை இருப்புப் பாதை குறுக்கிடும் இடங் களில் கட்டப்பட வேண்டிய ஏழு பாலங்களும் இரயில்வே இலாகாவினால் செய்யப்பட வேண்டியவை. இவ்வேலைகளைச் செய்வதற்குத் தேவையான பணம் ரெயில்வே இலாகாவிடம் செலுத்தப்பட்டுவிட்டது.

(ஆ) இத்திட்டத்தினால் 9,600 ஏக்கர் நிலங்கள் புதிதாக புஞ்சைப் பாசன வசதியும், 500 ஏக்கர்கள் நஞ்சைப் பாசன வசதியும், மானூர் நீட்டிப்பு வாய்க்கால் மூலம் பெறும். மற்றும், பழைய ஆயக்கட்டான 10,000 ஏக்கர் நஞ்சை நிலங் களுக்கு பாசன உறுதி செய்வதோடு, விட்டுப் போன 481 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பாசன வசதியும கிடைக்கும். திட்ட வேலைகள் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. 1978-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாளிலிருந்து 3,600 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் விடப்பட்டுள்ளது.

[1979 அக்டோபர் 31

தூத்துக்குடி நகராட்சியில் சாலை அபிவிருத்தித் திட்டம்.

வினா 119—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தூத்துக்குடி நகராட்சியில் புதிய சாலைகள் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சாலைகள் ? எந்த எந்த பகுதிகளில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) மற்றும் (ஆ) கீழ்க்கண்ட ஏழு சாலைகளை அபிவிருத்தி செய்ய திட்டம் பரிசீலனையில் உள்ளது.

1. சேது பாதை ரோடு.

2. போல்டன்புரம் சந்திப்பிலிருந்து உள்ள புதுக்கிராமம் ரோடு தொடர்ச்சி.

3. பாளையங்கோட்டை ரோடு சந்திப்பிலிருந்து கிழக்காக செல்லும் தேவர் புரம் ரோடு.

4. சேதுபாதை தெருவையும், அழகேசபுரம் மெயின் ரோட்டையும் இணைக்கும் ஓடைத் தெருவில் தடுப்பு சுவர் கட்டி ரோடு அமைத்தல்.

5. திரேஸ்புரம் பக்கிள் ஓடை பாலத்திலிருந்து உள்ள 40 அடி ரோடு டவுன்பஸ் செல்லும் பாதை.

6. சிதம்பரநகர் 2-ம் தெரு, மேலக்கடை தெரு.

7. எட்டையபுரம் ரோடு சந்திப்பிலிருந்து செல்லும் ஜெயராஜ் ரோடு.

தூத்துக்குடி நகராட்சியில் அங்காடி மையம்

வினா 120—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடி நகராட்சிப் பேருந்து நிலையத்திற்கு எதிரில் உள்ள மைதானத்தில் ஒரு Commercial Complex அமைக்கும் செயல் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

விடை —

இல்லை; தூத்துக்குடி நகராட்சியின் ஆய்விலுள்ளது.

Construction of new bus stand at Dharmapuri.

Q. 121 —THIRU K. APPUNU GOUNDER: Will the Hon the Minister for Local Administration be pleased to state—

(a) the estimate for the construction of a new bus stand at Dharmapuri ; and

(b) When the work will be completed ?

Ans. —

(a) Rs. 6·99 lakhs.

(b) 15h May 1979.

தர்மபுரி மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கல்.

வினா 122 : திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ). தர்மபுரி மாவட்டத்தில் இதுவரையில் அங்கஹீனமுள்ளவர்கள் எத்தனை பேர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) அப்படி வழங்கப்பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள முறைகள் என்ன ?

விடை —

(அ) 203

(ஆ) மூன்று சக்கர வண்டிகள் பெறுவதற்குக் கீழ்க் கண்ட தகுதிகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருக்கவேண்டும்—

(க) விபத்திலோ, நோயிலோ அல்லது போரிலோ இரண்டு கால்களையும் இழந்தவர்கள்.

(ங) பாரிச வாயுவினால் இரண்டு கால்களிலும் செயல் திறன் இழந்தவர்கள்.

(ச) பிறவிக்குறையினால் இரண்டு கால்களையும் இழந் தவர்கள்.

மேற்கண்டவர்கள் மூன்று சக்கர வண்டியினை இரண்டு கைகளினாலோ அல்லது ஒரு கையினாலோ இயக்கும் திறன் பெற்றிருக்கவும் வேண்டும்.

இவ்வண்டி வேண்டி மனுசெய்தவர்களை மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் ஆன குழு ஒன்று தேர்வு செய்கிறது. இக்குழுவில் தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவராகவும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் செயலாளராகவும், மாவட்ட மருத்துவர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி), மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அங்கத்தினர்களாகவும் உள்ளனர்.

திட்டச்சேரியில் உள்ள சித்தவைத்திய மருத்துவமனை.

வினா 123 : திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் திட்டச் சேரியில் உள்ள சித்த வைத்திய மருத்துவமனையை ஆங்கில மருத்துவ மனையாக மாற்ற திருமருகல் ஒன்றியத்திலிருந்து அரசிற்கு வேண்டுகோள் ஏதும் வரப்பெற்றுள்ளதா?

விடை—

மருத்துவம் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

1979 அக்டோபர் 31]

மோட்டார் வாகன ஆய்வாளர்களின் சொத்துக் கணக்குகள்.

வினா 124—திரு. யா. சை. மூ. யூசப் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தங்களது சொத்துக் கணக்கை ஆண்டாண்டுக்கு அரசுக்கு காட்ட வேண்டுமென விதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் யாது?

விடை —

(அ) அரசு ஊழியர் நடத்தை விதிமுறை நூலில் விதி 7 (3)-ல் கண்டுள்ளபடி ஒவ்வொரு அரசு ஊழியரும் அரசு வேலையில் அமர்ந்த 3 மாதத்திற்குள் தனது சொத்து மற்றும் பொறுப்பு விபர அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். அதற்குப் பின் ஒவ்வொரு ஐந்தாண்டின் முடிவிலும் தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்பு பற்றிய விபர அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கை ஐந்தாண்டு முடிந்தபின் அதற்கு அடுத்த ஆண்டின் மார்ச் மாதம் 31-ம் தேதியிலோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்கப்படவேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் சொத்து மற்றும் பொறுப்பு விவர அறிக்கை எந்த ஆண்டிற்கு உரியதோ அந்த ஆண்டின் இறுதிவரை (அதாவது டிசம்பர் மாதம் முடிய) அடங்கிய விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அரசு ஊழியர் ஒவ்வொருவரும் தமிழ் நாடு கடைநிலை ஊழியர் தொகுதிப் பணியாளர் அல்லது பொது சார்நிலை பணியாளரான பதிவெழுத்தர் நீங்கலாக ஒவ்வொரு நடப்பு ஆண்டில் இடம் பெயராச் சொத்துக்கள் வாங்கியிருந்தாலும் அல்லது அத்தகைய சொத்துக்களின் மீது ஏதாவது உரிமைகளைப் பெற்றிருந்தாலும் அதன் விவரங்களை அடுத்த ஆண்டின் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் உரிய அதிகாரியின் வழியாக குறிப்பிட்ட மேல் அதிகாரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) மேற்படி (அ) பிரிவில் கூறியுள்ள அரசு ஊழியர் நடத்தை விதிமுறை நூலில் உள்ள விதி முறைகள் எல்லா அரசு ஊழியர்களுக்கும் பொதுவானதாகும். மற்றபடி மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு மட்டும் தனியாக விதி முறைகள் ஏதுவும் இல்லை.

சட்டமன்ற மேலவை இடைத்தேர்தலுக்கான செலவு.

வினா 125— திரு. துரை முருகன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1—11—1978 அன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்கு இடைத் தேர்தல் ஏதேனும் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதற்காக அரசுக்கு ஏற்பட்ட செலவுத் தொகை எவ்வளவு?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ரூ. 32,647.68 (ரூபாய் முப்பத்திரண்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தேழும், அறுபத்தெட்டு பைசாக்களுமாகும்).

Palm leaf Products Training Centre at Mathur.

Q. 126—THIRU N. KITTAPPA; Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) Whether any training centre for handicrafts based on Palm leaf and fibre has been organised at Mathur in Dharmapuri district; and

(*b*) If so, the details thereof ?

Ans. —

(*a*) and (*b*) One Palm Leaf Product Training Centre was started a Echangadu, Mathur on 1st June 1978 and the Training was completed on 30th November 1978. 20 artisans from palmyrah tapper families were given training in making of palm leaf products such as palm feaj rlands, flower baskets, etc. After training, these artisans are engaged the manufactuie of palm leaf articles. No Palm Fibre Training Centre s started at Mathur.

Women workers in Cotton and Sugar Mills in Palani Area.

Q. 127—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Labour be pleased to state:—

(*a*) whether the Chief Inspector of Factories is aware of the use of female labour during nights at Cotton and Sugar Mills at Ayyakudi, Balasamudram and Neikarapatti in Palani Taluk; and

(*b*) If so, the steps taken in this regard ?

Ans. —

(*a*) and (*b*) The Rice Mills and Cotton Ginning Factories situated in Palani Taluk were inspected during nights on 5th April 1979 and 9th April 1979 by the Factory Inspectorate and no contraventions regarding Employment of Women workers during night times were noticed in those factories. There is no registered Sugar Factory in Palani Taluk and hence the question of employment of women workers during night time in such factories does not arise.

Government Labour Welfare Officers in Private Sector Undertakings.

Q. 128 —THIRU N. KITTAPPA ; Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken by the Government to post Government servants as Labour Officers in the Private Sector Industries and Projects ?

Ans.—

In March 1978, the Government of India have been requested to accord their concurrence for bringing out an amendment by this State Government to section 49 of the Factories Act, 1948,to appoint Government Servants as Labour Welfare Officers in Private Sector Undertakings The Government of India have not agreed to the proposal of this Government for amending section 49 of the Factories Act, 1948.

On 31st March 1979, the Minister for Labour has written a D.O letter to the Union Minister, Thiru Ravindra Varma to reconsider the case and agree to the amendment proposed by this Government. His eply is awaited.

Prosecution for adulteration of oils.

Q. 129—Thiru SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) Whether traders of Mandavelli in Mylapore, Madras have been apprehended and prosecuted for adulteration of Oils about the 17th October 1978 ; and

(*b*) the details of the steps taken to check adulteration of edible oils ?

Ans. —

(அ) 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மந்தைவெளிப் பகுதியில் உள்ள மைலாப்பூரில் எண்ணெய் கலப்படத்திற்காக எந்த வியாபாரியும் பிடிக்கப்பட்டு வழக்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருப்பினும் 96-வது வட்டத்தில் எண் 211, புனித மேரி சாலை, திருவள்ளுவர் நகரில் உள்ள ஒரு வியாபாரியிடமிருந்து நல்லெண்ணெய் மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனைக்குப்பின் நல்லெண்ணெய் தரமானது என்று முடிவு செய்யப்பட்டது.

(ஆ) தமிழ்நாட்டில் உணவு கலப்படத் தடைச் சட்டம் நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக அமுலாக்கப்படுகிறது. அச் சட்டத்தை மேலும் தீவிரப் படுத்தவும், உணவு கலப்படத்தினால் ஏற்படக்கூடிய கெடுதல்களை மக்களுக்கு விவரிக்கவும் வானொலி, டெலிவிஷன் முதலியன பயன்படுத்தப்படுகின்றன. கல்லூரிகள், சமூக நல கழகங்கள் நடத்தும் கூட்டங்களிலும் சொற்பொழிவுகள் மூலமாகவும் அவை விவரிக்கப்படுகின்றன. உணவு கலப்படதடைச் சட்டத்தில் கலப்படம் செய்வோருக்கு மிகக் கடுமையான தண்டனைகள் விதிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. 1977-ம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப் பொருள்கள் தர நிர்ணயம் ஆணை 1977 (Tamil Nadu Scheduled Articles Prescription of Standards Order, 1977-ன்கீழ் சிவில் சப்ளையைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகளுக்கு உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் பிரிவு 10 மற்றும் 11-ன்கீழ் உணவு ஆய்வாளர்களுக்கு உள்ள அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1978-ம் ஆண்டில் 18,064 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்ய எடுக்கப்பட்டதில் 3090 மாதிரிகள் கலப்படம் செய்யப் பட்டவை. 1978-ல் 2,365 வழக்குகள் தண்டனைகளில் முடிவுற்றன. அதில் அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 1,738 பேர் சிறைத் தண்டனை அடைந்தவர்கள் 577 பேர்.

1979 அக்டோபர் 31]

ருத்திரப்பநாயக்கன்பட்டி கிராம சமுதாயக் கிணறு பழுது பார்த்தல்.

வினா 130—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியத்தை சேர்ந்த, ருத்திரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள சமுதாய கிணறு மூன்று ஆண்டுகளாக ஆழப்படுத்தாமலும் மின் இணைப்பு இல்லாமலும் பயன்படாமல் இருப்பது குறித்தும் அதனை பழுது பார்ப்பது குறித்தும் பொது மக்கள் மனு செய்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது?

விடை —

(அ), (ஆ) ஆம். பழுதடைந்த மோட்டாரைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெருமாள்பட்டிக் கண்மாய்.

வினா 131—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், கோட்டைப்பட்டிக்கும், அரசபட்டிக்கும் இடையில் உள்ள ஓடையில் பெருமாள்பட்டிக் கண்மாய் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்போது, கோட்டைப்பட்டி ஊருக்குள் வெள்ளம் புகுவதைத் தடுக்கும் செயல்முறைகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளனவா ?

விடை —

ரூ. 65,000 செலவில் பாலமும், தடுப்புச் சுவரும் நடப்பு நிதியாண்டில இணைப்புச் சாலைத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு செயற்குறிப்புகள் உள்ளன.

[1979 அக்டோபர் 31

கோவநேரி கால்வாயின் குறுக்கே பாலம்.

வினா 132— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி சுந்தரபாண்டியம் ஊருக்கு வடக்கே உள்ள கோவநேரி கால்வாயின் குறுக்கே பாலம் கட்டும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த அளவில் உள்ளது ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் இணைப்பு சாலைத் திட்டத்தின் கீழ் வேலை தொடங்கப்பெறும்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனைக்கு வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கை.

வினா 133 —திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை (ஜெனரல் ஆஸ்பத்திரி) அரசினர் பொது மருத்துவ மனைக்கு நாள் தோறும் வருகின்ற (Out Patients) வெளி நோயாளிகளின் எண்ணிக்கை என்ன ?

விடை —

பல் வைத்தியச் சிகிச்சைப் பிரிவையும் சேர்த்து சென்னைப் பொது மருத்துவமனைக்கு நாள்தோறும் வருகின்ற புற நோயாளிகளின் சராசரி எண்ணிக்கை பின் வருமாறு :—

1976-ல்	6,000
1977-ல்	5,307
1978-ல்	5,323

1979 அக்டோபர் 31]

தமிழ்நாட்டில் அர்த்தால் காரணமாக கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை.

வினா 134— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ந் தேதி தமிழ்நாடு பூராவும் நடைபெற்ற அர்த்தால் (பந்த்) காரணமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டனர் மாவட்ட வாரியாக ?

(ஆ) துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டனவா ?

(இ) அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

விடை—

(அ) சென்னை நகரம்	1,016
வடாற்காடு	402
தென்னாற்காடு	1,078
செங்கல்பட்டு	520
கோயம்புத்தூர்	1,745
தர்மபுரி	352
கன்னியாகுமரி	251
மதுரை	1,457
நீலகிரி	166
புதுக்கோட்டை	513
இராமநாதபுரம்	1,039
சேலம்	983
தஞ்சாவூர்	1,923
திருச்சிராப்பள்ளி	583
திருநெல்வேலி	524
மொத்தம் ..	12,552

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடியில் சிறு ரவைத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியிலும் கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரத்திலும் சிறு தடியடிப் பிரயோகம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

(இ) மன்னார்குடியில் 42 பேர்களும், பேராவூரணியில் 6 பேர்களும், குலசேகரத்தில் 27 பேர்களும் காயமுற்றனர்.

வாய்தா ரத்து செய்யப் பெற்றதால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு.

வினா 135—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம், புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு வாய்தா ரத்து செய்யப்பட்ட வகையில் அரசுக்கு இழப்பு எவ்வளவு ?

விடை —

தமிழ்நாடு முழுவதும் 1977-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தண்ணீர் வரி, வாணிகப் பயிர் வரி உட்பட வாய்தா ரத்து செய்யப்பட்ட வகையில் அரசுக்கு ரூபாய் 1,86,28,842·66 இழப்பு ஏற்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப் பெற்ற வழக்குகள்.

வினா 136—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கதர் கைத்தறித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78ஆம் ஆண்டில் மது விலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் தண்டனையில் முடிந்தவை எத்தனை?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) 1977–78-ம் ஆண்டில் 1–4–77 முதல் 31–3–78 வரை மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் 3,89,681.

(ஆ) அதில் தண்டனையில் முடிந்தவை 3,17,637.

வெறிநாய்க் கடியால் மரணமடைந்தோர் எண்ணிக்கை.

வினா 137— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் வெறி நாய்க் கடியால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தோர் எத்தனை பேர்?

(ஆ) மாவட்ட வாரியாக?

விடை —

(அ) & (ஆ) 1977–78-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் வெறி நாய்க்கடியால பாதிக்கப்பட்டு மரணமடைந்தோர் 254. (இரு நூற்று ஐம்பத்து நான்கு).

	மாவட்டம்.	இறப்பு எண்ணிக்கை.
1	சென்னை	69
2	செங்கல்பட்டு	16
3	வட ஆற்காடு	23
4	தென் ஆற்காடு	32
5	தஞ்சை	35
6	திருச்சிராப்பள்ளி	14
7	புதுக்கோட்டை	1
8	மதுரை	9
9	இராமநாதபுரம்	3
10	திருநெல்வேலி	10
11	சேலம்	15
12	தருமபுரி	12
13	கோயம்புத்தூர்	10
14	நீலகிரி	1
15	கன்னியாகுமரி	4
		254

மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் காங்க் கூலிகள்

வினா 138— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் காங்க் கூலிகள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்காக செலவிடப்படும் தொகை ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய்?

(இ) அவர்களில் வேலை நிரந்தரமாக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

விடை —

(அ) 16.

(ஆ) சராசரியாக ரூபாய் 34,109.

(இ) 16.

தென் ஆற்காடு மாவட்டத்தில் அனுமதிக்கப்பெற்ற தனியார் பேருந்து வழித்தடங்கள்.

வினா 139— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1976–77, 1977–78-ம் ஆண்டுகளில் தென் ஆற்காடு மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தனியார் பேருந்துகளின் வழித்தடங்கள் எத்தனை?

(ஆ) யார் யாருக்கு?

1979 [அக்டோபர் 31]

விடை —

(அ) & (ஆ) 1976–77 . . 6 வழித்தடங்கள்.

(1) திரு. டி. ஜி. சண்முக சுந்தரம், குளையூர்.
(2) திருமதி கே. ஏமாவதி, பெண்ணாடம்.
(3) திரு. ஜி. சம்பந்த முதலியார், திண்டிவனம்.
(4) திரு. டி. ராமமூர்த்தி, உளுந்தூர்பேட்டை.
(5) திரு. ஜி. செல்லப்பன், விழுப்புரம்.
(6) திரு. வி. பால்ராஜ், திட்டக்குடி.

1977–78 . . 6 வழித்தடங்கள்.

(1) திரு. வி. ஏழுமலை கவுண்டர், திருவாம்பட்டு.
(2) திருமதி என். பூங்கோதை, கடலூர்.
(3) திருமதி எஸ். லக்சுமிகாந்தம்மாள், திண்டிவனம்.
(4) திரு. எம். நாகசாமி ரெட்டியார், விழுப்புரம்.
(5) திரு. ஆர். நாராயணன், திண்டிவனம்.
(6) திரு. கே. நாராயணசாமி, விருத்தாச்சலம்.

மருங்காபுரி பகுதியில் வெள்ள நிவாரணப் பணிகள்.

வினா 140—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண வேலைகள் செய்யப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதன் பொருட்டு அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

விடை —

(அ) ஆம்.

(ஆ) செலவு செய்யப்பட்ட மொத்தத்தொகை ரூபாய் 17.261 லட்சம்.

[1979 அக்டோபர் 31

141—

உடன்குடி ஊராட்சி ஒன்றியச் சாலைகள்.

வினா 141—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79இல் உடன்குடி ஊராட்சி ஒன்றிய சாலைகளில் எத்தனை சாலைகளை ரூரல்ரோட் ஒர்க்ஸ் மூலம் எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அவைகள் எவை?

விடை —

(அ) & (ஆ) இல்லை.

ஆலந்தூர்பட்டி தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்கல்.

வினா 142—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி, அயன் நாச்சியார்கோவில் பஞ்சாயத்து, ஆலந்தூர்பட்டி கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நொச்சிகுளம் மேல்நிலை நீர்தொட்டியில் இருந்து 'டேப்' மூலம் குடிதண்ணீர் ஏற்பாடு செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா?

விடை —

திருவில்லிப்புத்தூர் தொகுதி அயன் நாச்சியார்கோவில் பஞ்சாயத்து ஆலந்தூர்பட்டி கிராமத்தில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நொச்சிக்குளம் குடிநீர் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் ஏற்பாடு செய்ய ரூ.13,500க்கு மதிப்பீடு சிவகாசி கோட்ட வளர்ச்சி அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதைச் செயல்படுத்த முடியாவண்ணம் நொச்சிகுளம் குடியிருப்பு மக்கள் பலத்த ஆட்சேபனை தெரிவித்து இருப்பதாலும் தற்போது செயல்படுத்தப்படின் விரோதங்கள், கலவரம் ஏற்படக்கூடிய நிலை இருப்பதாலும் செயல்படுத்தவில்லை.

1979 அக்டோபர் 31]

'பிரபித்தர்' ஊரணி அருகே சமுதாயக் கிணறு.

வினா 143—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவில்லிபுத்தூர் தொகுதி, கான்சாபுரம் ஊருக்கு மேற்குப் பகுதி மலை ஓரத்தில் கிழக்குப் பகுதியில் 'பிரபித்தர்' ஊரணி அருகே 60 ஏக்கர் புஞ்சை நிலங்கள் பயன்படக்கூடிய அளவில் 'சமுதாயக் கிணறு' வெட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை —

செயற்குறிப்பு ஏதுமில்லை.

சிவந்திபட்டி அரசு புறம்போக்கில் குடியிருக்கும் பனை ஏறும் தொழிலாளிகள்.

வினா 144—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, சிவந்திபட்டி கிராமம், சர்வே எண். 1421/ஏ-ல் உள்ள 3 ஏக்கர் நிலத்தில் வீடில்லாத பனை ஏறும் தொழிலாளிகள் 50 பேர், 20 ஆண்டு காலமாக அரசு புறம்போக்கு நிலத்தில் தீர்வை செலுத்தி குடியிருந்து வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த இடங்களை பட்டா செய்து தர செயற்குறிப்பு உண்டா?

விடை —

(அ) மற்றும் (ஆ): மேற்படி நிலத்தில் தற்போது பனை ஏறும் தொழிலாளர்கள் பனை ஓலைக் குடிசைகள் போட்டு குடியிருந்து வருகிறார்கள். இவர்களுக்கு மம்சாபுரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட சிவந்திப்பட்டி ஊருக்குள் வீடுகள் இருந்தாலும் கூட அவர்கள் வருடத்தில் ஏழு மாத காலம் பனை ஏறும் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் சமயம் பதநீர் இறக்குவதற்கும், கருப்புக்கட்டி காய்ச்சுவதற்கும் இவர்கள் குடும்பத்தோடு இக் குடிசைகளில் தங்கி வசித்து தொழிலை கவனித்து வருகின்றனர். இவர்களுடைய பனைத் தொழில் செய்வதற்காக இவர்களால் போடப்பட்டுள்ள குடிசைகள் உள்ள சர்வே

[1979 அக்டோபர் 31

142/1ஏ1-ல் உள்ள பனை குடிசைகளுக்கும் இவர்களின் ஊருக்குள் உள்ள வீடுகளுக்கும் சுமார் 1½ மைல் தூரமிருக்கிறது. இத்தொழிலுக்கு, இக்குடியிருப்பு இவர்களுக்கு மிகவும் அவசியமாக இருப்பதால், கிராம கணக்குகளில் தீர்வை ஏற்பட்ட தரிசாக உள்ள மேற்படி நிலத்தை நத்தமாக மாறுதல் செய்து பனைமரத் தொழிலாளர்களின் அனுபவப்படி நிலத்தை உட்பிரிவு செய்து அவர்களுக்கு ஒப்படை உத்திரவுகள் வழங்க திருவில்லிபுத்தூர் வட்டாட்சியரின் நடவடிக்கையில் இருக்கிறது.

திருத்துறைப்பூண்டியில் கலைக்கல்லூரி.

வினா 145—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருத்துறைப்பூண்டி தாலுகா, திருத்துறைப்பூண்டியில் ஒரு கலைக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை —

இல்லை.

நீலகிரியில் வெள்ள நிவாரணப் பணிகளுக்குப் பெறப்பெற்ற நன்கொடை.

வினா 146—திரு. கு. ரமணி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடந்த நவம்பர் மாத ஆரம்பத்தில் பெரு மழை பெய்து நீலகிரியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் உண்டான பெரும் உயிர்ச்சேதம், பொருள் சேதத்தை சமாளிக்க தேயிலைத் தோட்ட முதலாளிகள், அவர்களுடைய அமைப்புகள் நன்கொடை எவ்வளவு வழங்கினார்கள்?

(ஆ) பொது நிறுவனங்கள், இதர தொழிற்சாலைகள் வழங்கியுள்ள நன்கொடைகள் எவ்வளவு?

(இ) அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

விடை —

(அ) ரூபாய் 65,349–70

(ஆ) ரூபாய் 48,562–63.

(இ) இத்தொகையில் அரசு ஏதும் செலவிடவில்லை. ஆனால் நீலகிரி மாவட்டத்திலேயே இத்தொகையை செலவிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

பாண்டி கற்பகநாதர் குளம் சாலை மேம்பாடு.

வினா 147—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) முத்துப்பேட்டை ஒன்றியத்தை சேர்ந்த பாண்டி கற்பகநாதர்குளம் சாலையினை மேம்பாடு செய்ய அரசிடம் குறிப்பேதும் உள்ளதா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): அரசிடம் குறிப்பேதும் இல்லை. இரயில்வே செஸ் நிதியிலிருந்து ரூ. 3,83,000 மதிப்பீடு செலவில் இந்த வேலையை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்கியுள்ளார்.

பொன்னுகொண்டான் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

வினா 148—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப் பூண்டியிலிருந்து எழிலூர் வழியாக மீனமநல்லூர் செல்லும் சாலையில் உள்ள பொன்னுகொண்டான் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்தும் குறிப்பேதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆதிச்சபுரம்—கொம்மட்டி திடல் சாலை

வினா 149—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆதிச்சபுரத்திலிருந்து மேலப் பனையூர் வாட்டார், வேதபுரம் வழியாக கொம்மட்டி திடல் செல்லும் சாலை மேம்பாடு செய்ய அரசிடம் குறிப்பேதும் உள்ளதா ?

(ஆ) அதன் திட்ட மதிப்பீடு என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

வயது உச்சவரம்பு திட்டத்தால் பயன்பெறும் கிராம அதிகாரிகள்.

வினா 150—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராம அதிகாரிகள் வேலையில் இருப்பதற்கான வயது உச்சவரம்பு அறுபது வயது என தமிழக அரசு கொண்டு வந்த திட்டத்தால் புதியதாக எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்?

விடை—

1,730 கிராம மணியங்கள், 2,169 கர்ணங்கள், 3,580 கிராம ஊழியர்கள் 60 வயதை அடைந்ததால், 7,479 பேருக்குப் புதியதாக வேலை வாய்ப்பு ஏற்படும்.

மேலக்கோட்டையூர் பஞ்சாயத்து யூனியன் மருந்தகம்.

வினா 151—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி மேலக் கோட்டையூரில் பஞ்சாயத்து யூனியன் மருந்தகம் போதிய டாக்டர்கள் இருந்தும் மருந்து இல்லாமல் வெகு காலமாக செயல்படாமல் இருப்பது உண்மையா?

1979 அக்டோபர் 31]

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : மேலக்கோட்டையூர் பஞ்சாயத்து யூனியன் மருந்தகம் மருந்து இல்லாமல் செயல்படாமல் இருப்பது உண்மை இல்லை. ஏனெனில் 1978–79 ஆண்டில் ரூ.11,105.55க்கு மருந்துகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இதனால் மருந்தகம் நன் முறையில் செயல்பட்டு வருகிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சந்தனக்கட்டை திருடு பற்றிய வழக்குகள்.

வினா 152— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டில் சந்தனக்கட்டை திருடியவர்களின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு வழக்குகள் போடப்பட்டன ?

(இ) பிடிபட்ட கட்டையின் மதிப்பென்ன ?

(ஈ) எத்தனை வழக்குகள் தண்டனையில் முடிவுற்றன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 122 வழக்குகள்.

(இ) பிடிபட்ட கட்டையின் மதிப்பு ரூபாய் 10,48,513.

(ஈ) தண்டனையில் முடிவுற்ற வழக்குகள் 29.

திருவண்ணாமலை கோட்டத்தில் கூட்டுறவுக் கடன்கள்.

வினா 153— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை கோட்டத்தில் பருவ மழை தவறிய காரணத்தால் மணிலா, சம்பா, பாதிக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவு சங்க கடன்களை வசூலிப்பதை நிறுத்தி வைக்கவும் தவணை தவறிய கடன்களுக்கு அபராத வட்டி போடுவதை நீக்கவும் திட்டமுள்ளதா ?

விடை—

இயற்கையின் உற்பாதங்களால் விளைவு பாதிக்கப்படும் போதெல்லாம் விகிதாச்சார விளைவு 37 பைசாவிற்கு குறைவு என்று வருவாய்த்துறை வழங்கும் சான்றிதழ்களின் அடிப்படையில் குறுகிய காலக் கூட்டுறவுக் கடன்கள் மத்தியக்கால கடன்களாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்பட்டக் கடன்களுக்கு அபராத வட்டி வசூலிப்பதில்லை. திருவண்ணாமலை கோட்டத்தில் மேற் கண்ட சான்றிதழ் வருவாய்த்துறையினரால் வழங்கப்படவில்லை. விகிதாச்சார விளைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டால் குறுகிய காலக் கடன்களை மத்திய காலக்கடன்களாக மாற்றத்தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கோமாரி நோய்த்தடுப்புப் பணிகள்.

வினா 154—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ''கோமாரி'' நோய் ஏற்படும் கால்நடைகளுக்கு, கோவை மாவட்டத்தில் மட்டும் இலவசமாக வைத்திய உதவி அளிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட உள்ளதா?

விடை—

கோமாரி நோய் தடுப்பூசி குத்தும் (மத்திய அரசுத்) திட்டம் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில், மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட கோயம்புத்தூர், ஈரோடு, உதகமண்டலம் முதலிய பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி உதவியுடன் செயல் படுத்தப் பட்டது:—

(அ) மத்திய அரசின் பங்கு—33 1/3 சதவீதம்.

(ஆ) மாநில அரசின் பங்கு—16 2/3 சதவீதம்.

(இ) கால்நடை உரிமையாளர்களின் பங்கு—50 சதவீதம்.

1977–78 ஆம் ஆண்டில் கால்நடை சிறப்பு வளர்ப்புத் (மத்திய அரசு) திட்டத்தின் கீழ் வட ஆற்காடு, சேலம், தென் ஆற்காடு

1979 அக்டோபர் 31]

மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள நிதி உதவியுடன் 4,313 கன்றுகளுக்கு 30,191 ரூபாய் செலவில் கோமாரி நோய் தடுப்பூசிப் போடப்பட்டது

(அ) மத்திய அரசின் பங்கு 33 1/3 சதவீதம்.

(ஆ) மாநில அரசின் பங்கு 16 2/3 சதவீதம்.

(இ) தமிழ்நாடு பால்வள நிறுவனம்—50 சதவீதம்

மத்திய அரசு நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் கோமாரி நோய் தடுப்பூசி குத்தும் திட்டத்தினை வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், மதுரை முதலிய மாவட்டங்களிலும் செயல் படுத்த செயற் குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

கல்வித் துறையில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த அலுவலர்கள்

வினா 155—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வித் துறையில் தற்போது பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், சி. இ. ஒ, அஸிஸ்டெண்ட் டைரக்டர், டைரக்டர் ஆக உள்ளார்கள் ?

விடை—

கல்வித் துறையில் உள்ள பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த அலுவலர்களின் விபரம் பின்வருமாறு :—

பள்ளிக் கல்வித் துறை.

முதன்மைக் கல்வி அலுவலர்கள்	6
உதவி இயக்குநர்கள்	2
துணை இயக்குநர்கள்	5
இணை இயக்குநர்	1
இயக்குநர் (வணிகவியல்) ..	..

தொழில்நுட்பக் கல்வித் துறை.

இணை இயக்குநர்	1
உதவி இயக்குநர்	1

[1979 அக்டோபர்

மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கப்பெற்றவர்கள்.

வினா 156— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டு இன்று தேதி வரையில் எத்தனை வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) அதில் 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30ஆம் நாளுக்குப்பின் வழங்கப்பெற்றவை எத்தனை ?

(இ) 1978ஆவது ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரை எத்தனை வழங்கியுள்ளது? மாதவாரியாக.

விடை—

(அ) 1978ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் முதல் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை 6,692 மது அருந்துவதற்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1ஆம் நாள் முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை 3,788 மது உரிம அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) 1978ஆம் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரை 6,430 மது உரிமை அனுமதிச் சீட்டுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப் பட்டுள்ளன:—

1978—

ஜனவரி	1,543
பிப்ரவரி	1,094
மார்ச்	797
ஏப்ரல்	824
மே	596
ஜூன்	361
ஜூலை	99
ஆகஸ்ட்	10
செப்டம்பர்	2
அக்டோபர்	7
நவம்பர்	582
டிசம்பர்	515

1979 அக்டோபர் 31]

வடாற்காடு மாவட்டத்தில் முதியோர் உதவித்தொகை பெறுவோர்.

வினா 157—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதியமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1978ஆம் ஆண்டில், தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் முதியோர் உதவித்தொகை எத்தனை நபர்களுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

1978ஆம் ஆண்டு தண்டாரம்பட்டு ஊராட்சி ஒன்றியப் பகுதியில் முதியோர் உதவித்தொகை புதிதாக வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

(1) மூப்புக் கால உதவித்தொகை (சாதாரணம்)	4
(2) புகலற்ற விதவை உதவித்தொகை ..	10
(3) உடலூனமுற்றோர் உதவித்தொகை ..	1
மொத்தம் ..	15

வினா 158—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு நிதியமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1978 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் முதியோர் உதவித்தொகை புதிதாக எத்தனை நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

1978ஆம் ஆண்டு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் முதியோர் உதவித்தொகை புதிதாக வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

(1) மூப்புக்கால உதவித்தொகை (சாதாரணம்)	22
(2) புகலற்ற விதவை உதவித்தொகை ..	24
(3) உடலூனமுற்றோர் உதவித்தொகை ..	2
மொத்தம் ..	48

ஊத்தங்கரை வட்டத்தில் புதிய பாலங்கள்.

வினா 159 — திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி கோட்டப் பொறியாளர் எல்லையில் காகங்கரை-காவேரிப்பட்டினம் சாலையில் நடுப்பட்டியில் ஆற்றின் குறுக்கேயும் மாடாஹள்ளியில் மத்தூர் ஆற்றின் குறுக்கேயும் இரண்டு பாலங்கள் கட்டும் திட்டம் பல ஆண்டுகளாக ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : காகங்கரை காவேரிப்பட்டிணம் சாலையில் கி.மீ. 26/4-ல் நடுப்பட்டியில் பர்கூர் ஆற்றின் குறுக்கேயும் கி.மீ. 22/4 மத்தூர் ஆற்றின் குறுக்கேயும் பாலங்கள் அமைப்பது பற்றி இனிவரும் திட்ட காலங்களில் பணியின் முக்கியத்துவம், அரசின் நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயல்படுத்துவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கல்லாவியிலுள்ள ஒன்றிய மருத்துவமனை.

வினா 160—திரு. எச்.ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் உள்ள கல்லாவி மருத்துவமனையை அரசு மருத்துவ மனையாக ஏற்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) அப்படியானால் எப்போது திட்டம் அமுலாக்கப்படும்.

1979 அக்டோபர் 31]

விடை—

(அ) மற்றும் (ஆ) : கல்லாவி மருந்தகத்தை அரசு மருந்தகமாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்று நடத்துவதற்கான விதிமுறைப்படி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் 2 ஆண்டுகளுக்கான நிர்வாகச் செலவினை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்தும், பொது மக்கள் நன்கொடையாகவும், அரசு குறிப்பிடும் தொகையைக் கட்ட வேண்டும், மருந்தகக் கட்டிடத்தோடு குறைந்த பட்சம் 2 ஏக்கர் நிலமாவது அளித்திட வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஊராட்சி ஒன்றியம் முன்வருமானால் அரசு அதனைப் பரிசீலனை செய்யும்.

தருமபுரி மாவட்டத்தில் தனிப் பொதுப்பணித் துறை மேற்பார்வைப் பொறியாளர்.

வினா 161—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக மேற்பார்வைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) போடும் திட்டம் உள்ளதா?

(ஆ) அப்படியானால் எப்போது அமுல் நடத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் பொதுப் பணித் துறையின் சிறப்புத் திட்ட (வட்டம்) அலுவலகம் ஒன்று அமைப்பதற்கான தலைமைப் பொறியாளரிடமிருந்து செயற்குறிப்பு வந்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஒடுக்கத்தூர் மலைப் பகுதியில் அரசு தேன் சேகரிப்பு நிலையம்.

வினா 162—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், ஒடுக்கத்தூர் மலைப் பகுதியில் மிகுதியாக கிடைக்கும் தேனினைச் சேகரித்து விற்பனை செய்யும் பொருட்டு அரசே கொள்முதல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை--

(அ) இல்லை, அப்பகுதியில் அதிக அளவு தேன் கிடைக்குமாயின், அத்தேனை ஜமூனாமருதூர் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

செதுவாலை ஏரிக்கரையினைச் சாலையாக மாற்றுதல்.

வினா 163—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம் செதுவாலையிலிருந்து மருதைவெளிப்பாளையம் வரை உள்ள செதுவாலை ஏரிக்கரையினைச் சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

கல்லுட்டை—கீரகுட்டை சாலை.

வினா 164—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கல்லுட்டையிலிருந்து கீரகுட்டை வரை சாலை போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது செயற்படுத்தப்படும் ?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) தற்போது எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தருமபுரி மாவட்டத்தில் புயல் நிவாரணத் திட்டத்தின் கீழ் சாலைப் பணிகளுக்கு ஒதுக்கப் பெற்ற தொகை.

வினா 165 —டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1979 ஆம் ஆண்டிற்கு, புயல் நிவாரணத் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டதிற்கு 'கவர்ண்மெண்ட் ரோடு', 'பஞ்சாயத்து யூனியன் ரோடு' ஆகியவற்றிற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

விடை—

1978–79ஆம் ஆண்டிற்கு புயல் நிவாரணத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது :—

	1978–79 (ரூபாய் இலட்சத்தில்.)
அரசு சாலைகள்	3.97
ஊராட்சி/ஊராட்சி ஒன்றிய சாலைகள் ..	5.04

தஞ்சை மாவட்டத்தில் மினி பஸ் தடங்கள்.

வினா 166—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் எத்தனை மினி பஸ் தடங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) அந்த வழித் தடங்களில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன?

விடை —

(அ) மற்றும் (ஆ) : கீழ்க்கண்ட ஏழு மினி பஸ் தடங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:—

1. புதுக்கோட்டையிலிருந்து முன்னவன்கோட்டைக்கு நீடாமங்கலம் வழியாக.

2. தஞ்சாவூரிலிருந்து கொரடாச்சேரிக்கு கண்கொடுத்த வனிதம் வழியாக.

3. மதுக்கூரிலிருந்து, மதுக்கூருக்கு எலவாஹூர், சொக்கன ஹூர், கலித்தாங்குடி, விக்ரமம் வழியாக.

4. பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து அத்தி வட்டி வடக்குக்கு, வெண்டக்கோட்டை, காசரங்காடு, மதுக்கூர், வட்டக்குடி வழியாக.

5. சீர்காழியிலிருந்து ஆனதாண்டவபுரத்துக்கு வைத்தீஸ் வரன் கோவில், கன்னியாக்குடி, சேத்தூர், பொன்னுசநல்லூர் வழியாக.

6. மொத்தக்குடியிலிருந்து முன்னவன் கோட்டைக்கு நீடாமங்கலம் வழியாக.

7. திருவாரூரிலிருந்து, கொரடாச்சேரிக்கு கண்கொடுத்த வனிதம் வழியாக.

மேற்குறிப்பிட்டவற்றில் ஆறாவது மற்றும் ஏழாவது வழித் தடங்களில் மினி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

வினா 167—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலுகா, ஆதிச்சபுரம் ஆர்ச்சிலிருந்து வேதபுரம் வங்கத்தான் குடி நாணுலூர், செந் தாமரைக்கண், தேவதானம், குமிட்டித் திடல், புத்தகரம், சித்த மல்லி வழியாக முத்துப்பேட்டை வரை மினி பஸ்விட நடவடிக்கை ஏதும் எடுக்கப்பெற்றுள்ளதா?

விடை —

சாலைப்போக்குவரத்துக் கணக்கெடுப்பு (Road Transport Survey) நடைபெற்றுவருகின்றது. இவ்வேலை முடி வுற்றவுடன், வினாவில் குறிப்பிட்ட வழித்தடத்தில் மினி பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசினர் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும்போதே இறந்துபோன ஆசிரியர்கள்.

வினா 168—திரு. நன்னிலம் மா. மணிமாறன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79 இல் அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிக்கொண்டிருந்த போது இறந்த ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகைகள் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதா ?

(இ) குடும்பத்தினர்களுக்கு எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது ?

விடை —

(அ) ஆசிரியர்கள் 39.

தலைமையாசிரியர் 1

(ஆ) மேற்கூறிய 40 பேர்களில் 21 பேருக்குக் கிடைக்க வேண்டிய தொகைகள் அளிக்கப்பட்டுவிட்டன. ஏனையோருக்கு கிடைக்க வேண்டிய தொகையை அளிப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

(இ) மேற்கூறிய 40 பேர்களில் இரண்டு பேர்களுடைய குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திருமருகல், நன்னிலம் ஒன்றியங்களில் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்கள்.

வினா 169—திரு. நன்னிலம் மா. மணிமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டத்தின் கடைசிப் பகுதியும், அரசலாறு, திருமலை ராயன், வெட்டாறு போன்ற பெரிய வடிகால் ஆறுகளின் கடைமடைப் பகுதியாகிய திருமருகல் நன்னிலம் ஒன்றியங்கள்

வெள்ளக் காலங்களில் அடிக்கடி பாதிக்கின்ற பகுதியாதலால் அப்பகுதிகளின் கிராம சாலைகள் சீர்பெற சிறப்புத் திட்டங்கள் ஏதேனும் உண்டா ?

விடை —

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நன்னிலம், திருமருகல், கொடவாசல் மற்றும் கொரடாச்சேரி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகள் முறையாக மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது வெள்ள நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் ரூ. 7·34 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி ஒன்றியங்களிலுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர '' இணைப்புச் சாலைகள் திட்டம் '' ''கிராம வேலைகள் திட்டம் '' ஆகிய திட்டங்களின் கீழும் இச்சாலைகள் ஆண்டுதோறும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இச்சாலைகளை நல்ல நிலையில் வைத்து இருப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

சிதம்பரத்திலுள்ள பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.

வினா 170—திரு துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் தலைமையிடமாகக் கொண்டு பால் உற்பத்தியாளர் சங்கம் எத்தனை உள்ளது ?

(ஆ) எவ்வளவு பால் உற்பத்தியாகிறது ?

(இ) எங்கெங்கு விநியோகம் செய்யப்படுகிறது ?

விடை —

(அ) சிதம்பரத்தில் தலைமையிடமாகக் கொண்டு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பபிக்கப்படவில்லை. ஆனால் கீழ்க்கண்ட பால் வழங்கும் சங்கங்கள் உள்ளன :—

(1) சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்.

(2) திருவக்குளம் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

(3) சிதம்பரம் முதல் வார்டு அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

1979 அக்டோபர் 31]

தினசரி சராசரி பால் உற்பத்தி.

	(லிட்டர்).
(அ) திருவக்குளம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்.	1,274
(ஆ) சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்.	1,814
(இ) சிதம்பரம் முதல் வார்டு அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் (சங்கம் தற்போது இயங்காமல் உள்ளது.)	..
தினசரி சராசரி உற்பத்தியாகும் பால் ..	3,088

(இ) கீழே குறிப்பிட்ட இடங்களில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது:—

திருவக்குளம் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்

	(லிட்டர்)
சிதம்பரம் நகரம்	900
புவனகிரி நகரம்	300
சேத்தியா தோப்பு சரகம்	74
மொத்தம் ..	1.274

சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம்

	(லிட்டர்)
காட்டு மன்னார்குடி	150
புவனகிரி	30
பரங்கிப்பேட்டை	50
வடலூர்	64
சிதம்பரம் நகரம் மற்றும் உணவு விடுதிகள்.	1,520
மொத்தம் ..	1,814

[1979 அக்டோபர் 31

தென்னாற்காடு மாவட்டத்தில் கறவை மாடு வாங்க உதவித் தொகை பெற்றவர்கள்.

வினா 171— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் தென்னாற்காடு மாவட்டத்தில், கறவை மாடு உதவித்தொகை (மான்யம்) எவ்வளவு பேருக்கு கொடுக்கப் பட்டது ?

(ஆ) அரசு எவ்வளவு தொகை இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கியது ?

(இ) எத்தனை பால் உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளது ?

விடை —

(அ) அரிசன நலத் திட்டத்தின்கீழ், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களில் உள்ள 550 அரிசன உறுப்பினர்களுக்கு 1978–79-ல் கறவை மாடுகள் வாங்க மான்யம் தலா ரூ. 500 வீதம், மொத்தம் ரூ. 2,75,000 வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1978–79-ஆம் ஆண்டிற்கு அரிசன நலத்திட்டத்தின் கீழ், கறவை மாடுகள் வாங்க தென்னாற்காடு மாவட்டத்திற்கு ரூ. 2·75 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

(இ) தற்போது தென்னாற்காடு மாவட்டத்தில் 128 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவைகளில் 11 சங்கங்கள் அரிசன கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களாகும்.

சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களில் ஆரம்பப் பள்ளிக்கட்டிடங்கள்.

வினா 172—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

தென்ஆற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரம், காட்டு மன்னார்குடி ஆகிய இரண்டு வட்டங்களிலும் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லாமல் கூரைக் கொட்டகையில் உள்ளவை எத்தனை ?

1979 அக்டோபர் 31]

விடை —

1. சிதம்பரம் வட்டம் —

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	..	23
தனியார் பள்ளிகள்		27
மொத்தம்	..	50

2. காட்டுமன்னார்குடி வட்டம் —

அரசுப் பள்ளிகள்		[illegible]
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	..	10
தனியார் பள்ளிகள்		16
மொத்தம்	..	29

173—

திருமுட்டத்தில் தீயணைப்பு நிலையம்.

வினா 173—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்குடி வட்டம் திருமுட்டத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை —

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Visit of Australian Students to Tamil Nadu.

Q. 174 — Thiru Salem M. Arumugam : Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Tourism Development Corporation has invited a group of Australian students to this State in recent times ;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(*b*) if so, whether these students visited Tamil Nadu about the 4th January 1979 ; and

(*c*) the details thereof?

விடை —

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆஸ்திரேலிய மாணவர் குழு எதையும் வருகை தருமாறு அழைக்கவில்லை. எனினும் மெல்பர்ன் பல்கலைக் கழக இந்தியப் படிப்புத் துறையைச் சேர்ந்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலா மாணவர் குழு தமிழ் நாட்டிற்கு வருகை தந்தது.

(ஆ) 52 பேர் கொண்ட ஆஸ்திரேலிய மாணவர் குழு தமிழ் நாட்டில் 3—1—1979 முதல் 28—1—1979 வரை சுற்றுப் பயணம் செய்தது.

(இ) அயல் நாட்டு மாணவர்கள் மாமல்லபுரம், சிதம்பரம், கும்பகோணம், தாராசுரம், சுவாமிமலை, தஞ்சாவூர், திருவரங்கம், விராலிமலை, மதுரை, காந்திகிராமம், கோடைக்கானல், இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, உதகை, முதுமலை ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தார்கள். இவர்களுக்கு, தமிழ்நாடு சுற்றுலாக் கழகம், மேற்சொன்ன இடங்களுக்கும், கோயில்களுக்கும் சென்று பார்வையிட ஏற்பாடு செய்து பெரிதும் உதவி புரிந்தது. அயல்நாட்டு மாணவர்கள் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விளையாட்டைக் கண்டு களித்தார்கள். மதுரை, உதகை ஆகிய இடங்களில், கல்லூரி மாணவர்கள் சுற்றுப்பயணம் செய்த அயல் நாட்டினருக்குக் கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டினார்கள்.

Discounts on sale of handloom goods.

Q. 175 —Thiru N. Kittappa : Will the Hon. the Minister for Khadi and Handlooms be pleased to State :—

(*a*) whether rebates extending to 60 per cent and 50 per cent have been given by the Handloom and Co-optex sales centres at Luz Church Road, Mylapore, Madras, during December 1978 and January 1979: and

(*b*) if so, the details thereof?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மைலாப்பூர் லஸ் சர்ச் ரோடில் உள்ள விற்பனை நிலையத்திலும், மற்றுமுள்ள அதன் கிளை விற்பனை நிலையங்களிலும், கொள்முதல் செய்து இரண்டாண்டுகளுக்கு

1979 அக்டோபர் 31

மேலும் விற்பனையாகாத அல்லது கறைபட்ட துணிகளை 50 சதவீதம் தள்ளுபடி விகிதத்திலும் மற்றும் பழுதடைந்த அல்லது கிழிந்த துணிகளை 60 சதவீதம் தள்ளுபடி விகிதத்திலும் டிசம்பர் 1978 மற்றும் சனவரி 1979 மாதங்களில் விற்பனை செய்தன. இதில் அரசு 1978—79-ம் ஆண்டில் கைத்தறி துணி விற்பனை ஊக்குவிப்பதற்காக பண்டிகை காலங்களில் 30 நாட்களுக்கு அளித்த 20சதவீதம் தள்ளுபடியும் அடங்கும்.

இந்நிலையத்தில் மேற்சொன்ன காலத்தில் செய்யப்பட்ட மொத்த விற்பனையான ரூ. 5.16 இலட்சம். இதில் மேற்படி வகைத் துணிகளின் விற்பனை மதிப்பு ரூ. 1 இலட்சமாகும்.

Q. 176—Thiru N. Kittappa : Will theHon. the Minister for Khadi and Handlooms be pleased to state—

(*a*) whether a large quantity of Handloom goods like Dhoties, Bedsheet, Carpets, etc. were sold at 50 per cent to 60 per cent discount and rebates at the Handloom House at Kuralagam in Madras city during the Pongal Festivals in 1979 ; and

(*b*) If so, the details thereof?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் அதன் கிளை விற்பனை நிலையங்கள், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, டிசம்பர் 1978, ஜனவரி 1979, காலத்தில் அந்த சங்கத்தால் 31—12—1976 தேதிக்கு முன்பு கொள்முதல் செய்யப்பட்ட இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட பழைய சரக்குகள் மற்றும் அழுக்கேறிய துணிகள் ஆகியவற்றின் மீது 30 சதவீதம் சங்கம் கழிவு மற்றும் 20 சதவீதம் தள்ளுபடி ஆக மொத்த 50 சதவீதம் குறைத்தும், பழுதடைந்த மற்றும் கிழிந்த துணிகளின் விற்பனை மீது 40 சதவீதம் சங்க கழிவு மற்றும் 20 சதவீதம் தள்ளுபடி ஆக மொத்தம் 60 சதவீதம் குறைத்தும் விற்பனை செய்துள்ளன.

குறளகத்திலுள்ள கைத்தறி விற்பனை நிலையம் பண்டிகைக் காலத்தில் ரூ. 2.77 இலட்சம் மதிப்புள்ள இவ்வகைத் துணிகளை விற்பனை செய்துள்ளது. இந்நிலையத்தால் இக்காலத்தில் கையிருப்பிலிருந்த பழுதடைந்த மற்றும் பழைய வேட்டிகள் 389-ல் 19 வேட்டிகளும், 107 படுக்கை விரிப்புகளில் 97 படுக்கை விரிப்புகளும் மற்றும் புடவைகளும் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்யப்பட்ட பருத்தி கைத்தறி துணிகளின் மதிப்பு ரூ. 84,000 ஆகும். இன்னும் 10 படுக்கை விரிப்புகளும் 370 வேட்டிகளும் விற்கப்படாமல் நிலுவையிலுள்ளன.

தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மண்டல அலுவலகம்.

[1979 அக்டோபர் 31

வினா 177 : டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 'மண்டல அலுவலகம்' (Zonal Office) ஒன்று தர்மபுரி மாவட்டத்தில் அமைக்க ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

விடை —

தற்போது இல்லை.

தர்மபுரி மாவட்டத்தில் பட்டுத்தொழில் அபிவிருத்தி.

வினா 178— டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கிராமத்தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தர்மபுரி மாவட்டத்தில் பட்டுத்தொழில் அபிவிருத்திக் கென அங்கே ஓர் 'செரிகல்சர் காம்ப்ளக்ஸ்' ஏற்படுத்த அரசு ஏதேனும் செயல் திட்டம் வைத்துள்ளதா?

விடை —

தர்மபுரி மாவட்டத்திற்கு தற்போது 'செரிகல்சர் காம்ப்ளெக்ஸ்'ற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டம் ஏதும் இல்லை. இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ள 1979-80-ம் ஆண்டிற்கான தீவிர பட்டு அபிவிருத்தித் திட்டத்தில் தர்மபுரி மாவட்டத்தில் 1979-80-ம் ஆண்டில் ஒரு 'செரிகல்சர் காம்ப்ளெக்ஸ்' அமைப்பதற்கான திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்கள்.

வினா 179—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன ?

(ஆ) அதில் எத்தனை தீயணைப்பு வண்டிகள் உள்ளன ?

(இ) அவற்றில் தற்போது இயங்குவது எத்தனை இயங்காதது எத்தனை ?

1979 அக்டோபர் 31]

விடை :—(அ) தர்மபுரி நகரில் ஒரு மூன்று ஊர்தி கொண்ட நிலையமும், கிருஷ்ணகிரி நகரில் ஒரு ஊர்தி கொண்ட நிலையமும் உள்ளன.

(ஆ) தர்மபுரியில் இரு தீயணைப்பு ஊர்திகள் மற்றும் ஒரு நோயாளி வண்டியும், கிருஷ்ணகிரியில் ஒரு தீயணைப்பு ஊர்தியும் உள்ளன.

(இ) தர்மபுரியில் ஒரு தொடர் ஊர்தி பம்பு தவிர இதர எல்லா ஊர்திகளும் இயங்கும் நிலையில் உள்ளன. தர்மபுரியின் தொடர் ஊர்தி பம்பு 15—2—1977-ல் விபத்து ஏற்பட்ட தினத்திலிருந்து இயங்கவில்லை. மாற்று வண்டி, உபரி ஊர்தி இல்லாததினால் வழங்கப்படவில்லை.

Power failure at Children's Hospital, Egmore.

Q. 180—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there has been frequent power failure at the Children's Hospital at Egmore, Madras in recent times; and

(*b*) if so the reasons therefor?

Ans.

(*a*) Yes.

(*b*) Power failure is due to frequent power shut down and power interruption by the Tamilnadu Electricity System. To rectify this, provision has been made in the Budget for the purchase of a generator for the Institute of Child Health and Hospital for Children, Madras during 1979-80.

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மின்வாரியத்தால் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் "மின்சார நிறுத்தத்தாலோ", "மின்தடுப்பினாலோ" இது ஏற்படுகின்றது. இதைப் போக்குவதற்காக மின் உற்பத்தி யந்திரத்தை (Generator) குழந்தை நல நிறுவனம் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனைக்கு 1979-80-ல் வாங்க வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

[1979 அக்டோபர் 31

சங்கரன் கோவிலில் முன்சீப் கோர்ட்

வினா 181—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்கரன் கோவிலில் முன்சீப் கோர்ட் நிறுவும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை :—நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழு மாவட்ட முன்சீப் நீதிமன்றம் சங்கரன்கோவில் உட்பட 28 உரிமை இயல் நீதிமன்றங்கள் அமைக்கலாம் என்று பரிந்துரைத்தது. நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழுவின் பரிவுரையை அரசு ஏற்று செயல்படுத்தி வருகின்றது.

2. 1978–79 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு உரிமையியல் நீதிமன்றங்களைத் துவக்க அரசு ஆணை பிறப்பித்து உள்ளது :—

1. சார்பு நீதிமன்றம், திண்டிவனம்.
2. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், செஞ்சி.
3. சார்பு நீதிமன்றம், நாமக்கல்.
4. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், இராசிபுரம்.

1979–80 ஆம் ஆண்டில் பாகம் II திட்டமாக கீழே குறிப்பிடப்பட்ட மூன்று துணை நீதிமன்றங்களைத் துவக்க ஆணை பிறப்பிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது :—

1. சார்பு நீதிமன்றம், திருவள்ளூர்.
2. சார்பு நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
3. சார்பு நீதிமன்றம், தென்காசி.

அரசின் நிதி நிலைமைக்கேற்ப சங்கரன்கோயில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை நாளடைவில் பிறப்பிக்கப்படும்.

1979 அக்டோபர் 31]

அரசுப் பேருந்துகளில் அதிகமாகப் பயணிகள் ஏற்றுதல்

வினா 182—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கழக பஸ்களில் ஓவர்லோடு ஏற்றுவதை தடுக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

விடை :—உரிமத்தில் நிர்ணயிக்கப்பட்ட பயணிகள் தவிர ஓவர்லோடு ஏற்ற அனுமதி அளிக்கப்படவில்லை. துரிதப் பேருந்துகளில் நின்று கொண்டு பயணம் செய்ய எக்காலத்திலும் அனுமதியில்லை.

விழாக்காலங்கள், பண்டிகை நாட்கள் ஆகியவை தவிர இதர நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட பயணிகள் தவிர நின்று கொண்டு பயணம் செய்ய வெளியூர்ப் பேருந்துகளிலும் அனுமதி இல்லை.

நகரப் பேருந்துகளில் மட்டும் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள இருக்கைகளுக்கு இடைப்பட்ட நடைபாதையில் (Gangway) வண்டிகளின் அமைப்பைப் பொறுத்து 25 முதல் 70 பயணிகள் வரை நின்று கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட பயணிகள் தவிர அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் உட்பட அனைத்துப் பேருந்துகளையும் தணிக்கை செய்து குற்றங்களைக் கண்டுபிடித்து சட்ட விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்க காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறையினருக்கும் 12—3—1976 அன்று வெளியிட்ட அரசு ஆணையின்படி உத்திரவிட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிராமக் கேந்திர நிலையங்கள்

வினா 183—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஆணை (நிலை) எண். 2087 வேளாண்மை, தேதி 23—12—1977-ன் படி திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை கிராமக் கேந்திர நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன ?

(ஆ) நிலைய ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனரா?

(இ) அதிகாரிகள், வாகன செலவு வகைக்கு நடப்பு ஆண்டில் செலவு எவ்வளவு ?

[1979 அக்டோபர் 31

விடை:—(அ) அரசு ஆணை எண் 2087 வேளாண்மை, நாள் 23—12—1977-ன்படி திருநெல்வேலி மாவட்டத்தில் ஐந்து கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. அவை சாத்தான்குளம், எட்டயபுரம், நாகலாபுரம், ஒட்டபிடாரம், ஆலங்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு உள்ளன.

(ஆ) மேற்படி கேந்துர கிராம நிலையங்களில் 14 இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

(இ) அதிகாரிகள் வாகன செலவு வகைக்கு 1978–79 ஆம் ஆண்டில் ரூபா 1,79,308·69.

வினா 184—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேந்திர கால்நடை மையத்திற்காக திருநெல்வேலி மாவட்டத்திற்கு 1977–78, 1978–79 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) கால்நடை ஆய்வாளர்களுக்காகவும், மருந்துக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அதிகாரிகளுக்காக ஆன செலவு எவ்வளவு?

விடை.—(அ) கேந்திர கால்நடை மையத்திற்காக திருநெல்வேலி மாவட்டத்திற்கு 1977–78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை பின்வருமாறு:—

1977–78	ரூ. 12,23,700
1978-79	ரூ. 14,87,850

(ஆ) கால்நடை ஆய்வாளர்களுக்காகவும் மற்றும் மருந்துக்காகவும் 1977–78 மற்றும் 1978–79 ஆகிய ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை பின்வருமாறு:—

1977–78—

கால்நடை ஆய்வாளர்களுக்கு	ரூ. 5,79,262
மருந்தும் மற்றும் உபகரணங்கள்	ரூ. 1,35,075

1979 அக்டோபர் 31]

1978-79—

கால்நடை ஆய்வாளர்களுக்கு	ரூ. 5,34,560
மருந்தும் மற்றும் உபகரணங்கள்	ரூ. 1,20,000

(இ) அதிகாரிகளுக்காக 1977-78 மற்றும் 1978-79 ஆகிய ஆண்டுகளில் ஆன செலவு பின்வருமாறு :—

	1977-78	1978-79
கால்நடை உதவி மருத்துவர்களின் சம்பளம்.	ரூ. 71,154	ரூ. 81,080

காண்டாபுரம் கிராமம் மண்டபம் இணைப்புப் பாலம்.

வினா 185—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிப்புத்தூர் தொகுதியில் காண்டாபுரம் கிராமம் மண்டபம் இணைப்புப் பாலம் கட்ட உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

விடை —

(அ) & (ஆ): திருவல்லிப்புத்தூர் தொகுதியில் காண்டாபுரம் கிராமம் மண்டபம் இணைப்புப்பாலம் ராமசாமிபுரம் கான்சாபுரம் சாலையில் கி.மீ. 1/6 இல் உள்ளதாகும். வெள்ள நிவாரணப் பணிகளின்கீழ் 26—2—1979 அன்று துவக்கப்பட்டு 29—5—1979 அன்று ரூ. 21,323 செலவில் முடிக்கப்பட்டு விட்டது.

கொத்தங்குளம் கிராமப் புறம்போக்கு நிலத்தில் ஏழைகளுக்கு வீட்டு மனைகள்.

வினா 186—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், இராஜபாளையம் தாலுக்கா, கொத்தங்குளம் கிராமம், சர்வே எண் 9/5-ல் 2 ஏக்கர் 10 சென்ட் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் வன்னியம்பட்டியில் இருக்கும் வீடு இல்லாத ஏழைகள் 25 பேர் வீட்டு மனைச் கோரி அரசுக்கு மனு செய்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில் அவர்களுக்கு வீடு கட்டப் பட்டா கொடுக்கும் உத்தேசம் உண்டா?

விடை —

(அ)&(ஆ); சர்வே எண் 9/5-ல் 2 ஏக்கர் 10 செண்டு பழைய எஸ்டேட்டு காலத்தில் குறிப்பிட்ட விஸ்தீரணமாகும். புது சர்வே நடந்த பிறகு சர்வே எண் 9/5–ன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 30 செண்டாகும், தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சை தரிசாகவும் இந்நிலம் பதியப்பட்டுள்ளது. இந்நிலம் நிலவரித் திட்டத்திற்கு, முந்தைய காலத்திலிருந்தே 30 ஆண்டுகளாக அனுபவித்து வந்தவரிடம் கிரயம் பெற்ற மாயாண்டி நாடாருக்கு ஒப்படை செய்ய நடவடிக்கையில் உள்ளது. மேற்படி நிலத்தில் வீட்டு மனைக்கு ஒப்படைப்பு கோரிய 25 நபர்களில் 17 நபர்களுக்கு வன்னியம்பட்டி கிராமத்தில் பூர்வீக வீடுகள் உள்ளன. ஒருவர் மூணாறு பக்கம் உள்ள எஸ்டேட்டில் நீண்ட காலமாக குடும்பத்துடன் குடியிருக்கிறார். மீதமுள்ள 7 நபர்களுக்கு 9/5–க்கு பக்கத்தில் கிராம நத்தமாக இருக்கும் சர்வே எண் 493–ல் காலியாக உள்ள 0·30 செண்ட் இடத்தை வீட்டு மனைக்காக ஒப்படை செய்ய நடவடிக்கையில் உள்ளது.

அரியலூர் தொகுதியில் மினி பஸ்கள்.

வினா 187—திரு த. ஆறுமுகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதியில் மினி பஸ்கள் விடுவதற்கான உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த வழித் தடங்களில் விட முடிவு செய்யப்பட்டுள்ளது?

விடை —

(அ) & (ஆ): சாலைப் போக்குவரத்து கணக்கெடுப்பு (Road Transport Survey) நடைபெற்று வருகின்றது. இவ்வேலை முடிவுற்றவுடன் திருச்சி மாவட்டத்தில் மினி பஸ்கள் விடப்படும்.

கீரிப்பாறை ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகள்.

வினா 188—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் கீரிப்பாறை சர்க்கார் ரப்பர் தோட்ட தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

1979 அக்டோபர் 31]

விடை —

ஆம். அங்குள்ள 296 குடும்பங்களில், 185 குடும்பங்களுக்கு ஏற்கனவே வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 98 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. மீதியுள்ள 13 குடும்பங்களுக்கு அடுத்த கட்டத்தில் வீடுகள் கட்டப்படும்.

கீரிப்பாறை அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள்.

வினா 189— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கீரிப்பாறை சர்க்கார் ரப்பர் தோட்டத் தொழிற்சாலையில் பணிசெய்யும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) வேலை கொடுப்பதில் அப்பகுதி மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறதா?

(இ) முன்னுரிமை அடிப்படையில் நிரந்தரம் செய்யப்படுகிறதா?

விடை —

(அ) 80 பேர் நிரந்தரமாக வேலை செய்கிறார்கள். இதைத் தவிர தேவைக்கு தக்கவாறு தினக்கூலிக்கு தொழிலாளிகள் வேலைக்கமர்த்தப்படுகிறார்கள்.

(ஆ) ஆம்.

(இ) ஆம்.

திருச்சி மாவட்ட அரிசன குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு.

வினா 190— திரு. கூ.ச. முருகேசன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் உள்ள அரிஜனக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு பூரணமாக கொடுக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லை எனில் இணைப்பு கொடுக்கப்படவேண்டிய அரிசனக் குடியிருப்புகளின் எண்ணிக்கை (தொகுதி வாரியாக) என்ன?

விடை —

(அ) இம்மாவட்டத்தில் மனுச்செய்துகொண்ட எல்லா அரிசன காலனிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 அக்டோபர் 31

திருச்சி மாவட்டத்தில் அரிசன, மலை ஜாதி வகுப்பினர்களுக்கு இலவச வீடுகள்.

வினா 191 — திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் அரிசனங்களுக்காகவும், மலை ஜாதி வகுப்பினருக்காகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசே இலவசமாகக் கட்டிக்கொடுத்த வீடுகள் எத்தனை? (சட்டமன்றத் தொகுதி வாரியாக).

விடை —

திருச்சி மாவட்டத்தில் மலைஜாதி வகுப்பினருக்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப் படவில்லை. அரிசனங்களுக்காக, கடந்த இரண்டு ஆண்டுகளில் அரசே இலவசமாகக் கட்டிக்கொடுத்த வீடுகள் எண்ணிக்கை? சட்டமன்றத் தொகுதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

தொகுதியின் பெயர்.	1976–77–வது வருடம்.	1977–78 வது வருடம்.
திருவரம்பூர்	65	..
லால்குடி	28	36
முசிறி	15	19
ஆண்டிமடம்	55	42
குளித்தலை	36	..
மருங்காபுரி	43	..
அரியலூர்	30	..
அரவக்குறிச்சி	24	..
பெரம்பலூர்	9	..
கே. ஆர். புரம்	10	122
தொட்டியம்	..	56
உப்பிலியபுரம்	..	12
பெரம்பலூர்	..	28
வரகூர்	..	30
ஜெயங்கொண்டம்	..	48
மொத்தம்	315	393

1979 அக்டோபர் 31]

திருச்சி மாவட்டத்தில் மினி பஸ் விடும் திட்டம்

வினா 192—திரு. கூ. ச. முருகேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் எத்தனை தடங்களில் இது வரை ''மினி பஸ்'' விடும் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கின்றன?

(ஆ) எத்தனை ''மினி பஸ்கள்'' ஓடுகின்றன?

விடை —

(அ) & (ஆ) சாலைப் போக்குவரத்துக் கணக்கெடுப்பு (Road Transport Survey) நடைபெற்று வருகின்றது. இவ் வேலை முடிவுற்றவு ன் திருச்சி மாவட்டத்தில் மினி பஸ்கள் விடப்படும்.

நெம்மேல்குடியில் வெள்ளத்தால் ஏற்பட்ட உடைப்பு

வினா 193— திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நெம்மேல்குடியில் சென்ற ஆண்டு வெள்ளத்தால் ஏற்பட்ட உடைப்பில் இந்த ஆண்டும் உடைப்பு ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த இடத்தை செம்மையாக சீர்படுத்த எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

விடை —(அ) 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடைப்பு, 1977 ஆம் ஆண்டு உடைப்பு ஏற்பட்ட இடத்திலிருந்து 200 அடிக்கு மேல்புறம் ஏற்பட்டது.

(ஆ) இந்த உடைப்பு, உடனடியாக கிராம மக்களின் உதவியுடன் தற்காலிகமாக அடைக்கப்பட்டது. இந்த வேலைக்காக, பொதுப் பணித் துறை செலவு செய்யவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய உடைப்புகளை தவிர்க்கும் பொருட்டு தேவையான இடங்களில் பலப்படுத்துதல் போன்றவைகளுக்கு ரூ. 30,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பாசன வாய்க்கால்களை சீர்செய்யும் காலத்தில், வெள்ளப் பணிகளுக்கான ஒதுக்கீட்டில் இந்த வேலையை செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புலவனாற்றில் கரைகள் மேம்பாட்டுத் திட்டம்

வினா 194 —திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தைச் சேர்ந்த தேவமங்கலத்திலிருந்து ஆலங்குடிவரை புலவனாற்றில இரண்டு கரைகளையும் மேம்படுத்தி (Revetment) கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—புலவனாற்றை மேம்படுத்தும் பணி ரூ. 7.03 இலட்சத்தில் 1972—73-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1978–79-ல் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாய்க்காலின் கரைகளை சரிவர அமைத்தல், கிளை வாய்க்கால்களுக்குத் தலை கட்டுதல், கரைகளுக்கு ரிவெட்மெண்ட் மற்றும் குறுக்குக் கட்டிடங்கள் முதலியவை தேவையான இடங்களில் கட்டுதல் போன்றவை செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு கரைகளை மேம்படுத்தி ரிவெட்மெண்ட் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

வானபுரம் புது ஏரி

வினா 195—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், வானாபுரம் கிராமத்தில் உள்ள புது ஏரி அரசுக்குச் சொந்தமானதா ?

விடை—இல்லை. இது தனி நபருக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் உள்ள ஏரி. பட்டாதார் இதை தூர்த்து விவசாயம் செய்கிறார்.

கோவிந்தம்பட்டு கிராமத்தில் உள்ள மேநீர்தேக்கத் தொட்டி.

வினா 196— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கோவிந்தம்பட்டு கிராமத்தில் கட்டப்பட்டு வேலை முடியாமல் உள்ள மேநீர்தேக்கத் தொட்டியின் வேலை மீண்டும் எப்போது துவக்கப்பட்டு முடிவடையும் ?

விடை — இந்த ஆண்டிலேயே வேலை துவக்கி முடிக்க ஊராட்சி ஒன்றியம் நடவடிக்கை எடுக்கும்.

1979 அக்டோபர் 31]

கோட்டாறு அரசு மருத்துவமனை

வினா 197—திரு. அ. சுவாமிதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

நாகர்கோவில், கோட்டாறு அரசாங்க பெரிய மருத்துவ மனையில் ''எக்ஸ்ரே'' பிரிவு ஏற்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—நாகர்கோவில் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் ஏற்கனவே 200 எம்.ஏ. கதிர் வீச்சுக் கருவி ஒன்று செயல்பட்டு வருகிறது. மேலும் 100 எம்.ஏ. கதிர் வீச்சு கருவி ஒன்றை தற்போது அங்குள்ள கட்டிடத்தில் அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் மேற்கொண்டுள்ளார்.

சுற்றுலாத் தலங்கள் பற்றிய குறிப்பேடுகளில் திருநாகேசுவரம் உப்பிலியப்பர் பற்றிய குறிப்பு.

வினா 198—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுற்றுலாத் தலங்கள் பற்றிய குறிப்பேடுகளில் திருநாகேசுவரம் உப்பிலியப்பன் தென்னகத் திருப்பதியென குறிப்பிடும் உத்தேசம் உள்ளதா?

விடை—இல்லை.

செங்கம் வட்டம் அரசினர் விதைப் பண்ணை.

வினா 199—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்டம் அரசினர் விதைப் பண்ணை இலாபகரமாக இயங்குகிறதா ?

விடை—செங்கம் வட்டத்திலுள்ள வாழவச்சனூர் பண்ணை 1959-60 ஆம் ஆண்டில் இருந்து (அதாவது தொடங்கிய ஆண்டிலிருந்து), 1976—77 ஆம் ஆண்டுவரை இலாப நஷ்டம் மாறி மாறிக் கிடைத்த நிலையில் இயங்கி வருகிறது. இப்பண்ணை ஆரம்பத்திலிருந்து கணக்கிட்டால் மொத்தத்தில் இலாபகரமாக இயங்கி வருகிறது.

ரங்கவலசைக் கிராமத்திலிருந்து சுடுகாட்டுப்பாதை அமைப்பு

வினா 200—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், தீர்த்தமலைப் பிர்க்கா, பெரியப்பட்டிதரப்பு ரங்கவலசைக் கிராமத்திலிருந்து சுடுகாட்டுப்பாதைக்கு ஒதுக்கிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

விடை—ரங்கவலசை கிராமத்திலிருந்து சுடுகாட்டிற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையை அகலப்படுத்த பட்டாதாரர்களிடமிருந்து தேவையான நிலத்தை பெற்று ஒரு பாதையை அமைத்துக் கொடுக்க தருமபுரி மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நெட்டூர் கண்மாய்க் கால்வாய்ப் பாலம்.

வினா 201—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்கு முகவை மாவட்டம், சிவகெங்கை டிவிஷன், மானாமதுரை, பரமக்குடி (வழி) தென் புதுக்கோட்டை ரோட்டில் நெட்டூர் கண்மாய்க் கால்வாய் குறுக்கிடும் இடத்தில் உள்ள பாலத்தை புதுப்பிக்கும் பணி இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை— (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1979 அக்டோபர் 31]

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டப்பெற்ற வீடுகள்.

வினா 202—திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன நலத்துறையின் ''தாட்கோ'' வாரியம் மூலம் தமிழ்நாட்டில் இந்த ஆண்டு (1978–79) எத்தனை வீடுகள் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) 1974ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நிதி ஆண்டிலும் எத்தனை வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது ?

(இ) எத்தனை கட்டி முடிக்கப்பட்டன ?

(ஈ) ஒவ்வொரு வீட்டுக்கான செலவு விகிதம் எவ்வளவு ?

விடை—

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தின் மூலம் தமிழ் நாட்டில் 1978–79-ல் 1,660 வீடுகள் கட்டித்தர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1974ஆம் ஆண்டு முதல் கட்ட அனுமதி வழங்கப் பட்ட வீடுகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

1974–75	..	10,000
1975–76	..	20,000
1976–77	..	5,045
1977–78	..	5,000
மொத்தம்	..	40,045

(இ) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் : 38,211 (1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி வரை).

(ஈ) 1977–78-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வீடுகளின் செலவு விகிதம் ஒரு வீட்டுக்கு ரூ. 6,000 அதற்கு முந்தைய ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளின் செலவு விகிதம் ஒரு வீட்டுக்கு ரூ. 4,400. (இவற்றில் தாட்கோவின் நிர்வாகச் செலவான 10 சதவீதமும் அடங்கும்.)

[1979 அக்டோபர் 31

கணக்கம்பாளையம் பள்ளம் அணைக்கட்டுத் திட்டம்

வினா 203— திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் கோபி தாலூகாவில் கணக்கம் பாளையம் பள்ளம் அணைக்கட்டு (Dam) திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை —

(அ) கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் தாலுக்காவில் உள்ள கணக்கம்பாளையம் கிராமத்தில் ஏரிகட்டும் திட்டம் ஒன்று உள்ளது.

(ஆ) திட்டத்தின் முன் ஆய்வு முடிந்து, விரிவான ஆய்வு நடைபெற்று வருகிறது. விரிவான ஆய்வும் முடிந்து, தொழில் நுட்பம், சிக்கனம் ஆகியவற்றை பரிசீலித்து, உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டபின் இத்திட்டம் பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுக்கரை ஏ.சி.சி. கம்பெனி செலுத்த வேண்டிய வரிகள்.

வினா 204—திரு ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் மதுக்கரை ஏ. சி. சி. கம்பெனியினர் செலுத்த வேண்டிய உள்ளூர் வரி மற்றும் மேல்வரி எவ்வளவு ?

விடை—

1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி வரை உள்ள பாக்கித் தொகை பின்வருமாறு :—

		ரூபாய்.
உள்ளூர் வரி	..	14,27,037·16
உள்ளூர் மேல் வரி	..	65,00,952·25
மொத்தம்	..	79,27,989.41

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

எல்வானாவூர் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர் தங்கும் விடுதி.

வினா 205—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்ப்பேட்டை வட்டம், எல்வானாவூர் கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் தங்கும் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், ஏழை மாணவர்களுக்கு பயன்படும் வகையில் தக்க நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(அ) உளுந்தூர்பேட்டை வட்டம் எல்வானாவூர் கோட்டை அரசு உயர்நிலைப்பள்ளியில் மாணவர் தங்கும் விடுதி அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) மேற்கண்ட உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர் களில் அரிசன வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், அரிசன நலத்துறை மூலம் விடுதி கட்டுவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

உளுந்தூர்ப்பேட்டை பகுதியில் பாசன வசதிகள்.

வினா 206—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்ப்பேட்டை பகுதியில் கோமுகி நதி, சேஷ நதி கெடிலம் அல்லது பெண்ணையாறு மூலம் பாசன வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை—

(1) கோமுகி நதியிலிருந்து உளுந்தூர்ப்பேட்டை பகுதிக்கு பாசன வசதி அளித்தல் ; கோமுகி நதியில் உபரி நீர் ஏதுமில்லாததால் இத்திட்டம் சாத்தியமில்லை.

(2) சேஷ நதியிலிருந்து உளுந்தூர்பேட்டை பகுதிக்கு பாசன வசதி அளிக்கல் : —சேஷ நதியின் குறுக்கேயுள்ள மண் அணையை மாற்றி கல் அணையாக கட்ட ரூ. 4.50 இலட்சத்திற்கு ஒரு திட்டம் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினால். உதயநந்தல், மணலூர் கிராமங்களிலுள்ள ஜம்பை ஏரி, புத்தேரி, மணலூர் ஏரி, ஆகிய வற்றிற்கு தண்ணீர் அளிக்கப்படும். இவ்வேரிகளின் கீழுள்ள

ஏறக்குறைய 303 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதி செய்யப்படுவதோடு சுமார் 34 ஏக்கர் இடைவெளி நிலங்களும் பயனடையும்.

(3) கெடிலம் ஆற்றிலிருந்து உளுந்தூர்பேட்டை பகுதிக்கு பாசன வசதிஅளித்தல்.—கெடிலம் ஆற்றிலிருந்து அருங்குருக்கை அருகே ஒரு நீர்த்தேக்கம் அமைத்து அதன் மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 8,502 ஏக்கருக்கு உறுதிப் பாசனமும், 395 ஏக்கருக்கு புதிய பாசன வசதியும் அளிக்க ஒரு திட்டம் ஆய்வில் உள்ளது.

(4) பெண்ணையாற்றிலிருந்து உளுந்தூர்பேட்டை பகுதிக்கு பாசனம் அளித்தல்.—இத்திட்டம் ஏதும் கருத்தில் இல்லை.

மாயூரம் நகராட்சி அங்காடி பெயர் மாற்றம்.

வினா 207—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நகராட்சி அங்காடிக்கு 'தந்தை பெரியார்' நூற்றாண்டு விழா அங்காடி' என்று பெயர் சூட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை

இல்லை.

வள்ளுவர் கோட்டத்தில் நுழைவுக்கட்டண வசூல்.

வினா 208—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"வள்ளுவர் கோட்டத்திற்கு வருகைதரும் மக்கள் கொடுத்த கட்டணம் மூலம் இதுவரை வசூலாகியுள்ள தொகை எவ்வளவு ?"

விடை—

வள்ளுவர் கோட்டத்திற்கு வருகைதரும் மக்கள் கொடுத்த கட்டணம் மூலம் 31—5—1979 வரை வசூலாகியுள்ள தொகை . 8,72,859·50.

1979 அக்டோபர் 31]

வினா 209—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு வருவோர் மூலம் தற்போது வசூலாகும் ஒருநாள் சராசரி வருமானம் என்ன ?

விடை—

வள்ளுவர் கோட்டத்திற்கு வருவோர் மூலம் 1976 ஆம் ஆண்டு மே திங்கள் 13 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் வரையுள்ள காலத்தில் வசூலான ஒருநாள் சராசரி வருமானம் ரூபாய் 664.50—நுழைவுக் கட்டணம் மாற்றியமைக்கப்பட்ட பின்னர் 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் வசூலாகும் ஒருநாள் சராசரி வருமானம் ரூபாய் 1,158.50.

மதுரை மாவட்டத்தில் நிலவரி நிலுவை.

வினா 210—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சென்ற பசலி ஆண்டு முடிய அரசுக்கு வரவேண்டிய நிலவரி பாக்கி எவ்வளவு ?

(ஆ) அதில் ரூபாய் 1,000க்கு மேல் கொடுக்க வேண்டிய நபர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) மதுரை மாவட்டத்தில் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் அன்றைய நிலவரப்படி 1387ஆம் பசலி ஆண்டு வரை நிலவரி நிலுவைப் (Land Revenue arrears) பாக்கி ரூபாய் 2,89,918 ஆகும்.

(ஆ) அதில் ரூபாய் 1,000-க்கு மேல் கொடுக்க வேண்டிய நபர்களின் எண்ணிக்கை மூன்று ஆகும்.

பழனி நகரப் பொதுச் சந்தை.

வினா 211—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழநி நகரிலுள்ள பொது மார்க்கெட்டை (சந்தை) வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

மதுரை மாவட்ட மத்திய கிளைச் சிறைகளில் உள்ள காவல் கைதிகள்.

வினா 212—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுவிலக்கு சட்டத்தின்கீழ் மதுரை மாவட்டத்திலுள்ள மத்திய மற்றும் கிளைச் சிறைகளில் ஜனவரி 1978 முடிய இருக்கும் காவல் கைதிகளின் எண்ணிக்கை எத்தனை ?

விடை—

	நபர்கள்.
காவல் கைதிகள்	106
விசாரணைச் சிறைவாசிகள்	46
மொத்தம்	152

Remand Prisoners	106
Undertrial Prisoners	46
Total	152

திருவில்லிபுத்தூர் தொகுதியில் சேதமடைந்த கண்மாய்கள்.

வினா 213—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று பெய்த மழையால் எத்தனை யூனியன் Tank சேதாரம் அடைந்தது ?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு ?

(இ) வெள்ள நிவாரணத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

1979 அக்டோபர் 31]

விடை—

(அ) ஒன்றியக் கண்மாய்கள்—3, மற்றவை—8.

(ஆ) ரூபாய் 65,700.

(இ) ஏதும் ஒதுக்கப்படவில்லை. ஆனால், இவைகளின் மராமத்து, அரசின் சிறுபாசனத் திட்டங்களின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வினா 214—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று பெய்த மழையால் எத்தனை P.W.D. கண்மாய் (Tank) சேதாரம் அடைந்தது?

(ஆ) சேதாரம் அடைந்த கண்மாய்களின் மதிப்பு தொகை எவ்வளவு?

(இ) வெள்ள நிவாரண வேலைகள் எந்த அளவில் உள்ளது?

விடை—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் வத்திராயிருப்பு வட்டத்தில் 7 கண்மாய்களும், 3 அணைக்கட்டு வெள்ளத் தடுப்புக் கரைகளும், 2 வரத்து வாய்க்கால்களும் சேதமடைந்தன.

(ஆ) இவற்றின் சேதார மதிப்பு மொத்தம் ரூபாய் 2,59,000 ஆகும்.

(இ) எல்லா கண்மாய் உடைப்புகளும் உடனடியாக அடைக்கப்பட்டு பழைய நிலைமைக்கு கொண்டுவரப்பட்டது. திருமலைக்குளம் கண்மாய் உடைப்பு மராமத்து வேலை மட்டும் இன்னும் செய்யப்படவில்லை. இந்தக் கண்மாயின் கரை பல இடங்களில் உடைத்துக்கொண்டதால் கரைக்குத் தேவையான மண் தன்மை ஆராய்ச்சி முடிந்தபின் கரை செப்பனிடப்படும். வெள்ளத் தடுப்பு நிவாரண வேலையாக திருமகள் குளம் மற்றும் ஆயதர்மம் சிறுகுளம் கண்மாய் மடைகளுக்கு திருகு பலகை போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திருவில்லிபுத்தூர் தொகுதியில் மழையால் பாதிக்கப்பெற்ற விவசாய நிலங்கள்.

வினா 215 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று பெய்த மழையால் விவசாய நிலங்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஏக்கர் பாதிக்கப்பட்டது?

(இ) என்னென்ன பயிர்கள் பாதிக்கப்பட்டது?

விடை —

(அ) 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் அன்று திருவில்லிபுத்தூர் தொகுதியில் பெய்த மழையால் பயிர்கள் ஓரளவு பாதிக்கப்பட்டன.

(ஆ) இம்மழையால் திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் (Block) மட்டும் 414 ஏக்கர்களும், திருவில்லிபுத்தூர் வட்டம் (Taluk) முழுவதிலுமாக 545 ஏக்கர்களும் பாதிக்கப்பட்டன.

(இ) நெல், கேழ்வரகு, சோளம், வரகு, மிளகாய், வெங்காயம் ஆகிய பயிர்கள் இம்மழையால் பாதிக்கப்பட்டன.

மணிமுத்தாறு பாசன ரிசர்வ் குளங்கள்.

வினா : 216—திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மணிமுத்தாறு பாசனம் ரிசர்வ் குளங்களை ரெகுலர் குளங்கலாக மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம், எனில், எப்போது முதல் சேர்த்துக்கொள்ளப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1979 அக்டோபர் 31]

புதிய இரயில்வே மேம்பாலங்கள்.

வினா: 217—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

நடப்பு ஆண்டில் புதிதாக எத்தனை இடங்களில் இரயில்வே மேம்பாலங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது ?

விடை:—

நடப்பு ஆண்டில் இரயில்வே மேம்பாலங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கவில்லை.

தமிழ்நாடு லாரி போக்குவரத்துக் கழகத்தில் உள்ள லாரிகள்.

வினா: 218—திரு. யா. சை. மு. யூசப்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு லாரி போக்குவரத்துக்கழகத்தில் எத்தனை லாரிகள் உள்ளன ?

(ஆ) அவை அத்தனையும் செயல்படுகின்றனவா ?

(இ) கடந்த ஆண்டில் 1977-78-ல் எத்தனை லாரிகள் பயன் படுத்தப்படாமல் இருந்தன ? அதற்குக் காரணம் யாது ?

விடை:—

(அ) 68 லாரிகள் உள்ளன.

(ஆ) ஆம்.

(இ) ஒரு லாரி மட்டும் பிரதான அச்சில் (Chassis) முறிவு ஏற்பட்டதன் காரணமாக 1977-78 ஆம் ஆண்டின் கடைசி ஐந்து மாதகாலம் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.

வினா: 219—திரு. கே. சௌந்தரராஜன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அரசு கட்டிடத்தில் உள்ளதா? வாடகைக் கட்டிடத்தில் உள்ளதா?

(ஆ) வாடகை கட்டிடத்தில் இருந்தால், அதன் மாத வாடகை எவ்வளவு?

(இ) புதிய கட்டிடம் கட்ட ஏதேனும் உத்தேசம் உண்டா?

(ஈ) உண்டெனில், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை:—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவரலுவலகம் அரசு கட்டிடத்தில் உள்ளது. வாடகைக் கட்டிடத்தில் அல்ல.

(இ) வாடகைக் கட்டிடத்தில் இல்லாததால் மாத வாடகை கொடுப்பதில்லை.

(இ) புதிய கட்டிடம் கட்டும் உத்தேசம் உண்டு.

(ஈ) அதனுடைய தற்போதைய மதிப்பீடு ரூபாய் 41.85 இலட்சம். நிதிநிலை காரணமாக தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள குத்தகைதாரர்கள்.

வினா: 220—திரு. அ. மா. பரமசிவன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு குத்தகைதாரர்கள் உள்ளார்கள், மாவட்ட வாரியாக?

(ஆ) குத்தகைதாரர்களாகப் பதிவு செய்ய வேண்டுமென்று எத்தனை பேர் மனு செய்திருக்கின்றனர்? அவர்களில் எத்தனை பேர்களுக்கு இன்னும் பதிவு செய்யப்படவில்லை? அவ்வாறு தாமதமாவதற்குக் காரணம் என்ன?

(இ) தாமதத்தைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

1979 அக்டோபர் 31]

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) ஒரு விவர அறிக்கை * தனியே அவையின் முன் வைக்கப்பெற்றுள்ளது.

குன்னூர் வி. பி. தெருவில் ஓடும் ஆறு.

வினா: 221—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் குன்னூர் வி. பி. தெருவில் ஒடுகின்ற ஆற்றை வெள்ளச் சேதம் ஏற்படாத வகையில் மாற்ற அரசு செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக செயற்படுத்தப்படுமா ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் வீ. பி. தெருவில் ஓடும் ஆற்றை வெள்ளச் சேதம் எற்படாத வகையில் மாற்ற பொதுப்பணித் துறையிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நாய்க்கடிக்கு மருந்து வசதிகள் உள்ள மருத்துவமனைகள்.

வினா 222—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகளில் எந்தெந்த மருத்துவ மனைகளில் நாய்க்கடிக்கு ஊசி போடும் வசதி செய்யப்பெற்றுள்ளது ?

(ஆ) இவ்வசதி செய்து தரப்படாத மருத்துவமனைகள் எத்தனை ?

எந்தெந்த மாவட்டங்களில் ?

* 801–802-ம் பக்கங்களில் இணைப்பு XIII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

விடை—

(அ) அனைத்து மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும், வட்ட மருத்துவமனைகளிலும், வட்டத்தில் சேராத மருத்துவ மனைகளிலும் வெறிவிலங்கு கடி மருத்துவம் செய்ய வசதி இருக்கிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

அன்னப்பன்பேட்டை—கோவிந்தக்குடி சாலைப் பராமரிப்பு.

வினா 223— திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த அன்னப்பன்பேட்டை பஞ்சாயத்தைச் சேர்ந்த அன்னப்பன் பேட்டையிலிருந்து கோவிந்தக்குடி வரை செல்கின்ற சாலையை சீர் படுத்த எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

விடை—

அன்னப்பன்பேட்டையிலிருந்து கோவிந்தக்குடிக்கு மெலட்டூர் வழியாகச் செல்லும் சாலை தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வேடந்தவாடி கிராமத்தில் மேநீர்தேக்கத் தொட்டி.

வினா 224—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் வேடந்தவாடி கிராமத்தில் மேநீர் தேக்கத் தொட்டி அமைக்கும் பணி பாதியில் நிறுத்தப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அதை முடித்துக் கொடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) ஆம்.

(ஆ) இந்த வேலையை செய்ய ஊராட்சி மன்றத் தலைவர் தாமதித்தமையாலும் நிதி ஒதுக்கீடு போதிய அளவில் இல்லாமையாலும் 1974–75 இல் வேலையை ரத்து செய்யப்பட்டது.

(இ) நடப்பு ஆண்டில் செய்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

வீரளூர் அரிசன நலப் பள்ளிக் கட்டிடம்.

வினா 225—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர் பாடசாலை (அரிசன நல இலாகா) மிகவும் பழுதடைந்து அபாயகரமாக இருந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள வீரளூர் அரிசன நலப்பள்ளி இரண்டு கட்டிடங்களில் நடைபெற்றுவருகின்றது. இந்த இரண்டு கட்டிடங்களில் எதுவும் மிகவும் பழுதடைந்து அபாயகரமான நிலையில் இல்லை. ஒரு கட்டிடத்தில் மட்டும் சில ஓடுகள் காற்றினால் தூக்கி எறியப்பட்டு தரை மட்டும் சிறிது பழுதடைந்துள்ளது. மற்றபடி கட்டிடங்கள் நல்ல நிலையில் உள்ளன.

(ஆ) இரண்டு கட்டிடங்களும், தனித்தனியே 3,800 ரூபாய் மற்றும் 3,700 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பழுது பார்க்கப்பட்டு வருகிறது. வேலை முடிவடையும் தருவாயில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 31

குன்னத்தூரில் பாடசாலைக் கட்டிடம்.

வினா 226—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் ஒன்றியம் கடலாடி ஊராட்சியில் மதுரா கிராமம் குன்னத்தூரில் பாடசாலைக் கட்டிடம் கட்ட ஊராட்சி நிதியிலிருந்து ஒன்றியம் பங்குத் தொகை பெற்றுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பெற்றுக் கொண்ட தொகை எவ்வளவு?

(இ) பாடசாலைக் கட்டிடம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 18,000.

(இ) இந்த ஆண்டில் கட்டப்படும்.

துரிஞ்சாபுரம் நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட மனை.

வினா 227— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் துரிஞ்சாபுரம் நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட மனை வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது, துரிஞ்சாபுரம் நிலவள வங்கியின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வங்கியால் இயலாது.

1979 அக்டோபர் 31]

திருவண்ணாமலை பிரதம நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட மனை.

வினா 228—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவண்ணாமலை பிரதம நிலவள வங்கிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட மனை வாங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது திருவண்ணாமலை நிலவள வங்கியின் நிதிநிலைமை திருப்திகரமாக இல்லாததால் கட்டிடம் கட்ட வங்கியால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது.

வடாற்காடு மாவட்ட அரிசன நலப் பள்ளிகளில் பணி புரியும் இடைநிலைத் தகுதி பெற்ற ஆசிரியர்கள்.

வினா 229—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில், அரிசன நலப்பள்ளியில் பணியாற்றும் முதுநிலை ஆசிரியர்கள் இளநிலை ஸ்தானத்தில் பணியாற்றி வருகிறார்களா ?

(ஆ) ஆம் எனில் எத்தனை பேர் ?

(இ) அரசு ஆணைப்படி முதுநிலை ஆசிரியர்க்குண்டான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறதா ?

விடை—

(அ) ஆம், வட ஆற்காடு மாவட்ட அரிசன நலப்பள்ளி களில் இடைநிலைத் தகுதி பெற்ற (Secondary Grade) ஆசிரியர்கள் இளநிலைப் (Higher Grade) பணியிடங் களில் பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) தற்போது 107 ஆசிரியர்கள் உள்ளனர்.

(இ) இடைநிலைத் தகுதி பெற்ற ஆசிரியர்கள் பணி புரியும் இளநிலைப் பணியிடங்களை, இடைநிலைப் பணியிடங் களாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்த பின்னர், இடைநிலை ஆசிரியருக்குரிய ஊதியம் வழங்கப்படும்.

கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள பால் வழங்கு சங்கங்கள்.

வினா 230—திரு. பெ. சு. திருவேங்கடம் :— மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதியில் 1978–79-ல் எத்தனை பால் வழங்கும் சங்கங்கள் எந்தெந்த கிராமத்தில் அமைக்கப்பட்டுள் ளன ?

விடை—

1978-ம் ஆண்டு ஜூன் திங்கள் 2-ம் நாளுக்குப் பின் தமிழகத்தில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் பதிவு செய்யப் படுவதில்லை. அதற்குப் பதிலாக கூட்டுறவு பால் உற்பத்தி யாளர்கள் சங்கங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன.

1978-ம் ஆண்டில் இவ் வட்டாரத்தில் எந்த சங்கமும் பதிவு செய்யப்படவில்லை. இதுவரை இவ்வாண்டில் கீழ் குறிப் பிடப்பட்டுள்ள 8 கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன:—

(1) தச்சம்பாடி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

(2) சித்தரத்துரை கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

1979 அக்டோபர் 31]

(3) எஸ். நம்மியந்தல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

(4) திருசூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

(5) சிறுவள்ளூர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

(6) மங்கலம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

(7) அருணகிரி மங்கலம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், மங்களம்.

(8) துரிஞ்சாபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம்.

நவாப்பாளையம் நடுநிலைப் பள்ளிக் கட்டிடம்.

வினா 231— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கலசப்பாக்கம் ஒன்றியம் நவாப்பாளையம் நடுநிலைப் பள்ளி, போதிய கட்டிட வசதியின்றி இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) ஒன்றியத்தால் விரைவில் இப்பள்ளிக்கு ஒரு கூரைக் கட்டிடம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.

கடலாடி துவக்கப் பள்ளிக் கட்டிடம்.

வினா 232 திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் ஒன்றியம் கடலாடி துவக்கப்பள்ளி (ஒன்றிய நிர்வாகம்) கட்டிட வசதி போதுமானதாக இல்லாமல் இருந்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) விரைவில் துணைக் கட்டிடம் ஒன்று கட்டித் தர ஒன்றியத்தினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழரசு வெளியீடு.

வினா 233 — திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழரசு பத்திரிகை தற்போது எத்தனை மொழிகளில் வெளியிடப்படுகிறது.

(ஆ) ஆண்டுக்கு எவ்வளவு தொகை செலவாகிறது.

(இ) இலாபத்தில் நடக்கிறதா?

(ஈ) 1976-77, 1977-78, 1978-79 ஆண்டுகளில் இலாபம் அல்லது நஷ்டம் எவ்வளவு?

விடை

(அ) தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வெளியிடப்படுகின்றது.

(ஆ) தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 9 இலட்சம் முதல் ரூ. 10 இலட்சம் வரை செலவாகிறது.

(இ) இல்லை.

(ஈ) தமிழ்நாடு அரசின் அதிகார பூர்வமான இவ்விதழில், விவசாயம், தொழில்கள், கல்வி, மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலம் மற்றும் பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி, அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்குவதற்கான கருத்துக்கள் இடம் பெறுவதால், பொதுமக்கள் அனைவரும் இதனால் நன்மை பெற வாய்ப்பிருக்கிறது. எனவே, இலாப நட்டத்தை கருதி இவ்விதழ் வெளியிடப்படவில்லை. மேலும், இத்துறை பணியாளர் அலகாக (Service Unit) செயல்பட்டு வருவதால் லாப நட்டத்தை கணக்கில் கொள்ளவில்லை.

ஜம்பு காவேரி வாய்க்கால் சீரமைப்பு.

வினா 234 — திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சைக்கு அடுத்து தென்பெரம்பூரில் வெண்ணாற்றில் இருந்து பிரிகின்ற ஜம்புகாவேரி வாய்க்காலை சீரமைக்க ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) அந்த வாய்க்காலிலிருந்து பிரிகின்ற வெண்குடி வாய்க்காலில் (Regulator) அமைத்து தண்ணீர் வழங்குவதை முறைப்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

விடை

(அ) ஜம்புகாவேரி வாய்க்கால் மற்றும் அதன் கிளை வாய்க்கால்களை சீரமைக்கும் வேலைகள் ரூ. 7.63 லட்சம் செலவில் 3/76-ல் முடிக்கப்பட்டுவிட்டன.

(ஆ) இவ்விடத்தில் ரெகுலேட்டர் அமைப்பது அவசியமில்லை என்று கருதியதால் ரெகுலேட்டர் அமைக்க திட்டமிடப்படவில்லை. வரும் சில ஆண்டுகளில் இவ்வாய்க்கால் செயல்படும் முறையை ஆராய்ந்து அவசியம் தேவையெனக்கருதினால் ரெகுலேட்டர் அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

வலங்கைமான் தொகுதியில் தார்சாலைகள் போடப்பெற்ற கிராமங்கள்.

வினா 235 திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1,500 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு தார்சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் வலங்கைமான் தொகுதியில் எத்தனை கிராமங்களுக்கு சாலை போடப்பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு சாலை போடப்படாமலுள்ளது?

விடை—

(அ) கீழ்க்கண்ட ஆறு கிராமங்களுக்கு தார்சாலை போடப்பட்டுள்ளது.

(1) பெருங்குடி—அரித்துவார மங்களம் சாலை.

(2) அன்னிக்குடி சாலை.

(3) கீழக் கொருக்குப்பட்டு சாலை.

(4) அருந்தவபுரம் சாலை.

(5) கம்பர் நத்தம் சாலை.

(6) பூண்டி—பல்லவராயன் குடிக்காடு ஜம்புகாபுரம் சாலை.

[1979 அக்டோபர் 31

(ஆ) கீழ்க்கண்ட எட்டுக் கிராமங்களுக்கு தார்சாலைகள் போடப்படாமல் உள்ளன:

(1) நல்லூர்.

(2) மணலூர்.

(3) மேலவிடயல்.

(4) பள்ளியூர்.

(5) ராஜாமுத்திரக் கோட்டை.

(6) குழியக்கோட்டை.

(7) நல்லவண்ணியன் குடிகாடு.

(8) திருவாணமங்கலம்.

அம்மாபேட்டை ஒன்றிய அரிசன மக்களுக்கு வீடுகள்.

வினா 236—திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த தீபாம்பாள்புரம், மலையபுரம், மருவத்தூர், நெய்குண்ணம் ஆகிய ஊர்கள் வெண்ணாறுவுடைப்பு வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் அரிசன மக்களுக்கு கான்கிரிட் வீடுகட்டி தர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தீபாம்பாள்புரம், மலையபுரம், மருவத்தூர், நெய்குண்ணம் ஆகிய கிராமங்களில் அரிசன மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

சிவந்திபுரம் குடிநீர்த் திட்டம்.

வினா 237—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலூகா சிவந்திபுரம் குடிநீர்த் திட்டம் தாமதமாக செயல்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை தீவிரப்படுத்தி நிறைவேற்ற நடவடிக்கை ஏதும் உள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) சிவந்திபுரம் ஊராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்கென 1972லும் பிறகும் இருமுறை திட்டங்கள் தீட்டப்பட்டு பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டு, மீண்டும் மூன்றாம் முறையாக ஒரு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளரால் பிப்ரவரி 1979ல் ஒப்புதல் வழங்கப் பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில் முடிக்கப்படும்.

காடுவெட்டி கிராமத்தில் புதியகுளம்.

வினா 238—திரு. மு. ஜான் வின்செண்ட்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் காடு வெட்டி கிராமத்தில் புதிய குளம் வெட்டும் திட்டம் அரசில் உண்டா?

(ஆ) ஆம் என்றால், வேலை எப்போது ஆரம்பிக்கப் படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கான ரூ. 95,000-த்துக்கான மதிப்பீடு தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதின் சாத்திய கூறுகளை ஆராய்ந்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மருதமலைக் கோயில் வருமானம்.

வினா 239—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையிலுள்ள மருதமலை கோவிலின் ஆண்டு வருமானம் என்ன?

விடை—

பசலி 1386 (1976-77) மொத்த வருமானம் ரூ. 14,62,574.16.

பசலி 1387 (1977-78) மொத்த வருமானம் ரூ. 16,27,247.76.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

வேப்பூர் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணவர் தங்கும் விடுதி

வினா 240— திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி வேப்பூர் அரிசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர் தங்கும் விடுதி அமைக்கக் கோரி அரசுக்கு அறிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) வேப்பூர் அரிசன உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர் தங்கும் விடுதி அமைக்க கோரிக்கை எதும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோத்தகிரியில் பேருந்து நிலையம்.

வினா 241— திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து பேருந்து நிலையம் கட்ட அரசு அனுமதி கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கையென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் பால் உற்பத்தியாளர் சங்கங்கள்.

வினா 242— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த எத்தனை கிராமங்களுக்கு ஒரு வருடத்திற்குள் பால் உற்பத்தியாளர் சங்கம் வேண்டும் என்று துணைப் பதிவாளர் பால் வளம் நிறுவனத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள்?

1979 அக்டோபர் 31]

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 15 கிராமங்களிலிருந்து கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் பதிவு செய்யக் கோரி மனுக்கள் பெறப்பட்டு 11 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகமான அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் 25 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்க பிரேரணைகள் பெறப்படலாமென எதிர்பார்க்கப் படுகிறது. பிரேரணைகள் ஏதேனும் பெற்றால் உடன் பரிசீலனை செய்து சாத்தியகூறுகள் இருப்பின் உடனே சங்கம் பதிவு செய்து கொடுக்கப்படும்.

மணப்பாறைக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல்.

வினா 243—திரு. போ. எ. சீனிவாசரெட்டியார்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மணப்பாறை தாலூகா மணப்பாறை நகருக்கு, குடிநீர் வாரியம் மூலமாக காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

விடை—

மணப்பாறை நகருக்கு குடிநீர் காவிரி ஆற்றிலிருந்து கொண்டு வருவதற்கு சுமார் ரூ. 145 இலட்சம் ஆகும் என உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரித்து, அத்துடன் இத்திட்டத்தை விரிவான ஆய்வு செய்ய ரூ. 20,800 செலவு ஆகும் எனவும் ஓர் ஆய்வு மதிப்பீடு தயாரித்து, இரண்டையும் மணப்பாறை நகராட்சிக்கு ஒப்புதலுக்காகவும் நகர் மன்ற தீர்மானத்திற்காகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் ஒப்புதலும், அரசு ஒப்புதலும் பெற்ற பின் திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகள் மேற் கொள்ளப்படும்.

சிங்காநல்லூர் பகுதியில் குடிதண்ணீர் வழங்கல்.

வினா 244—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிங்கா நல்லூர் நகரப் பகுதியில் கோடைக்காலங்களில் ஏற்படும் குடி தண்ணீர் கஷ்டத்தைப்போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(ஆ) புதிதாக துளைக் கிணறுகள் எங்கெங்கு போடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது?

(இ) தண்ணீர் விநியோகத்திற்காக தினசரி எவ்வளவு லாரிகள் பயன்படுத்தப்படுகின்றன?

(ஈ) இதை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

விடை—

(அ) சிங்கநல்லூர் நகரப் பகுதியில் கோடையில் ஏற்படும் குடிநீர் கஷ்டத்தை போக்க கோவை மாவட்ட விவசாயப் பொறியியற் சங்கத்தின் மூலம் 4 வாடகை டிராக்டர்கள் பெற்று குடிநீர் விநியோகம் செய்ய, கோவை நகர மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

(ஆ) கீழ்க்கண்ட 13 இடங்களில் ஆழ்துளை கிணறு போட முடிவு செய்து, அவ்வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. புதிதாக மூன்று நீர்மூழ்கி மோட்டார்கள் வாங்கிப் பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகம் செம்மைப்படுத்தப்பட்டுள்ளது.

(1) உடையாம்பாளையம்
(2) நந்தா நகர்
(3) இராமானுஜ நகர்
(4) ஐயர் லே அவுட்
(5) தனலட்சுமிபுரம்
(6) மஜீத் காலனி
(7) காமராஜ் நகர்
(8) பீளமேடு தண்ணீர்பந்தல்
(9) நேதாஜி நகர்
(10) நடராஜத் தேவர் காலனி
(11) பால நாயுடு லே அவுட்
(12) எஸ். ஐ. எச். எஸ். காலனி
(13) கண்ணபிரான் நெசவாலைப் பகுதி.

(இ) ஒரு லாரி பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) விவசாயப் பொறியியற் சங்கத்தின் மூலம் 4 வாடகை டிராக்டர்கள் பெறப்பட்டு உடனடியாக தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளலூர் பள்ளம் சீரமைப்பு.

வினா 245—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை தாலுக்கா வெள்ளலூர் கிராமத்தில் மையத்தில் ஓடும் பள்ளத்தால் மழைக்காலங்களில் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க மேற்படி பள்ளத்தை வெள்ளலூர் குளத்திற்கு திருப்ப எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

1979 அக்டோபர் 31]

விடை—

கோவை மாவட்டம், வெள்ளலூர் கிராமத்தின் மையத்தில் ஓடும் பள்ளத்தால் மழை காலத்தில் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க மேற்படி பள்ளத்தை வெள்ளலூர் குளத்திற்கு திருப்பும் திட்டம் ஏதும் இல்லை. எனினும் மேற்படி திட்டம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

பெரியநாயக்கன் பாளையம் வனச் சரகத்தில் காட்டு வளத்திற்காக செலவிடப் பெற்ற தொகை.

வினா 246— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மேட்டுப்பாளையம், பெரியநாயக்கன் பாளையம் வனச் சரகத்தில் காட்டு வளத்தை முன்னிட்டு 1778 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) வனப் பகுதிகளில் மலைவாசிகளை இவ்வேலைக்கு பயன்படுத்தும்பொழுது அவர்களுக்கு தினசரி கூலி என்ன வழங்கப் பட்டுள்ளது?

விடை—

		ரூபாய்
(அ)	மேட்டுப்பாளையம் வனச்சரகம் ..	67,685
(ஆ)	பெரியநாயக்கன் பாளையம் வனச்சரகம்	42,369
	மொத்தம்	1,10,054

(ஆ) வனத்துறையின் கூலி விவரப்பட்டியல்படி கீழ்க்கண்டவாறு ஒரு நாளைக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது.

		ரூ.
ஏ	பிரிவு பயிற்சி பெற்ற தொழிலாளர்.	5
பி	பிரிவு பயிற்சி பெற்ற தொழிலாளர் ..	4
சி	பிரிவு இளைஞர்	3

கூலி வழங்குவதில் ஆதிவாசிகளுக்கும் மற்றைய தொழிலாளர் களுக்கும் எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

சிங்காநல்லூர்—வெள்ளலூர் சாலை.

வினா 247— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூரில் இருந்து வெள்ளலூர் சாலை கிராமத் திற்கு செல்லும் பாதை எந்த ஆண்டில் போடப்பட்டது?

(ஆ) தற்சமயம் மிகவும் பழுதடைந்துள்ள மேற்படி பாதையை செப்பனிட எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இதில் மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 2. கி. மீ. பகுதி 1961-ம் ஆண்டுக்கு முன்பும், மீதமுள்ள கோவை நகராட்சிக்குட்பட்ட 2 கி. மீ. பகுதி 1965-க்கு முன்பும் போடப் பட்டது.

(ஆ) தற்சமயம் பழுதடைந்துள்ள பகுதியை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரால் ரூ. 9,000 செலவிலும், நகராட்சி யால் ரூ. 95,000 செலவிலும் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

சிங்காநல்லூர் நகராட்சி சாலை அபிவிருத்திக்காக ஒதுக்கப் பெற்ற தொகை.

வினா 248— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலைக்கப்பட்ட சிங்காநல்லூர் நகராட்சிக்கு 1978-ஆம் ஆண்டில் ரோடு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 5 லட்சம் இன்னும் செலவு செய்யாமல் இருப்பது ஏன்?

(ஆ) இதன் மீது எடுக்கப்பட்டுள்ள துரித நடவடிக்கை என்ன?

(இ) இப்பணத்தைக் கொண்டு எந்தெந்த ரோடுகள் போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது?

விடை—

(அ) ஒப்பந்தக்காரர்கள் குறித்த காலத்தில் வேலையை துவக்கவில்லை.

(ஆ) இந்த தாமதத்தினால் ரோடு அபிவிருத்தி வேலைகள் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு துவக்கப்பட்டுள்ளன.

(இ) 1. திருச்சி சாலையிலிருந்து தாமஸ்புரம் சந்திப்பு வரையிலும் மற்றும் அனையன்காடிலிருந்து நந்தன் நகர் செல்லும் சாலை (990மீ.)

2. நகராட்சி அலுவலகத்திலிருந்து நெல்லிக்கோணம் பாளையம் வரையிலுள்ள திருச்சி சாலை (1.185 கி. மீ.)

3. வரதராஜபுரத்திலிருந்து வரதராஜபுரம் மேடு வரை யிலுள்ள சாலை (2. கி. மீ.)

4. குளத்தேரி, வெங்கடல்ட்சுமி கல்யாண மண்டபம் சாலை (1.02 கி. மீ)

1979 அக்டோபர் 31]

5. வரதராஜபுரத்திலிருந்து உப்பிலிபாளையம் மற்றும் சௌரிபாளையம் வழியாக புளியங்குளம் செல்லும் சாலை (3.80 கி.மீ.)

6. கிருஷ்ணராயபுரத்திலிருந்து கணபதி செல்லும் சாலை (585 மீ.)

7. வெங்காளங்குட்டையிலிருந்து ஆவாராம்பாளையம் வரையிலான சாலை (1.20 கி. மீ.)

கங்கை கொண்ட சோழபுரம் பொன்னேரியை ஆழப்படுத்தும் திட்டம்.

வினா 249—திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் வரலாற்று சிறப்பு மிக்க கங்கை கொண்ட சோழபுரம் பொன்னேரியை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இந்த ஏரியை தூர்வாரி புனரமைத்து மேம்பாடு செய்ய இயலுமா என்பது தல அதிகாரிகளின் பரிசீலனையிலுள்ளது.

பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 250— திரு.இரா.தாமரைக்கனி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயதுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ல் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) எத்தனை மனுக்கள் மின் இணைப்பு கொடுக்க தயாராய் உள்ளன?

விடை—

(அ) 130 மனுக்கள்.

(ஆ) 19 மனுக்கள்.

சுந்தரபாண்டியம் கிராம அரிசன மக்களுக்கு வீடுகள்.

வினா 251—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, சுந்தரபாண்டியத்தில் வீடில்லாத அரிசன மக்களுக்கு அரிசன நலத்துறையில் இருந்து எத்தனை வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு உத்தேசம் செய்துள்ளது?

(ஆ) வீடுகளின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி சுந்தரப்பாண்டியத்தில் வீடில்லாத அரிசன மக்களுக்கு அரிசன நலத்துறையின்மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் போடப் பெற்ற கை பம்புகள்.

வினா 252—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் போடப்பட்ட மொத்த கை பம்புகள் எத்தனை?

(ஆ) அவற்றில் இயங்கிக்கொண்டிருப்பவை எத்தனை?

விடை—

(அ) 261.

(ஆ) அனைத்தும் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் விவசாயிகளுக்குப் பட்டா வழங்கல்.

வினா 253—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–78ஆம் ஆண்டில் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் பாடுபட்டு வந்துள்ள விவசாயிகளுக்கு பட்டா கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(ஆ) எத்தனை பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

1979 அக்டோபர் 31]

விடை —

(அ) & (ஆ) 1976-78 ஆம் ஆண்டில் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் பயிர் செய்து வந்துள்ள விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கைகளும் மற்றும் அந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1)	விவசாயிகள் ஆக்ரமித்துள்ள நேர்வுகளின் எண்ணிக்கை.	226
(2)	கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை.	35
(3)	தகுதியில்லாது என ஒதுக்கப்பட்டவைகள்.	143
(4)	பாக்கி பைசல் செய்ய வேண்டிய மனுக்கள்.	48

திருவில்லிப்புத்தூர் தாசில்தார் மீதியுள்ள ஒப்படை மனுக்களின் பேரில் முடிவு எடுக்க துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றிய குழந்தைகள் காப்பகங்களில் பயன்பெற்ற குழந்தைகள்.

வினா 254 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1977-78-ம் ஆண்டில் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வத்திராயிருப்பு ஊராட்சிஒன்றியம் திருவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குழந்தைகள் காப்பகங்களில் பயன்பெற்ற குழந்தைகள் எத்தனை பேர்?

(ஆ) செலவழிக்கப்பட்ட தொகை என்ன?

விடை —

(அ) திருவில்லிப்புத்தூர் — 80 பேர்.
வத்திராயிருப்பு — 400 பேர்.

(ஆ) செலவழிக்கப்பட்ட தொகை :
திருவில்லிப்புத்தூர் — ரூ. 1,704.64.
வத்திராயிருப்பு — ரூ. 8,850.00

[1979 அக்டோபர் 31

255—

திருவில்லிப்புத்தூர் தொகுதி அரிசன மக்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 255—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியில் அரிசனங்களுக்கு 1977–78ஆம் ஆண்டுகளில், வீட்டு மனைகளுக்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விபரமும், வழங்கப்பட்ட மனைகளின் விபரங்களும் யாவை?

விடை—

இராமநாதபுரம் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1977–ல் சிங்கமங்கலபுரத்தில் 2.27 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 41 மனைப்பட்டாக்களும், குன்னூரில் 1.46 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 25 மனைப்பட்டாக்களும், வத்திராயிருப்பு கிராமத்தில் 1.34 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 23 மனைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. வத்திராயிருப்பு கிராமத்தில் மேலும் 1.15 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 20 மனைகளுக்கு பட்டா வழங்குவதற்காக மனைகளின் வரைபடங்களுக்கு ஒப்புதல் பெற உள்ளதால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1977ல் மனைகளுக்காக 6·22 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. 89 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 20 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட வேண்டியவை.

1978–ல் அரியநாயகிபுரத்தில் 1.07 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 18 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. புதுப்பட்டியில் 1.45 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 25 மனைப் பட்டாக்கள் வழங்குவதற்காகவும், மனகசேரியில் 0.58 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 10 மனைப்பட்டாக்கள் வழங்குவதற்காகவும் மனைகளின் வரைப்படங்களுக்கு ஒப்புதல் அளிக்க இருப்பதால் பட்டாக்கள் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. 1978–ல் மனைகளுக்காக 3.10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டன. 18 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 35 மனைப்பட்டாக்கள் வழங்கப்பட வேண்டியவை.

1979 அக்டோபர் 31]

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பதிவான மதுவிலக்கு வழக்குகள்.

வினா **256**— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கதர், கைத்தறித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1-1-78 முதல் 1-12-78 முடிய பதிவான சாராய வழக்குகள் (காய்ச்சியதாக, வைத்திருந்ததாக, குடித்ததாக) எத்தனை?

விடை—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் 1-1-78 முதல் 1-12-78 முடிய 1,324 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்காக 198 வழக்குகளும், வைத்திருந்ததற்காக 476 வழக்குகளும் குடித்ததற்காக (குடிபோதையில் இருந்ததற்காக) 99 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

தர்மபுரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு மின் இணைப்பு கோரி வந்த மனுக்கள்.

வினா 257— திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-79-ல் தர்மபுரி மாவட்டத்தில் விவசாயத்திற்காக மின் இணைப்பு கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) இதுவரை விவசாயத்திற்காக கொடுக்கப்பட்ட மின் இணைப்புக்கள் எத்தனை?

(இ) தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் ஆதலால் விவசாய மின் இணைப்பு கொடுப்பதில் இம்மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

(அ) 3,200 மனுக்கள்.

(ஆ) 31-3-79 வரை 33,981 இணைப்புக்கள்.

(இ) இல்லை.

வீராணம் ஏரித் தண்ணீர்.

வினா 258— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ல் வீராணம் ஏரியில் உயர்ந்த அளவு எத்தனை அடி தண்ணீர் நிறுத்தி வைக்கப்பட்டது ?

(ஆ) 1978 நவம்பரில் எத்தனை அடி தண்ணீர் நிறுத்தி வைக்கப்பட்டது?

விடை—

(அ) 1977-ல் வீராணம் ஏரியில் உயர்ந்த அளவு 47·80 அடி வரை தண்ணீர் நிறுத்தி வைக்கப்பட்டது.

(ஆ) 1978 நவம்பரில் உயர்ந்தஅளவு 46.40 அடி தண்ணீர் நிறுத்தி வைக்கப்பட்டது.

வினா 259— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 நவம்பர் மாத மழையில் வீராணம் ஏரியிலிருந்து வெள்ளியங்கால் வாய்க்காலில் எத்தனை கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது ?

(ஆ) அதனால் எவ்வளவு நிலங்கள் பாழ்பட்டன?

விடை—

(அ) நவம்பர் மாத மழையில் சுமார் 12,261 மில்லியன் கன அடி நீர் வீராணம் ஏரியிலிருந்து வெள்ளியங்கால் வாய்க்காலில் திறந்து விடப்பட்டது. இதுவே 1978-ம் ஆண்டில் விடப்பட்ட அதிகபட்சமான நீர் அளவு ஆகும். ஆனால் வெள்ளியங்கால் ஓடையில் அதிக அளவு வினாடிக்கு 17,845 கன அடி நீர் செல்லும்.

(ஆ) இதனால் விளை நிலங்கள் ஏதும் பாதிக்கப்படவில்லை. அப்போது பெய்த மழையினால் சில இடங்களில் தண்ணீர் தேக்கம் இருந்த போதிலும் பயிர்கள் பாதிக்கப்படா வண்ணம் விரைவில் வடியத்தக்க ஏற்பாடு தல அதிகாரிகளால் செய்யப்பட்டது.

1979 அக்டோபர் 31

வினா 260—

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரியில் இருந்து வெள்ளக்காலத்தில் எத்தனை கன அடி தண்ணீர் வெள்ளாற்றில் திறந்துவிட முடியும்?

(ஆ) 1978 நவம்பர் 3, 4 தேதியில் எத்தனை கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டது?

விடை

(அ) வினாடிக்கு சுமார் 24,417 கன அடி வீதம் வெள்ளக் காலங்களில் வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்துவிட இயலும்.

(ஆ) 1978 நவம்பர் 3-ம் தேதி வினாடிக்கு 826 கன அடியும், 1978 நவம்பர் 4-ம் தேதி வினாடிக்கு 8102 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

வினா 261—

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் ஏரி கொள்ளளவு எத்தனை அடிவரை தாங்கும்?

(ஆ) மழைக்காலத்தில் தண்ணீர் வரத்து உள்ளபோது எத்தனை அடிக்கு மேல் திறந்து விடப்படும்.

விடை

(அ) வீராணம் ஏரியின் கொள்ளளவு அதன் முழு நீர் மட்டமான 45.50 அடி வரை உள்ள கொள்ளளவாகும். இந்த அளவு வரை நீரைத் தேக்கி வைக்கலாம்.

(ஆ) தண்ணீர் வரத்தின் நிலைமையினை அனுசரித்து 45.00 அடியிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்படும்.

[1979 அக்டோபர் 31

வீராணம் புனரமைப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப் பெறும் வாய்க்கால்கள்.

வினா 262—

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீராணம் புனரமைப்புத் திட்டத்தில் 1979–80-ல் எந்தெந்த வாய்க்கால்கள் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

(ஆ) மதிப்பீடு எவ்வளவு?

விடை

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 937, பொதுப்பணித் துறை நாள் 20–6–77-ன் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட "முன்னோடித் திட்டத்தில்" எடுத்துக் கொள்ளப்பட்ட லால்பேட்டை வாய்க்கால், வெள்ளியக்குடி வாய்க்கால் சீரமைப் புப்பணிகளின் எஞ்சியுள்ள வேலைகள் மட்டுமே 1979–80-ல் செய் யப்படும். இந்த முன் மாதிரித் திட்டம் செயல்படுவதைக் கண்டறிந்த பின்பே மற்ற வாய்க்கால்களை சீரமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

வேலாண்டி பாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம்.

வினா 263—

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள வேலாண்டிபாளையத்தில் உள்ள பள்ளத்தில் குறுக்கே பாலம் கட்ட பரிசீலிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

விடை

(அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ரூ. 38,400

1979 அக்டோபர் 31]

அவினாசி வீடுகட்டும் கூட்டுறவு சங்கம் மூலம் வழங்கப் பெற்ற கடன்.

வினா 264—

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அவினாசி வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் எவ்வளவு பேருக்கு கடன் இவ்வாண்டு வழங்கப்பட்டது?

விடை

அவினாசியில் பின் வரும் இரு கூட்டுறவு வீட்டு வசதி சங்கங் கள் இயங்கி வருகின்றன:—

(1) அவினாசி கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்.

(2) அவினாசி கூட்டுறவு கட்டிடச் சங்கம்.

அவினாசி கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் 1978–79ல் 16 உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவினாசி கூட்டுறவு கட்டிடச் சங்கத்தின் மூலம் 1978–79-ல் உறுப்பினர் எவருக்கும் கடன் வழங்கப்படவில்லை.

கோவை மாவட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 265— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டத்தில் மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கேட்டு விண்ணப்பித்துள்ளவர்கள் எவ்வளவு பேர் ?

(ஆ) மதுக்கரை ஒன்றியத்திலும், பேரூர் ஒன்றியத்திலும் எவ்வளவு பேர் விண்ணப்பித்துள்ளனர் ?

விடை.

(அ) 25,778 மனுக்கள்.

(ஆ) 189 மனுக்கள்.

அவினாசி தொகுதி அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 266— திரு. சொ. ந. **பழனிசாமி:** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அவினாசி தொகுதியில் நடப்பு ஆண்டில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தின் மூலம், அரிசனங்களுக்கு எத்தனை வீடுகள் கட்டித்தருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை

(அ) அவினாசி தொகுதியில் 1978–79-ம் ஆண்டில் அரிசன வீட்டுவசதி வளர்ச்சி கழகத்தின் மூலம் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மலைசாதி விவசாயிகளுக்கு மான்ய உச்சவரம்பினை அதிகரித்தல்.

வினா எண் 267— திரு சொ. நா. **பழனிசாமி:** மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீவிர கிராமப்புற அபிவிருத்தி திட்டம் அமுலாகும் இடங்களில் மலைச்சாதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கான மான்ய உச்சவரம்பினை அதிகரிக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) அரசு, அரிசனங்களுக்கும் இந்த உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை (அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் மத்திய அரசின் திட்டம். இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசே மான்யம் வழங்கும் வழி முறைகளை வகுத்துள்ளது. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தில் பொதுவாக சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும், குறு நில விவசாயிகளுக்கும் வேளாண்மை தொழிலாளர்களுக்கும் $33\frac{1}{3}$ சதவீதமும் மான்ய உச்சவரம்பு ஆகும். மலைசாதியைச் சேர்ந்த சிறு விவசாயிகள், குறுநில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்களுக்கும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மானய அளவு 50 சதவீதம். மலைச் சாதியைச் சேர்ந்த தனி நபருக்கு வழங்கப்படும் மான்ய உச்சவரம்பின் அளவு ரூ. 5,000 ஆகும். மத்திய அரசு வகுத்துள்ள வழிமுறைகள் எல்லா மாநிலங்களுக்கும் ஒரு சீராக பொருந்துவதாகும்.

1979 அக்டோபர் 31]

வங்காரம் மராமத்து பெரிய ஏரிக்கு சின்னாற்றிலிருந்து வாய்ககால் அமைத்தல்.

வினா எண். 268— திரு டி. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருச்சி மாவட்டம் செந்துரை ஒன்றியத்தைச் சார்ந்த வங்காரம் மராமத்து பெரிய ஏரிக்கு சின்னாற்றில் இருந்து வாய்க் கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை

இல்லை.

வெண்ணங்குறிச்சி காட்டில் குட்டை அமைக்கும் திட்டம்.

வினா எண் 269— திரு. டி. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் உள்ள இரும்புலிக் குறிச்சிக்கு அருகில் உள்ள வெண்ணங்குறிச்சி காட்டில் (Forest) குட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த நிலையில் உள்ளது ?

விடை

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திருச்சங்காட்டாங்குடி வடிகால் வாய்க்கால் சீரமைப்புப் பணி.

வினா 270— திரு மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், திருமருகல் ஒன்றியம் திருச்சங் காட்டாங்குடியில் வடிகால் வசதிக்கு மாற்று ஏற்பாடு வேண்டி அரசுக்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

விடை

(அ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருச்சங்காட்டாங்குடி வடிகால் வாய்க்காலைச்சீரமைக்கும் பணிபற்றி குறிப்பிடுகிறார் என கருதப்படுகிறது. இந்த வாய்க்காலைச் சீரமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.

(ஆ) இந்த வாய்க்காலைச்சீரமைக்க சுமார் 1.50 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேலையை நடப்பு ஆண்டில் 1979–80-ல் எடுத்துக்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பாசன அடைப்புக் காலத்தில், இந்த வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

வெற்றிலைக்கு ஏற்படும் நோயைத் தடுப்பதற்கான ஆராய்ச்சி நிலையம்.

வினா 271— திரு மா. பணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெற்றிலைக்கு ஏற்படும் நோயினைத் தடுக்க தனி ஆராய்ச்சி நிலையம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எங்கு செயல்பட்டு வருகிறது ?

விடை

(அ) மற்றும் (ஆ) வெற்றிலைக்கு ஏற்படும் நோயினை தடுக்க வேளாண்மைத் துறையில் தனி ஆராய்ச்சி நிலையம் ஏதும் தற்போது இல்லை. ஆயினும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், சேலம் மாவட்டத்திலுள்ள வேலூரில் வெற்றிலை வாடல் நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை 1977-ம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறது.

வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரியை சுற்றி தடுப்புச்சுவர் அமைத்தல்.

வினா 272— திரு சு. பாலன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரியைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்ப அக்கல்லூரி முதல்வரிட மிருந்து கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) கல்லூரியைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்ப அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

1979 அக்டோபர் 31]

விடை—

(அ) மற்றும் (ஆ) வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரியைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்ப அக்கல்லூரி முதல்வரால் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு கோரிக்கை அனுப்பப் பட்டுள்ளது. 28 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இக் கல்லூரியைச் சுற்றி தடுப்புச் சுவர் எழுப்ப பல இலட்ச ரூபாய் செலவாகும் என்பதனாலும், நிதி பற்றாக்குறையை முன்னிட்டும் ஆய்வுக் கூடங்கள் மாணவர் உடைவகங்கள் ஆகிய அடிப்படை முன்னுரிமைத் தேவைகளை நிறைவேற்ற உள்ளதாலும் இக் கலலூரிக்குத் தடுப்புச் சுவர் எழுப்பும் கருத்துரு தற்பொழுது ஏற்க இயலாமல் உள்ளது.

பணியில் உள்ளபோது ஊனமுறும் கட்டிடத் தொழிலாளிகளுக்கு இழப்பீடு.

வினா 273 — திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் கட்டிடத் தொழிலாளி பணியில் இருக்கும்போது தவறி விழுந்து ஊனம் அடைந்தாலோ, மரணம் அடைந்தாலோ உதவித் தொகை கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

விடை—

1923 ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின்படி கட்டிடத் தொழிலாளிகள் பணியில் இருக்கும்போது, தவறி விழுந்து ஊனம் அடைந்தாலோ, மரணம் அடைந்தாலோ அவர் களை நேரிடையாக வேலையில் அமர்த்திய ஒப்பந்தக்காரரிடம் இருந்து அல்லது ஒப்பந்தக்காரரை அமர்த்திய முக்கிய வேலை அளிப்பவரிடமிருந்து இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கு உரிமை உடையவர்கள் ஆவர்.

பெட்டைக்குளத்துக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம்.

வினா 274 — திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்செந்தூர் தொகுதி பள்ளிப்பத்து ஊராட்சியில் உள்ள பெட்டைக்குளத்துக்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் குளத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரப்படும்?

(இ) அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டத் தொகை எவ்வளவு?

விடை —

(அ) இல்லை.

(ஆ) & (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சிதம்பரம், அம்மாப்பேட்டை பால் உற்பத்தியாளர் சங்கம்.

வினா 275— திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் அம்மாப்பேட்டையில் உள்ள பால் உற்பத்தியாளர் சங்கம் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்கிறது?

(ஆ) பால் பதனிடும் செயல் எவ்வளவு காலமாக இயங்குகின்றது?

விடை —

(அ) சிதம்பரம், அம்மாப்பேட்டையில் பாலுற்பத்தி சங்கம் ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால் இவ்விடத்தில் ஒரு கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் 10-8-1952-ல் துவக்கப்பட்டு கடந்த 26 ஆண்டுகளாக வேலை செய்து வருகிறது.

(ஆ) சிதம்பரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம் நிறுவிய பால் பதனிடும் இயந்திரம் மூடும் பால் பதனிடும் செயல் 1-3-1967 முதல் 29-5-1971 வரை இயங்கி வந்தது. அதன் பின் பால் உற்பத்தி குறைவு காரணமாக பால் பதனிடும் செயல் நடைபெறாமல் உள்ளது.

சிதம்பரம் வட்டத்தில் உள்ள பால் வழங்கு சங்கங்கள்.

வினா 276—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை பால் வழங்கும் சங்கம் உள்ளது?

1979 அக்டோபர் 31]

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை பால் உற்பத்தியாளர் சங்கம் உள்ளது ?

விடை —

(அ) சிதம்பரம் வட்டத்தில் 44 பால் வழங்கும் சங்கங்கள் உள்ளன.

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் தற்போது 21 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன.

சிதம்பரத்தில் பல்லவன் போக்குவரத்துத் துரித வண்டிகளின் நேரக் கண்காணிப்பாளர் நியமனம்.

வினா 277—

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சிதம்பரம் பேருந்து நிலையத்தில் பல்லவன் போக்குவரத்துத் துரித கால வண்டிகளுக்கென (Express) நேரம் கண்காணிப்பாளரை (Time Keeper) போட அரசு உத்தேசித்துள்ளதா ?

விடை —

ஆம் 3-4-1979 முதல் அங்கு நேரம் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெத்தான் குடியிருப்பிற்கு சாலை போடும் திட்டம்.

வினா 278—

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள கடையம் பஞ்சாயத்து யூனியன் கீழ் உள்ள பெத்தான் குடியிருப்பிற்கு (கடனாநதி பக்கமுள்ளதிற்கு) சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரோடு போடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் அது பற்றிய விவரம் யாது ?

[1979 அக்டோபர் 31

விடை —

(அ) & (ஆ) : அம்பாசமுத்திரம் தாலுக்காவிலுள்ள கடையம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் செயல் படவில்லை. மேலும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்ட அமைப்பில் ரோடுகள் போடுவதற்கான கருத்து உருவாக்கங்கள் (Proposals) எதுவுமில்லை.

குத்தகைதாரர்களுக்கான குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம்.

வினா 279—

திரு. கே. சௌந்தரராஜன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குத்தகைதாரர்களுக்கு சாகுபடி உரிமையை நிரந்தரமாக்கக் கூடிய குத்தகை பதிவு உரிமைச் சட்டம் எந்த ஆண்டு இயற்றப்பட்டது ?

(ஆ) இது வரை எத்தனை விவசாயிகளுக்கு குத்தகை பதிவு செய்யப்பட்டுள்ளது ?

(இ) எத்தனை ஏக்கர் நஞ்சை/புஞ்சை நிலம் குத்தகை நிலம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது ?

(ஈ) சாகுபடி செய்பவர்கள், குத்தகை பதிவு செய்து கொள்ள பட்ட மனுக்களில் முடிவடையாமல் இருக்கும் மனுக்கள் எத்தனை? தாமதத்திற்கு காரணம் என்ன ?

விடை —

(அ) தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவணச் சட்டம் 1969 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

(ஆ) இது வரை 4,08,072 விவசாயிகளுக்கு குத்தகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) 6,14,067 ஏக்கர் குத்தகை நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் நஞ்சையும், புஞ்சையும் தனித்தனியே எவ்வளவு என்ற விவரம் தற்போது அரசிடம் இல்லை.

(ஈ) முடிவடையாமல் இருக்கும் மனுக்களின் எண்ணிக்கை 6,509 அவை அனைத்தும் விசாரணை நிலையில் உள்ளன.

1979 அக்டோபர் 31]

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கப்பெற்ற தொகை.

வினா 280 —திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) மதுக்கரை ஒன்றியத்திற்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(இ) இதுவரை மதுக்கரை ஒன்றியத்தில் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஈ) இத்திட்டத்தினால் மதுக்கரை ஒன்றியத்தில் பயன் பெற்றோர் எண்ணிக்கை யாது ?

விடை —

(அ) இந்த மாநிலத்தில் 161 வட்டாரங்களில் செயல்படும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு மத்திய அரசு மான்யமாக நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 712 இலட்சம். இதில் கோவை மாவட்டத்திற்கு 1978–79-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 65 இலட்சம்.

(ஆ) ரூ. 5 (ஐந்து) இலட்சம்.

(இ) மான்யமாக வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. 50,802.

(ஈ) 92.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர் பதவி.

வினா 281 :— திரு. மு. ஜான் வின்சென்ட் :— மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சா தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கு கால்நடை விரிவாக்க அலுவலர் பதவிக்கு விரிவாக்கத்துறையை பாடமாகக் கொண்டு தேர்ச்சி பெற்ற கால்நடை உதவி மருத்துவர்களை நியமிக்கும் செயற் குறிப்பு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல அமுலாக்கப்படும்

விடை :— (அ) ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர் பதவிக்கு கால்நடை உதவி மருத்துவர்களை நியமிக்கலாமா என்னும் செயற் குறிப்பு கால்நடைத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) அரசுக்கு செயற்குறிப்பு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனரால் அனுப்பப்பட்டபின் அரசு அதனை பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

அரிசன நல மான்யத்தின் கீழ் ஒதுக்கப்பெற்ற தொகை.

வினா 282 :— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1966-67 அரிசன நல மான்யத்தின் கீழ் 1966-67, 1967-ல் இருந்து 1969 வரை, 1976-77-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் 1977-லிருந்து 1978 வரை ஒதுக்கிய தொகைகள் முறையே எவ்வளவு ?

விடை :—1966-67-லிருந்து 1969-70 வரை அரிசன மானியத்தின் கீழ் ஒதுக்கிய தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டு.	தொகை (ரூபாய் இலட்சத்தில்).
1966 67	530.16
1967-68	642.56
1968-69	651.21
1969-70	697.02

(பிற்பட்டோர் நலனுக்கும் உள்ளிட்ட ஒதுக்கீடுகள்).

குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலமாகிய 1976-77-ல் ரூபாய் 1,367.38 இலட்சமும், 1977-78-ல் ரூபாய் 1,595.09 இலட்சமும் அரிசன மான்யத்தின் கீழ் ஒதுக்கப்பட்டது.

1979 அக்டோபர் 31]

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான சேஸிஸ்கள்

வினா 283 :— திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) லேலண்டு டாடா கம்பெனிகளில் லாரி, பஸ் சேசிஸ் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குக் கிடைப்பதில் தாமதம் ஏற்படுகிறதா ?

(ஆ) 1978-79ல் அரசுக்கு தரப்பட்ட சேஸிஸ் எவ்வளவு?

விடை :— (அ) லேலண்டு நிறுவனத்திடம் மட்டும் சிறிது காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

(ஆ) 1978-79-ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் அசோக் லேலண்டிடம் 1,330 சேசிஸ்கள் கேட்டிருந்தன. அவற்றில் 823 சேஸிஸ்களையே அந்நிறுவனம் தந்தது. போக்குவரத்துக் கழகங்கள் அவ்வப்போது கேட்கும்போது, டாடா நிறுவனம் சேஸிஸ்களை அனுப்பி வைத்தது. 1978-79-ல் போக்குவரத்துக் கழகங்களுக்கு அந்நிறுவனம் 425 சேஸிஸ்களை தந்துள்ளது.

காந்திபுரம்—காரவள்ளி சாலையை தார் சாலையாக்கல்.

வினா 284 :— திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் அருகில் உள்ள காந்திபுரம்—காரவள்ளி சாலையை தார் சாலையாக அமைக்க (மோகனூர் சர்க்கரை ஆலை மூலமாக) அரசு அனுமதி அளித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(இ) வேலை எப்போது எடுத்துக் கொள்ளப்படும் ?

விடை :— (அ) ஆம். 9—11—1978 ஆம் நாளன்று வெளியிட்ட அரசு ஆணை எண். பலவகை 1788 வேளாண்மை என்ற ஆணையின்படி இச்சாலைப் பணி சேலம் மாவட்டத்தில் உள்ள மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் எடுத்துக் கொள்ளப்படும்.

(ஆ) இச்சாலைப் பணிக்கு ரூபாய் 14·50 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(இ) மேற்படி சாலை வேலைக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு மாதங்களில் கண்காணிப்பு பொறியாளரால் இவ்வேலை முடிக்கப்பட்டு தலைமை பொறியாளரின் தொழிற் நுட்ப ஒப்பளிப்பு பெறப்படும். இதற்கு பின் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு முடிவாக்கப்பட்டு வேலை துவக்கப்படும். வேலை முடிவடைய குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு காலம் ஆகும்.

திருவண்ணாமலையில் அரசு துரிதப் பேருந்து நிலையம்.

வினா 285— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) திருவண்ணாமலை நகரத்தில் அரசு துரித வண்டிகளின் பேருந்து நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

விடை :— (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கைப்பெரம்பலூர் கிராமத்திற்கு பாதை வசதி.

வினா 286 :— திரு. த. ஆறுமுகம் :— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம் வேப்பூர் ஒன்றியத்தைச் சார்ந்த கைப்பெரம்பலூர் என்னும் கிராமம், எந்த பாதை வசதியும் இல்லாமல் நாற்புரமும் உள்ள கிராமங்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது என்று அவ்வூர் பொது மக்களிடமிருந்து மகஜர் வந்துள்ளதா ?

(ஆ) அதன் பேரில் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது ?

விடை :— (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 40,000 மதிப்பீட்டில் சாலை அமைக்கும் வேலை இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

1979 அக்டோபர் 31]

துடியலூர் கூட்டுறவு சேவாசங்கம்.

வினா 287 : திரு. க. மருதாசலம் :— மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) துடியலூர் கூட்டுறவு சேவா சங்கத்தின் சென்ற ஆண்டு லாபம் எவ்வளவு ?

(ஆ) என்ன பணிகள் மேற்கொள்ளப்படுகிறது ?

விடை :— (அ) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கத்தின் சென்ற ஆண்டு (1977-78) இலாபம் தணிக்கை செய்யப்படாத அறிக்கையின்படி ரூபாய் 5·81 இலட்சம் ஆகும்.

(ஆ) விவர அறிக்கை * ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திருச்சி நகரிலுள்ள திரையரங்குகள்.

வினா 288 :— திரு. சி. மாணிக்கம் :— மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரத்தில் உள்ள திரைப்பட அரங்குகள் போதிய கழிவறை வசதிகள் இல்லாமலும், காற்றோட்ட வசதி இல்லாமலும் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை :— (அ) அண்டு (ஆ): திருச்சிராப்பள்ளி நகரில் உள்ள சில திரையரங்குகளில் சுகாதார வசதி காற்றோட்ட வசதி மற்ற வசதிகள் போதுமான அளவு இல்லாதது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட புகார்களை திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டது. அவர் நகரில் உள்ள அனைத்துத் திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு இலாகா அதிகாரிகள் ஆகியோர் பங்கு கொண்ட கூட்டமொன்றை 14—5—1979 அன்று கூட்டி, எல்லா உரிமதாரர்களும், தங்கள் திரையரங்குகளில் சுகாதார வசதி இருக்கைகளைப் பழுது பார்த்தல், போதுமான அளவு மின் விசிறி பொருத்துதல், குடிநீர் வசதி செய்தல் ஆகியவைகளை 15—8—1979 ஆம் தேதிக்குள் செய்து முடிக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். திரையரங்கு உரிமதாரர்களும் மேற்கண்ட வசதிகளை செய்து முடிக்க ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்கள்

[* 803-804 ம் பக்கங்களில் இணைப்பு XIV ஆக அச்சிடப் பெற்றுள்ளது].

செய்யும் நிவர்த்திப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கண் காணித்து வருகிறார். குறைகளைக் களையத் தவறியவர்கள் மேல் ஆட்சித்தலைவர் கடும் நடவடிக்கை எடுப்பார்.

திருச்சி நகரில் பொருட்காட்சி.

வினா எண். 289— திரு. சி. மாணிக்கம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் அரசால் பொருட்காட்சி நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆமெனில் எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

விடை —

விரைவில், நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னை நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்விடுதி.

வினா எண். 290— திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்களுக்கென தனியாக மாணவர் விடுதி இல்லையென்பது உண்மையா?

(ஆ) ஆமெனில், உடனடியாக மாணவர் விடுதி கட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை —

(அ) ஆம்.

(ஆ) சென்னை நகரில் கலைக் கல்லூரி மற்றும் பயிற்சிக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தங்கி பயில போதுமான விடுதி வசதி ஏற்கனவே உள்ளதால் இக்கலூரிக்கென தனியாக விடுதி அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை ஆயின், இது குறித்து கல்லூரி முதல்வர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டால் அக்கருத்துரு பரிசீலிக்கப் பெறும்.

1979 அக்டோபர் 31]

நாமக்கல்-சென்னை பேருந்துப் பணி.

வினா 291—திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து சென்னை வரும் பேருந்து (தடம் எண் 582பி) மாதத்தில் பலமுறை வழியிலேயே பழுதின் காரண மாக நின்றுவிடுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில், புதிய பேருந்து விடும் திட்டம் உண்டா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கடந்த சூன் திங்கள் முதல், இத்திட்டத்தில் ஓடிக் கொண்டிருந்த இரு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இரு புதிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை.

வினா 292—திரு. துரை முத்துசாமி : மாண்பு மிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் விவ சாயிகளிடமிருந்து ஆலை நிர்வாகத்தினர் கரும்பு 1977 முதல் 1978 மே மாதம் வரை எவ்வளவு வாங்கினார்கள் ? அதற்குப் பணம் பட்டுவாடா செய்துள்ளார்களா ?

(ஆ) அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) & (ஆ) 30—11—77 முதல் 27—6—78 வரை 2,57,854.138 டன்கள் கரும்பு வாங்கப்பட்டது, டன் ஒன்றுக்கு ரூ. 114 என்ற விகிதத்தில் பட்டுவாடா செய்யப் பட்ட தொகை ரூ. 2,93,95,371.73 ஆகும்.

[1979 அக்டோபர் 31

நாகப்பட்டினம்—சென்னை பேருந்துப்பணி.

வினா 293—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-சென்னை ரூட் நெ. 508 வழித்தடத்தில் 43-க்கும் மேலுள்ள அதிகமான இருக்கைகள் கொண்ட பேருந்துகள் எத்தனை ?

(ஆ) அவை பக்கத்திற்கு இரண்டிரண்டு இருக்கையாக எப்போது மாற்றப்படும்?

விடை—

(அ) பத்து பேருந்துகள்.

(ஆ) இதில் 9 பேருந்துகள் பக்கத்திற்கு இரண்டு இரண்டு இருக்கைகள் கொண்டவை. மற்றுமொரு பேருந்தும் இரண்டு இரண்டு இருக்கைகள் கொண்டதாக விரைவில் மாற்றி அமைக்கப்படும்.

மேல் தொம்மை கிராமத்தில் ஏரி அமைப்புத் திட்டம்.

வினா 294—திரு சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியிலுள்ள கீரிப்பட்டி பேரூராட்சியின் எல்லையிலுள்ள மேல்தொம்மை என்ற கிராமத்தில் பொதுப்பணித் துறையினரால் பெரிய ஏரி கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில், ஏரி கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது ? எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதிப்பீடு ஸ்தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது. மதிப்பீடு அரசுக்கு கிடைத்தவுடன் அதனை முறைப்படி ஆராய்ந்து, திட்டம் ஏற்புடையதாயிருப்பின் அதற்கு ஒப்புதல் வழங்கப்படும். ஆதலின் தற்சமயம் திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை அறிவிக்க இயலாது.

1979 அக்டோபர் 31]

கிணறு ஆழப்படுத்தப் பயன்படும் பாறை வெடிக் கருவி.

வினா 295—திரு பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் கிணறு ஆழப்படுத்தும் போது பயன்படுத்தும் கம்பர்ஷன் கருவி அரசு துறையில் வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை உள்ளது ?

(இ) அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

(அ) விவசாயிகளின் கிணற்றினை ஆழப்படுத்தும் பாறை வெடிக்கருவிகள் 142 அரசால் 1966–72-ம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளன. 1958-ம் ஆண்டு பதினெட்டு பாறை வெடிக் கருவிகள் தொழில் மற்றும் வர்த்தகத் துறையிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் பதினான்கு பாறை வெடிக்கருவிகள் செயல்பட்டு வருகின்றன.

(இ) வேளாண்மைத் துறையில் மொத்தம் 160 பாறை வெடிக்கருவிகள் உள்ளன. எனவே வட ஆற்காடு மாவட்டத் தேவைக்குத் தகுந்தாற்போல், இக் கருவிகள் மற்ற மாவட்டத்திலிருந்து மாற்றம் செய்யப்படும்.

தற்போதைய தேவையை அனுசரிக்கும் போது மேற்கொண்டு புதிதாகக் கருவிகள் வாங்கவேண்டிய அவசியமில்லை.

வடாற்காடு மாவட்டத்தில் எலிகளால் மகசூல் பாதிப்பு.

வினா 296—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1978–79-ல் நெற்பயிர்களை எலி வெட்டியதால் பாதிக்கப்பட்ட நிலங்கள் எவ்வளவு ?

(ஆ) எலிவெட்டை தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு மானியம் வழங்க நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் 1978–79-ம் ஆண்டு 0.207 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், நெற்பயிரும், கரும்பும், தென்னையும் எலி வெட்டியதால் பாதிக்கப்பட்டன.

(ஆ) எலிகளை ஒழிக்கும் திட்டம் விவசாயத் துறையின் பயிர் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக எல்லா மாவட்டங்களிலும் முறையாகச் செயல்பட்டு வருகின்றது. எலிகளை ஒழிக்கும் மருந்துகளான துத்த நாகப் பாஸ்பைடு, அலிமினியம் பாஸ்பைடு மாத்திரைகள் போதுமான அளவு வேளாண்மைக் கிடங்குகளின் மூலமாக உழவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. விவசாயப் பணியாளர்கள் எலிகளை ஒழிக்கும் கீழ்க்கண்ட முறைகளை விளம்பரப் படுத்துகின்றார்கள்:—

(1) துத்தநாகப் பாஸ்பைடு என்ற நச்சு மருந்தை உணவுப் பொருட்களுடன் கலந்து வைத்தல்;

(2) $2\frac{1}{2}$ கிராம் 10 சத போரேட்டுக் குருணையை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து வயல்களில் உள்ள வளைகளில் ஊற்றுதல்;

(3) விசைத் தெளிப்பான் வெளிப்போக்கும் நச்சு வாயுகளை எலி வளைக்குள் இரப்பர் குழாய் மூலம் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் செலுத்துதல்; மற்றும்

(4) எலிப் பொறி வைத்தல்.

(இ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மானியம் வழங்க அரசிடம் ஏதும் திட்டம் இல்லை. ஆகையால் இதன் மேல் எதுவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தஞ்சை மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி.

வினா 297—திரு டி. எம். தைலப்பன்: மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் அரசு விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.

1979 அக்டோபர் 31]

பழனியிலுள்ள டான்சி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட போனஸ்.

வினா எண் 298—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பழனி டான்சியில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 1978-ல் வழங்கப்பட்ட போனஸ் எவ்வளவு ?

(ஆ) அந்நிறுவனம் லாபத்தில் நடக்கிறதா ?

விடை—

(அ) ரூ. 29,313.00.

(ஆ) இல்லை. இந்நிறுவனம் நட்டத்தில் இயங்கி வருகிறது.

1977–78-ன் நட்டத்தொகை ரூ. 70 ஆயிரம்.

1978–79-ன் இறுதிக்கணக்கு விவரம் தணிக்கை செய்யப் பட இருக்கிறது.

கிளியனூர் ஏரி சீரமைப்பு.

வினா எண். 299—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திண்டிவனம் தாலூக்காவில் உள்ள கிளியனூர் சித்தேரியை அகலப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல் படுத்தப்படும் ?

விடை—

*(அ) & (ஆ) கிளியனூர் சித்தேரியை மராமத்து செய்யவும் கரைகளை பலப்படுத்தவும் ரூ. 30,000-க்கு ஒரு மதிப்பீடு 1977–78-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஏறத்தாழ 50 சத விகிதம் வேலைகள் முடிந்து விட்டன. மீதமுள்ள வேலைகள் இந்த நிதி ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

* இந்த வினாவுக்கு, பேரவைமுன் 14–9–1978 அன்று வைக்கப்பெற்ற விடைக்கான திருத்திய விடை.

[1979 அக்டோபர் 31

வராக நதி கால்வாய்த் திட்டம்.

வினா எண் 300— **திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செஞ்சி வட்டத்தில் வராக நதி கால்வாய்த் திட்டம் முடிவடைந்து விட்டதா ?

(ஆ) எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு இதன் மூலம் பாசன வசதி கிடைக்கிறது ?

(இ) மேலும் பாசன வசதிபெற விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

*விடை—

(அ) ஆம். 1975-ல் முடிவடைந்தது.

(ஆ) சுமார் 2034.39 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

(இ) மேலும் பாசன வசதி அளிப்பது பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. இத்திட்டம் செயல்படும் முறையையும் இதன்கீழ் பதிவு செய்யப்பட்ட நிலங்கள் முழுவதும் பயன் பெறுவதையும் சில ஆண்டுகள் கண்காணிப்பது அவசியம் என்று கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ;— ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

* இந்த வினாவுக்கு, பேரவை முன் 30—4—79 அன்று வைக்கப் பெற்ற விடைக்கான திருத்திய விடை.

2. தகவல் கோரல்.

அ. வினாக்களுக்கு துறைகளில் இருந்து பதில் அனுப்பப் பெறுவதில் காலதாமதம் குறித்து.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஏற்கனவே நான் கேட்டேன், பிறகு எழுப்பச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. கூத்தகுடி சண்முகம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சம்பந்தமாக ஒரு விளக்கத்தைத் தங்களிட மிருந்து பெறவிரும்புகிறேன். கேள்விகளுக்கான பதில்கள் 6 வாரங்களுக்குள் சொல்லப்படவேண்டுமென்று விதிகள் இருந் தாலும் அப்படி பதில்கள் வருவதில்லை. ஒவ்வொரு இலாகா விலும் எவ்வளவு கேள்விகள் பதில்கள் அனுப்பப்படாமல் வைத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதுபற்றி அமைச்சர்கள் அந்த அந்த இலாக்காக்களைக் கேட்டு பதில்களைப் பெற முயற்சித்தார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். விதியை ஒழுங்காக அமல்நடத்த வேண்டியது தங்கள் பொறுப்பு. ஆறுவாரங்களுக்கு உள்ளாக பதில்கள் வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அதே விஷயம் பற்றி நான் போன பட்ஜெட் செஷனிலே முதல் நாள் எப்படி ரூல்ஸை மீறி துறைகளிலே கேள்விகள் பெண்டிங் ஆக இருக்கின்றன என்று சொன்னபோது தாங்கள் ஆவன செய்வதாகச் சொன்னீர்கள். அந்த செக்ஷனிலே நான் கேட்டபோது—நான்கு தரம் கேட்டேன், மந்திரி லெவலில் பெண்டிங்க் ஆக இருப்பது எவ்வளவு, பதிலே வராமல் இருப்பது எவ்வளவு என்று கேட்டேன்—அதற்கு அவர்கள் எழுதிக்கொடுங்கள் சொல்கிறோம் என்று சொன்னார் கள், ரிட்டனாக எழுதிக் கொடுத்தும் பதில் இல்லை. மறுமுறை கேட்டபோது இல்லை சார், சரியாக இருக்கும் என்று சொல் கிறார்கள், அடுத்தமுறை என்னை வரவழைக்காதீர்கள் என்று நான் சொன்னேன். ஆனால் இன்னும் பல முக்கியமான கேள்வி களுக்குப் பதில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கையை அவையின் முன் கொண்டு வந்ததை நான் ஏற்றுக்கொண்டு சொல்கிறேன், அதைப்பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், விதியின்படி 42 நாட்களுக்குள் இலாக்காவிலிருந்து பதில் வந்தாக வேண்டும், அதை துரிதப் படுத்த வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால் கேள்விகளுக்கு வந்திருக்கின்ற விடைகளையே நம்மால்

வைத்து முடிக்க முடியவில்லை. 600 கேள்விகள் என்னுடைய கையில் இருக்கின்றன. 20 கேள்விகளையே ஒரு மணி நேரத்தில் முடிக்க முடியவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : சட்டசபை அடிக்கடி கூடாததால் தான் கேள்விகள் அதிகமாகிவிட்டன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; பேரவைத் தலைவரவர்களே, எனக்கு நினைவு சரியாக இருக்குமேயானால் பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவுகளில் ஒன்று, 'ஸீரோ அவர்' நேரத்தில் விளக்கங்கள் கேட்பதில் அந்தந்தக் கட்சியின் தலைவர்கள்தான் கேட்க வேண்டுமே தவிர எல்லோரும் கேட்க கூடாது. அந்த முடிவை எதிர்க்கட்சித் தலைவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்து, அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களை இயக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர்கள் இல்லாத நேரத்தில் என்ன செய்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் மெம்பர் இல்லை, பேராசிரியர் அவர்கள் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நாம் எடுத்த முடிவு அவருக்குத் தெரியாது. அதனால்தான் பேரவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், பின்னால் இருப்பவர்கள் எழுப்பாமல் முன்னால் உள்ள தலைவர்கள் எழுப்புவதைப்பற்றிச் சொன்னார்கள்.

திரு. க. சுப்பு : தலைவர்கள் என்றால் தலைவர்கள் மட்டும்தானே தவிர துணைத் தலைவர், இணைத்தலைவர் எல்லாம் கிடையாது அல்லவா?

திரு. மு. அம்பிகாபதி ; தலைவரவர்களே.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் பேரவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், அதை ஏற்று உறுப்பினரவர்கள் அமர வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : கேள்வி கேட்டது அம்பிகாபதியா, கூத்தகுடி சண்முகமா என்பது அவருக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்திலே அவர் கேட்டார், கூத்தகுடி சண்முகமோ அல்லது அம்பிகாபதியா என்று குறிப்பிட்டுக் கேட்கவில்லை, பொதுப்படையாக கேள்விகள்

1979 அக்டோபர் 31] [பேரவைத் தலைவர்]

தரப்பட்டு ஆறு வாரங்களில் பதில் எங்களுக்கு வரவில்லை, ஆறு வாரங்கள் கடந்தும்கூட இணைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுதான் அவர்கள் சொன்னது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : நான் எவ்வளவோ கேள்விகள் எழுதிக் கொடுத்திருக்கிறேன், இதுவரைக்கும் பதில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூத்தகுடி சண்முகம் அவர்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா உறுப்பினர்களும் கொடுத்துள்ளதைச் சேர்த்துப் பார்த்தால் ஏறக்குறைய 10,000 கேள்விகள் இருக்கலாம். ஆனால் நம்முடைய பேரவை கூடுவது ஒரு வருஷத்திற்கு அதிகமாக இருந்தால் 85 நாட்கள் 90 நாட்கள் தான். எனினும் ஆறு வாரத்திற்குள் பதில் வர வேண்டுமென்ற விதியை அவசியம் அமல்படுத்த வேண்டுமென்பதில் நானும் அக்கறை கொண்டவன், ஆனால் பதில்கள் வந்து விட்டாலும் பேரவையிலே வைக்க முடியாத சூழ்நிலை இருப்பதை நான் சொல்லியாக வேண்டும். இப்பொழுதே 600 கேள்விகள் இருக்கின்றன, இப்போது பேரவை முடிந்தவுடன் அவைகளை அச்சிட்டு அனுப்ப வேண்டிய நிலை எனக்கு இருக்கிறது. இருந்தாலும் துறைகளில் காலதாமதம் ஆகாமல் துரிதமாகத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள் ரெய்ஸ் செய்த விஷயம் அப்படியே விட்டுப் போய் விட்டது. அவையின் ப்ரொசீஜர் சம்பந்தமாக, ஸ்ரோ அவரில் முன் பெஞ்சில் உள்ள தலைவர்கள் மட்டும்தான் கேட்கலாம் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். போன செஷனிலே எச்சிஜன்சீஸ்-க்காக அந்த முறையிலே வந்திருக்குமே தவிர நிரந்தரமாக அல்ல. (குறுக்கீடு) என்னுடைய கட்சியின் சார்பாக அட்டெண்ட் செய்த உறுப்பினர்களைக் கன்சல்ட் செய்திருக்கிறேன். 'ஆஸ் பர் ரூல்ஸ்' 'வி ஆர் ஈகுவல்ஸ்' நமக்கு ரைட்ஸ் உண்டு. அதை அனுமதிப்பதற்கும், அனுமதிக்காததற்குமான பொறுப்பு உங்களுக்கு உண்டு. அந்த ஏற்பாடு அந்த செஷனுக்குத்தானே தவிர இந்த செஷனுக்கு இந்த பிசினெஸ் அட்வைசரி கமிட்டியில் புதுப்பிக்கப்படவில்லை, அதோடு முடிந்துவிட்டது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், அந்தக் குறிப்பிட்ட செஷனுக்கு எச்சிஜன்சீஸ்-க்காக எடுத்துக்கொண்ட முடிவு என்று சொன்னார்கள். அப்படி இல்லை. மாறாக, ஸிரோ அவரில் இப்படிப்பட்ட கேள்விகளை எல்லோரும் கேட்க ஆரம்பித்தால் நேரம் பாழடிக்கப்படுகிறது, வீணடிக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக, ஒர்க்கிங் அரேன்ஜ்மெண்டுக்காகச்

செய்யப்பட்டது. எல்லோரும் ஈகுவல்தான், அதற்காக எல்லோரும் தலைவர்களாக இங்கே வந்து உட்கார்ந்து கொள்ள முடியாது, தலைவர்களும் இருப்பார்கள், தொண்டர்களும் இருப்பார்கள், எல்லோரும் இருப்பார்கள். நாம் எடுத்துக் கொண்ட முடிவு நேரத்தைப் பாதுகாப்பதற்காகவும், வீணடிக்காமல் இருப்பதற்காகவும்தான், தலைவர்களே கேட்பது நல்லது என்ற அந்த முடிவை எடுத்தோம். இது ஒரு ஓர்க்கிங் அரேஞ்மென்ட் என்ற அளவுக்கு எடுத்தோம், சட்டம் அல்ல, விதி அல்ல, எதுவும் அல்ல. அந்த மரபைப் பாதுகாக்க வேண்டுமென்றுதான் நான் வேண்டுகோள் விடுத்தேனே தவிர இது விதி--விதிக்கு எதிராக சதி—செய்யக்கூடாது—என்று நான் சொல்லவில்லை.

[முற்பகல் 10—10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உமாநாத் அவர்கள் 17-3-1979-லே எத்தனை கேள்விகள் உள்ளன, எத்தனை தயாராக இருக்கின்றன என்று எழுதிக் கேட்ட கேள்விக்கு, நாங்கள் பதில் தந்ததற்கு எங்களிடம் நகல் இருக்கிறது. (குறுக்கீடு) கனம் உறுப்பினருக்கு வரவில்லையென்றால், வீட்டிலே போய்ப் பார்க்க வேண்டும்.

நம்முடைய அவையில் 'சீரோ அவர்' கிடையாது. அடுத்து, திரு. உமாநாத் அவர்கள், அலுவல் ஆய்வுக் குழுவிலே போன கூட்டத்தில் எடுத்த முடிவு, இந்தக் கூட்டத்திற்குப் பொருந்தாது, அது அலுவல் ஆய்வுக்குழுவில் காலாவதியாகிவிட்ட ஒன்று என்று சொன்னார்கள். இந்தக் கூட்டத்தில் மறுபடியும் அது வேண்டாம் என்று முடிவெடுத்திருந்தால்தான் அவர்கள் அப்படிச் சொல்லலாம். அப்படி ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி, கட்சித் தலைவர்கள் மட்டும்தான் கேட்க வேண்டும் என்பது எல்லோரும் ஏற்றுக் கொண்ட ஒன்று.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 'சீரோ அவர்' இங்கே கிடையாது என்பது பொதுவான, ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. 'சீரோ அவர்' என்று பெயர் கிடையாதே தவிர, நடைமுறையில் பிரச்னை எழுவது உண்டு. ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாம் அனுமதிப்பதாலே, அதற்குப் பதில் சொல்வதாலே........

திரு. க. அன்பழகன் : அது வேறு வழியில்லாத ஒரு சூழ்நிலை காரணமாக, சில பிரச்னைகள் வந்து விடுகிறபொழுது, தாங்கள் ஏதேனும் ஒரு முடிவு சொல்ல இந்த நேரம் பயன்படுத்தப்படுகிறது. அதிலே பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே, பேசப்பட்டதனுடைய கருத்தாக நான் அறிந்த வரையில், திடீரென்று ஏற்படுகிற

பிரச்னைகளை எழுப்புவதற்கு--நான் உதாரணத்திற்காகச் சொல்கிறேன்--வெளியிலே திடீரென்று ஏற்படுகின்ற எத்தனையோ பிரச்னைகளை எழுப்புவதற்கு, நோட்டீஸ் கொடுக்காமல், அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுக்காமல், ஒரு பிரச்னையைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு தலைவர்கள் மட்டும்தான் அந்தப் பிரச்னையைப் பற்றி எழுப்பலாம் என்பதுதான் உணரப்பட்ட உண்மையே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுடைய இயல்பான உரிமைகளை, சபாநாயகர் மூலமாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டிய அப்படிப்பட்ட பிரச்னைகளை, கேள்விக்குப் பதில் போன்ற பிரச்னைகளை அல்லது கொடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளை, தலைவர் அவர்கள் எப்படி முடிவெடுக்கிறார்கள் என்று கேட்கக்கூடிய நிலைமை, உறுப்பினர்களுடைய உரிமைகள் நேரடியாக வரும்போது, கட்சித் தலைவர்கள் மூலம்தான் கேட்க வேண்டுமென்று சொல்வது அவ்வளவு நியாயம் அல்ல. எனவே, சில கட்டங்களில் உறுப்பினர்களது உரிமை, சில நெருக்கடியான சூழ்நிலைகளில் தலைவர்களுடைய உரிமை, இரண்டும் முன்னவருக்குப் பதில் கூற எப்படி வாய்ப்பு இருக்கிறதோ, அதற்கேற்ப என்று கருத்திற்கொள்ள வேண்டுமே தவிர, அடியோடு அனைத்துக்கும் தலைவர்கள் மீது பொறுப்பு போட்டு, உறுப்பினர்களுடைய உரிமையைத் தடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக் கொள்கிறேன். நான் சொல்வது பேரவை முன்னவர் குறிப்பிட்டது, கேள்வி நேரம் முடிந்தவுடன், பொதுப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் முதல் வரிசையிலே உள்ள கட்சித் தலைவர்கள்தான் எழுப்ப வேண்டும் என்பது நாமே வகுத்துக் கொண்டுள்ள ஒரு முறை என்பதுதான். மற்ற பிரச்னைகள் மீது உறுப்பினர்களுக்கு உரிமைகள் தரப்படுகின்றன. அது யாருக்கும் மறுக்கப்படவில்லை. இப்பொழுதும் கூட திரு. சுப்புவுக்கு அனுமதி தரப் போகிறேன். அதை யாரும் நிறுத்தவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : அந்த மாதிரி ரூலிங்கே தவறு. முதல் வரிசையிலே உள்ளவர்கள்தான் இந்த மன்றத்திலே கேள்வி எழுப்ப வேண்டுமென்று கொடுக்கின்ற ரூலிங்கே தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புரிந்து கொண்டு பேசுங்கள். ஏதாவது பாயின்ட் ஆப் ஆர்டர் இருந்தால் சொல்லுங்கள்.

(ஆ) உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவரது வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடை குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட ஒரே ஒரு கேள்வி இடம் பெற்றது. துரதிருஷ்டவசமாக, நம் அவை முன்னவர் அவர்கள் அவை நடவடிக்கை சம்பந்தமாக என்னை திடீரென்று அழைத்தார், போய்விட்டேன். கேள்வி வந்து விட்டது. அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, இராஜபாளையம் நகராட்சியில் குடியிருப்புப் பகுதியிலே பெரிய தனவந்தர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அது கூட சிறப்பு அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்கிறது, மக்கள் பிரதி நிதிகளால் அல்ல, சிறப்பு, அதிகாரிகள் இப்படி சிறப்பில்லாத வேலைகளைச் செய்து விடுகிறார்கள் என்ற காரணத்திற்காக....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே முடிந்து போன பிரச்னையைத் திருப்பியும் கிளப்புவதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்களா?

திரு. க. சுப்பு : விதி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி இருப்பதாலேயே பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும் என்று யாரும் அவரைக் கட்டாயப்படுத்துவதற்கு இல்லை. பேரவைத் தலைவர் அனுமதிப்பதோ, அனுமதி மறுப்பதோ அவரது டிஸ்க்ரிஷனைப் பொறுத்தது. திரு. சுப்பு அவர்களது கேள்வி காலையில் வந்த போது, அவர் கேள்வி நேரத்திலே, தம் இடத்தில் இல்லை. அவர்தம் கடமையாற்றாமல் வெளியே போனது அவரது தவறு. அதற்காக இப்போது அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம். பாய்ன்ட் ஆப் ஆர்டர் என்ன என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கடமையாற்றாமல் போகவில்லை. இங்கே நோட்டீஸ் கொடுத்தது சம்பந்தமாக, லீடர் ஆப் தி ஹவுசைச் சந்திக்கச் சென்றேன்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எனக்குத் தெரியாது. அவையிலே இருக்கின்ற உறுப்பினர், அந்த நேரத்தில் கடமையை ஆற்றியிருக்க வேண்டும்.

திரு. க. சுப்பு : சரி, பிறகு 1/2 மணி நேர டிஸ்கஷனுக்கு எழுதிக் கொடுக்கிறேன். நீங்கள் அனுமதி கொடுங்கள். அதை டிஸ்கஸ் செய்து விடுவோம். தலைவரவர்களே நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனையை நம்முடைய அவை முன்னவருக்கு எதிராக எழுதிக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சனை என் ஆய்விலே இருக்கிறது. உங்களுக்குத் தெரிந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் எனக்கும் ஓரளவு தெரியும். அதை அவை நடந்து கொண்டிருக்கும்போது கொடுத்தீர்கள். அதை விட்டு விட்டு வேறு ஏதாவது இருந்தால் எழுப்புங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அதை இன்று எழுப்பினால் பதில் சொல்வதாக லீடர் ஆப் தி ஹவுஸ் ஒப்புக் கொண்டிருக்கிறார். இன்று எழுப்பச் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, அவர் என்னிடம் கேட்டதாகவும், நான் அனுமதி வழங்கியதாகவும் சொல்லுகிறார். அனுமதி வழங்கும் உரிமை எனக்கு இல்லை. அது உங்களுக்குத்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆம்.

திரு. க. சுப்பு : இன்றைக்குத்தான் அவர் வந்துவிடுவாரே, அதுதான் பிரச்சனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரவாயில்லை. உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : அந்த நோட்டீசை வாசித்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறையிலே போய்த்தான் படிக்க முடியும். இங்கே வேறு அலுவல்கள் இருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனை குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விட்டு, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்றெல்லாம் ஏதோ ஒழுங்குப் பிரச்சனை போல் சொல்கிறீர்களே, சுருக்கமாக உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேரளாவிலே பெரியார் டாமிலே லீக்கேஜ் ஏற்பட்டு மிகப் பெரிய ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றி கேரள அசெம்பிளியிலே விவாதம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப் பெற்றுள்ளது. அதன் மேல் ஒரு அறிக்கையை அவையில் வைக்க அரசு இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, கேரள முதல் அமைச்சர் முகமது கோயா அவர்கள் கேரள அசெம்பளியிலே தெரிவித்திருக்கிறார்கள், இது சம்பந்தமாக தமிழ்நாடு அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறோம், அவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ரகுமான் கானை விட அதிக அக்கறை அரசுக்கு இதிலே இருக்கிறது. அமைச்சரவர்கள் விவரங்களைச் சேகரித்து விரைவிலே வைக்க இருக்கிறார்கள். அதை மேலும் துரிதப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் விரும்புகிறார் என்று நினைக்கிறேன். அதற்கு நன்றி.

திரு. ரா. கிருஷ்ணன் : எம்.எல். ஏ.க்கள் விடுதியிலே ஃபோன் எப்பொழுது பார்த்தாலும் "அவுட் ஆப் ஆர்டர்" ஆக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதிக் கொடுங்கள்.

Thiru. K. Suppu : Sir, I raise on a point of order. Under Rule 184 of the Tamil Nadu Assembly Rules, a Member wishing to raise a matter privilege shall before the commencement of the sitting of the day.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேகமாகப் படித்து விட்டால் எனக்குத் தெரியாது என்று நினைக்காதீர்கள். அது "பிபோர் தி கமென்ஸ்மென்ட் ஆப் தி ஹவுஸ்". உட்காருங்கள்.

[முற்பகல் 10-20]

3. அறிவிப்புகள்.

அ. அலுவல் ஆய்வுக்குழுவில் ஓர் உறுப்பினர் நியமனம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 193 (1)-ன் கீழ், 1979-80-ம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவில் திரு. துரை இராமசாமி அவர்களையும் உறுப்பினராக நியமிக்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை

திரு. இரா. முத்தையா : தலைவர் அவர்களே, (1) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் குறித்து, 1973-74 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் அறிக்கையை (பத்தாவது அறிக்கை) அளிக்கிறேன்.

2. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து, 1974-75 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய மேற்படி குழுவின் அறிக்கையை (பதினோராவது அறிக்கை) அளிக்கிறேன்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) ஆளுநரின் இசைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979-80-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து, ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

'In pursuance of Article 203, clause (3) of the Constitution of India, I, Prabhudas Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Further Grants for the year 1979-80.

5. முதல் துணை நிதி அறிக்கை 1979-80 — விவாதம்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கிற.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 1 மணிக்கு மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு எடுக்க கில்லட்டின். எல்லோரும் அதற்குள்ளாக பேசி முடித்தால் நல்லது. ஒரு மணிக்கு வாக்கெடுப்பு எடுக்கவேண்டும் என்பதால், அதை நினைவில் வைத்து உறுப்பினர்கள் பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் சொன்னது எனக்குப் பொருந்தாது என்று நினைக்கிறேன். தலைவர் குறிப்பிடுகிற நேரத்திற்கு மேல் ஒரு நிமிடம்கூட நான் போக மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கு என்று நான் சொல்லவில்லை. மொத்தத்தில், பேசுகின்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சொன்னேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்நேரம் நான் பேசி முடித்து இருப்பேன். 1979-80-ம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு முதலாவதாக எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ரெவின்யூ அகௌண்டில் ரூ. 11.31 கோடியும் காபிடல் லோன் அகௌண்டில் ரூ. 9.66 கோடியுமாக சேர்த்து, கிட்டத்தட்ட 21 கோடி ரூபாய்க்குத்துணை மானியக் கோரிக்கைகள் கேட்டு இருக்கிறார்கள். அதன் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்த துணை மானியக் கோரிக்கை பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு தொடங்கும் முன், நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஒரு நாட்டில் ராணுவ ஆட்சி ஏற்பட்டால் பார்ப்போம். காலையில் எழுந்து பார்த்தால் ஒரு புதிய சட்டம் பிறப்பித்து இருப்பார்கள். அதை, மார்ஷல் லா அட்மினிஸ்டிரேஷன் என்று சொல்வார்கள். அதைப்போன்று, இங்கேயும் திடீரென்று நம்முடைய அரசு, இந்த 6 மாதகாலமாக சட்டமன்றத்தைக் கூட்டாமல், பல அவசர சட்டங்களைப் பிறப்பித்து, ஒரு ராணுவ ஆட்சி இங்கே நடைபெறுகிறது என்கிற மனப்பான்மையை உருவாக்கும் நிலைமை இருந்தது என்பதை நான் இந்த மன்றத்தின் மூலம் கண்டிக்க விரும்புகிறேன்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டால் மட்டும் போதாது. ஜனநாயக மனப்பான்மை வேண்டும் என்று சொல்வார்கள். அந்த ஜனநாயக மனப்பான்மையைக் கருத்தில் கொண்டு இருந்தால், இப்போது கொண்டு வரப்பட்டுள்ள அவசரச் சட்டங்கள் சிலவற்றை இந்த அவை கூடியதற்குப் பிறகு கொண்டு வந்து இருக்கலாம். ஆகவே, அவசர அவசரமாகச் சட்டங்கள் கொண்டு வருவது என்கிற எண்ணத்துடன் இந்த அரசு ஆட்சி செய்கிறது என்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்த துணை மானியக் கோரிக்கையில் Under Grant 34 Urban Development—என்கிற தலைப்பின் கீழ்........

'Government have sanctioned the creation of 'Private Street Development Fund' by the Commissioner, Corporation of Madras for improvement of private Streets and have sanctined to

1979 அக்டோபர் 31] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

to Madras Corporation a non-recurring grant of Rs. 50,00,000 in order to create the Fund. The Corporation of Madras should contribute a sum of Rs. 50,00,000 to the Fund. The corpus of the Fund will be thus Rs. 1,00,00,000. The expenditure is on a 'New Service'. A sum of Rs. 50,00,000 is included in the Supplementary Estimate'.

இந்த 50 லட்ச ரூபாய் இன்றைக்கு 'ப்ரைவேட் ஸ்ட்ரீட் டெவலெப்மென்ட்' என்பதற்காக என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாநகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தை நாம் பார்க்கிறபோது, அந்த நிர்வாகம் நடைபெறுகிறதா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஏன் என்று சொன்னால், மாநகராட்சியிலே இன்றைக்குப் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. மாநகராட்சி மன்றத்தைத் தலை ஒத்தி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே தனி அதிகாரியின் நிர்வாகத்தில் மாநகராட்சி இருக்கிறது. சில முக்கியமான வீதிகளில், சில விளக்குகள் போட்டு இருக்கலாம். அந்தத் தெருக்களில் குப்பை கூளங்கள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு இருக்கலாம். கொஞ்சம் மனம் வைத்து அந்த வட்டத்திற்குள் சென்று பார்த்தால், எவ்வளவு சுகாதாரக் கேடு இருந்தது என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

நான், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வட்டமாகச் சென்று சுற்றிப்பார்த்து, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள குறைகளையும் ஒரு அறிக்கையாக தயாரித்து, அந்த ஸ்பெஷல் ஆபீசருக்கும், கமிஷனருக்கும் அனுப்பினேன். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இந்த அரசு சட்டமன்றத்தை மதிக்க வேண்டும், இந்த அரசு சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்கவேண்டும். இந்த அரசு மதித்தால் தான், அரசு அதிகாரிகள் மதிப்பார்கள்.

நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அவை முன்னவர் அவர்கள் மரபுகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். மரபு எப்படிக் காப்பாற்றப்படுகிறது என்பதை நாம் பார்த்தோம். நண்பர் சுப்பு அவர்கள் முதலமைச்சர் வரவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார். அது குற்றச்சாட்டுக் கூட அல்ல, ஒரு மரபைச் சொன்னார். இங்கிலாந்து தேசத்திலே பிரைம் மினிஸ்டராக இருந்த ஹீத் அவர்கள் பாராளுமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது ஒரு நாள் 3 நிமிடம் தாமதமாக வந்தாராம். 3 நிமிடம் காலதாமதம் ஆயிற்று. உடனே சபை உறுப்பினர்கள் எல்லாம் கேட்டார்கள், காலதாமதமாக வரலாமா என்று கேட்டார்கள். அதற்கு அவர் போக்குவரத்து நெரிசல்—டிராஃபிக் ஜாம்—ஏற்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்று சமாதானம் சொன்னார். அதை ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு ஒரு ராயல் கமிஷன் வைத்தார்கள். அந்த மாதிரி மரபைக் காப்பாற்ற வேண்டும்.

நான் அரசாங்கத்திற்கு அல்லது அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினால் மரியாதைக்கு 'அக்னாலட்ஜ்மென்ட்' கூட வருவதில்லை. அமைச்சர்களுக்கு எழுதுகிறேன்; அதிகாரிகளுக்கும் ஏழுதுகிறேன். நிதி அமைச்சர் கூட எனக்கு அக்னாலெட்ஜ் மென்ட் அனுப்பவில்லை நான் அவருக்கு எழுதிய கடிதத்திற்கு. அது எனக்கு மிகுந்த வருத்தம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு இருக்கிற வருத்தமெல்லாம் உங்களைப் போன்றவர்கள் எனக்கு கடிதமே எழுதுவதில்லையே என்பதுதான். ஆகவே நான் பதில் எழுதவில்லை என்ற பிரச்சனையே இல்லை. நீங்கள் எப்போதும் உண்மையைச் சொல்வீர்கள் என்று நம்புகிறவன் நான். ஆகவே, இப்படி நீங்கள் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. கடிதம் எழுதியும் பதில் வரவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அவர்களுடைய எண்ணத்தைப் புரிந்து கொள்கிறேன். அவர்கள் பாரளுமன்றத்தில் இருந்து அனுபவம் பெற்றவர்கள். பாராளுமன்ற உறுப்பினராக இருந்து, இங்கே அமைச்சராக இருக்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு கடிதம் எழுதினால் அங்கே 24 மணி நேரத்திற்குள்ளாகப் பதில் அனுப்பிவிடுகிறார்கள்.

நான் முதலமைச்சருக்கும் கடிதம் எழுதினேன். நிதி அமைச்சருக்கும் கடிதம் எழுதினேன். யாரிடமிருந்தும் பதில் வரவில்லை. மகாலிங்கம் அவர்கள் திருச்சியில் பேசும்போது நம்முடைய நாட்டிலிருந்து தினம் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் வெளியே போகிறது என்று பேசியிருக்கிறார்கள். அதுகுறித்து கடிதம் எழுதினேன்; பதில் வரவில்லை. ஆனால் ஒரு அமைச்சர் இந்த மன்றத்திலே இருக்கிறார்கள்; எழுதுகின்ற கடிதங்களை அக்னாலட்ஜ் செய்கிறார்கள். அதை பாராட்டித்தான் ஆக வேண்டும். அது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சரஸ்வதி அவர்கள். இந்த மன்றத்தில் இருக்கிற ஒரே ஒரு அமைச்சர் பி.டி. சரஸ்வதி அவர்கள் நான் எழுதுகிற கடிதங்களை அக்னாலட்ஜ் செய்து, நடவடிக்கையும் எடுக்கிறார்கள். மற்ற அமைச்சர்களுக்கு எழுதினால் பதில் வருவதில்லை; அக்கறை படுவதும் இல்லை.

பாலக்கோடு சம்பவம் பற்றி சீஃப் செக்ரட்டரிக்கு எழுதினேன்; சீஃப் மினிஸ்டருக்கும் எழுதினேன். சீஃப் மினிஸ்டருக்கு எழுதிய கடிதத்திற்கு பதில் கிடையாது. சீஃப் செக்ரட்டரியிடமிருந்து பதில் வந்தது; உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சம்பவம் பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது என்று வந்தது. பாலக்கோட்டில் ஒரு பயங்கரமான சம்பவம் நடந்திருக்கிறது. அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு

மென்று சொன்னேன். நான் சொன்ன பிறகு மற்றொரு கலவரம் நடைபெற்றது. முதலிலே ஒன்று, பினனால் ஒன்று, இப்படி இரண்டு சம்பவங்கள் அங்கே நடைபெற்றிருக்கின்றன; இது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் சமரசம் உண்மையைப் பேசுவார், நியாயத்தைப் பேசுவார் என்று எதிர்பார்த்தேன்; அவர் உண்மையைச் சொல்லவில்லை. இன்றைக்கு பாலகோட்டில் ஒரு பயங்கரமான நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்கத் தரப்பிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்காக மிகவும் வருந்துகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய கார்ப்பரேஷன் பிரச்சனைக்கு வருகிறேன். கார்ப்பரேஷன் நிர்வாகம் மிகவும் மெத்தனமாக இருக்கிறது. அங்கே ஒரு ஸ்பெஷல் ஆபீசர் இருக்கிறார். தனிப்பட்ட முறையில் அவர்மீது எனக்கு வருத்தமில்லை; குறை சொல்லவில்லை.

The Special Officer is for the breeding of special kind of mosquitoes in Madras City. கொசுக்களை உற்பத்திச் செய்யத்தான் ஸ்பெஷல் ஆஃபீசர் இருக்கிறார். நான் ஒவ்வொரு பகுதியாக பார்த்து, எழுதி அனுப்பியிருக்கிறேன். ஆல் தோட்டம், குலாம் அப்பாசாலிகான் தெரு, கங்கைகரைபுரம், வைகுந்தபுரம், கிரியப்ப சாலை, சீனிவாச பெருமாள் சன்னதி 2-வது தெரு, வன்னிய தேனாம்பேட்டை, ஆள்வார் பேட்டை, முதலியாண்டான் தோட்டம், பைகிராப்ஸ் நகர், கணேசபுரம், ஆலையம்மன் கோவில் தெரு, திரு. வி. க. நகர் குடியிருப்பு, டாக்டர் தாமஸ் சாலை, சௌந்தரிய நர்சரி எதிரிலுள்ள ஏரிக்கரை (சத்தியமூர்த்தி நகர்) பீர்காரன் தெரு, முத்தையா முதலி தெரு, இளங்கோ சாலை, வரதராஜபுரம், பச்சையம்மன் தோட்டம், வெங்கட்ட நாராயண தெரு, பெரியார் சாலை, திருவள்ளுவர் சாலை, ஆகிய இடங்களில் சாக்கடைத் தண்ணீர் சரியாகப் போவதில்லை. அங்கே பள்ளிக்கூடம் இருக்கிறது. பள்ளிக்கூடத்திற்கு முன்னாள் போக முடியாது. அந்த அளவுக்கு அசிங்கமாக இருக்கிறது. பள்ளி அதிகாரிகள் அதைப் பார்க்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை. இந்தக் குறைபாடுகளைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வணிக வரி. வணிக வரியைப்பற்றிச் சொல்லும்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு திரு. எட்மண்ட் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசின் கொள்கை 'சிங்கிள் பாயின்ட்' கொள்கை தான். 'மல்டி பாயின்ட்' கொள்கை அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த கொள்கை இந்த சட்டமன்றத்திலே அறிவிக்கப்படவில்லை; வெளியே சொல்லிக்கொள்கிறார்கள்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 அக்டோபர் 3

வணிக வரியைப் பொறுத்தவரையில் 'என்ஃபோர்ஸ்மென்ட் விங்' என்று ஒரு பிரிவை வைத்திருக்கிறார்கள். அது எதற்காகப் பயன்படுகிறது என்றால், சாதாரண சிறிய வியாபாரிகளைத் தொல்லைப்படுத்துவதற்காகத்தான் பயன்படுகிறதே தவிர, பெரிய வியாபாரிகள் பக்கம் அவர்கள் போவதில்லை.

சென்னையில் மார்ஸ் மெரைன் ப்ராடக்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்று ஒரு நிறுவனம் இருக்கிறது.

(முற்பகல் 10–30)

இந்த நிறுவனத்திலே 1975–76-ம் ஆண்டிலே அவர்கள் சென்னையிலே பிரான் இரால் வாங்கினார்கள். வாங்கியதற்கு அவர்களுக்கு, சி.டி.ஓ. வொயிட்ஸ் ரோடு, பல லட்சம் ரூபாய்க்கு வரி விதிப்பு செய்தார்கள். அந்த வரி விதித்த பிறகு அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அப்பீல் செய்தார்கள். அப்பீலுக்குப் பிறகு இந்த வரி விதிப்பு ரத்து செய்யப்படுகிறது. பல லட்ச ரூபாய்க்கு விதிக்கப்பட்ட வரியை அப்பீலிலே ரத்து செய்தது மாத்திரம் அல்லாமல், அப்படி வரி விதித்தது அதிகமான தொகை என்று சொல்லி எவ்வளவு அதிகமான வரி விதிப்பு வசூலிக்கப்பட்டதோ அந்த தொகையை திருப்பித் தர வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. சாதாரணமான ஒரு வியாபாரிக்கு வீண் தொல்லை கொடுக்கிற அரசாங்கம், ஏன் இதற்கு மறு முறையீடு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கமர்சியல் டாக்ஸ் கமிஷ்னர் அவர்கள் 27–9–79–ம் தேதியன்று ஒரு கடிதம் எழுதினார்கள்.

'Mars Marine Products Private Ltd. – Separation of certain purchase of prawns – Information Furnished.'

அதிலே அவர்கள் கமிஷ்னர் ஆப் கமர்சியல் டாக்ஸ் அவர்கள் அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பியதாகச் சொன்னார்கள். அந்த அறிக்கையை ஏன் இந்த அவையில் வைக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அந்த அறிக்கையை வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அந்த நிறுவனத்தினுடைய தலைவர் திரு. ஏ. சி. முத்தையா அவர்கள். திரு. ஏ. சி. முத்தையா அவர்கள் தலைவராக இருந்த காரணத்தினால்தான் இதுபோன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகும் அரசாங்கம் அப்பீலுக்குப் போகவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

இந்த ஏ. சி. முத்தையா அவர்கள் இன்றைக்கு ரேஸ் கிளப்பிலே தலைவராக இருக்கிறார்கள். ரேஸ் கிளப்பிலே முன்பு, பை–செண்டினரி பில்டிங் கட்டப்பட்டது. அதைத் திறப்பதற்குக் கூட முதல் அமைச்சர் அவர்கள் வருகை தந்திருந்தார்கள். அந்த கட்டடத்திலே சில விதி முறைகள பின்பற்றப்படவில்லை என்று சொல்லி, அன்று அந்த கிளப்பின் தலைவர் மீது பிராசிக்யூஷன் தொடரப்பட்டது. எனக்கு கிடைத்த

தகவல்படி, ரேஸ் கிளப்பைச் சேர்ந்தவர்கள் விதி விலக்குத் தர வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள் கோப்பிலே எழுதியிருக்கிறார்கள். பணக்காரன் என்பதால் எதையும் செய்யலாம் என்கிற மனப்பான்மை அண்ணா அவர்களின் கொள்கைக்கு முரணானது, மேலும் இந்த அடிப்படையில் ஏன் காலதாமதம் ஆயிற்று என்று எழுதிக் கூட கேட்கலாம் என்று" எழுதியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் குறிப்பை நான் முழுமையாக வரவேற்கிறேன் என்று அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் கூட அதைப்பற்றி குறிப்பிட்டு சொன்னார்கள். ரேஸ் கிளப்பின் தலைவர்—அப்போ திருந்த திரு. இராமசாமி மீது பிராசிக்யூஷன் வழக்குப் போடப்பட்டது. அந்த விதிவிலக்கு கொடுக்காத காரணத்தை சொன்னார்கள். அண்ணா அவர்களின் லட்சியம் நல்ல லட்சியம்தான். ஆனால் திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் ரேஸ் கிளப்பின் தலைவரான பிறகு உடனடியாக ஒரு மனு கொடுக் கிறார் அரசாங்கத்திற்கு. 15-10-79 ஆம் தேதியிட்ட மனு—சம்பந்தப்பட்ட வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று அரசாங்கத்தை கோருகிறார். இந்த மனு வாங்கிக் கொண்ட உடனே வேறு விஷயங்களில் எல்லாம் கால தாமதம் செய்கிற அரசாங்கம் இதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பித்தது. 15-ம் தேதி மனு கொடுக்கிறார். 16-ம் தேதி வழக்கை வாபஸ் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. கார்ப்போரேஷன், அதாவது மெட்ரோ பாலிடன் டெவலப்மெண்ட் கார்ப்போரேஷன் எல்லாம் கலந்து ஆலோசிக்கவில்லை. சட்ட இலாகாவைக் கலந்து ஆலோ சிக்கவில்லை. உடனடியாக ஆணை பிறப்பிக்கப்படுகிறது. திரு. ராமசாமி பணக்காரர் என்றால், திரு. ஏ.சி. முத்தையாவும் பணக்காரர் தானே, பணக்காரர்களுக்குள்ளேயே ஏன் இந்த வித்தியாசம் என்று கேட்க விரும்புகிறேன்.

வழக்கு கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிற போதே அந்த வழக்கை வாபஸ் வாங்குகிற இலாகா, ஹோம் டிபார்ட்மெண்ட் பூராவுமாக எடுத்துச் சொன்னால்கூட வழக்குகளைத் தொடருங்கள் என்று சொல்கிறது. சென்னையைச் சேர்ந்த ஒரு வக்கீல் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். இலாகா பூராவுமாக இந்த வழக்கு தொடரப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியும்கூட அவர்கள் கேட்கவில்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஹரிஜன நல இலாகா பற்றி. ஹரிஜன நலத்துறை அமைச்சராக இருப்பவர் எனது நெருங்கிய நண்பர், அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. இந்த இலாகா இப்போது எப்படிச் செயல்பட்டு வருகிறது என்று பார்த்தால், அதைப்பற்றி என் கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். ஹரிஜன நல அட்வைஸரி கமிட்டி என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கமிட்டியின் தலைவராக அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அந்த அட்வைஸரி கமிட்டியின் மூலம் ஹரிஜன மக்களுக்கு வீடுகள் கட்டித்தர பத்துகோடி ரூபாய் ஒதுக்க

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 அக்டோபர் 31

வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாதங்கள் பல ஆகின்றன. அதுபற்றி எந்தவிதமான உத்தரவும் இல்லை. ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களே தலைவராக இருந்து தீர்மானம் நிறைவேற்றுகிற ஒரு பிரச்னைக்கே இந்த நிலை என்றால் மற்ற பிரச்னைகள் பற்றி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. பத்து கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்று ஹரிஜன நலஇலாகா மூலம் கேட்கப்பட்டு—அந்தப் பைலை நிதி அமைச்சர் அவர்கள் பார்த்தார்களோ என்னவோ தெரியாது.—முதல் அமைச்சர் அவர்களிடம் தூங்கிக் கொண்டிப்பதாகச் சொல்கிறார்கள். ஹரிஜன நல இலாகா செயல்படும் விதம் பற்றி சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதேபோல் அனுபால் என்ற கிராமத்தில் சில ஹரிஜனங்கள் மீது வழக்கு தொடர்ந்து உள்ளார்கள். அப்படி வழக்கு தொடர்ந்தது நியாயம் இல்லை என்று ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்களே சொல்லியும் கூட—79 மே மாதம் நடைபெற்ற சம்பவங்கள் காரணமாக—ஹரிஜன மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பொய் வழக்குகள் தொடர்கிறார்கள் என்று சொல்லியும்கூட அந்த வழக்குகளிலிருந்து அவர்கள் இன்னும் விடுபடவில்லை. இந்தப் பிரச்னையை எண்ணிப் பார்க்கும்போது ஹரிஜன மக்கள் உதாசீனப்படுத்தப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்களே உதாசீனப்படுத்தப்படுகிறார்களோ என்ற ஒரு எண்ணம் ஏற்படுகிறது.

அதேபோல், கும்பகோணத்தைச் சேர்ந்த உள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிரச்னையில் அமைச்சர் அவர்கள் ஸ்டே கொடுத்தார்கள். அந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் விவாதத்திற்கு வந்து அமைச்சர் அவர்கள் உத்தரவு போடவில்லை. அமைச்சர் அவர்களின் கையெழுத்தை யாரோ ஒருவர் 'போர்ஜ்' செய்திருக்கிறார்கள் என்ற பிரச்னை வந்து அந்த நபர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போர்ஜரி என்று ப்ராஸிக்யூஷன் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகின்றன என்று நினைக்கிறேன். அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று தெரியவில்லை. இதுபோன்ற மெத்தனமான, மந்தப் போக்கு இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் நகர துரித இரயில் பாதைத் திட்டம். மெட்ரோபாலிட்டன் ராப்பிட் டிரான்ஸ்போர்ட் ஸிஸ்டம் என்ற ஒரு திட்டத்தைப் பற்றி இந்த மன்றத்தில் பல தடவை விவாதிக்கிறோம். 1971-ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து மெட்ரோபாலிட்டன் டிரான்ஸ்போர்ட் ப்ராஜக்ட், ரெயில்வே மூலம் 200 கோடி ரூபாய் அளவிற்கு திட்டம் போடப்பட்டு அந்தத் திட்டத்தைச் சுருக்க வேண்டுமென்று சொன்ன பிறகு 1974ஆம் ஆண்டு பரிசீலனை மேற்கொண்டு அதைச் சிக்கனப்படுத்த மறுபரிசீலனை செய்யப்பட்டது. அந்த மெட்ரோபாலிட்டன் டிரான்ஸ்போர்ட் ப்ராஜக்ட் மறுபரிசீலனை செய்யப்

பட்டு சென்னை பீச் ஸ்டேஷனிலிருந்து திருவல்லிக்கேணி வரை, பாரதி சாலை வரை பக்கிங்காம் கனால் ஓரமாக 23 கோடி ரூபாய்க்கு ரெயில்வே பாதை அமைக்கலாம் என்று திட்டத்தைத் தந்தார்கள். ப்ளானிங் கமிஷன் தன் பரிந்துரையுடன் இது ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டம் என்ற பரிந்துரையுடன்கூட அனுமதிக்காக 1975ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளாகின்றன. அத்திட்டத்திற்கான அனுமதி வரவில்லை. இன்றைய நிலை என்னவென்றால், அந்த ப்ராஜக்ட் டிவிஷன் இருக்கிறது. ஏற்கனவே, அந்த டிவிஷனை மூடிவிடு வார்கள் என்று இந்த மன்றத்தில் பேசப்பட்டு முதல் அமைச்சர் அவர்கள், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதை நிறுத்தி வைப்பதாகச் சொன்னார்கள். எனக்கு வந்திருக்கிற தகவல் என்னவென்றால், நமது துணை மானியக் கோரிக்கைகள் பற்றிய பேச்சுக்கள் முடிந்தவுடன், நாளைக் காலை அந்த டிவிஷனை மூடிவிடயிருப்பதாக அறிகிறேன். 31-10-79 வரைதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 31-10-79-க்குப் பிறகு இந்தத் திட்டத்திற்கு மூடுவிழா நடத்த முடிவு செய்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. கல்கத்தாவிற்கு ரூ. 500 கோடி செலவழிக்கும் போது தமிழ்நாடு 200 கோடி ரூபாய் திட்டத்தைக்கூட பெற முடியவில்லையே என்பதைப் பார்க்கும்போது இந்த அரசை நான் குறை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே ரெயில்வே கோச் ரிப்பேர் பாக்டரிக்கு இடம் கேட்டு காலதாமதப்படுத்தப் பட்டு இப்போது அது திருப்பதிக்குப் போய் விட்டது. கிட்டத்தட்ட இரண்டாயிரம் மூன்றாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் திட்டம் நமது அரசின் அலட்சியப் போக்கு காரணமாக வேறு மாநிலத்திற்குப் போய் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னை குறித்து நமது நிதி அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, தமது தனிப் பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி இத்திட்டத்தை நிறை வேற்றித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-40]

நம்முடைய போக்குவரத்து அமைச்சர் கூட சொல்லியிருக் கிறார்கள். கால்வாய் ஓரமாக, அதாவது பக்கிங்காம் கால்வாய் ஓரமாக செப்பனிட்டு பஸ்களை விடலாமா என்று ஆராயலாம். அதற்கு 200 கோடி ரூபாய் செலவாகும் என்றும் சொல்லியிருக் கிறார்கள். இதை மாநிலச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. இன்றைக்கு இருக்கின்ற பெட்ரோல் விலையில், டீசல் விலையில் மாநில சர்க்காரால் இதை ஏற்றுக் கொள்ள இயலாது. ஆகவே சுரங்கப்பாதை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே இதை மத்திய சர்க்காரிடம் கூறி வற்புறுத்தி நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸில்' ஒரு செய்தி வந்திருக்கிறது.

"Govt. told to study needs of small units.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1979 அக்டோபர் 3

The Tamil Nabu Small Scale Industries Association has appealed to the State Government to make a study of small scale units in the State and assess their raw material requirements.

In a press release the Association expressed concern about allocation of raw materials particularly pig iron to the small units in Tamil Nadu. It pointed out that while Tamil Nadu was second only to Gujarat in consumption of pig iron, the allocation was the lowest.

The new method of empowering the Development Commissioner for Small Scale Industries to allocate scarce raw materials would mean delay in supplies-

The Association wanted the Government to study the requirements and present the case of small units to the Development Commissioner.

The Small Industries Development Corporation which was not capable to handle distribution of raw materials should be immediately re-organised.

The Association asked the financial institutions and the State Electricity Board to help the small units in view of the present financial constraints. The closure of a large automobile unit in Bangalore had resulted in reduced off-take and in many cases. total stoppage of spare supplies. And this was likely to throw many units out of business. In Coimbatore 500 foundry units which were getting small supplies of coal, coke, and pig iron had stopped getting even that since last month,

The Association complained that power was available to small units only for six hours a day. While the supply had thus deriotерated the Electricity Board had demanded one month's consumption charges in excess of the current bill, it pointed out. The financial institutions had stopped payments to small units in the name of credit restrictions and the entire industry scene was one of gloom"

என்று செய்தி வந்திருக்கிறது. நம்முடைய தமிழ்நாடு தொழில் துறையில் 3-வது இடத்தில் இருந்தது இப்போது 7-வது இடத்திற்கு வந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் முக்கியமாக டி.ஐ.ஐ.சி. என்கிற நிறுவனம் எப்படி இயங்குகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இந்த டி.ஐ.ஐ.சி. தான் தொழில் நிறுவனங்களுக்கு எல்லாம் பைனான்ஸ் உதவி செய்கிறது. இதில் எம். டி. யாக இருப்பவரைப் பற்றி நான் முன்பே குறிப்பிட்டேன்.

1979 அக்டோபர் 31] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இவரைப் பற்றி பத்திரிகைகளிலும் பல செய்திகள் வெளி வந்திருக்கிறது. பெரியதொரு ஊழல் அதிகாரி என்றும், இவர் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்கின்ற செய்திகள் எல்லாம் வந்திருக்கிறது. இதுபற்றிய உண்மையை அரசு அறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். கவர்னர் அவர்களுக்கும் இவரைப்பற்றி புகார்கள் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். தொழில் அதிபர்களை மிகவும் மரியாதைக் குறைவாக நடத்துவதாகவும் இவரை சந்திக்கவே முடிவதில்லை என்றும், தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு இடங்களிலிருந்தும் தொழில் அதிபர்கள் வருகிறார்கள் இவரை சந்திப்பதற்கு, ஆனால் இவர் யாரையும் பார்க்க அனுமதிப்பதில்லை. முதலமைச்சர் அவர்களைக்கூட பார்த்துவிடலாம். இவரைப் பார்க்க வந்த சேலத்துக்காரர்கள் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களைக் கூட ஒன்றிரண்டு நாட்கள் காத்திருந்து பார்த்துவிடலாம். ஆனால் இவரைப் பார்க்கவே முடியாது. இதற்கு என்ன காரணம்? வேறு பல முறைகளில் தான் இவரைப் பார்க்க முடியும் என்று சொல்லு கிறார்கள். அந்த முறைகளைப் பற்றியெல்லாம் இதில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவைகளைப்பற்றி கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். (நிதி அமைச்சர் அவர்களிடம் கடிதம் ஒன்றினை கொடுத்தார்..) இவர் ரிசர்வ் பாங்கிலிருந்து வந்தவர் என்று தெரிகிறது. இப்படிப் பட்ட ஆட்களுக்குப் பதிலாக நம்முடைய ஆட்களையே போடுங்கள். ரிசர்வ் பாங்கு போன்ற இடங்களிலுள்ள ஆட்கள் வந்தால் இப்படித்தான் இருக்கும். நம்முடைய ஆட்களை போட்டால் நல்ல முறையில் வேலை செய்வார்கள். பிரமோஷன் வழங்குவதில் ஒழுக்கக் கேடுகள், இங்கிரிமென்ட் வழங்குவதில் ஒழுக்கக்கேடுகள், இப்படிப்பட்ட முறைபாடுகள் எல்லாம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இதைப்பற்றியெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

அடுத்து, ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். நான் முன்பே ஸ்டாம்பு வெண்டர்களைப்பற்றி சொன்னேன், நமது சோமசுந்தரம் அவர்கள் மன்னிக்கவும், மாண்புமிகு சோமசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். இன்னும் ஆறுமாத காலத்திற்குள் அவர்களுக்குரிய கோரிக்கைகள் நிறை வேற்றப்படும் என்று சொன்னார்கள். இன்னும் எதுவும் நிறை வேற்றப்படவில்லை. இந்த ஸ்டாம்பு வெண்டர்களுக்கு ஸ்டாம்பு கமிஷனை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கு கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு, பெரியவர் ஜெபமணி அவர்களும் பேசினார்கள். அவர்களுக்கு ஒரு குறிப்பை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன். 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது....

"A factor or a Principle.

Raj Mohan Gandhi.

As for the Janata Party it has virtually been destroyed. The leaders misappropriated to themselves the party that the people of India created and then destroyed it. The Creators believed themselves to be creators and ended up as destroyers of what was created by and belonged to someoneelse-the Indian Public."

என்று ராஜ்மோகன்காந்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளதை பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய சர்க்காரானாலும் சரி, மாநில சர்க்காரானாலும் சரி, முறைகேடான முறையில் தான் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை குறிக்கின்ற வகையில் 'ஸன்டே' என்ற பத்திரிகையில் 22-7-79-ம் தேதி இதழில் ஒரு உருது கவிதை வந்திருக்கிறது. "அழகிய தோட்டத்தைக் கெடுப்பதற்கு ஒரு குரங்கு போதும், ஒவ்வொரு கிளையிலும் ஒவ்வொரு குரங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறது; இந்த நாட்டின் நிலைமை என்ன ஆகும்? இதுதான் அந்தக் கவிதையின் பொருள்.

இதை நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு அர்பணித்துக் கொள்வதோடு, நான் சொன்ன காரியங்களைப் பற்றி கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, சிறுபான்மை சமுதாயத்தினருக்கு வேண்டிய சலுகைகளை மேலும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>திரு. கு. வடிவேலு</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் 1979–80ஆம் ஆண்டினுடைய முதல் துணை மதிப்பீட்டை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில், ஒருசில கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் இந்த மதிப்பீட்டிலே ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சிக்காக 2.76 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன். இதற்காக நம் நிதி அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்ற நேரத்தில், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல. சென்ற ஆண்டு பட்ஜட் தொடர் கூட்டத்தில் ஆயிரம் பேருக்கு மேலாக வேலை தரக்கூடிய காகித தொழிற்சாலையை உருவாக்குவதாகச் சொல்லி, அந்தத் திட்டத்தைத் துவக்கியிருப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இன்றைய தினம் இந்த துணை மதிப்பீட்டிலே தர்மபுரி மாவட்டத்திலே

1979 அக்டோபர் 31] [திரு. கு. வடிவேலு]

1.75 கோடி ரூபாய்ச் செலவில் பால் பவுடர் தொழிற்சாலை உருவாக்கும் திட்டத்தையும் நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இத்தனை ஆண்டு காலமாக இருந்த உபரி நிலங்களையும், பயிரிடத்தக்க தரிசு நிலங்களையும் ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, தனிப் பணியாளர் களை அரசு நியமித்துள்ளது. அதோடு, இந்த ஆண்டில் 25 முறைப் படுத்தப்பட்ட அங்காடிகளை மேம்படுத்தும் திட்டத்திற்காக 25 இலட்சம் ரூபாய் செலவிட இருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதையடுத்து, தண்டையார்பேட்டையிலும், அண்ணா நகரிலும் அமைந்திருக்கின்ற மருத்துவ மனைகளை விரிவுபடுத்த இருப்பதையும், எழும்பூரிலுள்ள அரசினர் கண் மருத்துவ மனையில் 146 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றையும் தொடங்க இருப்பதையும், அதற்காக நிதி ஒதுக்கி இருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், 152 மேல்நிலைப் பள்ளிகளைக் கூடுதலாகத் தொடங்குஞ் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, 2,000 பட்டதாரி ஆசிரியர்கள் பதவிகளையும், 750 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் பதவிகளையும் புதிதாக ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தை உருவாக்கி இருப்பதற்காகவும் எங்கள் தானைத் தலைவரை, புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அது மட்டுமல்ல, சாலை மேம்பாட்டிற்காக சென்னை மாநகராட்சிக்கு 2.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும் நான் வரவேற்கிறேன். அதோடு போக்குவரத்து நிறுவனங்களுடைய நிதி நிலைமையை வலுப்படுத்துவதற்காக 3.08 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காகவும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதையடுத்து, கிராமப் பகுதிகளிலே வீடு கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்காக உண்மை யிலேயே எங்கள் தானைத் தலைவர் அவர்களை, புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். கிராமங்கள் எல்லாம் நகரங்களாக ஆகவேண்டும். அவைகள் நகரங்களோடு இணைய வேண்டும் என்ற கொள்கையை செயலாக்குகின்ற புரட்சித் தலைவர் அவர்களை கிராம மக்கள் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறைப் பணியாளர்களுக்கும், தீயணைப்புப் பணித் துறை பணியாளர்களுக்கும் ரிஸ்க் அலவன்ஸ் அதாவது இடையூறுப் படி வழங்கப்பட்டுள்ளதற்காக நான் இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

அதேபோல், கிராம அதிகாரிகளுக்கும், டணியாளர்களுக்கும் அளிக்கப்படும் மதிப்பூதியத் தொகையை கூடுதலாக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கதாகும்.

எங்கள் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள், அடித்தளத்திலே உள்ள மக்கள் முன்னேற்றம் காணக்கூடிய வகையிலே, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய வகையிலே இந்த நிதி நிலை துணை மதிப்பீட்டைத் தயாரித்திருக்கிறார்கள். அதேபோல், எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதற்காக, சைக்கிள்களிலே டபுள்ஸ் போகலாம் என்றுஉத்தரவிட்டுள்ளதுஉண்மையிலேயே எல்லோராலும்பாராட்டத்தக்கதாகும். வசதி படைத்தவர்கள் காரிலே செல்லலாம், ஆனால், ஏழை எளிய மக்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள், அந்த நல்லெண்ணத்தைக் கருத்தில் கொண்டு சைக்கிளில் டபிள்ஸ் போகலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக அந்த ஏழை எளிய மக்களின் சார்பாக நான் எங்கள் தானைத் தலைவர் அவர்களை, புரட்சித் தலைவர் அவர்களை பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

அது மட்டுமல்ல, எங்கள் தானைத் தலைவர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் சந்தித்தது மக்கள் போராட்டம் அல்ல; எதிர்க் கட்சிகளின் போராட்டம் அல்ல. இயற்கை போராட்டத்தைச் சந்தித்தார்.

(முற்பகல் 10-50)

1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இயற்கையின் போராட்டத்தைச் சந்தித்த புரட்சித் தலைவர், தானைத் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருஷம் நான்கு மாதங்கள் ஆகிறது. அதாவது 28 மாதங்கள் ஆகிறது. இந்த 28 மாதங்களில் 2800 போராட்டங்களைச் சந்தித்திருக்கிறார்கள். கடைசியாகச் சந்தித்துக் கொண்டிருக்கும் போராட்டம் காவல் துறையினரின் போராட்டம். இதற்கு மேல் போராட்டமே இருக்க முடியாது. இதுதான் கடைசிப் போராட்டமாக இருக்கும். அந்த அளவுக்கு அத்தனை போராட்டங்களும் நடந்து முடிந்துவிட்டன. நிச்சயம் எந்தப் போராட்டத்தையும் சந்திக்கும் வல்லவர் எங்கள் புரட்சித் தலைவர் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழை எளியவர்கள் ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக, தாழ்த்தப்பட்டவர்கள் ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக ஒரு அரிசனக் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் ஈமச்சடங்கு செய்ய உடனடியாக 50 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருப்பது எங்கள் தானைத் தலைவர், புரட்சித் தலைவர் ஆவார். முதியோர் பென்ஷன் 20 ரூபாயாக இருந்ததை 25

1979 அக்டோபர் 31] [திரு. கு. வடிவேல்]

ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள். ஆண்களுக்கு வேட்டியும், பெண்களுக்கு சேலையும் கொடுக்கவும் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

கிராமங்கள் அனைத்திலும் பட்டிதொட்டிகளில் எல்லாம் குடிநீர் வசதி செய்து கொடுத்து, குடிநீர் வசதி இல்லாத கிராமமே இல்லையென்றஅளவுக்குசெய்தற்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார் எங்கள் புரட்சித் தலைவர். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பள்ளிக்கூடமே இல்லாத ஊர் இருக்கக்கூடாது என்று திட்டமிட்டுச்செயல்படுத்தியதுபோன்று இன்றைய தினம் எங்கள் தானைத் தலைவர் ஒவ்வொரு கிராமத்திலும் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளியவர்களுக்கு பட்டா கொடுத்து வருகிறார்கள். வேலைக்கு உத்தரவாதத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.சாலைகள்செப்பனிடப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் செயல்படுத்தி வரும் எங்கள் தானைத் தலைவர் ஆட்சியைப் பார்த்து திரு. சுப்பு அவர்கள் It is a careless Government என்று சொன்னார்கள். நான் அவர்களைப் பார்த்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்— M.G.R. is not running a careless Government but a careful Government.

மக்களது நன்மையில் அக்கறை, மக்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பாடுபட்டு வருகிற, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்துவதற்காகப் பாடுபட்டு வருகிற தானைத் தலைவர் புரட்சித் தலைவரின் அரசு—ஒருகேர்ஃபுல்கவர்ன்மென்ட் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மத்தியில் ஆட்சி புரியும் சரண்சிங் ஆட்சியை கேர் டேக்கர் கவர்ன்மென்ட் என்று சொல்லுகிறார்கள். சரண்சிங் கேர் டேக்கர் கவர்ன்மென்ட் நடத்தினாலும் கூட ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்திரா அம்மையார் ஆட்சி செய்த காலத்தில் தமிழகத்திலிருந்து கரும்பு விவசாயிகள் சார்பாக அவர்கள் பிரதிநிதிகள் சென்று கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அந்த விவசாயப் பிரதிநிதிகள் மட்டுமல்லாது 50 எம்.பி.களையும் அவர்கள் உடன் அழைத்துச் சென்றார்கள். ஆனால், அந்த அம்மையார் அவர்கள் கொடுத்த கோரிக்கையைச் செவி மடுக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். ஆனால், அந்த சமயத்தில் விவசாயிகள் பிரதிநிதியாக பொறுப்பேற்ற சரண்சிங் ஆட்சி கரும்புக்கு டன்னுக்கு குறைந்தபட்சம் 125 ரூபாய் கொடுக்கவேண்டுமென்ற அருமையான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். விவசாயிகளுக்காகப் பாடுபடக்கூடிய கிசான் ஆட்சி என்பதை நிரூபித்துக் காட்டியவர் சரண்சிங். நெல்லுக்குக் கொள்முதல் விலையை அதிகமாக உயர்த்திவரும் சரண்சிங் என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கு. வடிவேல்] [1979 அக்டோபர் 31

ஆகவே, கேர்லஸ் கவர்ன்மென்ட் நாங்கள் நடத்தவில்லை. உங்கள் காலத்தில் நீங்கள்தான் கேர்லஸ் கவர்ன்மென்ட் நடத்தினீர்கள். பொது நலனைக் கருதாது, சொந்த நலனுக்காக சொந்தக் குடும்பத்தின் நலனுக்காக உங்களுடைய குடும்பத்திற்காக ஆட்சி செய்தீர்கள். நாட்டு மக்கள் நன்மையைக் கருதி ஆட்சி செய்யவில்லை. உங்களுடைய கவர்ன்மென்ட்தான் கேர்லஸ் கவர்ன்மென்ட். எங்கள் தானைத் தலைவர், புரட்சித் தலைலர் நடத்தும் அரசு கேர்ஃபுல் கவர்ன்மென்ட் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு அருமையான உத்தரவை எங்கள் தானைத் தலைவர் பிறப்பித்திருக்கிறார். பிற்பட்டவர்களில் ஆண்டு வருமானம் ஒன்பதாயிரத்துக்குக் குறைவாக உள்ளவர்களின் குழந்தைகளுக்கும் கல்லூரிகளில் சேருவதற்கும், வேலை வாய்ப்பு அளிப்பதிலும் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்ற அருமையான உத்தரவைக் கண்டார்கள். அதிலே என்ன குறை கண்டு விட்டீர்கள் நீங்கள். சாதி மத பேதமற்ற சமுதாயம் அமைக்கவேண்டுமென்று சொல்லும்போது இப்படி 9,000 ரூபாய்க்குள் ஆண்டு வருமானம் உள்ளவர்களின் குழந்தைகளுக்குத்தான் இந்தச் சலுகைகள் என்று சொல்லுவதின் மூலம் உங்களுடைய பிள்ளைகளுக்கு சலுகைகள் கிடைக்காதே என்பதற்காக எதிர்க்கிறீர்களா? செருப்புத் தைக்கும் தொழிலாளி, வண்டி இழுக்கும் தொழிலாளி, பாரம் சுமக்கும் தொழிலாளி ஆகியோரின் பிள்ளைகள் மெடிகல் காலேஜில், எஞ்சினியரிங் காலேஜில் படிக்கக்கூடிய சூழ்நிலைகள் இப்போது உருவாகியிருக்கிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில் மருத்துவக் கல்லூரியில் இடம் வேண்டுமென்றால், எஞ்சினியரிங் கல்லூரியில் இடம் வேண்டுமென்றால் 50,000 ரூபாய் செலவு செய்ய வேண்டும். எங்கள் தானைத் தலைவர் ஆட்சியில் ஒரு வசதியற்ற வாய்ப்பற்ற தாழ்த்தப்பட்ட மாணவன் மெடிகல் காலேஜில், எஞ்சினியரிங் காலேஜில் சேருவதற்கு ஐந்து ரூபாய் செலுத்தி விண்ணப்பம் செய்து தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதைச் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

அது மட்டுமல்லாமல் இந்த உத்திரவைப் பொறுத்தவரையில் வேண்டுமென்றால்.......

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். 50 ஆயிரம் ரூபாய் எங்கள் காலத்திலே யாரோ செலவு செய்வதாகக் கூறுகிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள்.

1979 அக்டோபர் 31]

திரு. சி. ஆறுமுகம்: இது நியாயமில்லை. அப்படியென்றால் இப்போது கூட யார் யார் எவ்வளவு வாங்கினார்கள் என்று சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு சொல்லலாம்.

திரு. கு. வடிவேல்: 9 ஆயிரம் என்பது குறைவாக இருக்கிறது, அதை 15 ஆயிரமாக உயர்த்தவேண்டுமென்று சொன்னால் பரவாயில்லை, ஆனால் இந்த உத்திரவே தவறானது என்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா பேசும்போது சட்டமன்றத்தை மதிப்பது இல்லை, சட்டமன்ற உறுப்பினர்களை மதிக்கவில்லை என்று சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்களும் இங்கே இருக்கின்ற அத்தனை அமைச்சர்களும் எங்களுக்கு மதிப்புக் கொடுக்கிறார்களோ இல்லையோ மாற்றுக் கட்சி உறுப்பினர்களுக்கு மதிப்புத் தருகிறார்கள். இது எங்கள் வீடு, எங்களை மதிக்காவிட்டாலும் கடமையாற்ற வேண்டிய கடமையில் நாங்கள் இருக்கிறோம். அடுத்து எங்கள் தொகுதியில்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முடித்துவிடுங்கள்.

திரு. கு. வடிவேல்; எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. க, சுப்பு: முதலமைச்சர் எங்களை மதிக்கவில்லை என்று குற்றச்சாட்டு சொல்லவில்லை. இந்த அவையை மதிப்பதில்லை, இங்கே வருவதில்லை, உடல் நிலை சரியில்லை, ஆனால் வெளியே நன்றாக இருக்கிறார். அதைத்தான் நாங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கூட கொடுத்திருக்கிறோம்.

திரு. சி. ஆறுமுகம்: உறுப்பினர் திரு. வடிவேல் பேசும்போது எங்கள் காலத்திலே மெடிக்கல் சீட்டிற்கு 50 ஆயிரம் செலவு செய்ததாக சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம் உட்காருங்கள். பேசி முடித்த பிறகு அடுத்து வருகிறவர்களுக்கு அதைப்பற்றி பேச வாய்ப்பு இருக்கிறது. அடுத்தவர்கள் பேசுகிற போது பதில் சொல்கிற வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: குற்றச்சாட்டைச் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களைப் பற்றிச் சொன்னாரா? உட்காருங்கள். நினைத்த நேரத்திலே எழுந்து பேசக்கூடாது. உட்காருங்கள்.

திரு. சி. ஆறுமுகம்; எங்கள் பார்ட்டியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். பதில் சொல்ல வேண்டியது எங்கள் கடமை.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: உட்காருங்கள். சப்ளிமென்டரி டிமான்ட்ஸிலே பேசும்பொழுது எந்த எந்த தலைப்புகளிலே நிதி ஒதுக்கம் கோரப்பட்டிருக்கிறதோ அதைப் பற்றி பேசலாம். 160-வது விதியிலே அதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற எல்லாவற்றையும் பற்றிப் பேசினால் 1 மணிக்குள் முடிக்க முடியாது. ஆகவே அதைப் பற்றி மட்டும் பேச வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: நிதிச் சட்டத்திலே அப்படி முடியாது சார். அந்தமாதிரி ரூலிங் கொடுக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: விதியிலே The discussion on a demand for a supplementary or additional Grant shall be confined to the details of which it is composed.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே விதியே இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: இதுவரைக்கும் அப்படி பேசியிருந்தால் அப்படி ரூலிங் கொடுங்கள். சிலவற்றை எல்லாம் நாம் மரபு என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அது இருக்கட்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து; ரூல்ஸிலே இருந்தாலும் கன்வென்ஷன் என்ற முறையிலே சிலவற்றை நாம் சேர்த்து பேசியிருக்கிறோம். அந்த கன்வென்ஷனை அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுருக்கமாகப் பேசினால் நேரத்திற்குள் முடிக்க முடியும். எல்லாவற்றையும் பேசினால் முடிக்க முடியாது என்பதற்காகச் சொல்கிறேன்.

[முற்பகல் 11-00]

திரு. து. இராமசாமி: தலைவரவர்களே, துணை மதிப்பீட்டிலே எஸ். எஃப். டி. ஏ., ஐ. ஆர். டி. பி.க்கு 2.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆரம்பக் காலத்திலேயிருந்து இந்தச் சட்ட சபையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்த

1979 அக்டோபர் 31] [திரு. து. இராமசாமி]

தலைவர்களும், உறுப்பினர்களும் விவசாயிகளின் குறைகள் தீர்க்கப்படவில்லை. அவர்களுக்கு வழங்கப்படக் கூடிய மானியம் குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறி வந்திருக்கிறோம், ஆனாலும், இதிலும் குறைத்துக் கொடுத்திருப்பது உண்மையிலேயே வருந்தத் தக்கது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் மதுரையிலே நடைபெற இருக்கின்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு 1.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதற்கு ஒரு கோடியே 43 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது அந்த அளவிற்குத் தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். அங்கே நன்றாக இருக்கின்ற சாலைகளையெல்லாம்கூட இடித்து விட்டுப் புதிய சாலைகள் அமைப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, 1.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது அங்கிருக்கின்ற காண்ட்ராக்டர்களின் வசதியைப் பெருக்கவா அல்லது உலகத் தமிழ் மாநாடு சிறப்பாக நடைபெறச் செய்வதற்கா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை.

சாலைகளை மேம்படுத்தவும், தனியார் சாலைகள் மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தவும், சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்காக 2.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். தனியார் சாலைகள் மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்துவதைப் பற்றி இங்கே தெளிவாகக் குறிப்பிடவில்லை. தனியார்களுக்கு உதவி செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது கார்ப்பரேஷனைச் சேர்ந்த சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பது இங்கே தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

ஆரம்பத்திலே நான் சொன்னதைப்போல விவசாயிகளுக்கு என்று பல பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி ஏற்கனவே தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறோம். ஆனால் இன்று வரையில் விவசாயிகளின் பிரச்னை தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் விவசாயம் செய்யும் பொழுது இயற்கை ஒத்துழைத்தால்தான் அவர்கள் சிறப்பாகச் செய்ய முடியும். ஆனால் இயற்கை ஒத்துழைக்காத நேரத்தில் அவர்களுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் விவசாயப் பயிர்கள் நோயால் தாக்கப்படும் நேரத்தில் அதற்கான மருந்துகள் இங்கே கிடைப்பதில்லை என்ற நிலை இருக்கிறது. குறிப்பாக புகையான் நோயினால் பெருமளவில் நெற்பயிர் கெட்டிருக்கும் நேரத்தில் அதற்குத் தக்க மருந்துகள் இன்னும் கிடைக்காமல் அவதிப்படுவதை நாம் காண்கிறோம். காம்ப்ளக்ஸ், சர்பைட் ஆகியவைகள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. அவைகள் கறுப்பு மார்க்கெட்டில் தான் கிடைக்கிறதே தவிர, நியாயமான விலைக்கு விவசாயிகளால் வாங்க முடியவில்லை. அதற்கும் இந்த அரசு எந்த விதமான

நடவடிக்கையும் எடுக்காமல் மெத்தனமாக இருப்பதானது வருந்தத்தக்க ஒன்று என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டிராக்டர்கள், ஸ்ப்ரேயர்கள், உரம், பூச்சு மருந்து ஆகியவற்றின் விலைகள் விஷம்போல் ஏறி இருக்கின்றன. மின்சாரக் கட்டணமும் உயர்த்தப்பட்டுக் கொண்டே போகின்ற நிலையைக் காண முடிகிறதே தவிர அதற்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசு முன் வராதது வருந்தத்தக்கது. பலயிடங்களில் நிலத்தடி நீர் கீழ் நோக்கிச் செல்வதால் விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள். அவர்கள் ஆழ் கிணறுகள் அமைத்துக் கொள்ளவும், மின்சாரப் பம்பு செட்டுகள் பொருத்திக் கொள்ளவும் அரசு கடன் மூலமாகவோ அல்லது சப்சிடி மூலமாகவோ உதவி செய்ய முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இதுபோன்ற பல நூறு குறைகள் நீக்கப்படாமல் விவசாயிகள் அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், ஜப்தி செய்யும் காட்சியையும் கண்டு கொண்டிருக்கிறோம். டிராக்டர்கள், பம்பு செட்டுகள், வீடு ஆகியவை ஜப்தி செய்யப்பட்டு, விவசாயியின் மனைவி மக்களை வீதியிலே நிறுத்தி, கணவனை வெஞ்சிறையிலே அடைக்கும் கொடுமைகளை இந்த அரசு நிறுத்த வேண்டும். விவசாயிகள் தங்கள் குறைகளைக் கூறுகின்ற நேரத்தில், அவர்களைக் கூப்பிட்டுப் பேசாமல் அவர்களைச் சுட்டுப் பொசுக்கும் நிலை இந்த அரசில் இன்னும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. இவைகளையெல்லாம் பற்றி இங்கே நான் கூறும் பொழுது, முதல்வரவர்கள் இல்லாத காரணத்தால் அவருக்கு ஒன்றும் புரியவில்லை; விவசாயக் குடும்பத்திலே இருந்து வந்துள்ள அமைச்சர்களும், மற்றும் ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும் இங்கே ஊமையாக இருப்பது ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலமைச்சரை அணுகி விஷயத்தை எடுத்துச் சொல்ல ஏன் அஞ்சுகிறார்கள் என்று புரியவில்லை. இந்த நிலையைப் பார்த்து பரிதாபப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

கடந்த தொடர் கூட்டத்தில் குறிப்பிட்டோம், நூல் விலை மிக அதிகமாக ஏறியிருப்பதால் நூல் ஆலையைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அதிக இலாபம் கிடைக்கிறது, நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். அவர்களுக்கு உதவ உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டோம். ஆனால், இதுவரையில் அரசு எந்த நடவடிக்கையிலும் இறங்காமல் இருப்பதால் நெசவாளர் பெருங் குடி மக்களை உதாசீனம் செய்கிறார்கள் என்று தான் நான் கூற விரும்புகிறேன்.

அதே போன்று இன்று இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு எந்த அளவுக்குச் சீர்குலைந்து இருக்கிறது என்பதை ஒருசில குறிப்புகள் மூலம் நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பெரியார்

மாவட்டம் என்று அறிவித்த ஒருசில தினங்களிலே அங்கு காட்டுப் பாளையம் என்ற ஊரிலே காலை 9.00 மணிக்கு ஒரு குடும் பத்தைச் சேர்ந்த 8 பேர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்றால் இங்கு சட்டம் ஒழுங்கு எந்த அளவு சீர்கெட்டு இருக் கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். போலீஸ் காவல் கைதிகளாக, காவல் நிலையங்களிலே இருந்தவர்கள் பல பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் முன்பே கேள்விப் பட்டிருக்கிறோம். சென்னை நகரத்திலே, அமைச் சர்கள் இருக்கிற நகரத்திலே, இந்திரா நகரிலே ஆரம்பித்து பல இடங்களிலே தாய்மார்கள் கொலை செய்யப்பட்டு இலட்சக் கணக்கான ரூபாய்கள் எல்லாம் திரட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கொலைகள் இதுவரை தடுத்து நிறுத்தப்படவில்லை. இது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குளித்தலை, மணப்பாறை போலீஸ் நிலையங்களை, மக்கள் சூழ்ந்து கொண்டு, போலீஸ் அராஜகத்தைக் கண்டிக்கிற நிலையைப் பார்க்கிறோம். கணவன்—மனைவி இரண்டாம் ஆட்டம் சினிமா பார்த்து விட்டு வீடு திரும்பும் போது, அவர்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மனைவியிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்கள் போலீசார் என்ற நிலையில் மக்கள் கொதிப்படைந்தார்கள் என்பதை நாம் மறத்து விட முடியாது.

காவல் நிலையங்களிலே வதைக்கிறார்கள், அடிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை எல்லாம் நாம் பத்திரிகை வாயிலாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆக, இங்கு சட்டம் ஒழுங்கு மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்ற 30 ஆண்டுக் காலத்திலே பெண்கள் கல்லூரியிலே இதுவரை ஸ்டிரைக் நடந்ததேகிடையாது. ஆனால், எஸ். ஐ. இ. டி. கல்லூரி, செல்லம்மாள் கல்லூரி, இங் கெல்லாம் நிர்வாக ஊழல் காரணமாக, மாணவிகள், மற்றும் ஊழியர்கள் எல்லாம் கல்லூரிக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்த நேரத்திலே ஊழலைக் குறைக்க, போக்க முன் வராத அரசு, தொடர்ந்து கல்லூரிகளை மூடுவதைத்தான் நாம் பார்க்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சேலம் அரசு கலைக் கல்லூரி 3 மாதங்களாக மூடிக் கிடக்கிறது. அங்கு நடந்த மாணவர்கள் தேர்தலில் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெறவில்லையென்ற காரணத் திற்காக, அங்கு கல்லூரி மூடப்பட்டு, படிப்பைத் தொடர முடியாத காரணத்தாலே, வரப்போகிற காலத்திலே, தேர்வு கூட எழுத முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை யெல்லாம், கல்வித் துறையிலே இருப்பவர்கள் கவனிப்பதில்லை. அரசும் எந்த விதமான முக்கியத்துவமும் இதற்குக் கொடுப்ப

தில்லையென்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே கூற விரும்பு கிறேன். ஆரம்ப காலத்திலே எந்த ஒரு வேலை நிறுத்தம் வந்தாலும், வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருப்பது தொழிற் சங்கமாக இருந்தாலும், என். ஜி. ஓ. சங்கமாக இருந்தாலும், ஆசிரியர்கள் சங்கமாக இருந்தாலும், அந்தத் தொழிற்சங்கத் தினரை அழைத்துப் பேசுவதற்குப் பதிலாக, அவற்றிற்குப் போட்டியாக ஆளுங்கட்சிக்காரர்களால் உருவாக்கப்பட்ட பொம்மை சங்கங்களை அழைத்து முடிவு செய்கிற காட்சியைத் தான் நாம் காண முடிகிறது. நேற்று கூட ஆசிரியர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள்: குறிப்பாக, மேலவை உறுப்பினர் முத்துசாமி தலைமையிலே இருக்கிற சங்கத்திலே பெரும்பான்மையான ஆசிரியர்கள் உறுப்பினர்களாக இருக்கி றார்கள். அவர்களை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினை யிலே தீர்வு காண முன்வரவில்லை. அவர்கள் பலமுறை முதலமைச்சரையும் கல்வி அமைச்சரையும் சந்தித்துப் பேச வேண்டுமென்று கேட்டும், பேச சந்தர்ப்பம் அளிக்கப்படாததால், வேலை நிறுத்தத்திலே ஈடு பட்டிருக்கிறோம் என்று நண்பர் முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, அவர்களை அழைத்துப் பேசாமல், வேறு ஒரு பொம்மை சங்கத் தலைவரை அழைத்துப் பேசி முடிவு காண முயன்று கொண்டிருக்கிறது இந்த அரசு.

அதே போன்று காவல் துறையினருக்குச் சங்கம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்த பிறகு, அவர்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற முறையை அவர் களிடம் ஒப்படைக்காமல் வேறு யாரோ ஒருவரைத் தலைவராக நியமித்து விட்டு, அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்ததனால், 3000 பேர் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். இதைவிடக் கொடுமையான நிலைமை வேறு வேண்டியதில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டிலே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சிறைச் சாலைகளிலே அடைக்கப்பட்டு, ராணுவம் அழைக்கப்பட்டு, ராணுவ ஆட்சி நடக்கின்ற நிலைமையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது என்பதைக் கூறி, அதை வன்மையாக கண்டிக்கிறேன்.

(முற்பகல் 11-10)

தொழிலாளர் உரிமையைப் பாதிக்கின்ற முறையிலே இன்று ஒரு சட்டம் இங்கு வந்திருப்பதை நாம் காண முடிகிறது. கடந்த கூட்டத் தொடரிலே முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள், "இங்கே இருக்கின்ற ஆலை அரசுகளை எல்லாம் அழைத்துப் பேசினேன். பல புதிய தொழிற்சாலைகள் உருவாக்க முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம் என்று கூறினார்கள். ஆனால் ஆலை அரசுகளைக் கலந்து பேசிய பிறகுதான் தொழிலாளர்கள் உரிமையைப் பறிக்கின்ற சட்டம் வருகிறது என்று சொன்னால் முதலமைச்சர் சொல்வதிலும், இன்று நடைபெறுகின்ற நிகழ்ச்சி

1979 அக்டோபர் 31] [திரு. து. இராமசாமி]

களையும் பார்க்கின்றபோது நாம் உண்மையிலேயே அவர்கள் மீது சந்தேகப்பட வேண்டிய ஒரு நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோமே தவிர வேறில்லை என்று இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

எந்த ஒரு போராட்டம் வந்தாலும் அந்தப் போராட்டத் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேச தைரியம் இல்லாமல் அதை மிகைப்படுத்திக் கொண்டே வந்துவிட்டு கடைசியிலே அவர் கூறுவது எல்லாம் அடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் அவர்களைத் தூண்டி விடுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் போராட்டங்களைப் பெரிது படுத்திவிடுகிறார்கள்' என்று கூறி மாற்று அரசியல் கட்சித் தலைவர்கள் மீது பழி சுமத்துவது உங்களுடைய கையாலாகாத்தனத்தைத்தான் காட்டுகிறது.

அடுத்தபடியாக ஜனநாயக முறைப்படி வந்த பஞ்சாயத்துக்களைக் கலைத்து இருக்கிறார்கள். ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்களைக் கலைத்தது தவறு என்று நாம் கூறுகிற நேரத்திலே நண்பர் ஜெபமணி அவர்களுக்கு அதிகமாகக் கோபம் உண்டாகிறது. காரணம் ஒரே உத்தரவிலே 9 மாநில அரசுகளைக் கலைத்துவிடுகின்ற காரியத்தைச் செய்தவர்கள் பஞ்சாயத்துக்களைக் கலைத்தது சரியென்று சொல்லாமல் தவறென்று எப்படி ஒப்புக்கொள்வார்கள். அப்படி பஞ்சாயத்துக்களைக் கலைத்தது எந்த முறையிலும் சரியென்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். இனிமேலாவது இந்த அரசு........

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் சாதாரணமாகப் பேசி இருக்கலாம். திரு. ஜெபமணி அவர்கள் பெயரை வேறு இழுத்து விட்டீர்கள். அவர் எழுந்து நிற்கிறார்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, ஒருவர் பேசுகிற போது மற்றவர்களை அனுமதிக்கக் கூடாது என்று நீங்கள்தான் சொல்லி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ''நாட் யீல்டிங்'' என்றால் நான் அவரை அனுமதிக்கவில்லை.

திரு. து. இராமசாமி : நான் ''நாட் யீல்டிங்'', இனி மேலாவது இந்த அரசு இது போன்ற நிலைமையிலே இல்லாமல் தங்களைத் திருத்திக் கொண்டு பொறுப்புணர்வுடன் ஈடுபட வேண்டும். அப்படிச் செய்யத் தவறுவார்களேயானால் வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே ''குவிட் இந்தியா'' என்ற போராட்டம் வந்ததைப் போல ''குவிட் ஏ.ஐ.ஏ.டி.எம்.கே.''

என்ற போராட்டம் நடத்தி மக்கள் உங்களை நீக்குவதற்குள் பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு வாய்ப்பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்,

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 1979–80-ம் ஆண்டு கூடுதல் செலவினத் துணை மானியக் கோரிக்கை மீது நான் சில வார்த்தைகளை இந்த அவையின் முன் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், தங்கள் மேலான அனுமதியுடன்.

முதலில் இந்த அரசு தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கோவை மாவட்டத்தைப் பிரித்து, அந்தப் பகுதிக்கு ''பெரியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டியதற்காக தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையின் மிகப் பழைய அங்கத்தினர் என்ற முறையில் தமிழக முதல்வர் அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாக வசதியைக் கருதி, அண்மையிலே கூட வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னதாக பத்திரிகைகளிலே பார்த்தேன். அந்த நிலை வரும்போது......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்.

திரு. என். கிட்டப்பா : வருவாய்த் துறை அமைச்சர் இல்லை என்றால், வேறு யாரோ ஒரு பொறுப்பான அமைச்சர் சொல்லியிருக்கிறார். அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு இருப்பதால் அவர் சொன்னதாக நான் கருதிச் சொல்லிவிட்டேன். தவறாக இருந்தால் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மாதிரி அந்த மாவட்டத்தைப் பிரிக்கிற போது சுயமரியாதை இயக்கத்தில் ஆரம்பத்திலிருந்தே ஈடுபட்டு அதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தியாகி திரு. பன்னீர் செல்வத்தின் பெயரை அந்த மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெரியார் 100வது ஆண்டு விழா கொண்டாட ஆரம்பித்த காலத்தில் குறிப்பிட்டார்கள். இந்த அவையில் தந்தை பெரியாருடைய படத்தையும், டாக்டர் அம்பேத்கார் திருவுருவப் படத்தையும் (குறுக்கீடு காயிதே மில்லத் அவர்கள் படத்தையும்) திறந்து வைப்பதாகக் குறிப்பிட்டார்கள் இந்தப் படங்களைத் திறந்து வைப்பதை விரைவு படுத்தி, செயலாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) அதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டு இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. என். சிட்டப்பா]

அடுத்தாற்போல், நான் மிக வருத்தத்தோடு இந்த அவையில் எடுத்துச் சொல்ல விரும்புவது, இந்த ஆட்சியின் மகத்தான சாதனையாக, மாபெரும் வீரச்செயல் என்கிற அடிப்படையில் பொய் வழக்குகள் எவ்வளவு அதிகமாகப் போடமுடியுமோ அவ்வளவு அதிகமாகப் போட்டுக் கொண்டு வருவது நாடு இன்றைய தினம் மிக நன்றாக உணரத் தலைப்பட்டு இருக்கிறது என்பதை என்னுடைய அனுபவத்தை ஒட்டிக் கூட என்னாலே எடுத்துச் சொல்ல முடியும்.

என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுமை இழைக்கப் படுவதாக நிலைமை வருகிறபோது, அதைத் தொடர்புடைய அதிகாரிகளிடத்தில் எடுத்துச் சொல்லி புகார் கூறும் போது, யார் மீது புகார் கூறப்படுகிறதோ அவர்களை விட்டு விட்டு அவர்களுக்கு ஒரு 10–15 காவல் துறையைச் சேர்ந்தவர்களை—மந்திரிக்குக்கூட தர முடியாத அளவிற்கு, தராத அளவிற்கு—காவலாகப் போட்டுவிட்டு, புகார் கொடுத்தவர்களை எந்த அளவிற்கு அவனை சிக்கவிடலாம் என்பதிலே, அவனை மாட்டவிடலாம் என்பதிலே—நியாயமாக மாட்டிக் கொண்டால் பரவாயில்லை—நியாயத்திற்குப் புறம்பாக, உண்மைக்குப் புறம்பாக பொய் வழக்குப் போடப் படுகிறது. இவையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குச் செல்கிறதோ இல்லையோ என்கிற ஐயப்பாடு கூட எனக்கு எழத் தோன்றுகிறது. என்னைப் போன்ற இயக்கத் தொண்டர்கள் ஒரு காலத்தில் அவர்களோடு நன்கு பழகியவர்கள். அவர்கள் என்றும் பாகுபாடு அற்ற நிலையை கொண்டவர்கள். அந்த நம்பிக்கை எங்களுக்கு இன்னும் இருக்கிறது. எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்களை மதிப்பவர்கள். இங்கே பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட குறிப்பிட்டார். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டது போல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே அறிந்தவர்கள் என்ற காரணத்தால், தற்போது, மணம் உண்டு என்று கூட ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை, மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் இல்லை என்று சொல்லிவிட்டாலும் பரவாயில்லை, அதிலே மலவாடை வீசுகிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு தங்களை ஆக்கிக் கொள்ளவேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவிற்குப் பொய் வழக்குகள் போடப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

அடுத்தாற்போல், போக்குவரத்துத் துறை பற்றி நான் ஒரு சிலவற்றை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நேற்றைய தினம் கூட, இது பற்றி இங்கே பேசப்

பட்டது. போக்குவரத்துத் துறையில் குறிப்பாக, சோழன் போக்குவரத்துத் துறையில் பணியாற்றிய நடத்துனர்கள், கண்டக்டர்கள் பலபேர் வேலையை விட்டு நீக்கப்பட்டு இருந்தார்கள். அவர்களில் சில பேர் சேர்க்கப்பட்டு இருப்பதாக பின்னால் அறிவிக்கப் பட்டது. அத்தகைய முறையில் நீக்கப் பட்டவர்கள் இன்றைய தினம் குடந்தையிலே கைது செய்யப் பட்டு, திருச்சி மத்திய சிறைச்சாலையில் இருந்ததாகவும், அங்கே அவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டு வருவதாகவும் செய்திகள் என்னைப்போன்ற தோழர்களுக்கு—தலைவர்களுக்கு மட்டுமல்ல—தந்திகள் வந்து கொண்டு இருக்கின்றன என்பதைக் காண்கிறபோது, அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில், இதைப்போலவே, எந்தக் காரணத்தைச் சொல்லி, சோழன் போக்குவரத்துக் கழகத்தில் இருந்த கண்டக்டர்களை வேலை நீக்கம் செய்து இருக்கிறார்களோ, அதே காரணத்தைச் சொல்லி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் வேலையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை 'முரசொலி' பத்திரிக்கையில் அல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலையாய பத்திரிக்கையான 'அண்ணா' பத்திரிக்கையில் அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு வந்திருக்கிறது. அந்தப் பத்திரிக்கையில் வந்த செய்தி—மதுரை பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் கல்வி தராதரம் இன்றி நியமிக்கப் பட்டதால் வேலையில் இருந்து நீக்கப்பட்ட தோழர்களை தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் ஒருவர் தொழிலாளர் நல அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் மூலமாக வேலை கிடைக்கச் செய்ததாகவும் செய்தி 19—12—1978 'அண்ணா' இதழில் வந்து இருக்கிறது. 20ஆம் தேதி வெளியூர் இதழில் வந்து இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு

[முற்பகல் 11-20]

இருக்கிறேன். எனவே மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று சொல்வதில் பலன்இருக்க முடியாது. அது எந்தக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்று பார்க்காமல், ஒரே அரசாங்கத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் என்ற முறையில், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு நீதி, சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு நீதி என்று வழங்காமல், பாண்டியன் போக்குவரத்துக் கழக நடத்துனர்கள் சேர்க்கப் பட்டதைப் போல சோழன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து நீக்கப்பட்ட நடத்துநர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. என். கிட்டப்பா]

அடுத்தபடியாக, நான் ஒரு கேள்வி கேட்டிருந்தேன்; அதற்கு இங்கே எனக்கு ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மாயூரத்தின் அருகே பேருந்து விபத்து நடந்தது. அதைப்பற்றி இந்த அவையிலே பேசும்போது முதலமைச்சரவர்கள், முதலமைச்சர் நிதியிலிருந்து அவர்களுக்கு எல்லாம் உதவிப் பணம் வழங்கப்பட்டது, யார், யாருக்கு எவ்வளவு வழங்கப்பட்டது என்று சொன்னார்கள்; பெயர்களைப் படிக்க நேரம் இல்லாததால் விட்டுவிடுகிறேன், ஆள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள்.

ஆனால், நடைமுறையில் ஒன்றை நான் கேள்விப்பட்டேன். நான் கேள்விப்பட்டது உண்மை என்ற அடிப்படையிலே அதை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உயிரிழந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. ஆனால் காலர்போன் முறிந்த ஒருவருக்கு—திரிசங்கு என்பது அவருடைய பெயர்—15,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. நம்பர் 5440/எல்.எஸ்./பி.டி.சி./(எம்)/78, தேதி 29—3—78....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்த ஒருவருக்கு ஆயிரம் ரூபாய் தான் தரமுடியும் என்ற நியதி இருப்பதால் அந்த அடிப்படையிலே ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. ஆனால் கால் முறிந்தவருக்கு காம்பன்சேஷன் என்ற முறையிலே எம்.ஏ.சி.டி. அல்லது செட்டில்மென்ட் அவுட் ஆஃப் தி கோர்ட் முறையில் 10,000 முதல் 15,000 ரூபாய் வரையில் தரப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா: நான் சொல்ல விரும்புவது, காலர் போன் முறிந்தவருக்கு 15,000 ரூபாய் தரப்படுகிறது; ஆனால் உயிரிழந்தவருக்கு 1000 ரூபாய் தான் தரப்படுகிறது. அவர்கள் வழக்குமன்றத்திற்குப் போகிறார்கள்; வழக்கு மன்றத்திற்குப் போன பின்னால் மேலும் சில ஆயிரம் கிடைப்பதாகக் கூறப்படுகிறது. இதை நான் சொல்லும்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; அதை பரிசீலிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அந்த எலும்பு முறிவைப்பற்றிச் சொல்லும்போது, அவர் இந்தத் துறையில் பணியில் அமர்ந்தவர் கூட அல்ல; வியாபாரத் துறையில் ஈடுபட்டவர்.

இறுதியாக, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுநாயக்கன் சமூகம் என்று ஒரு சமூகம் இருப்பதை பெரும்பாலும் எல்லோரும் அறிவார்கள். அந்த சமூகம் ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்ததாகும். அந்த சமூக மக்கள் எல்லா நகரங்களிலும், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, கோவை, தர்மபுரி, தென்னாற்காடு, வடாற்காடு, செங்கற்பட்டு, சேலம், சென்னை ஆகிய எல்லா ஜில்லாக்களிலும் துப்புரவுத் தொழிலை செய்து வருகிறார்கள்;

நகரசுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால், இவர் காட்டுநாயக்கன் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று அத்தாட்சி தருவதற்கு தாசில்தார் மறுக்கிறார். கும்பகோணத்தில் இருக்கிற தாசில்தார் சர்டிபிக்கேட் கொடுக்கிறார். ஒருவேளை நண்பர் இராதா அவர்களுடைய தயவால் கொடுக்கிறாரோ என்னவோ தெரியாது. ஆனால் மாயூரத்தில் இருக்கிற தாசில்தார் சர்டிபிக்கேட் கொடுக்க மறுக்கிறார். மாயூரத்தில் நான் இருக்கிற பாவத்தானோ என்னவோ—பாவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை—நான் இருக்கிற காரணத்தால் கொடுக்க மறுக்கிறாரா என்று தெரியவில்லை.

அந்த காட்டுநாயக்கன் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் ஒன்றுகூடி ஒரு மாநாடு நடத்தி, அதன் மூலம் நமது அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகை சர்டிபிகேட் கொடுக்க மறுப்பதால் கிடைக்காமல் போகிறது என்று குறைபடுகிறார்கள். இந்த அவையிலே காட்டுநாயக்கன் சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாது. இங்கே அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்காக வாதாட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொண்டு, அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் மணியடிக்கப்படவில்லை என்றாலும் இன்னும் இரண்டு மூன்று விஷயங்களில் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கீழ மாயூரத்தில் உள்ள திருமங்கலம் ஒன்றியத்தில் அரசு பள்ளிக்கு கட்டடம் கட்டுவதற்கு பணம் கூட கொடுக்கப்பட்டு இடம் வாங்கப்பட்டு, ஆனால் கட்டிடம் மட்டும் கட்டப்பெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது, அதற்கு முன்னால் பணம் கொடுக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் கட்டிட வேலைகள் முடிவடைந்து விட்டன. ஆனால் மாயூரம், திருமங்கலம் ஒன்றியத்தில் மட்டும் அரசினர் உயர் தொடக்கப் பள்ளிக்கூட கட்டிடம் கட்டவே ஆரம்பிக்கப்படவில்லை. அதை விரைவில் கட்டி முடிப்பதற்கு அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவத் துறையைப் பற்றி இரண்டொரு கருத்துக்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைக்கு கூட அமைச்சர் அவர்கள் எல்லாக் கட்சி கொறடாக்களையும் கூப்பிட்டு உங்கள் தொகுதிகளிலே என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று எழுதி அனுப்புங்கள் என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் மாயூரம் தொகுதியில் மாயூரம் தாலுக்காவில் உள்ள மருத்துவ மனையில் ஈ.சி.ஜி. சாதனம் ஒன்று வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்களிடம் கூட சென்ற முறை சொன்னேன். சட்ட மன்ற உறுப்பினர்களில்

1979 அக்டோபர் 31] [திரு. என். கிட்டப்பா]

மூன்று பேர் மாயூரம் மருத்துவ மனைக்கு ஈ. சி. ஜி. வேண்டும் என்று எழுதிக் கொடுத்தார்கள். முதலமைச்சர் அவர்கள் கூட அதற்கு உறுதியளித்தார்கள். சில நாட்களுக்குள்ளாகவே அந்த ஈ.சி.ஜி. சாதன அமைப்பு வந்து சேர்ந்தது. ஆனால் வந்து சேர்ந்ததே தவிர அது பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. அதை ஆபரேட் பண்ண தேவையான ஆட்கள் இல்லை, ஆபரேட் பண்ணக் கூடிய நிலையிலும் அந்த சாதனம் இல்லை. என்னைப்போன்ற நோயாளிகளுக்குத்தான் அந்த சாதனத்தின் முக்கியத்துவம் தெரியும். எனவே அந்த ஈ.சி.ஜி. சாதனத்தை சிறந்த முறையில் பணியாற்றும்படி மாற்றி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசினர் தோட்டத்தில் ஒரு மருந்தகம் உண்டு. நான் பலதடவைகள் ஆளும் கட்சியில் இருந்தபோது கூட இதை சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஏதோ எதிர்க்கட்சியில் இருப்பதால் தான் குற்றம் சொல்வதாக நினைக்க வேண்டாம். மவுண்ட் ரோடை அண்ணாசாலை என்று பெயர் மாற்றி விட்டார்கள். ஆனால், அண்ணா சாலையில் உள்ள அரசினர் தோட்டத்தில் உள்ள இந்த மருந்தகத்திற்குக் மவுண்ட் ரோடு கவர்ன்மெண்ட் டிஸ்பென்சரி என்றுதான் பலகை போடப்பட்டிருக்கிறது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன், மருந்துகள் எல்லாம் அங்கு கிடைக்கின்றன. தேவையான மருந்துகள் கிடைக்கவில்லை என்றால் அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னால் நிலைமையை சரி செய்து விடுவார் என்று நம்புகிறேன்.

அடுத்து மாயூரத்தில் முடிகண்ணநல்லூரில் வக்கரமாரி வழியாக வரும்—வக்கிரமாரி என்பது ஒரு ஊரின் பெயர், நான் ஏதோ கெட்ட வார்த்தை சொல்வதாக நினைக்க வேண்டாம். அங்கே ஒரு பாலம் அமைப்பதற்கு டெண்டர் எல்லாம் போட்டு, வொர்க் ஆர்டர்கள் தரப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் வேலைகள் தொடங்கப்பட வில்லை, அதை உடனடியாக தொடங்கி கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ராஜண்ணன் வாய்க்கால் என்று ஒன்று கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இது மிக ஆழமான வாய்க்கால், மிகக் குறுகலான வாய்க்காலாக இருந்தாலும் கூட, மிக ஆழமான வாய்க்கால் என்ற அடிப்படையில், மிகத் தேவையான வாய்க்கால் என்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கிற திட்டம். இதை செயல்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகரமன்ற அலுவலர்களுக்கு 14-1-70-ம் தேதியன்று ஓய்வுபெற்றவர்களுக்கு மட்டும்தான் ஓய்வூதியம் அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. அதற்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு அட்ஹாக் தொகையாக 60 ரூபாய் மட்டும்

தான் கொடுக்கப்படுகிறது. குறைந்தபட்ச ஊதியமாக இருந்த 100 ரூபாய் கூட 1-6-78 லிருந்து கொடுக்கவில்லை. ஏறத்தாழ ஆயிரம் அலுவலர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நகர மன்ற நிதியிலிருந்து அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளிலும் கூட விஸ்தரிப்பு செய்து, குடும்ப பென்ஷனையும் 1-4-78 லிருந்து விஸ்தரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

அடுத்தபடியாக, டைப்ரைட்டிங் அன்ட் ஷார்ட் ஹான்ட் இன்ஸ்டிட்யூட்ஸ் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக மாயூரம் போன்ற இடங்களில் டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டை பல பேர்கள், தனியார்கள் பலர் நடத்துகிறார்கள். அவற்றில் டைப்ரைட்டிங், ஷார்ட்ஹான்ட் எல்லாம் சொல்லித் தருகிறார்கள். இந்த டைப்ரைட்டிங், ஷார்ட்ஹான்ட் சொல்லித் தருவதற்கு எவ்வளவு அதிகமாக கட்டணம் விதிக்கமுடியுமோ அதை விதிக்கிறார்கள். அந்த இன்ஸ்டிட்யூட்களின் சொந்தக்காரர்கள் ஒரு யூனியன்போல் வைத்துக்கொண்டு, எல்லோரும் சேர்ந்துகொண்டு, அதிகப்படியான கட்டணங்கள் விதிக்கப்பட்டு மாணவர்கள் பாதிக்கக்கூடிய அளவிற்கு ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். பல ஊர்களில் இப்படி நடப்பதாகக் கேள்வி. மாயூரத்தில் உள்ள ஆர். டி. ஓ. வைச் சந்தித்து ஒரு மனுவை மாணவர்கள் கொடுத்தார்கள். அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சர்வ கட்சித் தோழர்களும் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு நானும் சென்றிருந்தேன். அவர்கள் சொல்கிறார்கள், நான் என்ன செய்வது, அதைத் தடுக்க விதி இல்லையே என்று சொல்கிறார்கள். ஆகவே நான் எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால், டைப்ரைட்டிங் ஷார்ட்ஹான்ட் போன்றவை சொல்லித் தருகிற நிறுவனங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்கிவிட்டால் சராசரி நிலையில், சராசரி கட்டணம் வசூலிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். அதோடு கூட ஒரு ஸ்திரமான தன்மையும் ஏற்படும். ஆகவே இதை அரசு கவனிக்க வேண்டும் என்று எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நந்தனார் பிறந்த ஊரைப் பற்றி பலதடவை எடுத்துச் சொல்லிவிட்டேன். ஹரிஜன நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாவிட்டாலும் அவர்கள் அதை அறிவார்கள் என்று கருதுகிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் திருவுருவப் படத்தை இங்கே திறந்து வைப்பது பற்றி பெருமையோடு பேசிக் கொள்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு விழா எடுக்கும்போது, அவர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் என்று கூறப்படுகிற நந்தனார் பிறந்த ஊர் என்னுடைய மாயூரம் தொகுதியில் உள்ள மேலாதநல்லூர்.

அது மேலநல்லூர் என்று வழங்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி இரண்டு மூன்று ஆண்டுகள் அல்ல, அதற்கு முன்னால் இருந்தே சொல்லி வருகிறேன். நந்தனார் பிறந்த அந்தத் தெருவில் 27 வீடுகள்தான் உள்ளன. அதிகமான வீடுகள் இல்லை. நந்தனார் பிறந்த தெரு அது. சாதாரணத் தெரு. 27 வீடுகள் உள்ளன. ஆனால் அந்த வீடுகளுக்கு கூரைதான் இல்லை. எது முக்கியமோ அது இல்லை. அவற்றிற்கு கூரைகளை வேய்ந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் ஹரிஜனநலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக இப்போது நம் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நிச்சயமாக நடைபெறும் என்ற எண்ணத்தில்.

அடுத்து, கொற்கையில், ஐயாவய்யனாற்றில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எஸ்டிமேட் எல்லாம் போட்டு, டெண்டர்கள் கால் பார் செய்து, வொர்க் ஆர்டர் கொடுத்தும் வேலை நடைபெறவில்லை. இரண்டு, மூன்று, ஐந்து தடவை டெண்டர் கால்பார் செய்தும் யாரும் வரவில்லை. காரணம் புரியவில்லை. சுலபமாக காரியங்கள் நடைபெறாது என்ற காரணமாக இருக்கலாம். அந்த ஊரில் உள்ள ஜனங்கள் எல்லோரும் கூடி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளுக்கும் பொது வான ஒரு முடிவு. யாரும் சங்கடப்படத் தேவையில்லை. எந்தக் கட்சிக்காரர்கள் இந்த ஊரில் வாக்குகள் கேட்க வந்தாலும் எந்தக் கட்சிக்காரர்களுக்கும் வோட்டு போடுவது இல்லை என்று முடிவு எடுத்திருக்கிறார்கள் (குறுக்கீடு). அந்த ஊரில் எந்த விதமான வசதியும் செய்து தரப்படவில்லை. சாதாரண ஒரு வாய்க்கால், ஐயாவய்யனாற்றில் ரூ. 30,000க்கு எஸ்டிமேட் போடப்பட்டது. இப்போது சிறிது அதிகமாக ஆகியிருக்கலாம். அந்த வாய்க்காலை வெட்டித் தரவேண்டும். இதற்குள் உள்ளதைப்பற்றித்தான் பேசவேண்டும் என்று இருப்பதால் ஒன்றை மட்டும் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறை பற்றிக் கூற விரும்புகிறேன். குறிப்பாக எனது மாயூரம் தொகுதி பற்றிக் கூற விரும்புகிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அரசை மட்டும் நான் குறை கூறவில்லை. அதிகாரிகளும் இதற்குப் பொறுப்பானவர்கள்தான். எந்த அதிகாரியைச் சென்று கேட்டாலும் நிதி ஆதாரம் இல்லை, நிதி ஆதாரம் இல்லை என்று நிதி அமைச்சராக இருந்து பதில் சொல்ல வேண்டியவர்கள்போல் நிதி ஆதாரம் இல்லை, நிதிக்கு வழியில்லை, சம்பளத்திற்கு மட்டுந்தான் பணம் வருகிறது என்ற முறையில் சொல்கிறார்கள். சம்பளத் திற்கு மட்டுந்தான் அரசு பணம் ஒதுக்குகிறார்களா? வேறு எதற்கும் பணம் ஒதுக்கவில்லையா? குறிப்பாக என் போன்ற எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தொகுதிகளுக்கு

நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை வேலைகளுக்கு பணமே ஒதுக்க மறுக்கிறார்களா? ஒதுக்கவில்லையா? என்று கேட்கிறேன். எனவே அதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு சிறையில் உண்ணாவிரதம் இருப்பதைப் பற்றியும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், வெளியில் உண்ணாவிரதம் இருந்தாலே கையையும் காலையும் இழுக்கும். அப்படியிருக்கும்போது, சிறைக்குள் இருந்தால் எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் எப்படியாவது அனுபவிப்பவர்கள் அனுபவித்துப் போகட்டும் என்று முதலமைச்சர் அவர்கள் இருக்க மாட்டார்கள். ஆகவே அதன் மீது உடனடியாக தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்புக்கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டின் மீது சில கருத்துக் களைச் சொல்ல முற்படுகிறேன். இப்போது உணவு வேலைத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறோம். நம்முடைய மாநிலமும் இதை அமல் நடத்திவருவதாகத் தெரிகிறது. இப்போது தெரிவது என்னவென்றால், மற்ற மாநிலங்கள் எல்லாம் இரண்டரை லட்சம் டன் அரிசியை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றிருக்கும்போது, நமது தமிழ்நாடு மட்டும் 65 ஆயிரம் டன் தான் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அப்படியிருக்குமானால், மற்ற மாநிலங்களைப் போல் நாமும் அதிகமாகப் பெறுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற கூட்டத்தில் இந்தத் திட்டத்தின் மூலமாக வேலை செய்கின்றவர்களுக்கு அரிசியும், 3 ரூபாயும் கூலியாக கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது இதற்காக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்திருப்பதாக தெரியவில்லை. ஆகவே முன்னால் சொன்ன வாக்குறுதி எந்த நிலையில் இருக்கிறது என்பதை கேட்க விரும்புகிறேன், குறிப்பாக இந்தத் திட்டம் வேலையில்லாத நேரங்களில் வேலை கொடுப்பது என்பது பயனுள்ளதாக இருக்கும். குறிப்பாக விவசாயக் கூலிகளாக இருக்கின்றவர்களுக்கு மழை காலங்களில் இந்தத் திட்டத்தை அதிகமாக செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில மாவட்டங்களில் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் இதுவரை எத்தனை பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்று எங்களிடத்தில் கேட்கிறார்கள். அதாவது ஒவ்வொன் றுக்கும் டார்ஜெட் இருக்கும். போலீஸ் துறையை எடுத்துக

1979 அக்டோபர் 31] [திரு. ரா. கிருஷ்ணன்]

கொண்டால், தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் டார்ஜெட்டை முடிக்கவேண்டும் என்பதற்காக கடைசி நேரத்தில் பஸ் ஸ்டாண்டில் படுத்துக் கொண்டு இருப்பவர்களை கைது செய்து கொண்டு போய், சந்தேக வழக்குகள் என்று போட்டுக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இதையும் சேர்த்து காட்ட மாட்டார்கள் என்று நம்புகிறேன். குறிப்பாக இப்போது மண் வேலைகள், மண்ணை வாரி சாலைகளில் போடுவது, மண்ணை தெருக்களில் போடுவது என்கிற வேலை காண்டிராக்ட் முறையில் நடைபெறுகிறது. காண்டிராக்ட் முறையில் நடைபெறும்போது, நிச்சயமாக அதிக லாப நோக்கு இருக்கும். இப்போது நிலைமை என்ன? போட்ட மண் எல்லாம் மழையில் கரைந்து போய்விட்டது. இதன் மூலமாக எந்தவிதமான பயனும் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தவிதமான நிலைமையை உருவாக்காமல் நிரந்தரமான முறையில் இருக்கக்கூடிய பணிகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் படித்த இளைஞர்களுக்கு நிவாரணம் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சோஷியலிஸ வாலிபர் முன்னணிக் கழகத்தின் சார்பில் தமிழகத்தில் பல இடங்களிலும் மறியல் செய்ததின் காரணமாக ஏறத்தாழ 5,000 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படி கைது செய்யப்பட்டவர்கள் மதுரை போன்ற இடங்களில் விடுதலை செய்யப்பட்டார்கள். இன்னும் சில இடங்களில் சிறையில் வைக்கப்பட்டார்கள். இப்படி ஒரு இடத்தில் விடுதலை செய்வதும், இன்னொரு இடத்தில் சிறையில் வைப்பதும் என்ன காரணத்திற்காக என்பதை கேட்க விரும்புகிறேன்.

அத்துடன் நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பல இடங்களில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வேலையில்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு அங்கங்குள்ள கிராம சேவக்களிடம் போய் பதிவு செய்து கொண்டால், பதிவு செய்துகொண்ட ஒரு மாத காலத்திற்குள் அவர்களுக்கு வேலை வழங்கப்படும்: வேலை கிடைக்காத நாட்களில் ஒரு ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லிக் கொண்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. இந்த ஏற்பாடு என்ன ? இதற்கான நிதி ஒதுக்கீடு எதையும் இதில் பார்க்க முடியவில்லை. ஆனால் பொதுவாக அமைச்சர் அவர்கள் இவ்வாறு சொல்வதைக் கேட்டுக்கொண்டு ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பத்திரிகையை கையில் வைத்துக் கொண்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக படித்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். வேலையில்லாத நேரங்களில் 500 ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு குறையாமல் அரசாங்கம் வழங்க வேண்டும். சில மாநிலங்களில் இவ்வாறு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களிடமிருந்து வேலைகள் வாங்கிக்கொள்ளலாம், இரவுப் பள்ளிகளை நடத்தலாம், சுகாதார வேலைகளை கவனிக்கலாம். இப்படியாக எல்லா நாட்களுக்கும் வேலை கொடுக்கலாம். இதையும் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.40]

கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் புகுமுக வகுப்புகள் கிடையாது. ஆனால், இப்போது மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கடந்த காலத்தில் புகுமுக வகுப்பில் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் கல்லூரிகளில் சேர்ந்து கொண்டார்கள். அங்கே இருக்கக்கூடிய விடுதிகளிலே தங்கினார்கள். அரசு அதற்கு உதவித் தொகை வழங்கினார்கள். ஆனால் இப்போது மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு விடுதிகள் கிடையாது. அப்படியே விடுதிகள் இருந்தாலும், உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்கள் ஏற்கனவே அங்கிருப்பதால், இவர்களைச் சேர்த்துக் கொள்வதில் தட்டுப்பாடு இருக்கிறது. இவர்கள் புதிதாக போகின்ற நேரத்தில், அதிகமாக சேர்த்துக் கொள் வதற்கான இட வசதி அங்கே இல்லை. ஆகவே, உடனடியாக மேல்நிலைப் பள்ளிகளில் தனியாக விடுதிகள் அமைக்கப் பட வேண்டும். அப்படி உடனடியாக அமைக்க முடியாவிட்டால், ஏற்கனவே இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் விடுதிகளில் அதிகமான எண்ணிக்கையைச் சேர்த்துக் கொள் வதற்கு, அவர்களையும் இணைத்துக்கொள்வதற்கு உதவக் கூடிய வகையிலே உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, கடந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஸ்காலர்சிப் வழங்கப்படவில்லை. இந்த ஆண்டும் இதுவரை வழங்கப்படவில்லை. இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். சிவகிரியில் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், உயர்நிலைப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. அங்கே விடுதி கிடையாது. அதைக் கட்டித் தருவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, காந்தி கிராமத்தில் இன்ஸ்டிட்யூட் ஆப் ரூரல் ஹெல்த் அண்டு பாமிலி பிளானிங் இருக்கிறது. இதில் ஹெல்த் விசிடர்ஸ் கோர்ஸ் இருக்கிறது. இது 2½ ஆண்டு கோர்ஸ் ஆகும். இதற்கு அட்மிஷன் பீஸ் 590 ரூபாய். பேட்டா கம்பெனியில் எப்படி செருப்புக்கு ரூ. 49-90 என்று போட்டிருப் பார்களோ, அதேபோல் இதற்கு அட்மிஷன் பீஸ் ரூ. 590. ஆனால், டியூஷன் பீஸ் 6 மாதங்களுக்கு ஆயிரம் ரூபாய். இந்த 2½ ஆண்டு கோர்சுக்கு டோடல் பீஸ் 5,000 செலவழிக்க வேண்டியிருக்கின்றது என்று ஒருவர் சொல்லியிருக்கிறார்.

1979 அக்டோபர் 31] [திரு. ரா. கிருஷ்ணன்]

இப்படி ஏராளமான டியூஷன் பீஸ் வாங்கிக் கொண்டு, அந்த காந்தி கிராமத்தில் இந்த கோர்ஸ் நடப்பதாகச் சொல்லப் படுகிறது. அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, நர்சரி பள்ளிகள். இந்த நர்சரி பள்ளிகள் இன்றைக்கு தமிழகத்தில் ஏராளமாக இருக்கின்றன என்பது என் கருத்து. அதையும் கண்காணித்து, ஒழுங்குபடுத்த வேண்டுகிறேன்.

வாசுதேவநல்லூரில், புளியங்குடியில் 50,000 மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். அவர்களில் அதிகமான பேர்கள் கைத்தறி நெசவாளர்கள், விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள். ஆனால், அங்கே மருத்துவ மனை இல்லை. சில அமைச்சர்கள் வருகின்றார்கள். இங்கே மருத்துவ மனைகூட இல்லையா என்று ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால், அப்படி ஆச்சரியப்பட்டு விட்டு, அந்த இடத்தைவிட்டுப் போனபின் அதை மறந்து விடுகிறார்கள். இந்த ஏற்பாட்டையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கிராம மக்கள் 40,000 ரூபாய் வசூல் செய்து, இதற்காக இடம் வாங்குவதற்காக அந்தப் பணத்தை டெபாசிட் செய்திருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட பெரிய நகரத்தில் மருத்துவ மனை ஒன்று அமைத்துத் தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சிவகிரி என்பது ஒரு பேரூராட்சி. அங்கே கடந்த ஓராண்டு காலமாக டாக்டர் கிடையாது. நான் பலமுறை, பல வடிவிலே எடுத்துச் சொல்லியும், இதுவரை அதற்கான ஏற்பாடு கிடையாது. இப்போது அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் ஆர். கே. நாச்சியார் டிரஸ்ட் என்று ஒன்றிருக்கிறது. அதன் மூலம் 50,000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில், அங்கே ஒரு மகப்பேறு நிலையம் துவங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதையும், இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாசுதேவநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 4, 5 ஆண்டுகளாக இடிந்துபோன நிலைமையில், பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. அதையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்தார்கள்; உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் சொன்னார்கள். அதை இன்னும் செய்யவில்லை. அந்த ஏற்பாட்டையும் செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, வாசுதேவநல்லூர், சிவகிரி, விஸ்வநாதபுரம், ராயகிரி ஆகிய 4 பேரூராட்சிகளில் உள்ள 10, 15 கிராமங்களில் 1 இலட்சம் பேர்களுக்கு மேல் வாழ்கின்றார்கள். அங்கே

[திரு. ரா. கிருஷ்ணன்] [1979 அக்டோபர் 31

பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி கிடையாது. அங்கே உள்ள தண்ணீர் சலைன் வாட்டராக இருக்கின்றது. ஆகவே, அது பயன்படுத்துவதற்கு லாயக்கற்றதாக இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலை பக்கத்தில் இருக்கிறது. உள்ளாறு பகுதி இருக்கிறது. இந்த நான்கு பேரூராட்சிகளுக்கும் இணைந்த குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கிருக்கக்கூடிய விவசாய மக்கள் பயன்படுத்தக்கூடிய முறையில் அணைக்கட்டு கிடையாது. உள்ளாறு அணைத் திட்டம் நீண்ட காலக் கோரிக்கை. செண்பகவல்லி அணை உடைந்து போய் கிழக்கே வரக்கூடிய நீர் மேற்கே கேரளாவுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அதையும் சீர்படுத்த வேண்டும். அதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரை அன்றாட தேவைப் பொருள்களான அரிசி, சமையல் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்றவை முறையாகக் கிடைக்கவேண்டும். இந்த நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரை சீரான விநியோகம் வேண்டும். விவசாயிகள் வேலை முடிந்து திரும்பு வதற்கு இரவு 7 மணி வரை ஆகிவிடுகிறது. ஆகவே, இரவு 7 மணிவரையிலாவது நியாய விலைக் கடைகளில் பொருள்களை விநியோகம் செய்யும் ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

வேலூர் சிறையில் நான்கு ஆயுள் தண்டனைக் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆயுள் தண்டனைக் கைதிகளின் மனுவை விசாரணை செய்ய வேண்டுமென்றால் 14 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் பரிசீலனை செய்ய முடியும் என்று இருக்கும் உத்தரவை ரத்து செய்ய வேண்டும்; நக்சல்பாரிகள் சாலிடரி கன்ஃபைன்மென்டில், தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதையும் எதிர்த்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். சாலிடரி கன்ஃபைன் மென்ட் பற்றி சுப்ரீம்கோர்ட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ண அய்யர் குறிப்பிட்டிருக்கிறார்— ஏற்கனவே தூக்குமேடைக்குப் போக வேண்டியவர்கள் மட்டுந்தான் சாலிடரி கன்ஃபைன்மென்டில் வைக்கப்பட வேண்டும், மற்றவர்கள் அப்படி தனிமைச் சிறையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்த அடிப்படையில் நக்சல்பாரிகளாக இருந்தாலும் கூட பாதுகாப்பை அதிகமாக ஏற்படுத்தி அவர்களுக்கு சாலிடரி கன்ஃபைன்மென்ட் முறையை நீக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சிறையில் இருப்பவர்களை பார்வையிட வேண்டுமென்றால் எம். எல். ஏ.க்களுக்கு பல நேரங்களில் அனுமதி வழங்குவது இல்லை. நக்சல்பாரிகள் என்றால் வழக்கறிஞர்கள் போனால் பார்வையிடலாம். அவர்கள் பிரமாணம் செய்திருக்கிறார்கள்

1979 அக்டோபர் 31] [திரு. ரா. கிருஷ்ணன்]

என்று சொல்லி பார்வையிட அனுமதிக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இங்கே பிரமாணம் செய்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களையும் அனுமதிக்கக்கூடிய முறையில் அனுமதி வழங்காமல் இருப்பது அநியாயமானது. சட்டமன்ற உறுப்பினர்கள் நக்சல்பாரிகளைக் கூட பார்வையிட அனுமதிக்க ஏற்பாடு செய்வது மிக அவசியம்.

பேருந்துகள் அதிகமாக விடுகிறார்கள். ஆனால் சாலைப் பராமரிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. அதற்கான ஒதுக்கீடும் குறைவாக இருக்கிறது. விஸ்வநாதபுரம், ராயபுரியில் இரண்டு பாலங்கள் கட்ட ஒரு லட்சம் ரூபாய்தான் ஆகும். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடம் பல முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்களும் பலமுறை வாக்குறுதி கொடுத்தார்கள். சமீபத்தில் பேசுகிற போது கூட பார்ட் 2 ஸ்கீமில் சேர்த்து விடுவதாகச் சொன்னார்கள். பத்து பதினைந்து கிராமங்களைத் தொடர்பு படுத்தக்கூடிய முறையில் அந்தப் பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத் துறையைப் பொறுத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் டி. ஆர்கள் போடவேண்டும். பால் பதம் செய்யக்கூடிய சில்லிங் சென்டர் வாசுதேவநல்லூரில் ஏற்படுத்த வேண்டும்.

கடலூர் வட்டம் தியாகவல்லியைச் சேர்ந்த பெண்மணி ருக்மணி இறந்துபோன ஆறுமுகப் படையாச்சியின் மனைவி ஒரு மனுவை அனுப்பியிருக்கிறார்கள். ஆறுமுகப் படையாச்சி 10-10-79-ல் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு 11-10-79-ல் ஜாமீன் மனு கொடுத்து 12-10-79-ல் உத்தரவானது. ஜாமீன் மனுவின் பேரில் சப் ஜெயிலுக்கு அவரை விடுதலை செய்யவேண்டுமென்று கோரி போனபோது ஆள் இல்லையென்று சொல்லுகிறார்கள். உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவல் கொடுக்கப்படுகிறது. கடைசியாக அவர் எங்கே புதைக்கப்பட்டிருக்கிறார். அங்கே போய் ஆளைப் பார்த்தால் இவர்தான். ரிமாண்ட் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் எப்படி செத்தார் என்பது வேடிக்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவது இந்த அரசுக்கு நல்லதல்ல என்றும் உடனடியாக அதைக் கவனிக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

அதோடு தென் ஆற்காடு மாவட்டத்திலே சிதம்பரம் தாலுகாவிலே கிள்ளை என்ற இடத்திலே அஞ்சலி என்ற பெண்மணியின் கணவர் 8 பேர்களால் கொலை செய்யப் பட்டார் என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1979 அக்டோபர் 31

ஏற்கெனவே ரூல்ஸ் கமிட்டியிலே இரண்டு கமிட்டிகள் போடுவதற்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். அடுத்து திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 1979-80 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போது தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் ஏற்கனவே விரிவாக சில நாட்களாக விவாதிக்கப்பட்டிருந்தாலும் குறிப்பாக விவசாயிகள் பிரச்சினையைக் குறித்து சில வார்த்தைகளைக் கூறலாம் என்று எண்ணுகிறேன்.

இந்த ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்னதாக இருந்த ஆட்சிக் காலத்திலே தொடங்கிய விவசாயிகள் பிரச்சினை இன்னும் பெரிய பிரச்சினையாக இருந்துகொண்டே இருக்கிறது என்பதை அறிவார்கள். சென்ற அரசும்கூட இந்தப் பிரச்சினையை சரியான அணுகு முறையிலே பார்க்காமல் முறையான பரிகாரத்தைக் கொடுக்கத் தவறிவிட்டது. ஆகவே அந்தப் பிரச்சினை மிகவும் வலுவடைந்து பெரிய பிரச்சினையாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த அரசு ஏற்கனவே ஏறத்தாழ 40 கோடி ரூபாய் விவசாயிகளுக்குப் பல்வேறு வகைகளிலே நிவாரணம் அளித்தது. அதற்காக விவசாயிகள் நன்றிக்கடன் செலுத்தியிருக்கிறார்கள். இன்னும் பல நிவாரணங்கள் தேவை என்ற முறையிலே அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள் என்று சொன்னால் இந்த அரசு அதிலே அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்களுடைய பிரச்சினை என்ன என்று ஆராய்ந்து பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயிகளுக்கு இருக்கின்ற கடன் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. அவர்கள் திருப்பிக்கொடுக்க முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள். அதை அரசு உணரும் என்று நினைக்கிறேன். விவசாயிகளுக்கு போடப்பட்டிருக்கின்ற வட்டியானது மிகுந்த தொல்லையாக இருக்கிறது. அத்தனை வட்டிகளையும் ரத்து செய்வதற்கு அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, திருப்பித் தரமுடியாத கடன்களையெல்லாம் நீண்டகாலக் கடன்களாக மாற்றினால் உண்மையிலேயே பாக்கியில்லாமல் அவைகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கும். அதையும் செய்யவேண்டும்.

அடுத்து மீட்டர் ரென்ட் இருக்கிறது. அது தேவையற்றது. ஏற்கெனவே மீட்டர் விலையைவிட அதிகமாக அது போய் விட்டது. அதற்குமேலாக வசூலித்தாகிவிட்டது. ஆகவே அதை வசூலிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துத் கொள்கிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அது மட்டுமல்லாமல், மின்சாரக் கட்டணம் விவசாயிகளிட மிருந்து பாக்கி அதிகமாக வரவேண்டியிருக்கிறது. வேண்டு மென்றே செலுத்தாதவர்கள் குறைவு. பெருவாரியான விவசாயிகள் செலுத்துவதற்கு சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே மின்சாரக் கட்டண பாக்கியை ரத்து செய்வதற்கு வழிவகை இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போலீஸாருடைய பிரச்சினை இருக்கிறது என்பதை அவையிலே உள்ள அத்தனை பேர்களும் உணர்கிறோம். போலீஸ் என்பது பொதுவாக மக்களுக்குத் தேவையானது. அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பானது மிகவும் முக்கியத்துவம் உடையது. ஒருவேளை வேலை நிறுத்தத்தின் போது அவர்கள் அதை மறந்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. ஒரு பெரிய உத்திரவாதத்தை நாம் மக்களிடம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அந்த உத்தரவாதத்தை உணர்ந்திருக்க வேண்டும். இப்பொழுது அரசு இந்தப் பிரச்னையை ஒரு பிரிஸ்டிஜ் இஷ்யூவாக எடுக்காமல் எப்படியாவது இந்தப் பிரச்னையை செட்டில் செய்யவேண்டும். That issue has to be settled. இப்பொழுது நல்ல செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன; வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த போலீஸ்காரர்களில் பெருவாரியானவர்கள் வேலைக்குத் திரும்பி யிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தி வந்திருக்கிறது. அவர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டது தவறு என்று அவர்களில் பலரும் உணர்ந்ததாகவும் தகவல் வருகிறது. ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் தன்னுடைய இலாக்காவில் இருக்கின்ற பிரச்னைகளைச் சுமுகமான முறையில் தீர்க்க முதலமைச்சரவர்கள் வழி காண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துக் கலைப்பைப்பற்றிப் பல அங்கத்தி னர்கள் விரிவாகப் பேசினார்கள். பஞ்சாயத்தில் ஜனதாக் கட்சி எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதை அசோக்மேத்தா கமிட்டியின் அறிக்கையைப் பார்த்தவர்கள் நன்கு உணர்வார்கள். ஆனால் அசோக்மேத்தாவின் பெயரையே கேட்பதற்கு அஞ்சுகின்ற இந்திரா காங்கிரஸ்காரர்கள் அவற்றை யெல்லாம் அறிந்திருக்க மாட்டார்கள்.

பஞ்சாயத்துதான் இந்த நாட்டின் முதுகெலும்பு, பஞ்சா யத்துக்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும், பொருளாதார நிதி அதிகாரங்களைக்கூடக் கொடுக்க வேண்டு மென்று ஜனதா அரசு கருதிக்கொண்டிருந்தது; அது அந்த அறிக்கையிலேயும் இருக்கிறது. ஒருவேளை ஏதோ காரணங் களுக்காகப் பஞ்சாயத்துக்களை இப்பொழுது கலைந்திருந்தாலும் பஞ்சாயத்துத் தேர்தல்களை உடனடியாக நடத்த இந்த அரசு

முன்வர வேண்டும்; பஞ்சாயத்துக்களைக் கலைத்ததை நாங்கள் நிச்சயமாக வரவேற்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பஞ்சாயத்துக்கள்தான் மக்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான இடமாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர் பெருமக்களோ மக்களுக்கு எளிதில் கிடைப்பதில்லை. பஞ்சாயத்துக்கள் இருந்தால், மக்கள் அவர்களுக்கு இருக்கின்ற பிரச்னைகளைச் சொல்லித் தீர்த்துக் கொள்ளக்கூடிய ஸ்தாபனமாக அது இருக்கிறது. எனவே, பஞ்சாயத்து அமைப்புகள் மிகவும் அவசியம், தேவை, அதை அமைக்க அரசு தேர்தலை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களைக் கலைத்திருப்பதால் இருக்கின்ற பல பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. தெருக்கள், ரோடுகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. தெரு விளக்குகள் சரியாக இல்லை.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : 'நாட் ஈல்டிங்.' பஞ்சாயத்தைக் கண்காணிக்கக்கூடிய நிர்வாகம் இல்லாமல் இருப்பதன் காரணமாக தெரு விளக்குகள் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. பஞ்சாயத்துக்கள் இருந்த போதிலும் அப்பொழுதும் சில சிக்கல்கள் இருந்தன. ஆகவே, மின்சார இலாக்கா இப்பொழுது இந்தப் பொறுப்பை ஏற்று, தெருவிளக்குகளைப் பராமரிக்கின்ற பொறுப்பையும் மின்சார இலாக்கா ஏற்று நடத்தவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொழில் பிரச்னை சம்பந்தமாக எடுத்துக் கொண்டால், நாம் பல மாவட்டங்களில் 'டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் சென்டர்'களை அமைத்து இருக்கிறோம். அது நல்ல அமைப்புதான். ஜனதா கட்சி அரசாங்கத்தில் இருந்த பொழுது இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மாநில அரசும் இதை வரவேற்றுச் செயல்படுத்தி வருகிறது. ஆனால் பல்வேறு ஜில்லாக்களில் செயல்பட்டு வரும் அந்த அமைப்பு சரியாக அமையவில்லை. அதனால் ஜனங்களுக்கு எந்த அளவிற்குப் பலன் வர வேண்டுமென்று நாம் எதிர்பார்த்தோமோ அந்த அளவிற்குப் பலன் கிடைக்கவில்லை. ஆகவே, அரசு அதில் மறுபரிசீலனை செய்து துரிதமாக, செவ்வையாகச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்குமுன் இந்தச் சட்ட மன்றத்தில் நான் ஒன்றைக் கேட்டபொழுது பதில் கூறினார்கள்; அதாவது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு இரப்பர் பேக்டரியை ஆரம்பிக்க இதற்கு முந்தைய அரசு திட்டங்கள் அமைத்து, அது இடையில் நின்று விட்டது, அதைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கும் உத்தேசம் உண்டா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள், அந்த அரசு தகுதியில்லாத இடத்தில் வைக்க அனுமதி வழங்கிவிட்டதுமட்டுமல்லாமல், ஏறக்குறைய 90 இலட்சம் ரூபாயை அதற்காகச் செலவிட்டதன் காரணமாக, அதுவொரு என்கொயரி கமிஷன் நியமிக்கப்பட்டு விசாரணையில் இருப்பதால் இப்பொழுது அதனை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார்கள். ஆனால் நான் அறிகிறேன், அந்த விசாரணை இப்பொழுது முடிந்து அதில் ஈடுபட்ட முந்தைய அமைச்சர் அதில் குற்றவாளி என்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். எனவே, இனிமேலாவது உடனடியாக அந்த இரப்பர் பேக்டரியை, பொருத்தமான இடத்தில், இரப்பர் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் இடத்தில், அதற்கான மூலப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்ற இடத்தில், தகுந்த சீதோஷ்ண நிலைமை உள்ள இடத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன் வரவேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[நண்பகல் 12—00]

அதோடு, ஜனதா அரசு மத்தியில் ஆட்சியிலிருந்த பொழுது அன்றைய தினம் தொழில் அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்னான்டஸ் ஒரு திட்டத்தை, அதாவது ரூ. 50 கோடி செலவில் ஒரு போட்டோ பிலிம் தொழிற்சாலையை, தமிழ் நாட்டிற்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை எங்களால் அறிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பிரதிநிதிகளும் இன்றைய தினம் மத்திய அரசில் இருக்கிற காரணத்தால், அந்தத் தொழிற்சாலையை வலியுறுத்தி வாங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆக, அந்தத் தொழிற்சாலையைக் கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் அங்கு போட்டோ பிலிம் அமைப்பதற்குள்ள எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. இப்பொழுது ஊட்டியில் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. ஊட்டியில் இருக்கிற எல்லா வசதிகளும் கன்னியாகுமரியில், அப்பர் கோதையாறில் இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் முந்தைய அரசால் புறக்கணிக்கப்பட்ட மாவட்டம் என்று முதலமைச்சரவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அந்தத் தொழிற்சாலையை அங்கு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 அக்டோபர் 31

அது மட்டுமல்லாமல், சென்ற மே மாதம் என்று எண்ணுகிறேன், ஒரு பெரும் மழை காரணமாக பல சேதங்கள் நெல்லை, குமரி மாவட்டங்களில் ஏற்பட்டது. பல நல்ல வீடுகள் மழையில் இழுத்துச் செல்லப்பட்டன. அது மட்டுமல்லாமல், விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதல்லாமல், சின்னஞ்சிறிய தொழில் நடத்துகிறவர்களுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அது சம்பந்தமாக ஒரு மனு தயார் செய்து வருவாய்த் துறை அமைச்சரவர்களிடம் கொடுத்தேன். அது சம்பந்தமாக, அவர் பி. ஏ. வை அழைத்து, விசாரித்து பொருத்தமான காரியம் செய்யுங்கள் என்று கூறினார்கள். ஆனால், இலாகா அது சம்பந்தமாக, எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அது சம்பந்தமாக, துரிதமான நடவடிக்கை எடுத்து, விவசாயிகளுடைய துன்பம் துடைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், மழையினால் பாதிக்கப்பட்ட ஏரிகள் குளங்கள் இது வரையில் பராமரிக்கப்படவில்லை. அதற்குத் தேவையான பணம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்தத் துணை மதிப்பீட்டில் கூட அதற்கான பணம் ஒதுக்கியதாகத் தெரியவில்லை. மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்தைப் பற்றி நன்றாக உணர்ந்தவர்கள். இருந்தாலும், கொஞ்சமும் தயவில்லாமல் இருக்கிறார்கள் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துணை மதிப்பீட்டில் ஒதுக்கீடு இடம் பெறவில்லையென்றாலும் மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் நினைத்தால் இதற்குப் பணம் ஒதுக்குவது சிரமம் இல்லை என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு புயல் ஏற்பட்டது இரண்டு மாதத்திற்கு முன்பு. அந்தப் புயலாலே இலட்சக்கணக்கான வாழை அழிந்தது. சிறுவிவசாயிகள், ஏழைகள்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆக அவர்களுக்கு நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று நான் மனு கொடுத்தேன். அது சம்பந்தமாக, முதலமைச்சரவர்கள் உடனே தொடர்புடைய கலெக்டர்களை அழைத்து, அவர்களுக்குத் தகவல் கொடுத்து, எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்று எஸ்டிமேட் கேட்டு: எல்லா ரெக்கார்டுகளையும் கலெக்டர்கள் அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், விவசாய இலாகா அது சம்பந்தமாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆக, இந்த மாதிரியான குறைகளை இலாகாக்களில் இருக்கின்றன என்று சொன்னால், அரசுக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று கெட்ட நோக்கம் அவர்களுக்கு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதன் விளைவு இம்மாதிரி அமைகிறது என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் நலனுக்காக இங்கே பணம் கோரப் பட்டிருக்கிறது தனியார் நடத்துகின்ற பல்வேறு தொழில் களிலே எல்லாம் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்குகின்ற

1979 அக்டோபர் 31] [திரு. ஜே. ஜேம்ஸ்]

முறை இருக்கிறது. ஆனால், அரசு நடத்துகிற தொழில் ஸ்தாபனங்களுக்கு போனஸ் சட்டத்தின் அடிப்படையில் இப்பொழுது போனஸ் கொடுக்கிற சூழ்நிலையில்லாதிருப்பதை நாம் அறிவோம். என்றாலுங்கூட, பல்வேறு ஸ்தாபனங்களில் எக்ஸ்-கிரேஷியா பேமென்ட் அல்லது வேறு பெயரில் போனசுக்குப் பதிலாக தொகை கொடுக்கப்படுகிறது. கன்னியாகுமரியில் ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள், தனியார் துறையில் பணி புரிபவர்கள் 20% போனஸ் பெற்றார்கள். ஆனால், அரசுத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்காத காரணத்தால் வேலை நிறுத்தம் செய்யப் படுகிறது. அரசுக்கும் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கும் பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆக, இந்த அரசு இதனைச் சிந்தித்து போனஸ் இல்லையென்றாலும், எக்ஸ்-கிரேஷியா பேமென்ட் கொடுத்திருக்கிறார்கள். அது போன்ற முறையில் அவர்கள் பிரச்னையைத் தீர்க்க வழிகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நுகர்பொருள் சம்பந்தமான மாளியக் கோரிக்கை. நமது மாநிலத்தில், பல்வேறு மாவட்டத்திலே நுகர்பொருள் வழங்கு துறையில் பணியாற்றிய பல தொழிலாளர்கள் பிரித்து விடப்பட்டுள்ள நிலைமைகள் இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் அதில் சிலர், ஒரு வேளை, மாற்று வேலையில் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அப்படி ஒரு வேளை யாராவது இன்னும் வேலையில் அமர்த்தப்படாமல் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக மாற்று வேலை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் அத்தியாவசியப் பண்டங்களின் விலை எந்த அளவுக்கு ஏறிக் கொண்டே போகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஏழைகள் எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறிக் கொண்டே போகிறது. எல்லோருக்கும் கிடைக்கிற அளவிற்கு அத்தியாவசியப் பண்டங்களை ரேஷன் கடைகள் மூலமாகக் கொடுக்கத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஹோட்டல்களிலே ஏழைகள் சென்று சாப்பிடுவதைப் பற்றி நினைக்கக் கூட முடியாத அளவிற்கு விலையை ஏற்றியிருக்கிறார்கள். அரசு நடவடிக்கை எடுத்து விலைகளை ஏற்றக் கூடாது என்று உத்தரவிட்டால் விலைகளை ஏற்றவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் விலைகள் ஏற்றப்படுகின்றன.

அடுத்து, இங்கே ஓய்வூதிய மானியம் வந்திருக்கிறது. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு, இன்னும் ஏறக்குறைய 300, 400 தியாகிகளுக்கு பென்ஷன் கொடுக்கப்படாத நிலை

இருக்கிறது. அவர்கள் இது சம்பந்தமாகப் போராடப் போவதாகச் சொல்லுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் எல்லாம் 60, 70 வயது வந்தவர்கள். பென்ஷன் கொடுத்தால் கூட இன்னும் 4, 5 ஆண்டுகள் தான் வாங்கக் கூடிய நிலை ஏற்படும். இதனால் பெரிய அளவிற்கு அரசுக்குச் செலவு ஏற்படாது. எனவே இவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இருந்த அரசு சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும் ஹிந்தி மொழிப் போராட்டத் தியாகிகளுக்கும் பென்ஷன் கொடுத்து இருந்தார்கள். உயர்நீதி மன்றத்தில் அவர்களுக்குக் கொடுக்க கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்ட காரணத்தால் நிறுத்தி விட்டார்கள். மீண்டும் கொடுக்க அரசு ஆலோசித்துக் கொண்டிருந்தது. இதுவரையிலும் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு பென்ஷன் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே ஒரு சிறு விளக்கம் கேட்க ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்துக்களைக் கலைத்தது சரி என்று திரு. ஜெபமணி அவர்கள் சொன்னார்கள், அது தவறு என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்குள் கருத்து வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உட்காருங்கள். அது ஒரு கொள்கைப் பிரச்சனை. கொள்கைப் பிரச்சனைகளைப் பற்றி முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் கேட்பார்கள்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, தலைவர்கள் இடத்திலே சொல்லி தலைவர்கள் மூலமாகக் கேட்க வேண்டுமென்பதை ஒத்துக் கொள்கிறேன் கொள்கைப் பிரச்சனை, ஆகையால் நீங்கள் கேட்கக் கூடாது. தலைவர்கள் தான் கேட்க வேண்டுமென்று சொன்னால், எங்களுக்குக் கொள்கை இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையின் மரபையும், மாண்பையும், கட்டுப்பாட்டையும் காப்பாற்ற வேண்டாமா? நீங்கள் கூறுகிறபடி பார்த்தால் தலைவரே தேவையில்லை. தலைவரே இல்லாமல் கூட கூட்டம் நடத்தலாம். உங்களுக்கு உரிய உரிமையைக் கேளுங்கள், தருகிறேன். திரு. சொக்கலிங்கம் சொல்வது வேறு,

திரு. துரை முருகன் : இப்பொழுதுதான் நான் ஒன்றைக் கேட்கிறேன். அதற்குள் அவை மரபை மீறின மாதிரிச் சொல்வது என் மேல் ஸ்டிரிக்சர் பாஸ் செய்வது போல் ஆகாதா? தலைவர்கள்தான் கேட்க வேண்டுமா என்றுதான் கேட்கிறேன்.

1979 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர்களுக்குத் தனி உரிமை உண்டு.

THIRU DURAI MURUGAN : I have also got great respect for the Leaders.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன் வரிசையிலே இருப்பவர்கள் கேட்டுக் கொள்வார்கள். திரு. சொக்கலிங்கம் பேசி அதிலே அவர் தவறு என்று சொல்லி இருந்தால் அவர் விளக்கம் கேட்டுக் கொள்ளலாம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, அதைத்தான் சொக்கலிங்கம் கேட்டார். திரு. ஜெபமணி அவர்கள் நேற்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்று திரு. ஜேம்ஸ் அவர்கள் வேறு கருத்தைச் சொல்கிறார்களே என்றுதான் அவர் கேட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நான் சொன்னேன். முதல் வரிசையிலே இருப்பவர்கள் கேட்டுக் கொள்வார்கள்.

திரு. துரை முருகன் : விளக்கம் தான் திரு. சொக்கலிங்கம் கேட்கிறாரே தவிர....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்கட்டும் நான் பதில் சொல்கிறேன். மத்தியிலே நீங்கள் குறுக்கிட்டிருக்க வேண்டாம்.

(பிற்பகல் 12-10)

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கைகள் மீது சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உபரி நிலங்களையும், பயிரிடத்தக்க தரிசு நிலங்களையும் ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, தனிப் பணியாளர்களை அரசு நியமிப்பதற்காக 1.75 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இன்றைக்கு தமிழகத்தில் லட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்களை நிலம் அற்றவர்கள் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அதற்கு குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, நமது முதலமைச்சர் செயலாளர் தொகுதியான பொன்னேரிக்குப் பக்கத்திலே 100 ஏக்கர் நிலத்தில் 200 அரிசன குடும்பங்கள் 20 ஆண்டுகாலமாக விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கோரி

அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்குக் கூட கோரிக்கை மனு அனுப்பியிருக்கிறார்கள். அதைப் போலவே, தமிழகத்தில் லட்சக்கணக்கான குடும்பங்கள் 40—50 ஆண்டுகாலமாக தொடர்ந்து சாகுபடி செய்து வருகிற அந்த நிலங்களில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைத் தடுத்து நிறுத்துகிற வகையில் இந்தப் பணியாளர்களின் பணி இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, சென்னையிலுள்ள தண்டையார்பேட்டையிலும், அண்ணா நகரிலும் அமைந்திருக்கின்ற 100 படுக்கைகள் கொண்ட மாநகர எல்லைப் பகுதி மருத்துவ மனைகளைத் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டியில் பெரிய தாலுக்கா மருத்துவ மனை இருக்கிறது. அங்கே அதிகமாக ஜனங்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். அதை 30 படுக்கைகள் அதிகப்படுத்த வேண்டும் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். அதை நிச்சயமாக இந்த முறை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, 2000 பட்டதாரி ஆசிரியர் பதவிகளையும் 750 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்பதோடு, இன்றைக்கு தமிழகத்தில் ஆயிரக் கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு அப்படி வேலை கிடைத்தாலும் கூட 4000–5000 ரூபாய் செலவாகிறது என்று குறைபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, வரிசைக் கிரமமாக அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசன வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மாணவர்கள் மேல் நிலைப் பள்ளிக் கல்வி பயிலுவதற்காக படிப்பு வசதித் தொகை வழங்க ரூ. 1.07 கோடி ஒதுக்கியிருக்கிறது. இதை வரவேற்பதோடு, இன்றைக்கு அரிசன மாணவர்களுக்கு-பள்ளியில் பயிலக் கூடிய மாணவர்களுக்கு மாதம் ரூ. 65 வழங்கப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில், இந்த மாணவர்களுக்கு 160 ரூபாய் கொடுக்கிறார்கள். இங்கே ரூ.65 கொடுப்பதால் அவர்களை சரியாகபராமரிக்க முடியவில்லை. அதனால், மத்திய பிரதேசத்தில் கொடுப்பது போல் ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 160 கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை மேம்பாட்டிற்காக ரூ. 2.5 கோடி ஒதுக்க வேண்டும் என்று அனுமதி கோரியிருக்கிறார்கள். இன்றைக்கு, தமிழக அரசால் திருத்துறைப் பூண்டிக்கு ரூ. 1 கோடி சாலை மேம்பாட்டிற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று வானொலியில்

1979 அக்டோபர் 31] [திரு. பொ. உத்திராபதி]

சொல்லப்பட்டது. அதேபோல் கோட்டூர், நீடாமங்கலம், மன்னார்குடி ஆகிய பகுதிகளுக்கும் 1-கால் கோடி என்று சொன்னார்கள். அதனால் எல்லா கிராமங்களுக்கும் அந்த 1 கால் கோடி ரூபாயைக் கொண்டு சாலை போடப்பட்டு விடும் என்று கருதினோம். ஆனால், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், மக்கள் குழு கூட்டத்திலும் கேட்ட போது சொன்னார்கள், இந்த 1 கோடி 1-கால் கோடி 3 ஆண்டுகளுக்கு என்றும், அதிலும் கூட பொது நிதியில் எந்த அளவிற்குப் பணம் இருக்கிறதோ அந்தப் பணத்தை சேர்த்துக் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள், விளம்பரப்படுத்துவது ஒன்று, செயல் ஒன்று என்கிற வகையில் இப்படி வித்தியாசம் இருக்கக்கூடாது. அது எப்படி வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதை யெல்லாம் போக்கி, கிராமங்களுக்கு நல்ல சாலைகள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற முறை நாகை, தஞ்சையில் இடைத்தேர்தல் நடந்த போது மாண்புமிகு அமைச்சர்கள் அந்தப் பகுதிக்கு வந்த போது மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் சொல்லப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் உங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல வில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் இப்படி சொல்லி இருக்கக்கூடும். திருத்துறைபூண்டியில் அந்தத் தேர்தல் காலங்களில் பெரும்பாலான அமைச்சர்கள் வராத ரோடுகள் இல்லை, கிராமங்கள் இல்லை என்பதால், அவர் களும் அந்த நிலைமையை நன்றாக அறிந்து இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, அங்கேயுள்ள சீர்கேடான நிலைமை யைப் போக்கும் அளவிற்கு கிராமச் சாலைகளை உடனடியாகச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அப்பறம் இதே துணைமானியக் கோரிக்கையில் தீ அணைப்புப் பணியாளர்கள், காவல் துறை பணியாளர்கள் ஆகி யோருக்கெல்லாம் ஈட்டுத் தொகை வழங்குவது பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். ஈட்டுத் தொகை வழங்குவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இன்றைக்கு காவல் துறையினர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பகுதியிலே ஈட்டுத்தொகை கொடுக்கிறீர்கள்; இன்னொரு பகுதியிலே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டத்திற்கு ஏதாவது வழி செய்யுங்கள் என்று நாங்கள் சொன்னால் போராட்டத்தை நாங்கள் தூண்டிவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். நயினார்தாஸ் சுகபோகமாக இருக்கிறார் என்று நிதி அமைச்சர் சொல்லுகிறார்கள். ஆனால் மதுரை ஜெயிலில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் குடியிருப்புப் பகுதியில் ராணுவத்தினர் போய், அவர்களை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பொ. உத்திராபதி] [1979 அக்டோபர் 31

காவல் துறையிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு முதலமைச்சர் இங்கே வந்திருக்கிறார். காவல் துறை அவர் கையில் இருக்கிறது. அவர்களுக்கு பரிகாரம் அளிக்கும் வகையில் ஏதாவது செய்வார் என்று எதிர்பார்க்கிறோம்.

நீங்கள், அவர்கள சங்கம் வைக்க உரிமை கொடுத்தீர்கள். அவர்கள் கேட்பது 40,000 பேர் ஏற்றுக் கொண்டிருக்கிற நயினார்தாஸ் தலைமையிலான சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுங்கள் என்பது. அதற்காக போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, அவர்களை அழைத்து, பேச்சு வார்த்தை மூலம் அவர்களுடைய சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகள் பிரச்சனைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் கூட, தஞ்சை, நாகை இடைத்தேர்தலின் போது 40 கோடி ரூபாய்க்கு சலுகை என்று அறிவித்தார்கள். 40 கோடி என்று சொன்னவுடன் சிறு விவசாயிகளுக்கு எல்லாம் சலுகை வந்து விட்டது என்று நினைத்தோம். எனக்கும் அந்த சலுகை கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். என்னுடைய சொத்து விவரம் இங்கே இருக்கிறது. கோவில் நிலம் 3 ஏக்கர், 62 சென்ட் குத்தகைக்கு எடுத்திருக்கிறேன். வேறு நிலம் கிடையாது. இந்த 40 கோடி சலுகை அறிவிக்கப்பட்டவுடன், எனக்கும் அது கிடைத்திருக்கும் என்ற எண்ணத்தில் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் கேட்டேன்; இல்லை என்று சொல்லி விட்டார்கள். நானும் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் தலைவராக இருந்திருக்கிறேன்; அதிலிருந்து நான் ராஜினாமா செய்து விட்டேன். இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்குக் கூட இந்த சலுகை கிடைக்கவில்லை.

இன்றைக்கு விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள் காவல் துறையினர் ஆகிய சகல பேர்களும் இந்த ஆட்சியின் மீது கோபமாக இருக்கிறார்கள். அவர்களுடைய கோபத்திற்கு, கடுமையான கோபத்திற்கு இந்த அரசாங்கம் ஆளாகியிருக்கிறது. அதிலும் குறிப்பாக விவசாயிகள் கோபத்திற்கு ஆளாகியிருக்கிறீர்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்காவிட்டாலும், அவர்களுடைய கோரிக்கைகளை மனதிற்கொண்டு, ஏற்பட்டிருக்கிற கடன் தொல்லையிலிருந்து அவர்களை விடுவிக்க, அவர்கள் பெற்றிருக்கக் கூடிய கடன்களை இந்த ஆண்டுவரையில் தள்ளுபடி செய்யாவிட்டாலும், 87-ம் பசலியிலிருந்து புயலாலும வெள்ளத்தாலும், வறட்சியாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் கடனை கட்ட முடியவில்லை; அவர்கள் தொல்லை பட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்; ஆகவே, முன் ஆண்டு வரையிலுள்ள கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. பொ. உத்திராபதி]

முதியோர் பென்ஷன் 25 ரூபாய் கொடுக்கிறீர்கள். கிராமப் புறங்களில் வசதியில்லாத, விவசாயத்தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் முதியோர் பென்ஷன் 25 ரூபாய் என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் மனு போட்டு, பணம் கொடுப்பதற்கு முன்னால் செத்து விடுகிறார்கள். உடனடியாக அவர்களுக்கு கிடைப்பதில்லை. தாசில்தார் மூலம் எத்தனை முதியோர் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்து, அவர்களுக்கு உடனடியாக முதியோர் பென்ஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி பற்றி நம்முடைய ரெவின்யூ அமைச்சரிடம் நேற்று கேட்டோம். ஆண்களுக்கு 7 ரூபாய் 25 காசு பெண்களுக்கு 5 ரூபாய் 60 காசு கூலி என்று செப்டம்பர் வரையில் அறிவித்திருக்கிறார்கள். அக்டோபர் மாதத்தில் ஆண்களுக்கு ரூ. 6.60 பெண்களுக்கு 5.00 அதே வேலையைத் தான் அக்டோபர் மாதத்திலும் செய்கிறார்கள். ஏதோ அதிகாரிகள் கொடுத்த கணக்கை வைத்து அமைச்சர் சொல்லி விட்டார். அந்தக் கூலியை ஒருமுனைப்படுத்தி, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி பற்றி கூற விரும்புகிறேன். அரிசனங்கள் செத்துப்போனால் 50 ரூபாய் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து யூனியனுக்கு வருடத்திற்கு 1,000 ரூபாய்தான் அதற்கு கோட்டா என்று சொல்கிறார்கள். அது எத்தனை பேர்களுக்கு போதுமானது? ஆகவே கூடுதல் பணம் ஒதுக்கி, உடனடியாக ஈம காரியத்திற்கு எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப் பேட்டை பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இன்னும் அது அமைக்கப்படவில்லை. உடனடியாக அதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

அதே மாதிரி கோட்டூரில் அரிசன மாணவர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் இருக்கிறது, அங்கே மாணவர்கள் தங்குவதற்கு கட்டிடமே இல்லை; இரண்டு, மூன்று மைல் தூரத்திலிருந்து பள்ளிக்கு வருக்கிறார்கள். உடனடியாக இந்த அரிசன மாணவர்களின் வசதிக்கேற்ப கோட்டூரில் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டியில் தீயணைப்பு நிலையம் ஒன்று கட்டவிருப்பதாக தகவல் வந்திருக்கிறது. அதை உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அரிச்சந்திர ஆற்றங்கரையின் ரோடு அமைத்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1979 அக்டோபர் 31

அடுத்து சொருக்கை தலைகாடு அடப்பாற்றில் குறுக்கே ஒரு பாலமும் கட்டிக் கொடுக்க வேண்டும். இந்த திட்டம் ஏனோ இன்றுவரைக்கும் அரசாங்கத்தினால் கவனம் செலுத்தப்படாமல் இருக்கிறது, அதை உடனடியாக முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோமாலப் பேட்டை கோட்டூர் இடையில் அய்யனாற்றிலும், முள்ளையாற்றிலும் இரண்டு பாலம் கட்டித் தர வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன்.

முத்துக்கோட்டை பேரூராட்சியில் 10 ஆயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். ஆனால் அங்கே குடிதண்ணீர் இல்லை என்கிற பிரச்சினை தீவிரமாக இருக்கிறது. குடி தண்ணீர் சப்ளைக்காக குடிதண்ணீர் வாரியத்திற்கு, நானும் தோழர் அம்பிகாபதி அவர்களும் 20 நாட்கள் மெனக்கெட்டு தனியார் இடத்தை வாங்கிக் கொடுத்தோம். ஆனால் இப்போதும் அம் மக்கள் குடிதண்ணீர் இல்லை என்று தான் சொல்கிறார்கள். இதேமாதிரி திருத்துறைப் பூண்டியில் கூட 30,000 மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கும் குடிப்பதற்கு குடிதண்ணீர் கிடையாது. உடனடியாக முதல் அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற பட்ஜெட் கூட்டத்திலே கூட முதல் அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கொண்டேன். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பெரிய கவிஞர். நிறைய பாடல்களைப் பாடியவர், நம்முடைய முதலமைச்சரே கூட நிறைய அவருடைய பாடல்கள் பாடியிருக்கிறார். தமிழ்நாட்டு மக்களையும் தாய்மார்களது உள்ளங்களையும் அவர் பாட்டுக்களினால் கவர்ந்தவர். அவர் இறந்து 30 வருடங்கள் ஆகின்றன. அவருக்கு 50 ஆண்டு நிறைவு விழா வருகிறது. உடனடியாக அதை முதலமைச்சர் அவர்கள் அரசு விழாவாக எடுத்து நடத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மற்றும் விவசாயிகள் பிரச்னை, தொழிலாளர் பிரச்னை, மாணவர்கள் பிரச்னை, காவல் துறையினர் பிரச்னை எல்லாம் உடனடியாக தீர்த்து வைக்க முன் வரவேண்டும் என்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*<u>திரு. எம். ஏ. லத்தீப்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, சற்றேறக்குறைய 21 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் இந்த துணை மானியக் கோரிக்கை மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கடந்த வாரம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சர்க்கார் அலுவலர்களுக்குச் சில சலுகைகள் அறிவித்திருந்தார்கள். அது ஏறக்குறைய $7\frac{1}{2}$ கோடி ரூபாயாக, அரையாண்டுக்

1979 அக்டோபர் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

கான செலவுகளை உள்ளடக்கியதாக இருந்தது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றம் கூட்டப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பு இத்தகைய நிதிநிலை தொடர்பான அறிவிப்பு ஒன்றை அரசு சார்பில் அறிவித்தது சட்டமன்றத்தை ஊதாசீனப்படுத்துவதோடு மட்டும் அல்லாமல், அது பார்லிமெண்டரி ஜனநாயகத்துக்கே மிகப் பெரிய பேராபத்தை விளைவிப்பதாக முடியும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசு செலவுகளைப் பொறுத்தவரையில் நிதி ஒதுக்கீடு தொடர்பான மொத்தப் பொறுப்பும் பேரவையிடம் உண்டு. இந்தப் பேரவை கூட்டம் கூட்டப்படுகிற நேரத்தில் பேரவையிலே அறிவிக்க வேண்டிய சலுகைகளை, நிதிநிலைமை தொடர்பான சலுகைகளை, மாண்புமிகு நிதியமைச்சரே சர்க்காரின் சார்பாக பத்திரிகைகளின் வாயிலாக அறிவித்திருப்பது அவ்வளவு தரமான ஜனநாயகமாகாது என்பதுடன், பேரவையின் அதிகாரத்தைக் குறைப்பதும் ஆகும் என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும் என்று நினைவுபடுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து பேரவையின் உறுப்பினர்களைப் பற்றி நாங்கள் எல்லாம் ஆழ்ந்த கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பேரவையின் உறுப்பினர்களுக்கு கடமையும் உண்டு. உரிமைகளும் உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களை மக்களால் மட்டும் மதிக்கப்பட்டால் போதாது, மக்களுடைய கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ்-பப்ளிக் சர்வெண்ட்ஸ் ஆக இருக்கிற சர்க்கார் அலுவலர்களும், எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களுடைய சொற்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்களுடைய நியாமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டும், அந்தப் பழக்கத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்றைக்கும் இல்லாத அளவிற்கு இன்றைக்கு மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுடைய நிலைமை மிகப் பயங்கரமாக மாறியிருக்கிறது என்பதை மட்டும் மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்த அலுவலகத்திற்குச் சென்றாலும் அந்தத் துறையில் வேலை செய்கிற அதிகாரிகள் அவர்கள் தாசில்தாராக இருந்தாலும் சரி அல்லது போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தாலும் சரி அல்லது வேறு அதிகாரிகளாக இருந்தாலும் சரி பேரவை உறுப்பினர்கள் மக்களின் பிரதிநிதிகள் என்ற எண்ணத்தை மறந்து விட்டு அவர்களிடம் உதாசீனத்தோடு நடந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் பல யிடங்களில் அவர்களை அவமரியாதையாக நடத்துகிற ஒரு நிலை நீடிக்குமானால் அது இந்த அவை கவனிக்க வேண்டிய ஒன்று என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் ஒரு சில உதாரணங்களைத் தர விரும்புகிறேன்.

இந்த அவையில் உறுப்பினராக இருக்கும் திரு. தாமரைக்கனி அவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதி சட்டசபை உறுப்பினர். அவர்கள் அவர்களது தொகுதி மக்கள் சார்பாக ஏதாவது குறைகளை வந்து சொல்வார்களானால் அந்தக் குறைகளுக்கு, உரிய அதிகாரிகள் பதில் சொல்லக் கடப்பாடு உடையவர்கள். அவர் தனக்காகப் போவதில்லை. அவரது தொகுதி மக்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் கருதுவார்களேயானால் அதற்காக அவர் போகிறார், அதில் தவறு இல்லை. அதற்காகத் தான் சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களே தவிர வேறு காரியத்திற்காக அல்ல என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் அவரது தொகுதியைச் சார்ந்த ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்து அதைப் பற்றிக் கேட்பதற்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ற இடத்தில் அவரையே கைது செய்து அவருக்கு விலங்கிட்டு சாதாரணமாக வாகனத்தில் அழைத்துப் போயிருக்கலாம், ஆனால் வாகனத்தில் அழைத்துப் போயிருக்கலாம். ஆனால் வாகனத்தில் அழைத்துப் போகக்கூடிய ஒரு மனோநிலை இல்லாமல் அங்கிருக்கிற அதிகாரி அவரை தெருவில் ஊர்வலமாக அழைத்துச் சென்று பிறகு ஒரு மைலுக்கு அப்பால் ஒரு வாகனத்தில் அமர்த்தி அதற்குப் பிறகு ஐந்து மைல்களுக்கப்பால் சென்று ஒரு காட்டிலே அவரை இறக்கிவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இது இந்த அவை உரிமை மீறிய செயலாகும்.

ஆகவே அவைத் தலைவர் அவர்கள் இதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது மாதிரி தகவலை போலீஸ் ஸ்டேஷனில் நம்முடைய ஜனதாக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்களுக்கு ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. அவர்களும் இதுமாதிரி தமது தொகுதியைச் சார்ந்த ஒருவர் தவறாக கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையில் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றிருக்கிறார்கள். முறையான ஒரு பதிலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தருவதற்குப் பதிலாக அங்கிருக்கிற மகேந்திரன் என்ற சப்-இன்ஸ்பெக்டர் இவரையே கைது செய்து இவர் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் நம் போலீஸ் துறையை நிர்வகிக்கிற முதல் அமைச்சர் அவர்களிடம் ஒன்றை பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்களெல்லாம் ஒரு லட்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர்கள். அப்படிதான் நீங்களும் வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். நாங்கள் மக்களின் பிரதிநிதிகளாக வருகிற பொறுப்பை ஏற்றிருக்கிறோம். முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர்களும் எக்ஸிக்யூட்டிவ்

1979 அக்டோபர் 31] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்ற முறையில் அதிகாரம் பெற்றிருக்கிறார்களே தவிர, மற்ற வகையில் நமக்கும் அமைச்சர்களுக்கும் எந்த வித்தியாசமுமில்லை. மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு ப்ரஸ்டிஜ், மரியாதை இருக்க வேண்டும். மக்களின் பிரதிநிதிகளாக நாங்கள் இங்கு இந்தச் சட்டசபைக்கு வந்திருக்கிறோம். ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினரை கைது செய்ததோடு மட்டுமல்லாமல் விலங்கிட்டு தெருவில் ஊர்வலமாக அழைத்துச் செல்கிறார்கள் என்றால் இது பற்றி இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்களுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் இதைப் பற்றி தகவல் கொடுக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் இதன் தொடர்பாக அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நான் முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முதன்முதலாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிகாரிகளுக்கு அது கிடைத்தால் போதும் என்று எடுத்துக் கொண்டார்கள். அதை வைத்துக் கொண்டு இன்று பெரிய திருவிளையாடல்கள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை, மக்கள் எங்கள் மீது நம்பிக்கை வைத்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஒரு விஷயத்தைக் கூட எடுத்துச் சொல்லக்கூடிய நிலை இல்லை என்று சொன்னால் இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

போலீஸ்காரர்கள் இன்று போராட்டம் நடத்துகிறார்கள். அந்தப் போராட்டத்தைப் பற்றி சரியா தவறா என்ற கருத்து எதையும் இந்த நேரத்தில் சொல்ல நான் விரும்பவில்லை. அவர்கள் இன்றைக்கு அஸோஸியேஷன்ஸ் வைக்க வேண்டுமென்று, அமைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கோருகிறார்கள். அந்தக் கோரிக்கை சரியானதா இல்லையா என்பதைப் பற்றியும் நான் எதுவும் சொல்வதற்கு விரும்பவில்லை. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது சரியா இல்லையா என்பதைப் பற்றியும் இந்த நேரத்தில் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. நான் சொல்வதற்குப் பதிலாக பொறுப்புள்ள இந்து பத்திரிக்கை போன்ற ஒரு பத்திரிகை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்ததா இல்லையா என்று தெரியாது. இந்த மாதம் 19-ம் தேதி அன்று அப்பத்திரிகை ஒரு எடிட்டோரியல் எழுதியிருக்கிறது, தலையங்கம் எழுதியிருக்கிறது. அதில் சொல்கிறது:

'The widespread unrest among Police constables in Tamil Nadu must cause profound concern to all those who have a stake in law and order and ensuring an orderly preparation for the coming general elections.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 அக்டோபர் 31

The handling of the agitation by the authorities has been far from creditable

என்று. அரசு இந்தப் போராட்டம் தொடர்பாக கடைபிடிக்கின்ற அணுகுமுறை எந்த விதத்திலும் திருப்திகரமாக இல்லை. அது அரசுக்கு பெருமை சேர்க்கவில்லை. பெருமையாக அமைந்திடவில்லை என்ற கருத்தை சொல்லுவதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு......

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் அவர்களுக்கு ஐந்து நிமிடம் கொடுக்கப்பட்டது. இப்போது எட்டு நிமிடம் எடுத்துக் கொண்டாகிவிட்டது. இன்னும் முடிக்கவில்லையே.··

திரு. எம். ஏ. லத்தீப்: 'The Chief Minister of Tamil Nadu will be taking a wise and significant step forward if he intervenes directy in the present dispute, meets a the representatives of the agitating constables for cool-headed and rational discussion. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் அந்தஸ்தைப் பார்க்காமல் வேறு விவகாரங்களை எல்லாம் பார்க்காமல் இதன் தொடர்பானவர்களை அழைத்துப் பேசி இந்தப் போராட்டத்தை சுமுகமாக முடித்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்து, இதில் இன்று இருக்கின்ற அணுகுமுறை சரியாக இல்லை என்பதையும் அருள்கூர்ந்து நினைத்துப் பார்த்து இந்தப் பிரச்சினையை முடித்து வைக்கவேண்டும் என்று, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, இந்த நாட்டினுடைய அமைதியின் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இங்கே சமர்பிக்கப் பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற போது, இதில் நீயணைப்புத்துறையில் உள்ளவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், கிராம அதிகாரிகளுக்கும் ரிஸ்க் அலவன்ஸ்—மதிப்பூதியம் கொடுக்கப்பட்டிருப்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய செய்தியில் ஆசிரியர்களுக்கும் சில சலுகைகள் அளிக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கின்ற சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகள் எல்லாம் இன்று ஊர்வலமாக வந்து சட்டமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சொல்லப்பட்டது. இந்த நேரத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட சுதந்திர போராட்ட வீரர்களுடைய கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுதந்திர போராட்ட வீரர்களுக்கு குறைந்தபட்சம் ஆறு மாத சிறை தண்டனை இருந்தால், அவர்களுக்கு மத்திய சர்க்கா

1979 அக்டோபர் 31] [திரு. ரா. மார்க்கபந்து]

ரிடமிருந்தும் மாநில சர்க்காரிடமிருந்தும் ஒய்வூதியம் வழங்குவது என்கிற சட்டம் அமலில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு சுதந்திர போராட்டத்திற்காக அதில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்படுகின்ற போது. தண்டனை வழங்குகின்ற பொறுப்பில் இருக்கின்ற மாஜிஸ்டிரேட் தனக்கு இருக்கின்ற 'பவர் ஆப் டிஸ்க்ரீஷன்' யை உபயோகித்து தங்கள் எண்ணத்திற்கு ஏற்றாற்போல், சிலருக்கு கூடுதலாக தண்டனை கொடுத்திருக்கலாம், சிலருக்கு குறைவாக கொடுத்திருக்கலாம். ஆகவே இந்த தண்டனை என்பதை, ஆறுமாத கால தண்டனை என்பதை விட்டுவிட்டு, எந்த காரியத்திற்காக ஈடுபட்டார்கள் என்பதை மட்டும் மனதில் கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் தங்களை ஆட்படுத்திக் கொண்டால் தங்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்பதையெல்லாம் நினைக்காமல் அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். இது சம்பந்தமாக ஹைக்கோர்ட்டில் ரிட் மனு ஒன்றும் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆகவே இவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பத்து லட்சம் ஆலய ஊழியர்கள், கோவில்களில் வருமானம் வரவில்லை என்பதற்காக, இவர்களுக்கு இது வரை ஊதியம் வழங்கப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் இன்றைக்கு பசியால் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ வழிசெய்கின்ற வகையில், இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்டிவேட்டிங் டெனன்ட் ப்ரொட்டக்ஷன் ஆக்டுக்கு சில திருத்தங்களை அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தில் கூட, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் சொன்ன உறுதிகளை பாதுகாக்கும் வகையில் இந்த கல்டிவேட்டிங் டெனன்ட் ப்ரொட்டக்ஷன் ஆக்டில்-கோவில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்கின்ற எக்ஸம்ஷனையும் சேர்த்து, கோவில் பணியாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வருகின்ற 6-ம் தேதி தமிழ்நாட்டில் உள்ள கோவில் பணியாளர்கள் எல்லாம் இங்கு ஊர்வலமாக வருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆகவே இவர்களுக்குரிய பரிகாரத்தை தேடித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 7 மாவட்டங்களில் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக தொழில்கள் எதுவும் இல்லாத வடஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் இந்த தொழில் மையங்களை அமைக்கப் போவதாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 அக்டோபர் 31

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே அணையே கட்டப்படவில்லை என்பதை மாமன்றம் அறியும். பலமுறை வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த நாங்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே 4 அணைக்கட்டுகள் கட்டப்பட வேண்டும். ஒன்று, புல்லூர் அணைக்கட்டு. அடுத்தது, செண் பகத்தோப்பு அணைக்கட்டு. இதைப்போல் மோர்தானா, மேல அரசம்பட்டு ஆகிய 4 அணைக்கட்டுகள் கட்டும் திட்டங்களை இந்த மன்றத்திலே வட ஆற்காடு மாவட்டத்திலே கட்ட இருப்ப தாகப் பேசினார்கள். ஆனால், சென்ற முறை டிஸ்டிரிக்ட் டெவ லப்மென்ட் கவுன்சிலிலே பேசுகின்றபோது, புல்லூர் திட்டமும் செண்பகத்தோப்புத் திட்டமும், மோர்தானா திட்டமும் 'வய பிலாக' இல்லை கைவிடப்பட்டிருக்கின்றது என்று அறிவித்திருக் கிறார்கள். மிச்சம் இருப்பது மேல் அரசம்பட்டு அணைக்கட்டுத் திட்டம். அதுவும் கைவிடப்பட்டு விடுமோ என்ற அச்சத்தை நான் தெரிவித்தேன். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம் ஒரு நீர் வசதியற்ற மாவட்டமாகும். அந்த காரணத்தினால், இந்த மேல் அரசம்பட்டு அணைக்கட்டுத் திட்டத்தையும், மேலு முள்ள 3, 4 அணைக்கட்டுத் திட்டங்களையும் இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தைப் பற்றி இந்த பட் ஜட்டிலே அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, எங்கள் மாவட் டத்தைப் பொறுத்தவரையில் செங்கம் வட்டாரம் ஒன்றுதான் இந்த சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப் பட்டிருக்கிறது. மற்ற தாலுக்காக்கள் அறிவிக்கப்படவில்லை. ஆகவே. எல்லா தாலுகாக்களையும் இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவரவேண்டும். அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, மேல்நிலைப் பள்ளிகளின் பின்தங்கிய மாணவர் களுக்கு உபகாரச் சம்பளம் இதுவரைக்கும் கொடுக்கப்படவில்லை என்கின்ற ஒரு நிலைமை இப்போது இருந்து கொண்டிருக்கின்றது. அதையும், இந்த அரசாங்கம் உடனடியாக தீர்த்து வைத்து, மேல் நிலைப் பள்ளிகளில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று நான் பேசுகின்றபோது, மிகவும் பின்தங்கிய வகுப் பினருக்கு, பின்தங்கியவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள 31%-ல் குறைந்தபட்சம் 15% ஒதுக்கவேண்டும் என்று குறிப்பிட்டேன். அவையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஏற்கனவே 1950ஆம் ஆண்டில் சுப்ரீம் கோர்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலே 49%க்கு மேல் ரிசர் வேஷன் இருக்கக்கூடாது என்பதை, சமீபத்தில் சுப்ரீம் கோர்டில் வெளியிடப்பட்ட தீர்ப்பிலே அதை அதிகமாக்கலாம் என்று ஒரு தீர்ப்பு தந்திருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் குறிப்பாக

1979 அக்டோபர் 31] [திரு. ரா. மாக்கபந்து]

மிகவும் பின்தங்கிய வகுப்பாரும், பின்தங்கிய வகுப்பாரும் இருக்கின்ற காரணத்தினால், இந்த 49% என்பதை அதிகமாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் நர்சரி பள்ளிகள் அதிகமாக நடத்தப்படுகின்றன. இதிலே, ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களே நிறைய பேர்கள் வேலையில்லாமல் இருப்பதால், இந்த நர்சரி பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை எடுத்துக் கொள்வதற்கு நியமிப்பதற்கு இந்த அரசாங்கம் ஒரு உத்தரவிட வேண்டும் என்பதைச் சொல்லிக்கொண்டு, எனக்கு இந்த அளவுக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979—80 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளை அவையின் முன் வைத்து, மாண்புமிகு உறுப்பினர்களின், கட்சித் தலைவர்களின் கருத்துக்களைக் கேட்கின்ற வாய்ப்பினை நான் பெற்றேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களைப் பேசிய உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும் பெருமளவிற்கு இந்த அரசையோ அல்லது இந்த மானியக்கோரிக்கையை முன் வைத்த என்னையோ கடுமையாக விமர்சனம் செய்யவில்லை என்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அருமை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும் போது அண்மையில் என்.ஜி.ஜி.ஒ.க்களுக்காக சில சலுகைகளை இந்த அரசு வழங்கியதைப் பற்றி எடுத்துக் காட்டி, சட்டமன்றத்திலே சொல்ல வேண்டியதை எப்படி வெளியிலே பேசலாம் என்று கேட்டார்கள்.

[பிற்பகல் 12·40]

திரு. லத்தீப் அவர்கள் வெறும் வழக்கறிஞர் மட்டுமல்ல, கான்ஸ்டியூஷனல் பண்டிட். அவர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வது அவரது புன்னகையில் இருந்து புரிகிறது. (குறுக்கீடு : மௌல்வி......) அப்படியா!

அவை நடந்து கொண்டிருக்கும்போது அரசாங்கத்தின் கொள்கை வெளியீடுகளை வெளியே சொன்னால் அது இந்த அவையை அவமதிப்பதாக ஆகுமே தவிர, அவை நடைபெறாமல் இருக்கும்போது அவசரம் காரணமாக அரசு ஒரு முடிவு எடுத்து வெளியே தெரிவிப்பதில் தவறு இல்லை என்று நான் 'மௌல்வி' அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அது அறிவிக்கப்பெற்று மூன்று நாட்களுக்குள் அவை தொடங்குகிறது. அவை தொடங்குவது பற்றி நோடிபிகேஷன் செய்கிற தேதியிலிருந்தே இந்த முறை கடைப் பிடிக்கப்பட வேண்டும்..

The House is in session. That is the letter and spirit of the Constitution.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; That is your interprettion. Your interpretation is different.

ஒரு மணிக்குள்ளாக நான் முடிக்க வேண்டுமென்று இருக்கும் காரணத்தால் யாரும் குறுக்கிட மாட்டார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். இங்கே இந்த மானியக் கோரிக்கையை வைத்து நான் கேட்ட தொகை 20.97கோடி ரூபாய். பேராசிரியர் அவர்கள் என்னைப் பார்த்துக் கேட்டார்கள். எவ்வளவு நேரம் பேசப் போகிறாய் என்று கேட்டபோது பத்து நிமிஷத்திற்குள் முடித்துக் கொள்ளலாம் என்று நான் சொன்னேன். 20 கோடி ரூபாய் கேட்கிறாயே, 15 நிமிஷமாவது பேசக் கூடாதா என்று அவர்கள் கேட்டார்கள். ஆகையால்தான் எனக்கு 15 நிமிஷம் தரப்பட்டிருக்கிறது. அதை யாரும் பறிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் நான் பேசுகிறேன்.

20.97 கோடி ரூபாய் என்னென்ன இனத்திற்காக என்று இங்கே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே பேசியவர்களில் திரு. துரை ராமசாமி அவர்கள் என்று கருதுகிறேன்—மதுரையில் நடைபெறுகிற மாநாட்டுக்கு 1 கோடி 43 லட்சம் ரூபாய் நீங்கள் செலவழிக்கிறீர்களே. எதற்காக என்று கேட்டார்கள். இனம் பிரித்துக் காட்டப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் தந்த அந்த துணை மானியக் கோரிக்கையில் இனம் பிரித்துக் காட்டப்படவில்லையே தவிர, அதையொட்டித் தந்த விளக்க உரையில் இனம் பிரிக்கப்பட்டு அவை தரப்பட்டிருக்கின்றன என்று திரு. ராமசாமி அவர்களுக்குச் சொல்லி; என்றாலும் இந்த அவையில் சிலபேர் படித்திருக்க மாட்டார்களோ என்ற அச்சத்தின் காரணமாக நான் அவைகளை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

அரசினர் சாலை மேம்படுத்துவதற்காக 32.87 லட்சம் ரூபாய்; குடிநீர் வசதி மேம்பாட்டுக்காக 45.70 லட்சம் ரூபாய்; ஒலி ஒளி காட்சி அமைத்தலுக்காக 28.01 லட்சம் ரூபாய்; கழிப்பிடங்கள் கட்டுவதற்காக 10 லட்சம் ரூபாய்; பயணிகள் விடுதிக்காக 9.20 லட்சம் ரூபாய், மின் விளக்கு வசதிகளுக்காக 17.00 லட்சம் ரூபாய் 42.78 லட்சம் அல்லது ஆக 143 லட்சம் ரூபாய் அதற்காகச் செலவழிப்பது என்று அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1979 அக்டோபர் 31] [திரு. கி. மனோகரன்]

இரண்டாவது, சென்ற ஆளுநர் உரையிலும் அதைத் தொடர்ந்து சென்ற ஆண்டு நான் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலும் ஒரு குறிப்பை, அரசின் தவிர்க்க முடியாத திட்டம் ஒன்றை வலியுறுத்திச் சொன்னேன். அதைப் படிக்கின்ற வாய்ப்பினை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் பெற விரும்புகிறேன்.

கிராமப் புறங்களில் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளதென்பது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. சிறு விவசாயிகள் மேம்பாட்டு அமைப்பு (S.F.D.A) வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் (D,P.A.P.) கிராம ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (I.R.D.P) ஆகியவற்றின் மூலம் பலர் பயனடைந்துள்ளனர். ஆயினும், இவற்றினால் நேரடியாகப் பயன் எய்தாத, வேலை வாய்ப்பு ஏதும் கிடைக்காத படித்த, படிக்காத, வேலையில்லாத அனைவருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு, 'உறுதியான வேலை வாய்ப்புத் திட்டம்' செயலாக்கப்படும். இத் திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்றி இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர் அனைவரும் வேலை கோரி தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பொதுவாக மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஒப்பந்தக்காரர் (கான்ட்ராக்டர்) இல்லாமல், அரசுத் துறைகளின் நேரடி மேற்பார்வையிலேயே இப் பணிகள் செயலாக்கப்படும். இத் திட்டங்களில் வேலை செய்யும் கிராம மக்கள் ஊதியம், அன்றாடம் நிறைவேற்றப்பட்ட பணியின் அளவை அடிப்படையாகக் கொண்டு வாரம் ஒரு முறை வழங்கப்படும். இதன்படி நாளொன்றுக்குச் சுமார் ரூபாய் மூன்றும், அரிசியும் கோதுமையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். வேலை ஏதும் அளிக்கப்படாத நாட்களில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயோ அல்லது அதற்கிணையான அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கப்படும்.

இப் புதிய திட்டத்திற்கென நிர்வாக அலுவலர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 'இதுதான் நிதிநிலை அறிக்கையின் போது பேரவைக்குத் தெரிவிக்கப்பட்ட அரசின் கருத்தாகும். இந்தக் கருத்தைத் தெரிவித்ததற்குப் பிறகு எத்தனை பேர்கள் பதிவு செய்தார்கள். அப்படி யாராவது பதிவு செய்திருக்கிறார்களா, உறுதியான உத்திரவாதம் வழங்குகிற இந்த வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுகிறதா, அப்படிச் செயல்படுகிறது என்றால் எந்த எந்த மாவட்டங்களிலே செயல்படுகின்றது, இப்படிப்பட்ட கேள்விகளை எழுப்பியவர்களுண்டு. எழுப்புவதற்கு உரிமையும் அவர்களுக்கு உண்டு; நான் மறுக்கவில்லை. அவர்களுக்குப் பதில் சொல்லுகிற உரிமையும் உடைமையும் எனக்கு உண்டு, அதை அவர்கள் மறுக்கமாட்டார்கள்.

அந்த வேலைக்காகப் பதிவு செய்து கொண்டவர்களின் விவரம் பின்வருமாறு: கோயம்புத்தூர் மாவட்டம் 23,025; பெரியார் மாவட்டம் 17,257 சேலம் மாவட்டம் 16,586; நீலகிரி மாவட்டம் 4,234; தர்மபுரி மாவட்டம் 9,990; வட ஆற்காடு மாவட்டம் 29,852 செங்கற்பட்டு மாவட்டம் 3,270; தென் ஆற்காடு மாவட்டம் 49,379; திருச்சி மாவட்டம் 22,204; புதுக்கோட்டை மாவட்டம் 9,673; தஞ்சாவூர் மாவட்டம் 9,432; மதுரை மாவட்டம் 16,166; இராமநாதபுரம் மாவட்டம் 23,320, திருநெல்வேலி மாவட்டம் 10,898; கன்னியாகுமரி மாவட்டம் 1,968; மொத்தம் 2 லட்சத்து 36 ஆயிரத்திற்கு மேலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும், அங்கேயெல்லாம் வேலை வாய்ப்புகள் பெற்று ஒழுங்காகவே அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளாமல் அந்த இடங்களைப் பார்வையிடாமல் பட்டும் படாதது போல் பேசுகின்ற பாசமுள்ள எதிர்க்கட்சி நண்பர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதாவது சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்பவர்கள் உண்டு. இப்படிச் சொன்னாலாவது வேலை துரிதமாக நடக்காதா என்ற நல்ல எண்ணத்தோடு சொல்கின்றவர்களும் உண்டு. அதிலே பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் ஒருவர். . . .

திரு. க. அன்பழகன் : அவை முன்னவர் அவர்கள் வேலைக்குப் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 36 ஆயிரத்திற்கும் மேலே என்பதைப் படித்துக் காட்டினார்கள். அந்த 2 லட்சத்து 36 ஆயிரம் பேர்களுக்கும் வேலை தரப்பட்டு இருக்கிறதா? எவ்வளவு நாட்களாக வேலை அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் எப்போது அமலுக்கு வருகிறதோ அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் வேலை தந்தாக வேண்டும். அந்த அடிப்படையில் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர் பெருமகனுக்கு விளக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : இந்தத் திட்டம் அமலுக்கு வந்ததற்குப் பிறகு 1 மாதத்திற்குள் வேலை பெறுவார்கள் என்று சொன்னார்கள். அமலுக்கு வந்தவுடனே வேலை தருவார்கள் என்பது அர்த்தம், ஆனால் அமலுக்கு வந்த பிறகு ஒரு மாதம் என்றால் எந்த நாளிலிருந்து ஒரு மாதம் என்பதை அமைச்சர் அவர்கள் கூற வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : டேட் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன் தான் எடுத்துச் சொன்னேன். இப்போது விளக்கம் சரியாக இருக்கிறதா?

1979 அக்டோபர் 31]

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : டைம் இல்லை, ஐ எம் நாட் யீல்டிங்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள் டைம் இல்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதற்குப் பிறகு மத்திய சர்க்கார். 'புட் பார் ஒர்க்' திட்டத்திற்காக எவ்வளவு உணவு தானியங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று சில நண்பர்கள் இங்கே கேட்டார்கள்,

[பிற்பகல் 12-50]

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் சார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை, இல்லை, மன்னிக்க வேண்டும், ஐ ஆம் நாட் யீல்டிங்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. ரகுமான்கான் அவர்கள் உட்கார வேண்டும். நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மத்திய அரசு 44,000 டன் உணவு தானியங்களை ''ஃபுட் ஃபார் ஒர்க்'', வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு இந்த ஆண்டு அளித்துள்ளது. நமது அரசு இதைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மீண்டும் மத்திய அரசை வேண்டியுள்ளது. இதுபற்றித் தொடர்ந்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெருமதிப்பிற்குரிய திரு. சாதிக்பாட்சா அவர்கள் பேசும்பொழுது சென்னை சாலைகளை மேம்படுத்துவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், சாலைகள் ஒழுங்காகப் போடப் படவில்லை என்றும் சாலைகள் ஒழுங்காகப் போடப் படுவதற்கு அரசு பொறுப்பு எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அந்தக் கருத்தை முழுமையாக வரவேற்க என்னால் இயலா விட்டாலும், சில பாதைகள் நன்றாக இல்லை என்பதை உணர்ந்தவன் என்ற நிலையில் சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களுக்கு அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னேன். அமைச்சர் அவர்களும் அதை உடனடியாகக் கவனிக்கிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகையினாலே சாலை மேம்பாட்டுத் திட்டம் மிகத் துரிதமாக அமலுக்கு வரும், நடைபெறும் என்பதை நான் இந்த நேரத்தில் அவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கி. மனோகரன்] [1979 அக்டோபர் 3]

அதற்குப் பிறகு பேசியவர்களெல்லாம் எனது வளையத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களிலே அதிக அக்கறை காட்டிப் பேசினார்களே தவிர நான் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இல்லாத பொருள்களைப்பற்றிப் பேசினார்களே தவிர, இன்னும் சொல்லப் போனால், 3 ஆம் தேதி முதலமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டிய அந்தக் கருத்துக்களைப் பேசினார்களே தவிர, என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல வேண்டிய இந்தக் கருத்துக்களை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், சொல்லிவிட்டேன் என்று நான் நம்புகிறேன்.

இதைச் சொல்லி, இன்னொன்றும் தெரிவிக்க விரும்புகிறேன். இவ்வளவு பணம் வாங்கிக் கொண்டு போகிறீர்களே, இந்தப் பணத்தையெல்லாம் ஒழுங்காக செலவழிக்க வேண்டுமென்று நாங்களெல்லாம் ஆசைப்படுகிறோம் என்று மேலவையிலேயும், இங்கேயும் சில உறுப்பினர்கள் சொன்னார்கள். நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நேரத்திலே நான் தெரிவித்த கருத்தை இறுதியாகத் தெரிவித்து விடைபெற விரும்புகிறேன்.

நீங்கள் வழங்குகின்ற இந்தப் பணம் எந்த அளவிற்கும் பாழாகாமல் பயனுள்ள காரியத்திற்காகச் செலவழிக்கப்படும் என்ற உறுதியை மேலும் தெரிவிக்கின்றேன். இன்னும் சொல்கிறேன், எனக்குத் தெரியாது, அப்படி ஏதாவது வழியிருந்தால் எனக்குச் சொல்லித் தாருங்கள். எஸ்டிமேட் கமிட்டி இருக்கிறது, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது, ஏ.ஜி. ஆபீஸ் இருக்கிறது, அவர்களின் கண்காணிப்பிலேயிலிருந்து இந்த அரசு தப்ப முடியாது. அநாவசியமாகப் பணத்தைப் பயன்படுத்தினால் முறைகேடாக பயன்படுத்தினால் அவர்களின் பிடியிலேயிருந்து தப்ப முடியாது. அப்படித் தப்புவதற்கு வழி இருந்தால்-பழகிக் கற்றவர்கள் சொல்லித் தாருங்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன், காலணா கூடப் பாழ் ஆகாமல், இந்த நாட்டின் நன்மைக்காக, இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்படும் என்பதை மிகப்பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபொழுது சில கருத்துக்களெல்லாம் பேசப்பட்டன. அந்தக் கருத்துக்களையெல்லாம் கேட்டுக் கொண்டு கையறு நிலையில் நாங்களெல்லாம் இருந்தோமே தவிர அவர்களுக்கு எதிலும் உதவுவதற்கு முடியவில்லை. பெரியவரைப்பற்றிக்கூடச் சொன்னார்கள். திரு. ஜெபமணியைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கூட நேற்று ஆவேசமாகப் பேசினார் என்றும், அந்த ஆவேசத்தைத் தொடர்ந்து அதைவிட ஆவேசமாக மற்றவர்கள் பேசினார்கள் என்றும் எனக்குச் சொன்னார்கள். பெரியவரே இவ்வளவு ஆவேசப்படும்பொழுது இளைஞர்கள் ஆவேசப்படுவது இயற்கை.

இனிமேல் பெரியவர் அவர்கள் ஆவேசப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். இப்படிப்பட்ட ஆவேசத்திற்கு வரி போட்டுக் கொண்டிருக்க முடியாது.

<u>திரு. ர. ஜெபமணி :</u> நான் ஆவேசமாகப் பேசியிருந்தால் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பெருமதிப்பிற்குரிய பெரியவர் பெருந்தன்மையோடு எழுந்து நான் ஆவேசமாகப் பேசியதற்காக வருத்தம் தெரிவிக்கிறேன் என்று இந்த அவைக்கு அவரது வயதைக் கூட மறந்து பேசியதற்காக எப்படி அவருக்கு நன்றி தெரிவிப்பது என்று எனக்குப் புரியவில்லை.

இரண்டாவது, அமைதியின் உருவமும், அடக்கத்தின் பேருருவமும் என்று நான் கருதுகிற திரு. மாரிமுத்து அவர்கள் கூட நேற்றைக்குக் கொஞ்சம் வேகப்பட்டு பேசியதாக எனக்குச் சொன்னார்கள். நேரிலே அவைகளை எல்லாம் பார்த்து பரவசப் படுகிற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்குள்ளே கட்சிகளைப் பற்றித்தான் பேசினார்களே தவிர, விஷயங்களைப் பற்றிப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். இடையிடையே விஷயங்களையும் பேசினார்கள். திரு. மாரிமுத்து மிக முக்கியமான கருத்துக்களை அரசின் கவனத்தை ஈர்க்கத் தகுந்த வகையில் பேசுவதில் வல்லவர், கெட்டிக்காரர். அப்படிப்பட்ட வரிடத்தில் அருமையான கருத்துக்களை எதிர்பார்ப்பது இந்த அரசின் கடமையாகும். அதே போல், முன் வரிசையிலே இருக்கிற அத்தனை பேர்களும், நமது திரு. உமாநாத் அவர்களும் கூட ஆவேசமாகத்தான் பேசினார்கள். அதைவிட ஆவேசமாக திரு. சங்கரய்யா அவர்கள் பேசினார்கள். எப்படி அவர்களுக் கெல்லாம் ஆவேசம் வருகிறது என்று எண்ணிப் பார்க்கிறேன். நான் நினைத்துப் பார்க்கிறேன் என்னால் அறிய முடிய வில்லை. (குறுக்கீடு) நான் இன்னும் தெரிவிக்க விரும்புகிறேன், சில நேரங்களில் திரு. அன்பழகன் கூட அந்த ஆத்திரத் திற்கு அடிமையாவது உண்டு என்று சொல்லக் கூடாது (ஒரு குரல் : பலியாவது உண்டு). உங்களது கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், இந்தத் தரப்பிலே இருக்கிற நண்பர்கள்—அவர்களாவது சும்மா இருக் கிறார்களா என்றால், நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று காட்டத்தக்க வகையில் அவர்கள் இரண்டு நாட்களாக நடந்து கொண்டார்கள். ஆனால் எனக்கு இருக்கிற மகிழ்ச்சி, நேற்றைக்கு அப்படிப்பட்ட நிலைமை நடந்தவுடன் நான் எழுந்து, இனிமேல் இந்தப் பகுதியிலே இருப்பவர்கள் யாரும் சத்தம் போட மாட்டார்கள். அந்த உறுதியை எதிர்க்கட்சித் தலைவரவர்களும் வழங்க வேண்டும் என்று கேட்டபொழுது எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து கேட்டார்கள், சபையிலே அமைதி நிலவியது. இந்தப் பரிபூரண ஒத்துழைப்பு இரண்டு பகுதிகளிலும் இருக்க வேண்டுக் மென்று கேட்டுக் கொள்ள இந்த நல்ல நேரத்தைப் பயன்படுத்தி

கொள்ளுகின்றேன். (குறுக்கீடு) இருந்தாலும் பல நல்ல கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி எங்களுக்கு உற்சாகம் ஊட்டிய பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

ஏதோ திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசுகிறபொழுது நாகர்கோவில் பகுதியை நான் பாராமுகமாக விட்டுவிட்டேன் என்றும், அதற்கு எதுவும் செய்யவில்லை யென்றெல்லாம் சொன்னார்கள். இப்படி மனப் பூர்வமாக, உண்மைக்கு மாறான கருத்துக்களை சபைக்கு நீங்கள் தருவதன் மூலம் என்ன பலனை அனுபவிக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை (சிரிப்பு). ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று என்னைக் கேட்டார். உடனடியாகச் சொன்னேன், அந்தக் கட்டிடம் கட்டப்படும் என்று. கட்டப்பட்டு, பள்ளிக்கூடம் திறந்து வைக்கப்பட வேண்டும், வா என்று அழைத்தார். போனேன், அவர் வரவில்லை (சிரிப்பு). இது போன்ற பல காரியங்களை அவர் செய்து கொண்டிருக்கிறார். ஆக, அவருக்கு நான் தெரிவிக்க விரும்புவது, ஏதாவது நல்ல கருத்துக்கள் இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். அந்தப் பகுதிக்குச் செய்ய வேண்டியவைகளை இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது.

ஒன்றை மட்டும் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னார், இனியவர் என்று பார்க்காமல், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பார்க்காமல், எந்தத் தொகுதியானாலும் சரி, அது மொத்தத் தமிழகத்திலேயிருக்கிற தொகுதி என்ற அடிப்படையில் அரசு நிச்சயமாகச் செய்யும் என்பதை உறுதியாக நம்புங்கள் என்று உறுப்பினர்கள் அனைவரையும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் விடை பெறுவதற்கு முன்பு திருப்பியும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே நீங்கள் ஒதுக்கித் தருகின்ற இந்தப் பணம் எதற்காகச் செலவழிக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோமோ அதற்காக முழுமையாக பயன்படத்தக்க வகையில் செலவழிக்கப்படும் என்ற உண்மையை இந்த நேரத்திலே நான் தெரிவித்து, மணி 1 ஆகி விட்டது என்ற காரணத்தாலே, இதற்குமேல் தொடர்வது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று கருதி, இதை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு பேரவை உறுப்பினர்களை நான் கேட்டு அமர்கிறேன்.

[பிற்பகல் 1—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது பிற்பகல் 1 மணி. எனவே, நமது பேரவையின் 155-வது விதி, உள்-விதி (3)ன் படி இத்துடன் விவாதம் முடிவுறுகிறது. இப்போது வாக்கெடுப்பு.

1979 அக்டோபர் 31

பேரவை முன்னுள்ள கேள்வி :

''1979-80-ஆம் ஆண்டிற்கான முதல் துணை மானியக் கோரிக்கைகள் அடங்கிய 27-10-1979 ஆம் நாளிட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப் பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங் களுக்கு 1979—80 ஆம் நிதி ஆண்டிற்கான கூடுதல் செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற துணை மானியக் கோரிக்கைகள்

1979—80

A வருவாய்க் கணக்கில் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

கோரிக்கை	4	பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வை களும்— நிர்வாகம் ..	2
ஷை	9	மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமை யிடப் பணியாளர்கள் ..	19,40
ஷை	11	மாவட்ட நிர்வாகம் ..	42,27
ஷை	14	சிறைச்சாலைகள் ..	12,50
ஷை	15	காவல் துறை	1,08,84
ஷை	16	தீயணைப்புப் பணிகள் ..	1
ஷை	17	கல்வி	69,60
ஷை	18	மருத்துவம்	63,13
ஷை	20	வேளாண்மை	3,15,19

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 31

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

			(ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	23	கூட்டுறவு	3,13
ஷ	24	தொழில்கள்	3,70
ஷ	27	கதர்	1
ஷ	28	சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.	17,41
ஷ	29	தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் ..	13,43
ஷ	30	சமூக நலன்	4,21
ஷ	31	பழங்குடியினர், அரிசனங்கள் முதலியவர்களின் நலன்.	1,12,32
ஷ	32	பின்தங்கிய வகுப்பினர் முதலியவர்களின் நலன்.	1
ஷ	34	நகர்ப் பகுதி மேம்பாடு ..	50,00
ஷ	35	நுகர்பொருள் வழங்கல் ..	15
ஷ	36	பாசனம்	14,51
ஷ	37	பொதுப் பணிகள்—கட்டிடங்கள் ..	10,63
ஷ	38	பொதுப் பணிகள்—பணியாளர் அமைப்பும் கருவிகளும் தளவாடமும்.	13,01
ஷ	39	சாலைகளும் பாலங்களும்	1,02,97
ஷ	40	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.	88,00
ஷ	42	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.	16,17
ஷ	43	பல்வகை	11,67
ஷ	45	காட்டுவளத் துறை ..	1,97
ஷ	47	தகவல், சுற்றுலா, திரைப் படத் தொழில் நுட்பவியல்.	37,01
		மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ..	11,31,27

1979 அக்டோபர் 31]

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

			(ரூபாய் ஆயிரத்தில்)
கோரிக்கை	51	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.	26,14
ஷை	52	பாசனம் குறித்த மூலதனச் செலவு.	8,24
ஷை	53	பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.	28,59
ஷை	54	சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.	29,91
ஷை	55	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.	98,94
ஷை	56	காட்டுவள மூலதனச் செலவு.	1
ஷை	57	பல்வகை மூலதனச் செலவு.	2,32,21
		மொத்தம்—B. மூலதனக் கணக்கு ..	4,24,04

C. கடன்களையும் முன்பணங்களையும் வழங்குதலும், கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

கோரிக்கை	58	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.	5.41,62
		பெரு மொத்தம் ..	20,96,93

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(3) அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன். ''தமிழ் நாடு, 1979ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 6) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 2.11.1979 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

173. தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சிகரட் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) விதிகளில் சில மாற்றங்கள் செய்வது குறித்து தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையின் 4-7-1979—ஆம் தேதியிடப் பெற்ற அரசாணை எண் 1097-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு பீடி. சிகரட் தொழிலாளர்கள் (வேலை நிபந்தனைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 32/1966) 44 (4)வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

174. திருமங்கலம் நகராட்சி மன்றத்தில் அரிசனங்களுக்கு ஒரு இடமும், பெண்களுக்கென ஒரு இடமும் ஒதுக்கவும் திருமங்கலம் நகராட்சியை 20 வார்டுகளாகப் பிரிப்பது குறித்தும் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25.7.1979 ஆம் தேதியிடப்பெற்ற 1139-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குறித்து 1973-74-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை) (பத்தாவது அறிக்கை).

21. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குறித்து 1974-75—ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழு அளித்த நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை (ஆறாவது பேரவை)(பதினோராவது அறிக்கை).

*வெட்டுத் தீர்மானங்கள் தனியே அனுப்பப் பெற்றுள்ளன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I.

[459-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 56-க்கான விடையைக் காண்க]

விடை.

(அ) வீரிய ஒட்டுத் தென்னை சாகுபடி திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு (1978-79) சுமார் 30,000 வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகள் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள நவ்லக் பண்ணையிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளத்திலும் உற்பத்தி செய்யப்பட்டன. நடப்பு ஆண்டில் (1979-80) 35,000 கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) 18.1.1979 வரையில் தனி நபர்களிடமிருந்து பெற்ற விண்ணப்பங்களுக்குக் கன்றுகளின் வளர்ச்சி, கையிருப்பிலுள்ள கன்றுகளின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கொண்டு கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. உதவி பயிர் நிபுணர் நவ்லாக் இந்த

[1979 அக்டோபர் 31

விநியோகத்தைச் செய்து வந்தார். 18.1.1979க்குப் பிறகு இக்கன்றுகளுக்கு விநியோகத்தில் தேவை அதிகமாகயிருந்ததால் கீழ் குறிப்பிட்ட முறை பின்பற்றப்பட்டு வருகிறது :—

(1) 5 கன்றுகளுக்குக் குறைவாக வேண்டுவோர்க்கு அவர்கள் தேவை முழுவதும் அளிக்கப்படுகிறது.

(2) 5 கன்றுகளுக்கு மேல் தேவைப்பட்டவர்களுக்குத் தேவையில் 50 சத எண்ணிக்கை வழங்கப்படுகிறது.

(3) தனி நபருக்கு அதிகப்பட்சமாக 20 கன்றுகள் வழங்கப்படுகின்றன.

இணைப்பு II.

[468-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 2-க்கான விடையைக் காண்க.]

(அ) பழனி நகரத்திலுள்ள அரசு மருத்துவ மனையில் 1976, 1977-ஆம் வருடங்களில் ஒவ்வொரு மாதமும் சிகிச்சையளிக்கப்பட்ட உள்நோயாளிகள், வெளி நோயாளிகள் ஆகியோரின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :

மாதம்	உள் நோயாளிகள்.		வெளி நோயாளிகள்.	
	1976	1977	1976	1977
(1)	(2)	(3)	(4)	(5)
ஜனவரி	4,876	4,689	26,549	27,244
பிப்ரவரி	4,912	4,261	28,522	25,866
மார்ச்	6,503	4,051	27,889	29,258
ஏப்ரல்	5,646	4,663	28,475	30,021
மே	6,076	4,236	28,957	36,390
ஜுன்	5,759	4,624	31,302	35,638
ஜுலை	6,348	4,345	31,235	35,280
ஆகஸ்ட்	6,888	4,104	33,761	35,413
செப்டம்பர்	9,664	4,069	33,916	35,282
அக்டோபர்	6,186	4,083	31,828	35,792
நவம்பர்	4,911	4,233	31,569	36,070
டிசம்பர்	5,227	4,388	35,167	38,525
மொத்தம்..	72,996	51,746	3,69,170	4,00,779

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

(ஆ) அந்த நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க உதவி-மருத்துவ அதிகாரிகளின் எண்ணிக்கை எட்டு. [ஒரு பல் சிகிச்சை உதவி-மருத்துவ அதிகாரி (ஆண்) உட்பட]. (ஆண்கள்—4, பெண்கள்—4)

[தற்போது 5 ஆண் மருத்துவ அதிகாரிகளும் (பல் சிகிச்சை உதவி மருத்துவ அதிகாரி உள்பட) 4 பெண் மருத்துவ அதிகாரிகளும் உள்ளனர்].

இணைப்பு III.

[35ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 4-க்கான விடையைக் காண்க)

விடை

சேலம் மாவட்டம்

1 ராசிபுரம்—ஆட்டையம்பட்டி	..	1 பஸ் (புற நகரப் பேருந்து)

திருச்சி மாவட்டம்—

2 கலியபெருமாள் கோயில்—திருவையாறு (வழி) அரியலூர்	..	,,
3 திருச்சி—பாடலூர் (வழி) லால்குடி	..	,,
4 திருச்சி—அரியலூர்	..	,,
5 திருச்சி—மாயனூர்	..	,,
6 திருச்சி—குளித்தலை	..	,,
7 திருச்சி—ஜெயங்கொண்டான் (வழி) லால்குடி	..	,,
8 திருச்சி—துறையூர்	..	,,
9 துறையூர்—முசிறி	..	,,
10 முசிறி—கோப்பம்பட்டி	..	,,
11 திருச்சி—வெங்கடாத்துனூர்	..	,,

இராமநாதபுரம் மாவட்டம்—

12 கீழக்கரை—சாயல் குடி	..	1 பஸ் (புறநகரப் பேருந்து)
13 இராமநாதபுரம்—பரமக்குடி	..	,,
14 விருதுநகர்—காரியாபட்டி	..	,,
15 பரமக்குடி—கீழக்கரை	..	,,
16 விருதுநகர்—அருப்புக்கோட்டை	..	,,
17 பரமக்குடி—அஞ்சுக்கோட்டை	..	,,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

இராமநாதபுரம் மாவட்டம் — தொடர்ச்சி—

18	இராஜபாளையம் — கரிவலம் வந்த நல்லூர் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
19	விருதுநகர் — நடுவப்பட்டி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
20	பரமக்குடி—ஆனந்தூர் ..	,,
21	மரனாமதுரை—மேலூர் ..	,,
22	விருதுநகர்—கோயில்பட்டி ..	,,
23	நல்லூர்—மதுரை ..	,,
24	பெருநாளி—ஏர்வாடி ..	,,
25	காரைக்குடி—திருவெற்றியூர் ..	,,
26	அருப்புக்கோட்டை—பந்தல்குடி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
27	பரமக்குடி—வடக்குநத்தம் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
28	பரமக்குடி—காரைக்குடி ..	,,
29	மானாமதுரை—உப்பூர் ..	,,
30	ராஜபாளையம்—நாகலாபுரம் ..	,,
31	திருப்பத்தூர்—சிங்கம்புணரி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
32	காரைக்குடி—எம்புதூர் ..	,,

கோயம்பத்தூர் மாவட்டம்—

33	பொள்ளாச்சி பேருந்து நிலையம்—கொல்லிப்பட்டி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
34	பொள்ளாச்சி பேருந்து நிலையம்—சோமந்துரைசித்தூர் ..	,,
35	பொள்ளாச்சி—பெடப்பம்பட்டி ..	,,
36	பொள்ளாச்சி—ஆளியார் நகர் ..	,,
37	பொள்ளாச்சி—மீனாச்சி புரம் ..	,,
38	ஒண்டிப்புதூர்—வடவள்ளி ..	,,
39	உக்கடம்—விராளியூர் ..	2 பஸ் (நகரப் பேருந்து)
40	கண்ணாடி தொழிற்சாலை—விஸ்கோஸ் தொழிற்சாலை ..	1 பஸ் (நகரப் பேருந்து)
41	சாய்பாபா குடியிருப்பு—பேரூர் ..	,,

1979 அக்டோபர் 31]

கோயம்பத்தூர் மாவட்டம்—தொடர்ச்சி.

42	சிங்கநல்லூர்—அப்பநாயக்கன்பட்டி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
43	பைபாஸ் ரோடு சந்திப்பு—வாயம் பாளையம் ..	,,
44	காந்திபுரம்—மாலுமிச்சம்பட்டி ..	,,
45	பொள்ளாச்சி—செட்டிகா பாளையம்	,,
46	பைபாஸ்ரோடு—வீரபாண்டிபுதூர் ..	2 பஸ் (நகரப் பேருந்து)
47	ராமகிருஷ்ணா கல்யாண மண்டபம்—ராமகிருஷ்ணா கல்யாண மண்டபம் ..	,,
48	பொள்ளாச்சி—சேத்துமடை ..	,,
49	பொள்ளாச்சி—உடுமலைப்பேட்டை ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
50	பி. புளியம்பட்டி — தோளம்பாளையம்	,,
51	உடுமலைப்பேட்டை—கடத்தூர் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
52	பொள்ளாச்சி—ராமச்சந்திரபுரம் ..	,,
53	உடுமலைப்பேட்டை—அம்மாபட்டி ..	,,
54	பொள்ளாச்சி—உடுக்கம்பாளையம் ..	,,
55	மேட்டுப்பாளையம்—சூலூர் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
56	மேட்டுப்பாளையம்—வெள்ளியங் காடு. ..	1 பஸ் (நகரப் பேருந்து)
57	பொள்ளாச்சி—நெகமம் ..	,,
58	பொள்ளாச்சி—நடுப்புனை ..	புறநகர்ப்பேருந்து

தர்மபுரி மாவட்டம்.—

59	நாகமரை—தோப்பையார் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
60	பாலக்கோடு—செல்லமுடி ..	,,
61	பென்னகரம்—தர்மபுரி கலக்டர் அலுவலகம் ..	,,
62	தர்மபுரி—சின்னார் அணை ..	,,
63	தர்மபுரி பேருந்து நிலையம்—பில்லியணூர் அக்ரகாரம் ..	1 பஸ் (நகரப் பேருந்து)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 31

தர்மபுரி மாவட்டம்—தொடர்ச்சி

64	தர்மபுரி—தர்மபுரி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
65	பொம்மிடி—ராயக்கோட்டா ..	,,
66	பெல்ரம்பட்டி—கம்பை நல்லூர் ..	,,
67	பாலக்கோடு சர்க்கரை ஆலை—தோப்பூர் ..	,,
68	பாலக்கோடு—ஊத்தங்கரை ..	,,
69	தர்மபுரி—ஊத்தங்கரை (வழி) புலியூர் ..	,,
70	மாரந்தகள்ளி—ஹோசூர் ..	,,
71	கரூர்—ஒகேனக்கல் ..	,,
72	தர்மபுரி—ஊத்தங்கரை (வழி) மோதப்பூர் ..	,,
73	தளி—தர்மபுரி ..	,,

மதுரை மாவட்டம்.

74	திண்டுக்கல்—தாராபுரம் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
75	மதுரை—ஏழுமலை ..	,,
76	பெரியகுளம்—திண்டுக்கல் ..	,,
77	தேனி—உத்தம பாளையம் ..	,,
78	பொரந்தளார் அணை—குமார பாளையம் ..	,,
79	மதுரை—திருமங்கலம் ..	,,
80	திண்டுக்கல் பேருந்து நிலையம்—ஆளத்தூர் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
81	மதுரை—திண்டுக்கல் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
82	பெரியகுளம் பேருந்து நிலையம்—வத்தலக்குண்டு பேருந்து நிலையம் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
83	வத்தலக்குண்டு—வத்தலக்குண்டு ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
84	பழனி அடிவாரம்—அமர பண்டி ..	1 பஸ் (நகரப் பேருந்து)

1979 அக்டோபர் 31]

மதுரை மாவட்டம்—தொடர்ச்சி

85	மதுரை—பிரான்மலை ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
86	நாச்சி குளம்—எல். பி. நத்தம் ..	,,
87	திண்டுக்கல்—கூம்பூர் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
88	தேனி—கண்டமனூர் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
89	திருச்சுழி—உசிலம்பட்டி ..	2 பஸ் (புறநகர்ப் பேருந்து)
90	அடிவாரம்—ருத்திரபாளையம் ..	1 பஸ் (நகரப் பேருந்து)
91	மதுரை—அத்திப்பட்டி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
92	மதுரை—நத்தம் ..	,,
93	ஒட்டன் சத்திரம்—மார்க்கம்பட்டி ..	,,
94	திண்டுக்கல்—கனபாடி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
95	திண்டுக்கல்—அழகுபட்டு ..	,,
96	மேலூர்—கோட்டையூர் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
97	மேட்டுப்பட்டி—கொடை ரோடு ..	,,
98	திண்டுக்கல் பேருந்து நிலையம்—மாரனுத்து ..	1 (பஸ் நகரப் பேருந்து)
99	திண்டுக்கல் பேருந்து நிலையம்—காமுபிள்ளை சத்திரம் ..	,,
100	திண்டுக்கல்—ஒட்டன் சத்திரம் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
101	மதுரை—பாரைப்பட்டி ..	,,

புதுக்கோட்டை மாவட்டம்.—

102	புதுக்கோட்டை பேருந்து நிலையம்—ஆலங்குடி ..	1 பஸ் (நகரப் பேருந்து)
103	புதுக்கோட்டை பேருந்து நிலையம்—ராயவரம் ..	,,
104	புதுக்கோட்டை—புதுக்கோட்டை விடுதி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1979 அக்டோபர் 31

புதுக்கோட்டை மாவட்டம் —தொடர்ச்சி

105	திருச்சி—பொன்னமராவதி	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
106	பி. அழகாபுரி—மணப்பாறை	..	,,
107	பட்டுக்கோட்டை—ஆவடையார் கோயில்	..	,,

செங்கற்பட்டு மாவட்டம்.—

108	காஞ்சீபுரம்—காஞ்சீபுரம்	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
109	உத்திரமேரூர்—காஞ்சீபுரம்	..	,,
110	திருத்தணி—கொண்டபுரம் குடியிருப்பு		2 ஜீப் வண்டி
111	கிளார்—அய்யங்கார் குளம்	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)

தஞ்சாவூர் மாவட்டம்.—

112	மாயூரம்—சீர்காழி	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
113	கும்பகோணம்—அரியலூர்	..	,,
114	வல்லம்—வெள்ளம் பெரம்பூர்	..	,,
115	ஒரத்த நாடு—அதிராம்பட்டினம்	..	,,
116	தஞ்சாவூர்—மன்னார்குடி	..	2 பஸ் (புறநகர்ப் பேருந்து)
117	நன்னிலம் பேருந்து நிலையம்—செல்லூர்.	..	1 பஸ் (நகரப் பேருந்து)
118	திருத்துறைப்பூண்டி பேருந்து நிலையம்—தில்லைவிளகம்.	..	,,
119	தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை	..	4 பஸ் (புறநகர்ப் பேருந்து)
120	பட்டுக்கோட்டை—மன்னார்குடி	..	,,
121	மாயூரம்—கொடவாசல்	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
122	பின்னாயூர்—மன்னார்குடி	..	,,
123	நன்னிலம் பேருந்து நிலையம்—திட்டச்சேரி.	..	1 பஸ் (நகரப் பேருந்து)
124	பட்டுக்கோட்டை பேருந்து நிலையம்—முத்துப்பேட்டை தர்கா.	..	,,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி

125	மணல்மேடு—குத்தாலம்	.. 1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
126	திருவாரூர்—ஆடுதுறை	.. ,,
127	எடமேல்யூர்—கருவக்குறிச்சி	.. ,,

ஈரோடு மாவட்டம்—

128	கோபி பேருந்து நிலையம்—ஆப்பக்கூடல்.	.. 1 பஸ் (நகரப் பேருந்து)
129	அஷுர் டெக்ஸ்டைல்ஸ்—முதலி பாளையம்.	.. ,,
130	கோபி—சென்னாம்பட்டி	.. 1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
131	காவுந்தபாடி—மேட்டூர்	.. ,,
132	ஆப்பக்கூடல்—மேட்டூர்	.. ,,
133	தாராபுரம்—வெள்ளக்கோயில்	.. ,,
134	ஈரோடு பேருந்து நிலையம்—மொடக்குறிச்சி	.. 1 பஸ் (நகரப் பேருந்து)
135	ஈரோடு பேருந்து நிலையம்—கவுந்தபாடி.	.. ,,
136	ஈரோடு பேருந்து நிலையம்—வைக்கபாளையம்	.. 1 பஸ் (நகர்ப் பேருந்து)
137	தாராபுரம்—பல்லடம்	.. 1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
138	ஈரோடு பேருந்து நிலையம்—சின்னையம் பாளையம்	.. 1 பஸ் (நகர்ப் பேருந்து)
139	ஈரோடு ரயில் நிலையம்—எஸ்.பி.பி. குடியிருப்பு.	.. 2 பஸ் ,,
140	சத்தி தினச்சந்தை—கொத்த மங்கலம்.	.. 1 பஸ் ,,
141	ஈரோடு—குருவாரெட்டியூர்	.. 1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
142	நாகலூர்—ஈரோடு	.. ,,
143	ஆதணி—ஈரோடு	.. ,,
144	ஈரோடு பேருந்து நிலையம்—பண்ணைக் கிணறு.	.. 1 பஸ் (நகர்ப் பேருந்து)
145	ஈரோடு பேருந்து நிலையம்—பாகூர்.	.. ,,

ஈரோடு மாவட்டம்—தொடர்ச்சி

146	ஈரோடு பேருந்து நிலையம்—மண்ணாத்தம் பாளையம். ..	1 பஸ் (நகரப் பேருந்து)
147	பவானி—பவானி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
148	பவானி—தாட்டக்கரை ..	,,
149	கோயம்புத்தூர்—செஞ்சேரிமலை ..	,,
150	ஈரோடு பேருந்து நிலையம்—இஞ்சூர். ..	1 பஸ் (நகரப் பேருந்து)
151	ஈரோடு—திருப்பூர் ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
152	கோபி—பவானி ..	,,
153	சத்தி—ஈரோடு ..	,,
154	பி. எஸ். பூங்கா—மண்ணாத்தம் பாளையம். ..	1 பஸ் (நகரப் பேருந்து)
155	தாராபுரம் பேருந்து நிலையம்—மேட்டுக்கடை. ..	,,
156	கோபி—பவானி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
157	சென்னிமலை—வெள்ளக்கோயில் ..	,,
158	சென்னாம்பட்டி—பவானி ..	,,
159	கோபி—திருப்பூர் ..	,,

திருநெல்வேலி மாவட்டம்—

160	திருநெல்வேலி சந்திப்பு—சீவலப்பேரி. ..	1 பஸ் (நகரப் பேருந்து)
161	திருநெல்வேலி டவுன்—சுத்தமல்லி ..	,,
162	தூத்துக்குடி துறைமுகம்—அருப்புக்கோட்டை. ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)

தென்னாற்காடு மாவட்டம்—

163	கானை—கள்ளக்குறிச்சி ..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து)
164	கொளஞ்சியப்பர் கோயில்—தொளார். ..	,,
165	திண்டிவனம்—பண்ருட்டி ..	,,
166	விழுப்புரம்—கல்பட்டு ..	ஜீப் வண்டி (புறநகர்ப் பேருந்து)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 அக்டோபர் 31]

தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி

167	உளுந்தூர்ப்பேட்டை—பெண்ணாடம்.	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து).
168	பெண்ணார்—கொங்கரப்பட்டு	..	ஜீப் வண்டி (புறநகர்ப் பேருந்து).
169	செஞ்சி—ஜம்பை	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து).

வடஆற்காடு மாவட்டம்.

170	குடியாத்தம—ஒடுக்கத்தூர்	..	1 பஸ் (புறநகர்ப் பேருந்து).
171	சுந்தரம்பள்ளி—பொம்பிக்குப்பம்.	..	,,
172	வேலூர்—திருவண்ணாமலை	..	,,
173	ஆவரங்குப்பம்—மாட்றம்பள்ளி	..	,,
174	வேலூர்—வள்ளிமலை	..	,,
175	வேலூர்—ஆரணி	..	,,
176	வாலாஜா—முல்லேந்திரம்	..	,,
177	வேலூர்—பெரியகொளப்பலூர்	..	,,
178	வாலாஜா பேருந்து நிலையம்—வேலூர்.	..	,,
179	ஆற்காடு—அரக்கோணம்	..	,,
180	வேலூர்—மகாதேவமலை	..	,,
181	குருவராஜ்பேட்டை—கோநலம்	..	,,
182	வாலாஜா பெண்கள் கல்லூரி—திருவலம்.	..	,,
183	மேலாத்தூர்—கன்னிகாபுரம்	..	,,
184	பேரனாம்பட்—பூங்குளம்	..	,,
185	வேலூர்—மைலாடுமலை	..	,,
186	செய்யார்—கணியனூர்	..	,,
187	எடுத்தனூர்—பூதமங்கலம்	..	,,
188	வேலூர்—அரக்கோணம்	..	,,
189	ஆரணி—கண்ணமங்கலம்	..	1 பஸ் (நகரப் பேருந்து)
190	சி. கே. சி. (தியேட்டர்) திரையரங்கம்—கந்திலி	..	,,
191	வாணியம்பாடி பேருந்து நிலையம்—ஆலங்காயம் பேருந்து நிலையம்.	..	,,

இணைப்பு IV

[470ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 5-க்கான விடையைக் காண்க.]

1977-78ஆம் ஆண்டில் வருவாய் (மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை) வாரியத்தால் பெறப்பட்ட மது அனுமதிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கையையும் வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கையையும் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டம்.	விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை.
சென்னை	8,186	5,627
கோயம்புத்தூர்	1,824	1,386
தர்மபுரி	63	48
சேலம்	547	365
நீலகிரி	617	337
செங்கல்பட்டு	530	161
வட ஆற்காடு	148	83
தென் ஆற்காடு	131	86
தஞ்சாவூர்	262	160
திருச்சிராப்பள்ளி	539	294
புதுக்கோட்டை	75	50
மதுரை	659	371
இராமநாதபுரம்	158	33
திருநெல்வேலி	540	238
கன்னியாகுமரி	175	41
மொத்தம் ..	14,454	9,280

1-1-1978 முதல் 31-12-1978 வரை மாவட்டவாரியாக அரசிற்கு வந்த விண்ணப்பங்களும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அனுமதிகளும் பின்வருமாறு :—

மாவட்டம்.	வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை.
சென்னை	4,961	793
கோயம்புத்தூர்	3,967	119
தர்மபுரி	157	1

1979 அக்டோபர் 31]

மாவட்டம்.	வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை,
சேலம்	1,968	58
நீலகிரி	1,348	37
செங்கல்பட்டு	317	5
வட ஆற்காடு	18	2
தென் ஆற்காடு	15	இல்லை
தஞ்சாவூர்	796	17
திருச்சிராப்பள்ளி	1,029	34
புதுக்கோட்டை	63	இல்லை
மதுரை	1,249	இல்லை
இராமநாதபுரம்	72	இல்லை
திருநெல்வேலி	684	32
கன்னியாகுமரி	146	7
மொத்தம் ..	16,310	1,105

இணைப்பு V.

[477ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 18க்கான விடையைக் காண்க.)

பதில் :

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

(அ)—

(1) குடியிருப்புக்கு மின் இணைப்பு, மற்றும் தண்ணீர் வசதி கொடுக்கப்படாமல் இருப்பின் மாத வாடகை ரூ. 10.

(2) குடியிருப்புக்கு தண்ணீர் வசதி மட்டும் கொடுக்கப் பட்டிருப்பின் மாத வாடகை ரூ. 12 மட்டும்.

(3) குடியிருப்புக்கு மின் இணைப்பு மட்டும் கொடுக்கப் பட்டிருப்பின் மாத வாடகை ரூ. 13 மட்டும்.

(4) குடியிருப்புக்கு மின் இணைப்பு மற்றும் தண்ணீர் வசதி இரண்டும் செய்து கொடுக்கப்பட்டிருப்பின் மாத வாடகை ரூ. 15 மட்டும்.

மேற்படி குடியிருப்பில் அரசு ஊழியர்கள் மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் ஒதுக்கீடு பெற்று வசித்து வந்தால் இவர்கள் ஊதியத்தில் 10 சதவிகிதத்துடன் இவர்கள் பெறும் வீட்டு வாடகைப்படியையும் சேர்த்து வசூல் செய்யப்பட்டது.

(ஆ) 1975ம் வருடத்திற்கு பிறகு குடியிருப்புகளுக்கு வாடகை உயர்ததப்படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம்.

(அ) & (ஆ) 1975-ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பவர்களுக்கு வசூலிக்கப்பட்ட வாடகை விவரங்களும், பின்னர் ஏற்பட்ட மாற்றங்களும் பின்வருமாறு :—

பட்டினப்பாக்கம் (Foreshore Estate).

